இறக்கை: 10 இறகு: 10

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

காக்கை கரவா கரைந்துண்ணும்

அக்டோபர் 2021 | விலை ₹40




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2021ஆம் ஆண்டுக்கான

# கே.எம். லீலா பரிசுத்தொகை







**கா**க்கைச் சிறகினிலே இதழின் ஆசிரியர் திரு. வி. முத்தையா அவர்களின் துணைவியார் திருமதி. கே.எம். லீலா அவர்கள் நினைவாக வழங்கப்படும் பரிசுத்தொகை இந்த ஆண்டு ஜவ்வாது மலையில் உள்ள ஜமுனா மரத்தூர் கிராமத்தில் இயங்கிவரும் பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ரூ. 25000/- மதிப்புள்ள உடையாக வழங்கப்பட்டது. வகுப்பு ஆசிரியர் மகேஸ்வரி அவர்கள் முன்னிலையில் மாணவர்களுக்கு ஆசிரியர் வி. முத்தையா உடைகளை வழங்கினார். நிகழ்வில் துர்கா பைண்டிங் நிறுவனர் திரு. எஸ். சரவணன், திரு. விவேகானந்தன், திரு. பரிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

இறக்கை: 10 இறகு: 10

திருவள்ளுவராண்டு 2053

ஐப்பசி
அக்டோபர் 2021

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

பொறுப்பாசிரியர்
க. சந்திரசேகரன்
9715146652

ஆசிரியர் குழு
இரா. எட்வின்
முகிலன்
அமரந்த்தா
கசன்

தொடக்க கால நெறியாளர்கள்
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

நெறியாளர்கள்
டிராட்ஸ்கி மருது
க. பஞ்சாங்கம்
கே. எம். வேணுகோபால்

புலம்பெயர் நாடுகளுக்கான
தொடர்புக்கு:

கனடா:
வி. மகேந்திரன்
V. Mahenthiran
Mahenthiran_v@hotmail. com

ஐரோப்பா:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், கட்டுரையாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

# தலைமுறைகள் தண்டிக்கப்பட வேண்டும்

தப்பைத் தப்பென்று சொல்வது தப்பில்லை;
தப்பைத் தப்பில்லையென்று சொல்வதுதான் தப்பு.

- யாரோ

தமிழ்நாடு அரசின் முன்னாள் சமூகநலத் துறை அமைச்சர் திருமதி. இந்திரகுமாரி மீது ஊழல் மற்றும் நம்பிக்கை மோசடி உள்ளிட்ட பிரிவுகளின்கீழ் குற்றம் சாட்டப்பட்டு தொடரப்பட்ட வழக்கில் அவரது கணவர் நடத்திவந்த அறக்கட்டளையின் பெயரால் உடல்ஊனமுற்றோர் நலவாழ்வுத் துறையின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டதையொட்டி, 5 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது சிறப்பு நீதிமன்றம். 25 ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்ட இந்த வழக்கில் தொடர்புடைய இரண்டு அதிகாரிகள் சமூகநலத் துறையின் முன்னாள் செயலாளர் திரு. கிருபாகரனுக்கும் ஊனமுற்றோர் நலவாழ்வுத்துறையின் முன்னாள் இயக்குனர் சண்முகத்துக்கும் 3 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் பத்தாயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

தப்புச் செய்கிறவர்களிடம் திருந்துகிற நாணயமும் இல்லை. தவறு செய்கிறவர்களிடம் வருந்துகிற நேர்மையும் இல்லை. அதிலும் குறிப்பாக கடந்த 30 ஆண்டுக் காலத்தில் பொது வாழ்க்கைக்கு வந்த பலரிடத்தில் அது இல்லை. அவர்களைவிடவும் அவர்களுக்குத் துணைநின்று வழிகாட்டுகிற பெரும்பாலான அதிகாரிகளிடத்தில் இல்லவே இல்லை.

இந்தநிலையில் வந்துள்ள இந்தத் தீர்ப்பு அரசியல்வாதிகள், அதிகாரிகள் பலரின் தூக்கத்தைத் தொலைத்திருக்கிறது. அதே சமயத்தில் கட்சியே மாறினாலும் சட்டம் தன் கடமையைச் செய்தே தீரும் என்ற நம்பிக்கையை மக்களிடத்திலே விதைத்திருக்கிறது.

சொத்துக்குவிப்பு, லஞ்சம், ஊழல், நம்பிக்கை மோசடி உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி தண்டனை பெற்றவர்கள் அவர்தம் மனைவி, பிள்ளைகள் பெயரில் உள்ள சொத்துக்களை அரசு கையகப்படுத்த வேண்டும். அதேபோல, அவர்களுக்குத் துணையாய் நின்ற அதிகாரிகளின் குடும்பச் சொத்துக்களை கையகப்படுத்துவதோடு அவர்தம் ஓய்வூதியப் பயன்கள் முழுவதும் நிறுத்தப்பட வேண்டும். அவர்தம் பிள்ளைகள் அரசுப்பணிக்கு வருவதற்குத் 'தகுதியற்றவர்கள்' என்ற வகைமைக்குள் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் அரசுப் பணியில் உள்ள தாயும் தந்தையும் நேர்மையானவர்களா என்பதை பிள்ளைகள் கண்காணிக்கும் நிலை வரும்.

எதிர்காலத்தில் இவ்வாறான கடுமையான சட்ட நடவடிக்கைகளையெல்லாம் செயல்படுத்தினாலொழிய லஞ்சத்தையும் ஊழலையும் அவ்வளவு எளிதில் ஒழித்துவிட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினி பி.சி.

# புத்த மயூரி

தமிழில்: யூமா வாசுகி

ஓவியம்: வினீத் எஸ்.பிள்ளை

தாஸ்அங்கிளின் வீட்டைச் சுற்றிலும் பூந்தோட்டம். எல்லாப்பருவத்திலும் பூக்கும் செடிகள், பூக்களைவிட அதிகமாக பல்வேறு நிறங்களுடைய வண்ணத்துப்பூச்சிகள், பல லயத்தில் கூவும் குயில்கள், பல வகை வலசைப் பறவைகளெல்லாம் கொண்டு அந்த இடமே மிகவும் செழிப்பாக இருக்கும். வீட்டில் சன்னல்களைச் சாத்தும் வழக்கமில்லை. குறிப்பாக, தாஸ் அங்கிளின் அறைச் சன்னலை! இவர்போல பூக்களையும் வண்ணத்துப் பூச்சிகளையும் நேசித்த வேறொருவரை நான் பார்த்ததில்லை. வண்ணத்துப்பூச்சிகளை சூல்கொள்ளும் அந்தப் பூந்தோட்டம் நிறைய இப்போது 'புத்த மயூரி' கள்தான். ஆயினும் அந்த அறையின் சன்னல்கள் சாத்திக் கிடப்பது எனக்கு வருத்தமளித்தது.

"ஏன் சன்னல்களைத் திறக்கவில்லை?" என்று கேட்பதற்கு முன்பே, "பாலூ, சன்னல்களைத் திறக்காதே, திறந்தால் டாடிக்கு ஏதோ அசௌகர்யமாக இருக்கிறது. மிகவும் கலக்கமடைகிறார்" என்று அனுராகா நினைவுபடுத்தினாள். தாஸ் அங்கிளைப்போன்றதொரு மனிதரை பூக்களும் வண்ணத்துப்பூச்சிகளும் எப்படிக் கலக்கமடையச் செய்யும் என்று யோசித்தபடி, அடைபட்ட அறைக்குள் அங்கிளை மெதுவாகத் தட்டிக்கொடுத்து தூங்கவைக்க முயன்றேன். இடையில் எழுந்திருக்க முயன்றபோதெல்லாம் அச்சத்துடன் அவர் என் கையை இறுகப்பிடித்துக்கொண்டார்.

"எங்கும் போய்விட மாட்டேன், தூங்குங்கள்."

என்று சமாதானப்படுத்தினாலும் நம்பிக்கையற்றவரைப் போல அங்கிள், என் கையைப் பிடித்த பிடியை இறுக்கினார். அந்த சொரசொரப்பான கைக்குள்ளிருந்து கையை எடுத்துக்கொள்ள முடியாமல் வலியைத் தாங்கிக்கொண்டிருந்தேன். கொஞ்ச காலமாக அடிக்கடி கழுத்திலிருந்து தோள் வழியே கைகளுக்கு ஒரு வலி ஊர்ந்து வரும். சுதா ஆன்ட்டியை எப்போதும் படுக்கையிலிருந்து தூக்கி எடுப்பதால்தான் இந்த வலி என்று மருத்துவர் சொன்னார். வலி அதிகரிக்கும்போது எடுத்துக்கொள்ள மாத்திரைகள் கொடுத்திருக்கிறார். திடீரென்று புறப்பட்டு வந்ததால் அவற்றைக் கொண்டுவர நினைவு வரவில்லை. எப்படியானாலும் அவ்வாறு உட்கார்ந்து அங்கிளுடன் தூங்கிவிட்டது நல்லதாயிற்று. அனுராகா வந்து தட்டிக் கூப்பிட்ட போதுதான் விழித்தேன்.

"டே, நீ சாப்பிட்டுவிட்டுத் தூங்கு. இனி நான் இருக்கிறேன்." அவள் கண்களைக் கசக்கிக்கொண்டு மெதுவாகச் சொன்னாள். அங்கிளின் பிடி தளர்ந்திருந்தது. நான் மெதுவாக கையை விடுவித்துக்கொண்டு எழுந்தேன்.

"நீ சாப்பிட்டாயா?" நான் கேட்டேன்.

"இல்லை, பசிக்கவில்லை." அவள் கட்டிலருகில் அமர்ந்தாள்.

"அப்படியென்றால் எனக்கும் வேண்டாம்." நான் போகத் தயங்கி நின்றேன். அதைப் பார்த்து,

"வா, சேர்ந்து சாப்பிடலாம்" என்று சொல்லி அவள் நடந்தாள்.

அவளைப் பார்ப்பதற்கு சங்கடமாக இருந்தது. சாப்பாடு தூக்கமில்லாமல் அலங்கோலமாக இருந்தாள். திடீரென்று அவளுக்குப் பத்து வயது அதிகரித்துவிட்டதைப் போலிருந்தது.

நள்ளிரவு நெருங்கிக்கொண்டிருந்தது. உணவறையின் சன்னல் வழியே பார்த்தபோது, கதிரேசன் மாமாவின் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து நான்கைந்து பேர் பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. "அங்கே என்ன நடக்கிறது?" நான் கேட்டேன்.

"இன்று நவம்பர் இருபத்தியாறு அல்லவா, வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாள். மாலையில் யாழ்ப்பாணத்திலிருந்து அவர் நண்பர்கள் வந்திருக்கிறார்கள். கதிரேசன் மாமாவைப் பற்றித் தெரியாதா, பேசுவதற்கு ஆள் கிடைத்தால் விடிய விடியப் பேசிக்கொண்டிருப்பார். அப்புறம், டாடி மிகவும் பலவீனமாக இருக்கிறார். ஒரு டாக்டரிடம் காட்ட வேண்டும். நீ சொன்னால்தான் கேட்பார். நான் சொல்லிச் சொல்லி சலித்துவிட்டது. என்ன சொன்னாலும் எந்தப் பதிலும் இல்லை. அவர் ஆகமொத்தம் பேசியது, 'பாலுவைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும்' என்பது மட்டும்தான்." அந்த இரவில்,உணவு மேசையின் அமைதியின் மீது அவள் வார்த்தைகளை உதறினாள்.

"உம்."

மனதை அடக்கப் பாடுபட்டபடி நான் தலையாட்டினேன்.

"சாப்பிடு, உனக்காக நல்லதாக ஏதும் செய்ய முடியவில்லை. டாடியை இந்த நிலையில் பார்த்ததால் நான் உடைந்துபோய்விட்டேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவள், தயிர் ஊற்றிய சோற்றில் தேக்கரண்டியால் கிளறிக்கொண்டிருந்தாள்.

"சாயி எங்கே?"

என் பார்வை அவள் படுக்கையறையில் பட்டுத் திரும்பியது.

"ப்ரெடியுடன் விட்டிருக்கிறேன். போகமாட்டேன் என்று ஒரே அழுகை, ஆனால் என்ன செய்வது? டாடிக்கு அவனைப் பார்த்தால் பயம். பார்த்தால் அலறுவார். மூன்று நான்கு நாட்கள் அவனைப் பூட்டி வைத்தேன். இப்படி எத்தனை நாள்தான் பூட்டி வைக்க முடியும்? பதினான்கு வயதுப் பையன் அல்லவா..." அவள் தேம்பினாள். "பையனைப் பார்த்து தாஸ் அங்கிள் ஏன் பயப்படுகிறார்?" நான் கொஞ்சம் சாப்பிட்டதாகப் பெயர்பண்ணிவிட்டு எழுந்தேன். பசி இறந்திருந்தது.

"பையனைப் பார்த்தால் ஏன் பயப்படுகிறார்? கடந்த பதினொரு வருடங்களாக டாடி எங்கேயிருந்தார்? என்ன செய்துகொண்டிருந்தார்? எதுவும் தெரியவில்லை. ரகசியங்களைப் பாதுகாப்பதில் இப்போதும் கண்டிப்பான பழைய பட்டாளக்காரர்தான்! கடந்த வாரம் கதிரேசன் மாமாதான் கூப்பிட்டு, டாடி வந்த விஷயத்தைச் சொன்னார். உடனே நாங்கள் இங்கே வந்துவிட்டோம்."

அவளும் உணவை முடித்துக்கொண்டு எழுந்தாள்.

"கதிரேசன் மாமாவிடம் ஏதும் சொல்லியிருப்பாரோ?" நான் கேட்டேன்.

"இல்லை, டாடியை இந்தத் தோற்றத்தில் பார்த்து முதலில் மாமாவுக்கு ஆளை அடையாளம் தெரியவில்லை. எப்படியோ புரிந்துகொண்ட பிறகுதான் வீட்டைத் திறந்துவிட்டார். கேட்டது எதற்கும் பதில் சொல்லாமல் டாடி அறைக்குள் சென்று சன்னல்களைத் திறக்காமல் அப்படியே அமர்ந்துவிட்டார். ஏதாவது கொடுத்தால் சாப்பிடுவார், அவ்வளவுதான். பழைய விஷயங்களையெல்லாம் சொல்லி கதிரேசன் மாமா நிறைய அழுதார். டாடியின் வலதுகையாக இருந்தவர் அல்லவா." அனுராகா குமுறி அழுதாள்.

**நா**ன் கையையும் முகத்தையும் துடைத்துக்கொண்டு கூடத்துச் சோபாவில் சென்று அமர்ந்தேன். என் அப்பாவின் ஒரே ஒரு சகோதரியின் மகள்தான் அனுராகா.

தாஸ் அங்கிள் – சுதா ஆன்ட்டி தம்பதியரின் மகள். அத்தை மகள் என்பதற்கு மேலாக எனக்கு மிக நெருக்கமான தோழி! இப்போது யுனிவர்சிட்டி ஆஃப் சௌத் வேல்ஸில் பேராசிரியை. ப்ரெடிக்கு, பி.பி.சி. யின் தலைமையகத்தில் வேலை. ஒரு மகன்தான், சாயி. ஐந்தாம் வகுப்பு. அனுவுக்குப் பதினைந்து வயதாகும்போதுதான் சுதா ஆன்ட்டி பக்கவாதம் வந்து படுத்தார். பார்ப்பதற்கு வேறு யாரும் இல்லாததால் நாங்கள் குட்டிக்கானத்துக்குக் கொண்டு வந்தோம்.

"மம்மிக்கு இப்போது எப்படியிருக்கிறது? டாடி திரும்பி வந்ததை அறிந்தபோது அவர்கள் ரியாக்ஷன் என்ன? அப்படி என்ன ரியாக்ட் செய்துவிடப்போகிறார்கள், என்ன? வாழ்ந்துகொண்டிருக்கும் பலர் சில காலங்களில் இறந்தவர்களைவிட தூரத்தில் இருப்பார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். என் விஷயத்தில் அது எவ்வளவு உண்மை என்று பார், டாடியும் மம்மியும் எனக்கு ஒருபோதும் பிடிபடாத தூரங்களில்தானே! நினைத்துப் பார்த்தால் பைத்தியம் பிடித்துவிடும்." கண்ணீரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனைந்த முகத்தை கவுனால் ஒற்றிக்கொண்டாள்.

"நீ கவலைப்படாதே. ஆன்ட்டிக்கு இப்போது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பிடித்து உட்காரவைத்தால் சற்று நேரம் உட்கார்ந்திருப்பார்கள். பல நினைவுகள் மீளத் தொடங்கிவிட்டன. எப்படியானாலும் அங்கிள் திரும்பி வந்துவிட்டாரே. இனி எல்லாம் நன்றாக நடக்கும். பி பாசிட்டிவ்." நான் அவளை சமாதானப்படுத்த முயன்றேன்.

"துயரப்படக் கூடாது என்றுதான் நானும் ஆசைப்படுகிறேன். ஆனால்... முடியவில்லை. அது போகட்டும், உனக்குத் தூக்கம் வரவில்லையா? போய்ப் படு." அவள் பாத்திரங்களை மூடிவைத்துவிட்டு எதிரில் வந்து அமர்ந்தாள். தூக்கமும் கைவலியும் விலகியிருந்தன.

"இல்லை, நீ பேசு." வெகுகாலத்துக்குப் பிறகு சற்றுப் புகைக்க வேண்டும் என்று தோன்றியது. சிறுமேசையில் ப்ரெடிக்குப் பிடித்த ரக சிகரெட் இருந்தது. ஒன்று எடுத்துப் பற்றவைத்து புகையூதிக்கொண்டு, கூடத்தில் தொங்கவிட்டிருந்த புகைப்படங்களின் கீழே சென்று நின்றேன். ஒவ்வொரு புகைப்படத்தின் கீழேயும், அந்தப் படம் எடுக்கப்பட்ட வருடமும் முக்கியமான விஷயமும் ஒரு காகிதத்தில் எழுதி செலோடேப்பால் ஒட்டப்பட்டிருந்தது.

"அதிசயமாயிருக்கிறது! இப்போதும் இவற்றையெல்லாம் பாதுகாத்து வைத்திருக்கிறீர்களா?" கண்ணாடிச் சட்டகமிட்ட புகைப்படங்களில் பார்வையோட்டினேன். பெரும்பாலும், தாஸ் அங்கிள் பழைய காலத்தில் பலருடன் எடுத்துக்கொண்ட படங்கள்தான்.

"கடந்த நாட்களில் நானும் கதிரேசன் மாமாவும் சேர்ந்து செய்தோம். இவற்றையெல்லாம் பார்க்கும்போதாவது டாடிக்கு ஒரு மாற்றம் வரட்டும் என்று நினைத்தோம். இந்த போட்டோவை நீ பார்த்திருக்கிறாயா?"

அனுராகா ஒரு புகைப்படத்துக்குக் கீழே சென்று நின்றாள். எஸ்.எல்.ஆர்.பி.சி. யின் பெரிய கட்டடத்துக்கு முன்னால் உற்சாகத்துடன் நிற்கும் மெலிந்ததொரு இளைஞனும் இளம்பெண்ணும்! தாஸ் அங்கிளும் சுதா ஆன்ட்டியும் காதல் காலத்தில் எடுத்தது. மனம், பல வருடங்கள் பின்னோக்கிச் சென்றது.

கொழும்பில் உள்ள ஒரு கட்டுமான நிறுவனத்தில் என் அப்பாவுக்கு வேலை. அங்கே நாங்கள் வசித்த வீட்டை ஒட்டித்தான் தாஸ் அங்கிளின் வீடு இருந்தது. அவர்கள் சிங்கள புத்தமதக்காரர்கள். புகுமுக வகுப்பு முடித்த பிறகு அப்பா சுதா ஆன்ட்டியை குட்டிக்கானத்திலிருந்து கொழும்புக்கு அழைத்து வருகிறார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சேர்க்கவும் செய்தார்.

அந்தக் காலத்தில்தான், மூத்த மாணவரும் அண்டைவீட்டுக்காரருமான தாஸ் அங்கிள் மீது ஆன்ட்டி காதல் வயப்படுகிறார். படிப்பு முடிந்த பிறகு தாஸ் அங்கிள் பட்டாளத்தில் சேர்ந்தார். ஆன்ட்டி, இலங்கை வானொலியில் சேர்ந்தார். ஒருமுறை தாஸ் அங்கிள் விடுமுறையில் வந்தபோது, திருமணப் பேச்சுக்காக அப்பாவைப் பார்க்க வந்தார். தன் சகோதரியை இலங்கை பட்டாளக்காரன் ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதை அப்பாவால் நினைத்தே பார்க்க முடியவில்லை; தாத்தாவுக்கும் அப்படித்தான். அதனால், "கேரளத்தில் ஒரு டாக்டருடன் இவளது திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது" என்று மட்டும் சொல்லி அப்பா தாஸ் அங்கிளை அனுப்பிவிட்டார். எர்ணாகுளத்தைச் சேர்ந்த அந்த கோடீஸ்வர மருத்துவர், ஆன்ட்டியின் ரசிகர்.

"இது, இலங்கை வானொலி நிலையம். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆசிய சேவை. இருபத்தைந்து மீட்டர் - பதினொன்றாயிரத்து எண்ணூறு கிலோஹெர்ட்ஸ், நாற்பத்தொரு மீட்டர் - ஏழாயிரத்து நூற்றுத் தொண்ணூறு கிலோஹெர்ட்ஸ் ஆகிய அலைவரிசைகளில் ஆசிய நேயர்களுக்கான ஒலிபரப்பு இது. முதலில், நீங்கள் கேட்ட திரைப் பாடல்கள்..." ஆன்ட்டியின் இந்த இனிய குரல் கொழும்பிலிருந்து அலைகளின் மேலே வருவதைச் செவிகூர்ந்தவர்கள் அன்று நிறையப் பேர் கேரளத்தில் இருந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் இந்த மருத்துவர். விஷயங்கள் இப்படி இருக்கும்போதுதான், மருத்துவருக்கு ஏமாற்றமளித்தபடி ஆன்ட்டியும் தாஸ் அங்கிளும் தம்பதியரானார்கள். இது அப்பாவுக்கும் தாத்தாவுக்கும் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

**நா**னும் அனுராகாவும் பிறந்தவுடன் பிணக்கமும் விலகலுமெல்லாம் நீங்கின. குட்டிக்கானத்திலிருந்து தாத்தாவும் பாட்டியும் தாஸ் அங்கிளை வந்து பார்த்தார்கள். அப்போதுதான் அவர்கள் தாஸ் அங்கிளைப் பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டார்கள். தாஸ் அங்கிள் பட்டாளக்காரராக இருந்தாலும் சாந்த குணம் கொண்டவராக இருந்தார். அறிமுகமாகும் எல்லோருக்கும் பிடித்துப்போகும் ஏதோ ஒன்று அவரிடம் இருந்தது. நான் அவரை விரும்புவதற்குப் பல காரணங்கள் உண்டு. எல்லோரையும் சமமாகக் கருதும் அவர், அனைவரிடமும் கொண்டிருக்கும் பாசம் அவற்றில் ஒன்று. அவர் எங்களுக்கு புத்தர் கதைகள் நிறையச் சொல்வார். வீட்டில் எந்தவொரு பட்டாளத்தனமும் காட்டுவதில்லை. அவர் எங்களுடன் கூட்டுச் சேரும்போது எங்களைவிடவும் சிறிய குழந்தையாக மாறிவிடுவார்! நானும் கதிரேசன் மாமாவும்தான் அவரின் நெருக்கமான நண்பர்கள். தாஸ் அங்கிளின் வீட்டில் ஒரு உறுப்பினரைப்போலத்தான் கதிரேசன் மாமா. 1983 கருப்பு ஜூலையில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடி வந்தவர். அந்தக் கலகத்தில் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டிருந்தார்கள். இவரது கதைகளறிந்த தாஸ் அங்கிளின் அப்பா தன்னுடன் சேர்த்துக்கொண்டார். தாஸ் அங்கிளின் வயதுதான் கதிரேசன் மாமாவுக்கும். பெரிய தமாஷ்காரர். ஆரம்பத்திலெல்லாம் தாஸ் அங்கிள் மீது கதிரேசன் மாமாவுக்கு மிகவும் பயம். போகப் போக இருவரும் மிக நெருக்கமான நண்பர்கள் ஆகிவிட்டார்கள். ஆயினும் இடையிடையே பிரபாகரனைக் குறித்த பேச்சின் காரணத்தால் இருவருக்கும் செல்லச் சண்டைகளெல்லாம் ஏற்படுவதுண்டு. கதிரேசன் மாமாவுடன் படித்தவர்தான் பிரபாகரன். எல்.டி.டி.இ. இன் செயல்பாடுகளோடு முரண்பட்டாலும், பிரபாகரன் எனும் மனிதரை மாமாவுக்கு மிகவும் பிடிக்கும்.

பிரபாகரனைப் பற்றி மாமா புகழ்பாடும்போது, அங்கிள் கண்டிப்பான பட்டாளக்காரனைப்போல தர்க்கம் செய்வார்:

"அவரது லட்சியம் நல்லதாக இருக்கலாம். ஆனால் அதற்கான வழி முற்றிலும் சரியல்ல."

"இருக்கலாம். ஆனால் உங்களுடையதோ, லட்சியமும் சரியல்ல - அதற்கான வழியும் சரியல்ல. புத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தது இதுதானா"

கதிரேசன் மாமா, அங்கிளைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பார். அப்பாவும் சேர்ந்துகொள்வார். அவர்களெல்லாம் பிரபாகரனின் ஆதரவாளர்கள். அவையெல்லாம் சுவாரஸ்யமான விவாதங்களாக இருந்தன.

விடுப்பில் வரும்போதெல்லாம் அங்கிள் எங்களை, புத்தரின் புனிதப் பல் இருக்கும் கோயிலான தலதா மாளிகைக்கு அழைத்துச் செல்வார். அங்கு நிலவும் அமைதியில் புத்தரின் சாந்தமான கண்களைப் பார்த்து அங்கிள் தியானித்தபடியிருப்பார். அதைப் பார்க்கும்போது கதிரேசன் மாமாவுக்குச் சிரிப்பு வரும்.

"உம்?"

ஒருமுறை அப்பா கேட்டார்.

"புத்த பகவானின் பற்களையெல்லாம் சீடர்கள் பிடுங்கி இதுபோன்று ஒவ்வொரு இடத்தில் கொண்டு போய் வைத்திருப்பார்கள். அதனால்தான் இப்போது புத்தர் சொல்வது ஒன்றும் இவர்களுக்குப் புரிவதில்லை. அவர் சமாதானம் சமாதானம் என்று சொல்லும்போது இவர்களுக்கு யுத்தம் யுத்தம் என்று கேட்கிறது." மாமா இப்படிச் சொல்லிவிட்டு கள்ளச் சிரிப்புடன் தலைகுனிந்திருந்தார். சுற்றிலும் நின்றிருந்தவர்கள் கும்பலாகச் சிரித்தார்கள். தாஸ் அங்கிள் மட்டும் தியானத்தைத் தொடர்ந்தார். தப்பிப் பிழைத்திருப்பதற்கான எதிர்த்து நிற்றலின் பகுதியான இம்சை, நியாயப்படுத்தக்கூடியதுதான் என்று மற்ற பட்டாளக்காரர்களைப்போல அங்கிளும் நம்பியிருந்தார். யார் பிழைத்திருப்பதற்காக? இரை யார்? வேட்டைக்காரன் யார்? அவர்களின் நீதி நியாயங்கள் என்ன? சில மாலை நேரங்களில் அப்பாவும் தாஸ் அங்கிளும் கதிரேசன் மாமாவும் கடுமையாக வாக்குவாதம் செய்துகொண்டிருப்பார்கள். அப்போது நாங்கள், மாமா செய்து கொடுத்த பலாச்சுளை வறுவலைக் கொறித்துக்கொண்டிருப்போம்.

"இந்த போட்டோவைப் பார்த்தாயா? நீ எடுத்தது." அனு ஒரு புகைப்படத்தைச் சுட்டிக்காட்டிப் பெருமூச்சுவிட்டாள். நிறைய புத்த மயூரிகளுக்கு இடையில் தாஸ் அங்கிளும் சுதா ஆன்ட்டியும் அனுவும் கட்டிப்பிடித்துக்கொண்டு நிற்கும் புகைப்படம் அது. நான் எடுத்ததால் அது அவ்வளவு நல்ல படமாக இல்லை என்றாலும், பிறகு அதுபோன்ற பிரகாசமான சிரிப்புடன் மூவரையும் நான் பார்த்ததே இல்லை.

தாஸ் அங்கிளுக்கு வண்ணத்துப்பூச்சிகளை மிகவும் பிடிக்கும். அந்தக் காலத்தில் நாங்கள் வசித்திருந்த வீட்டுக்கு முன்னால் ஒரு பூந்தோட்டம் இருந்தது. அந்த இடம் குட்டிக்கானம்போலவே இருந்தது. எருக்கும் முள்ளிலவும் செம்பருத்தியும் கிருஷ்ண கிரீடம் செடிகளுமெல்லாம் அங்கே இருந்தன. வண்ணத்துப் பூச்சிகளின் வாசஸ்தலமாக இருந்தது அந்த இடம். விடுமுறையில் வரும்போது தாஸ் அங்கிளின் முக்கியமான வேலை, இந்தத் தாவரங்களின் தண்டுகளையெல்லாம் வெட்டிக்கொண்டு போய் வீட்டைச் சுற்றிலும் நட்டு வளர்ப்பதுதான். அவ்வாறு, அப்பாவுடையதைவிடப் பெரியதொரு பூந்தோட்டமும் வண்ணத்துப்பூச்சிக் கூட்டமும் அங்கிளுக்குச் சொந்தமாயின.

"இந்தப் போட்டோ எடுத்த நாள் நினைவிருக்கிறதா?" அனுராகா கேட்டாள்.

"உம்." நான் முனகினேன். வண்ணத்துப்பூச்சிகள் வலசை வரும் காலம் அது. அங்கிள் மற்றும் அப்பாவின் தோட்டங்கள் நிறைய வண்ணத்துப்பூச்சிகள்தான். அப்பாதான் தாஸ் அங்கிளுக்கு வண்ணத்துப்பூச்சிகளின் பெயர்களைச் சொல்லிக் கொடுத்தார்.

"டே, உங்கள் ஊரில் இவற்றையெல்லாம் என்ன வெங்காயத்தால் குறிப்பிடுவீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எங்கள் ஊரில், இதோ இங்கே இருக்கும் வண்ணத்துப்பூச்சிதான் வால்வாலன், ஒன்றோடொன்று சேர்ந்திருப்பது வனதேவதை, அது புலித்தெய்யன், அந்தப் பக்கம் இருப்பது நரிவரையன், அப்புறம் அதோ – அதுதான் தெளிநீலப்புலி, அந்த ஆமணக்கில் பிடித்துப் கொண்டிருப்பது ஆமணக்குச் சிவப்பன், அந்த எலுமிச்சை மரத்தில் இருப்பது எலுமிச்சைக் காளி, மஞ்சள் பூவில் தேன் குடிப்பது மஞ்சப் பாப்பாத்தி, எருக்கின் மீது இருப்பது எருக்குத்தப்பி..."

இந்தப் பெயர்களைப் பலமுறை கேட்டுக் கேட்டு அங்கிள் அவற்றையெல்லாம் நினைவில் பதித்தார். அங்கிள் கற்றுக்கொண்ட சில மலையாள வார்த்தைகளில் இவையும் சேரும். ஐந்தாம் வகுப்பில் எங்கள் பள்ளி விடுமுறைக் காலமாக இருந்தது அது.

அங்கிளின் தோட்டத்துக்கு அதியழகான ஒரு வண்ணத்துப்பூச்சி வந்ததை நான்தான் முதலில் பார்த்தேன். முள்ளிலவின் மேலிருந்து வேகமாகக் கீழே பறந்து வந்து கிருஷ்ண கிரீடப் பூவில் தேன் குடிக்கும் அதை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தேன். சிறகசைக்கும்போது வெளிச்சத்துக்கு ஏற்றபடி ஒளிரும் மயில்பீலி நிறம் அதற்கு!

"அங்கிள்... வாருங்கள்!" மதியச் சாப்பாடு முடிந்து தூங்கிக்கொண்டிருந்த அங்கிளை குலுக்கி எழுப்பினேன். அங்கிள் ஓடி வந்து அந்த வண்ணத்துப்பூச்சியை நிறையப் படங்கள் எடுத்தார். அன்று அப்பா, கதிரேசன் மாமாவுடன் எங்கோ சென்றிருந்தார். அவர்கள் திரும்பி வந்ததும் அப்பா கேட்டார்: "இதன் பெயர் தெரியுமா?"

"இதுதான் 'புத்த மயூரி!' வண்ணத்துப்பூச்சிகளில் பேரழகி! இவள் வந்தால் சமாதானம் வரும் என்று நம்பிக்கை!" அப்பா வியப்புடன் சொன்னார். அன்று எடுத்த புகைப்படம். புத்த மயூரியை மீண்டும் காண்பது இங்குதான்!

"அந்தக் காலத்துக்குத் திரும்பிப் போக முடிந்தால் நன்றாயிருக்குமே என்று நினைக்கிறேன். டாடியும் நாமும் ஒன்றாயிருந்த அந்தக் காலம் எவ்வளவு சந்தோஷமாயிருந்தது, அல்லவா? அந்தக் கதைகளைச் சொல்லித்தான் நான் டாடிக்கு உணவூட்டுகிறேன்."

அவள் பழைய குழந்தையைப்போல என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

எனக்குப் பதினொன்கு வயதானபோதுதான் அப்பா இலங்கையை விட்டுவர முடிவு செய்தார். எல்.டி.டி.இ. க்கும் ராணுவத்துக்குமான நிரந்தரப் போர்களால் சாதாரண மக்கள் மிகவும் துன்பப்பட்ட ஒரு காலமாக இருந்தது அது. வேதனையளிக்கக்கூடிய நிறைய இனப் பிரச்சினைகளின் ஊடேதான் எங்களது குழந்தைப் பருவம் கடந்து சென்றுகொண்டிருந்தது. உள்நாட்டுப் போர்களின் நேரடிக் காட்சிகளாலும் தொழில் பிரச்சினைகளாலும் அப்பாவுக்கு அந்த இடம் சலித்துவிட்டது. சுதா ஆன்ட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட மோசமான உளவியல் பிரச்சினைக்கு ஆட்பட்டார். ஒரு பட்டாளக்காரனின் மனைவி எனும் நிலையிலும் வானொலி நிலையப் பணியாளர் எனும் நிலையிலும் அங்குள்ள அரசியல் சூழ்நிலை அவரைத் துயர நோய்க்கு இரையாக்கிவிட்டிருந்தது. வேலையை விட்டுவிட்டு வந்துவிடுங்கள் என்று அவர் எப்போதும் அங்கிளிடம் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் அங்கிள் அதற்குத் தயாராக இல்லை. அழுத்தங்கள் அதிகரித்து அதிகரித்து ஆன்ட்டிக்கு மைனர் அட்டாக் ஏற்பட்டது. ஒருநாள் அலுவலகத்தில் வேலை செய்துகொண்டிருக்கும்போது அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது. உடலின் ஒரு பக்க அசைவும் நினைவுகளும் இழப்பாயின. அதன் பிறகு அப்பாவுக்கு, அங்கே இருக்க வேண்டும் எனும் ஆசைகளெல்லாம் அற்றுப் போயிற்று. எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு ஆன்டியையும் எங்களையும் அழைத்துக்கொண்டு குட்டிக்கானத்துக்கு வந்துவிட்டார். அனுராகா, தாஸ் அங்கிளின் சகோதரியுடன் கொழும்பில் தொடர்ந்தாள்.

குட்டிக்கானத்துக்கு வந்த பிறகு, தாஸ் அங்கிளை விட்டு வந்ததுதான் மிக அதிக இழப்புணர்வை ஏற்படுத்தியது. இரண்டாயிரத்து எட்டுவரை வருடத்துக்கு ஒருமுறை நானும் அப்பாவும் கொழும்புக்குச் சென்றோம். தாஸ் அங்கிள் விடுமுறைக்கு வரும் சமயத்தில்தான் அந்தப் பயணங்கள். அங்கிள் இரண்டொருமுறை அனுராகாவுடன் குட்டிக்கானத்துக்கு வந்தார். இரண்டாயிரத்து ஒன்பதில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தவுடன் அந்தப் பயணங்கள் நின்றுவிட்டன. அது மிகவும் கஷ்டமான காலமாக இருந்தது. தாஸ் அங்கிளை நினைத்து துயரம் கொண்ட தினங்கள்.

“நீ கவலைப்படாதே, அங்கிளுக்கு ஒன்றும் ஆகாது. எல்.டி.டி.இ. காரர்களெல்லாம் மனசாட்சியுள்ளவர்கள். அந்தக் கனவானை அவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்கள்.” அப்பா, மனதிலொரு திகிலை மறைத்து வைத்து தமாஷ்போல ஆறுதல் சொன்னார்.

“பட்டாளக்காரராக இருந்தாலும் தமிழர்கள் மீதான அரசாங்கத்தின் பல அணுகுமுறைகளில் மைத்துனருக்குச் சற்றும் உடன்பாடில்லை, கேட்டாயா. ஐ.பி.கே.எஃப். இன் ‘ஆபரேஷன் பவா’ னைக் குறித்தும் பிற விஷயங்கள் பற்றியும் அவருக்கு எவ்வளவு கவலை தெரியுமா?” அப்பா, தொலைக்காட்சியில் யுத்த செய்திகள் பார்த்துக்கொண்டிருக்கும் எல்.டி.டி.இ. அனுதாபிகளான அண்டைவாசிகளிடம் சொன்னார்.

“அது சும்மா ஒன்றும் அல்ல, பாதிரியார் ஆக வேண்டியவர்கள் எல்லாம் பட்டாளக்காரர்கள் ஆனதால்தான் இப்போது புலிகளெல்லாம் அடித்து விளாசுகிறார்கள்.” ராஜீவ்காந்தி கொலைக்குப் பிறகு புலி விரோதியாகிவிட்ட தாத்தா, அப்பாவைப் பார்த்து உதட்டைக் கோணினார்.

“பிரதமரைக் கொன்றது புலிகள் என்று உங்களிடம் யார் சொன்னது? ஒரு காரியம் செய்தால் அதை ஒத்துக்கொள்ளக்கூடிய முதுகெலும்பு உள்ளவன்தான் வேலுப்பிள்ளை பிரபாகரன்! அவரைக் கொல்ல வைத்ததெல்லாம் இங்குள்ளோர்தான்.” பிரபாகரனின் தீவிர ஆதரவாளரான அப்பாவுக்குக் கோபம் வந்தது. அப்பாவுக்குள் பிரபாகர பாசத்தைச் செலுத்தியது கதிரேசன் மாமாதான்.

எண்பத்து ஏழு ஆகஸ்ட்டில் இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கையைக் குறித்து தன் ஆட்களுடன் பேசுவதற்காக வடக்கு யாழ்ப்பாணத்தின் அம்மன் கோயிலுக்கு முன்னால் பிரபாகரன் வந்தபோது, கதிரேசன் மாமா அப்பாவை அழைத்துச் சென்று காட்டியிருக்கிறார்.

போர் தீவிரமாகிக்கொண்டிருந்தது.

நான் தினமும் தாத்தாவுடன் தாஸ் அங்கிளுக்காகப் பிரார்த்தனை செய்தேன். தாத்தாவின் பிரார்த்தனைபோல பிரபாகரன் மற்றும் அவர் மகனது கொலையுடன் யுத்தம் முடிந்தபோது தாத்தாவின் முகம் பளபளத்தது.

“நெஞ்சில் பெரியதொரு பாறையைத் தூக்கி வைத்ததைப்போன்ற வலி. அந்தப் பையன் கிடப்பதைப் பார்த்தாயா, ஒ...”

அந்த அதிர்ச்சியில் அப்பாவும் நண்பர்களும் நீண்ட நாட்கள் பெருந்துயரம் கொண்டிருந்தார்கள். கடும் மனப்பிரச்சினைகளின் காரணத்தால் அந்த வருடம் தாஸ் அங்கிள் ராணுவத்திலிருந்து விலகினார். ஒரு இரவில் யாருக்கும் சொல்லாமல் வீட்டுக்கு வந்த அங்கிள், பெட்டியை அங்கே வைத்துவிட்டு, ‘நிம்மதி வேண்டும். கொஞ்ச நாட்கள் வெளியே இருக்கிறேன்’ என்று ஒரு கடிதம் எழுதி வீட்டுக்கு முன்னால் வைத்துவிட்டு, கதிரேசன் மாமாவைக்கூடப் பார்க்காமல் எங்கோ சென்றார். நானும் அனுராகாவும் கனடாவில் உயர்கல்வி படித்துக்கொண்டிருந்ததால் இந்த விஷயத்தில் எங்களால் போதிய கவனம் கொடுக்க முடியவில்லை. நாட்கள், மாதங்கள், வருடங்கள்... அங்கிள் இன்று வருவார் நாளை வருவார் என்று எதிர்பார்த்து எல்லோரும் காத்திருந்தார்கள். காலம் செல்லச் செல்ல நம்பிக்கைகள் அஸ்தமித்தன.

“நீ தூங்கு, நான் டாடியின் பக்கத்தில் இருக்கிறேன்... குட்நைட்.”

அனுராகா, சோபாவின் தலையணையில் சாய்ந்துகொண்டு தூக்கக் கலக்கத்துடன் முணுமுணுத்தாள். தூக்கம் அவளை மிகவும் கட்டி இறுக்கியிருந்தது.

“எழுந்திரு...”

அவளைப் பிடித்து எழவைத்து அறைக்குக் கொண்டுபோய் படுக்கவைத்து தாஸ் அங்கிளின் அறைக்குச் சென்றேன்.

தந்தநிற பளிங்குக்கல் பாவிய அறையில் ஊசி விழுந்தால்கூடக் கேட்கும்படியான அமைதி. தூங்கிக்கொண்டிருக்கும் அங்கிளின் மெலிந்து உலர்ந்த முகத்தில் பாதி நரைத்த ரோமங்களுக்கிடையிலும் ஒரு குழந்தையின் சிரிப்பு பதுங்கியிருந்தது. அதைப் பார்த்தபடியே கட்டிலின் ஓரத்தில் படுத்தேன். அந்த நிலையில் கனவுகள் ஏதுமின்றி நன்றாகத் தூங்கினேன்.

“பாலூ...”

எப்போதோ அங்கிள் என்னை அசைத்து எழுப்பினார்.

“என்ன, அங்கிள்?” நான் திடுக்கிட்டு விழித்தேன்.


“ஒரு கதை சொல்லட்டுமா? ‘பையனும் பட்டாளக்காரனும்’ கதை?”

அங்கிள் என் கண்களை உற்றுப் பார்த்தார்.

“உம்.”

புத்த கதைகளைத் தவிர அவர் வேறு எதுவும் முன்பு சொல்லியிராதபடியால் கண்களைக் கசக்கிக்கொண்டு ஆவலுடன் கதைக்குக் காத்திருந்தேன். அங்கிள் கட்டிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மணம்போட்டு அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு கதையைத் தொடங்கினார்.

"அந்தப் பையனைப் பட்டாள முகாமுக்குப் பிடித்துக்கொண்டு வந்திருந்தார்கள்! ரகசியமான ஒரு இடத்தில்தான் அவனைத் தங்க வைத்திருந்தார்கள். சுற்றிலும் குண்டு வீசிக்கொண்டிருக்கும் விமானங்களின் – குண்டுகள் வெடிப்பதன் காதைச் செவிடாக்கும் சத்தங்கள். அதற்கிடையில் நிறைய அதிகாரிகள் வந்து அந்தப் பையனைக் கேள்வி கேட்கத் தொடங்கினார்கள். அவனிடம் அவன் அப்பாவைப் பற்றித்தான் அவர்கள் கேட்டார்கள். கேள்விகள், பயமுறுத்தல்கள், சிறிய துன்புறுத்தல்கள் எல்லாம் முறைப்படி நடந்தன. பையன் அச்சமற்று மலர்ந்த கண்களுடன் கூச்சமில்லாமல் அமர்ந்திருந்தான். அவனிடமிருந்து எதுவும் கிடைக்காதபோது பட்டாளக்காரர்கள் தற்சமயம் அதை முடித்துக்கொண்டு எங்கோ சென்றார்கள். முகாமில் காவல் பொறுப்புள்ள மேஜரும் பையனும் மட்டும்தான் அப்போது இருந்தார்கள். அவனைப் பார்த்ததும் அவருக்கு, நன்கு பழகிய பையனைப்போலத் தோன்றியது. அதே வயதில் அதே பெயருடைய அழகானதொரு பையன் அவர் வீட்டிலும் இருந்தான். அவனது பிஞ்சு முகத்தைப் பார்த்தபோது அவருக்கு ஒரு வாஞ்சை ஏற்பட்டது.

"'இதைச் சாப்பிடு.'

"சோர்ந்திருக்கும் அவனுக்கு தன் பிளாஸ்கிலிருந்து சூடான தேநீரும் சாப்பிட பிஸ்கட்டுகளும் கொடுத்தார்.

"'வேண்டாம்.' பையன், காப்பரணாக அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகள் ஒன்றின் மேலே அசைவற்று அமர்ந்திருந்தான். நிமிடங்கள் கடந்து சென்றன. கைதிகளுடன் பட்டாள வண்டிகள் பக்கத்தில் உள்ள முகாம்களுக்கு வந்துகொண்டிருந்தன. அவர் பையனையே பார்த்துக்கொண்டிருந்தார். காலம் காலமாக அவர் மனதில் புத்தரும் யுத்தமும் நடத்திக்கொண்டிருந்த கயிறிழுப்பில் புத்தர் வெல்லத் தொடங்கிய நேரமாக இருந்தது அது!

"'பாலூ...' அவர் மனங்கனிந்து அழைத்தார். அவன் அந்த அழைப்பைச் செவிமடுக்கவில்லை. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். கேள்வி கேட்பது மறுநாளும் தொடர்ந்தது. அன்று அந்தக் காட்சிகளை அவர்கள் படம் எடுக்கவும் அவன் அப்பாவைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளும் செய்தார்கள். அவை எதுவும் தன்னைப் பாதிக்காததுபோல பையன் உணர்ச்சியற்றிருந்தான். 'பயப்பட வேண்டாம், அப்பா வருவார்.' அவர்கள் தனியாக இருந்தபோது மேஜர் பையனுக்கு ஆறுதல் சொன்னார்.

" 'நான் பயப்படவில்லை. என்னைக் காப்பாற்ற அப்பா வரவும் மாட்டார். எனக்காக அல்ல, நீதிக்காகத்தான் என் அப்பா யுத்தம்செய்கிறார்.' அவன் பெருமையுடன் தலை நிமிர்ந்து நின்றான். அவர் வியப்புடன் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார். அவன் அப்பாவைப் பற்றி தன் நண்பன் சொன்னதையெல்லாம் மேஜர் அப்போது நினைவுகூர்ந்தார். அவர் அவனிடம் ஏதேதோ பேசி அவனை வசப்படுத்த முயன்றார். ஆனால் அவன் நெருங்கவே இல்லை.

"அந்த இறுக்கமான சூழ்நிலையில் நிறைய வண்ணத்துப்பூச்சிகள் பறந்து வந்தன. அவை கூடாரத்தின் உள்ளே பாவிப் பறந்தன. மயில் நிறமுடைய அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகுகள் வெயிலில் மின்னி ஒளிர்ந்தன. அதன் பிறகு பையன் அவற்றையே பார்த்துக்கொண்டிருந்தான். பார்க்கப் பார்க்க அவன் முகத்திலுள்ள தீவிரம் தளர்ந்தது. அதிகாரி எழுந்து தோழமையுடன், 'இதன் பெயர் தெரியுமா?' என்று கேட்டார். பையன் தலையசைத்தான். 'புத்த மயூரி. இங்கே நிறைய முள்ளிலவுகள் உண்டு. அங்குதான் இவை இருக்கும்.' அவன் சொன்னான்.

"அவர் அவனுடன் வண்ணத்துப்பூச்சிகளைப் பற்றிப் பேசினார். அந்தப் பகுதியிலுள்ள புவியியல் அமைப்பு முழுவதையும் தன் கைரேகைகள்எனத் துல்லியமாக அறிந்ததுபோன்று, அங்கே காணக்கூடிய வண்ணத்துப் பூச்சிகளைப் பற்றி அவன் சொல்லிக் கொண்டிருந்தான். அவர் வியப்புடன் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார். புத்த மயூரி, சமாதானத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று அவர் நிம்மதியடைந்தார்.

"'சட்டென்று போர் முடிந்துவிடும். நீ சுதந்திரமடைந்து விடுவாய்.' நம்பிக்கையுடன் அவர் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் அவனுக்கு எந்தத் துயரமுமில்லை. அவர்களுக்கிடையிலான நெருக்கம் மேலும் மேலும் அதிகரித்து வந்தது.

"அவன் மற்றவர்களுக்கு முன்னால் புலியைப்போல உறுமியும்அவருடன் பழகிய பூனையைப்போல விளையாடியும் நேரத்தைப் போக்கினான். ஆனால் அவரின் நம்பிக்கைக்கு விரோதமாகத்தான் காரியங்கள் நடந்தன. பையன் சொன்னதைப்போலவே, அவனை முன்வைத்துப் பேசிய பேரத்தில் அவன் அப்பா சிக்கவில்லை. அதன் பிறகு யுத்தம் கடுமையானது. அப்போதும் மேஜர் நல்லதை மட்டுமே எதிர்பார்த்தார். அந்த நம்பிக்கைகளுக்கு வலு சேர்த்தபடி புத்த மயூரிகள் அங்கே பறந்து திரிந்தன.

"ஆனால் அடுத்த நாட்களொன்றில் நிறைய அதிகாரிகள் வந்தார்கள். அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

" 'யுத்தம்?' மேஜர் கேட்டார்.

" 'நாம் ஜெயித்துவிட்டோம்! பிரபாகரனைக் கொன்றுவிட்டோம்!' அவர்கள் கூச்சலிட்டுக் களிநடனம் புரிந்தார்கள். அதைக் கேட்டு அவர் நடுங்கினார்.

"அன்று முகாமில் எல்லோரும் வெற்றிப் போதையில் இருந்தார்கள். தன் முன்னால் அப்பாவின் மரணத்தைக் கொண்டாடுபவர்களையும் அவன் உணர்ச்சியற்றுப் பார்த்து நின்றான். அவன் மனதின் தீ அவரைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பொசுக்கத் தொடங்கியது.

" 'பையனை என்ன செய்வது?'

"கொண்டாட்டம் முடிந்து, புறப்படத் தொடங்கிய ஒரு உயரதிகாரியிடம் துயரத்துடன் கேட்டார்.

" 'தெரியவில்லை, நாளை சிலர் வருகிறார்கள். அவர்கள் முடிவு செய்வார்கள்.'

"உயரதிசாரி அவசரமாக வண்டியோட்டிச் சென்றார். புத்த மயூரிகள் வந்துகொண்டிருந்தன. அவை மட்டும்தான் அவருக்கு ஆசுவாசமளித்தன.

"அன்று இரவு அவர் தூங்கவில்லை. கனவில், அந்தப் பையன் தன் அப்பா அம்மாவுடனெல்லாம் உரத்துப் பேசிச் சிரிப்பதைக் கேட்டுக்கொண்டு படுத்திருந்தார்.

"மறுநாள் தாமதமாகத்தான் பையன் எழுந்தான்.

" 'சாப்பிடு.' அவர் காப்பியும் பிஸ்கட்டும் கொடுத்தார். அவன் அவற்றைக் கையில் பிடித்தபடி வண்ணத்துப்பூச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரத்துக்குப் பிறகு வெளியே ஒரு வண்டி வந்து நின்றது.

"பிஸ்கட் சாப்பிட்டு முடிக்கும் முன்பே ஆர்மி கமாண்டர் வந்து அவனைக் கூடாரத்துக்கு வெளியே பிடித்துக்கொண்டு சென்றார். பின்னால் மேஜரும் பதற்றத்துடன் சென்றார். நாட்கணக்காக வெளிச்சத்தைப் பார்க்காததால் கூசும் கண்களை இடுக்கி பையன் சுற்றிலும் பார்த்தான். அவன் தலைக்கு மேலே பறக்கும் புத்த மயூரிகள் மீதுதான் அவரது நம்பிக்கை. நல்லது எதுவோ நடக்கப்போகிறது எனும் நம்பிக்கையில் அவர் பிரார்த்தனையுடன் நின்றார்.

" 'மேஜர், இவன் எப்படியிருக்கிறான்?' ஆர்மி கமாண்டர் பார்வையால் பையனை காலிலிருந்து தலைவரை தடவினார். 'நைஸ் பாய், சார்.' மேஜர் சொன்னார். 'ஓகே, அப்படியென்றால் நாம் இவனை ஃபிரீயாக்கினால் என்ன? நைஸ் பாய் அல்லவா?' கமாண்டர் முகத்தில் ஒரு சிரிப்பு மலர்ந்தது. மேஜரின் சுவாசம் சீராயிற்று. அவர் நிம்மதியுடன் பையனைப் பார்த்தார். தியானிக்கும்போது புத்தரின் கண்களில் பார்த்த சாந்தத்தை அவன் கண்களில் கண்டார். மனதிலிருந்து புத்தர், 'சமாதானம், சமாதானம்' என்று சொல்வது அவருக்குக் கேட்டது.

"திடீரென்று கமாண்டரின் முகம் இருண்டது, சாத்தானுடையவைபோலக் கண்கள் பளபளத்தன. கை எட்டும் இடைவெளியில் நிற்கும் பையனின் நெஞ்சில் ஐந்து தோட்டாக்கள் பாய்ந்தன. கண் முன்னே நின்ற நிலையிலிருந்து பின்னால் மல்லாந்து வீழ்வதைப் பார்த்த மேஜர், அலறியபடியே அவனருகே ஓடினார். ஆனால் அப்போது சுற்றிலும் நின்றிருந்தவர்கள் அவரை இறுகப் பிடித்திருந்தார்கள். கமாண்டரின் பெருஞ்சிரிப்பு சுற்றிலும் பரவியது. மேஜர் சர்வ சக்தியுடன் அவர்களை உதறிக்கொண்டு பையனின் அருகே சென்றமர்ந்தார். அப்போது அவனது மூச்சு நின்றிருந்தது. மூடாத அந்தக் கண்களின் சாந்தத்தைப் பார்ப்பதற்கு அவருக்குப் பயமாக இருந்தது. அப்போதும் அவனைச் சுற்றிலும் புத்த மயூரிகள் பறந்துகொண்டிருந்தன...

"பாவம் அந்தப் பையன்! என்னால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை... அந்தக் கண்கள் என்னை வேட்டையாடிக்கொண்டிருக்கின்றன..."

தாஸ் அங்கிள் திடீரென்று அந்தக் கதையில் ஓடி ஏறிக்கொண்டு தேம்பி அழுதார். என் கைகளில் அவரது பிடி இறுகிக்கொண்டிருந்தது. பன்னிரண்டு ஆண்டு காலம் மனதில் சுமந்து அலைந்த அந்த வேதனைகள் என் கழுத்திலிருந்து தோளில் இறங்கி இதயத்தில் படர்ந்தன...

அங்கிள் சொன்ன கதையில் வரும் பையன்என்னைப் பார்த்தபடியே அங்கே காப்பரண் மூட்டை மீது அமர்ந்து பிஸ்கட் தின்றுகொண்டிருந்தான். களங்கமற்ற அந்தப் பார்வையைத் தாங்க முடியாமல் நானும் தலைகுனிந்தேன்.

**நன்றி: 'மாத்யமம்' மலையாள வார இதழின் வருடாந்திரச் சிறப்பிதழ் – 2021**

யூமாவாசுகி, மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் சாகித்ய அகாதமி விருதுபெற்றவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆ. சிவசுப்பிரமணியன்
sivasubramanian@sivasubramanian.in

# தமிழ்நாட்டு வரலாற்றைச் சொல்லும் ஒரு பயணக்குறிப்பு

**சீர்திருத்தக் கிறித்தவ சபையின் போதகராக 1719இல் தரங்கம்பாடியை வந்தடைந்த பெஞ்சமின் சூல்ட்சே (1689–1760) சென்னையில் சமயப்பணி மேற்கொள்வதற்காக தரங்கம்பாடியிலிருந்து நீர்வழிப்பாதையில் 1726 பிப்ரவரி 18இல் படகில் புறப்பட்ட அவர் அதே ஆண்டில் மே 8ஆம் நாளன்று சென்னை வந்தடைந்துள்ளார். அந்தப் பயண அனுபவத்தை 'மெட்ராஸ் ஸ்டாட்' என்ற நூலாக அவர் எழுதி ஜெர்மன் மொழியில் வெளியிட்டிருந்ததைத் தமிழுக்குக் கொண்டுவந்திருக்கிறார் க.சுபாஷினி. அந்த மொழிபெயர்ப்பு நூலுக்கு ஆ. சிவசுப்பிரமணியன் எழுதியுள்ள அரிய முன்னுரை இது.**

தென்னிந்திய இலக்கிய வரலாற்றில் ஐரோப்பியச் சமயப் பணியாளர்களின் மொழி, இலக்கியம் பண்பாடு சார்ந்த பங்களிப்புகள் ஆவணமாக்கலோ அதுபற்றிக் கருத்துப் பரிமாற்றமோ போதிய அளவில் நடக்கவில்லை.

–ஆனந்த் அமலதாஸ் சே.ச




தமிழகத்தின் வரலாற்றுத் தொடக்க காலம் (கி.மு. 600 – கி.பி. 300) தொடங்கி விசயநகரப் பேரரசின் ஆட்சிக்காலம் முடிய தமிழக வரலாற்று வரைவுக்கான தரவுகளாகத் தொல்லியல் சான்றுகளே இடம் பெற்றிருந்தன. இவை, கல்வெட்டுக்கள், செப்பேடுகள், கல், மரச் சிற்பங்கள், சுடுமண் உருவங்கள், உலோகப் படிமங்கள், ஓவியங்கள், அகழாய்வில் கிட்டும் புழங்கு பொருட்கள், கைவினைப் பொருட்கள், வழிபாட்டுப் பொருட்கள், நாணயங்கள் எனப் பலதரத்தவை. அயல்நாட்டுப் பயணிகளின் பயணக்குறிப்புகளும் ஆவணமதிப்புக் கொண்டவையாக விளங்கின.

இவை தவிர இலக்கிய, இலக்கண நூல்களும் வாய்மொழி வழக்காறுகள் என்ற வகைமையில் அடங்கும் நாட்டார் பாடல்கள், கதைகள், பழமொழிகள், கதைப்பாடல்களும், எழுத்து வடிவிலான புராணங்களும் வரலாற்றுத் தரவுகள் ஆகின. நிகழ்த்துகலைகளும் சடங்குகளும் கூட வரலாற்றுக்கான தரவுகளைத் தம்முள் கொண்டிருந்தமையால் இவையும் வரலாற்றாவணங்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

பதினாறாவது நூற்றாண்டின் முப்பதுகளில் போர்ச்சுக்கீசியர்களின் காலனிய ஆட்சி அறிமுகமான பின்னர் தமிழக வரலாற்றாவணங்களில் ஒன்றாகக் காகித ஆவணங்கள் புதிதாக இடம்பெறலாயின. அதன் பின்னர் டேனிஷ் டச்சு நாட்டுக் காலனியம் கால்கொண்டது. இவற்றின் தொடர்ச்சியாக ஆங்கிலேய, பிரஞ்சியக் காலனியம் கால்கொண்டு காகித ஆவணங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்தின. இக்காகித ஆவணங்களை நிர்வாகம் சார்ந்தவை, தனிமனிதர் சார்ந்தவை, கிறித்தவ சமயம் சார்ந்தவை என மூன்றாகப் பகுக்கலாம்.

இவற்றுள் நிர்வாகம் சார்ந்தவை என்பது, காலனியவாதிகள் இங்கு நிறுவிய அரசுத்துறைகள் சார்ந்த ஆணைகள், கோப்புகள், கடிதங்கள், தீர்ப்புகள், கணக்குப் பதிவேடுகள், அறிக்கைகள் என்பனவற்றைக் குறிப்பதாகும். இத்துடன் இங்குள்ள காலனிய ஆட்சியாளர்களும் உயர்நிலை அதிகாரிகளும் தம் நாட்டு ஆட்சியாளர்களுடன் மேற்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும் 1ஆம் தேதி
உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே'
அஞ்சல் செய்யப்படுகிறது.
5ஆம் தேதிக்குள்
இதழ் கிடைக்கப்பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

**உறுப்பினர் கட்டணம்**

| | |
|---|---|
| தனி இதழ் விலை | ரூ. 40 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 400 |
| இரண்டு ஆண்டுக் கட்டணம் | ரூ. 750 |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ. 2000 |
| மாணவர் சந்தா | ரூ. 300 |

(மாணவர்கள், கல்வி நிறுவனத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சான்றிதழோடு விண்ணப்பிக்க வேண்டும்)

காசோலைகள்,
வங்கி வரைவோலைகள் அனைத்தும்

KAAKKAI,
A/c No. 60111010005660
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
IFSC: CNRB0016011

என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்கதாக அனுப்ப வேண்டும். பணவிடை (மணியார்டர்) மூலமும் சந்தா செலுத்தலாம்.

**வெளிநாட்டு உறுப்பினர் கட்டணம்**

ஆண்டுக் கட்டணம்........................ **$ 40**

உறுப்பினர் கட்டணத்தை

KAAKKAI,
A/C NO. 60111010005660
CANARA BANK,
TRIPLICANE, CHENNAI - 5.
என்ற பெயருக்கு, சென்னையில் மாற்றத்தக்க வகையில் அனுப்ப வேண்டும்.

**தொடர்பு முகவரி:**

காக்கை, 288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.
செல்பேசி: 98414 57503,
தொலைபேசி : 04428471890
மின்னஞ்சல்:
kaakkaicirakinile@gmail.com
முகநூல்:
www.facebook.com/kaakkai.cirakinile

எழுத்துவடிவிலான பதிவுகள் காகிதங்களின் துணையுடனே நிகழ்ந்தன. இவையும்கூடக் காகித ஆவணங்கள் என்ற வகைமைக்குள்ளேயே அடங்கும்.

பணியின் நிமித்தம் கடல்கடந்து வந்து காலனிய அரசின் ஊழியர்கள் தம் தாய்நாட்டில் இருந்த் குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களிலும் அன்றாடம் எழுதிவைத்த நாட்குறிப்புகளிலும் காலனிய நாட்டில் அவர்கள் பெற்ற புதிய அனுபவங்களைப் பதிவு செய்தபோது அவையும் ஆவணமதிப்புப் பெற்றன. இவர்களுள் ஒரு சிலர் காலனிய நாட்டில் தாம் பெற்ற புதிய அனுபவங்களை நூல் வடிவில் வெளியிடவும் செய்தனர். இவையெல்லாம் தனிமனிதர் சார்ந்த ஆவணங்களாகும்.

அடுத்து கிறித்தவம் சார்ந்த காகித ஆவணங்கள். காலனியம் தன் துணைவனாகக் கிறித்தவத்தைக் கொண்டிருந்தது என்பது பொதுவான கருத்து. ஆனால் இது எப்போதும் உண்மையாக இருந்ததில்லை. இந்திய மக்களிடம் பணிபுரியக் கிறித்தவ மறைபணியாளர்களை அனுமதிப்பதில் ஆங்கிலக் காலனியம் தொடக்கத்தில் தயக்கம் காட்டியது. அதே நேரத்தில் இந்தியாவில் கிறித்தவப் பரப்புதலுக்குத் துணை நிற்பதாக இங்கிலாந்தில் பறை சாற்றிக் கொண்டது. (இம் முரண்பாட்டை கார்ல் மார்க்ஸ் தமது கட்டுரை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.) இதன் காரணமாகவே தொடக்கத்தில் ஜெர்மானிய நாட்டின் லூத்தரன் திருச்சபையினர் இங்கு பணிபுரிய வந்தனர். இவ்வாறு இங்கு வந்த கிறித்தவ மறைப் பணியாளர்கள் இரண்டு வகையான காகித ஆவணங்களை உருவாக்கினர். முதலாவது, தாம் பணிபுரிந்த பகுதியில் அவர்கள் பராமரித்த பதிவேடுகள், தம் சமயத் தலைவர்களுடன் அவர்கள் நடத்திய கடிதப் போக்குவரத்துகள், அனுப்பிய அறிக்கைகள். இரண்டாவதாக அவர்கள் எழுதிவந்த நாட்குறிப்புகளும் கடிதங்களும். இவை தவிர இவர்களுள் சிலர் தாம் பணிபுரிந்த பகுதியின் வரலாற்றைக் கட்டுரை அல்லது நூல்வடிவில் எழுதி அச்சுப் படியாக்கி அவற்றை ஆவணமாக்கினர். காலனிய அதிகாரிகளைப் போன்றே இவர்களும்தம் தாய்நாட்டில்வாழும்தம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தம் அனுபவங்களைக் கடிதங்களில் எழுதியனுப்பினர்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகள் கடந்து காகித ஆவணங்கள் தவிர்க்க இயலாத ஒன்றாக மாறின. இக்காலமானது தமிழக அளவிலும் உலக அளவிலும் குறிப்பிடத்தக்க அளவில் மாறுதல்கள் நிகழத்தொடங்கிய காலமாகும். தொடர்ச்சியாக நடந்த இஸ்லாமியப் படையெடுப்புகளை அடுத்து கி.பி. 1378இல் விசயநகரப் பேரரசின் படையெடுப்பு மதுரையில் நிகழ்ந்தது. இதனையடுத்து மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர் என நான்கு மண்டலங்களை உருவாக்கியதுடன் இவற்றை நிருவகிக்க ஒவ்வொரு மண்டலத்திற்கும் நாயக்கர் என்ற பட்டத்துடன் மண்டலாதிபதிகள் நால்வரை நியமித்தனர். தமிழகத்தின் பாரம்பரியமான குறுநில மன்னர் ஆட்சிமுறையும் கிராம ஆட்சி முறையும் ஒழிக்கப்பட்டது. மண்டலங்கள் பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையமும் பாளையக்காரர் ஒருவரின் ஆட்சியில் இருந்தன. தமிழகத்தின் கடல் வாணிபத்தில் ஏற்றுமதிப் பொருட்களாக வெடி உப்பும் பீரங்கிக் குண்டுகளும்கூட இடம் பெற்றன. அடிமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயரில் தமிழர்களும் ஏற்றுமதிப் பொருளாகி முன்பின் அறியா நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவ்வுண்மைகளை எல்லாம் இங்கு பணியாற்ற வந்த அய்ரோப்பிய சமயப் பணியாளர்கள் பதிவு செய்துள்ளனர். அய்ரோப்பாவின் புத்தொளிக்கால (*Age of Enlightenment*) சமூகத்தின் தாக்கத்திற்குட்பட்ட இம் மறைப்பணியாளர்கள் ஓர் அயற்பண்பாட்டினர் என்பதால் தமிழ்நாட்டின் சமூகவாழ்க்கையையும் பண்பாட்டையும் ஆர்வத்துடன் உற்றுநோக்கி எழுத்துப் பதிவுகளாக்கினர். இவற்றின் துணை கொண்டுதான் தமிழக வரலாற்றறிஞர் சத்தியநாதையர் தமது 'மதுரை நாயக்கர் வரலாறு', '17ஆவது நூற்றாண்டுத் தமிழகம்' என்ற தமது ஆங்கில நூல்களில் சில நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

'மெட்ராஸ் 1726' என்ற தலைப்பில் வெளியாகும் இந்த நூல் அய்ரோப்பியக் கிறித்தவர் ஒருவர் எழுதிய நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அதே நேரத்தில் வாசிப்புப் பயன்பாடு என்ற எல்லையைக் கடந்து ஒரு வரலாற்று ஆவணமாகவும் இந்த நூல் விளங்குகிறது.

நூலாசிரியரும் நூலும் பெஞ்சமின் சூல்ட்சே (1689-1760) ஜெர்மனிய நாட்டவர். இவர் சீர்திருத்தக் கிறித்தவ சபையின் போதகராகப் பதினெட்டாம் நூற்றாண்டில் (1719) தரங்கம்பாடி வந்து தம் பணியைத் தொடங்கினார். கிறித்தவத்தின் நுழைவாயில் என்றழைக்கப்பட்ட தரங்கம்பாடி டேனிஷாரின் ஆளுகையில் இருந்தது. பொ.ஆ. 1620 நவம்பர் 19இல் இரண்டாண்டுக் காலத்திற்குத் தஞ்சை நாயக்கரிடம் தரங்கம்பாடியைக் குத்தகையாகப் பெற்ற டேனிஷ்காரர்கள் இரண்டாண்டுகள் கடந்தபின்னர் தரங்கம்பாடியைச் சுற்றியிருந்த பதினைந்து கிராமங்களைக் குத்தகையாகப் பெற்றனர். 1845இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் தம் குத்தகை உரிமையை டேனிஷார் விற்கும்வரை அவர்களது ஆட்சியிலேயே இப் பகுதிகள் இருந்தன.

பார்த்தலோமஸ் சீகன்பால்க் என்ற ஜெர்மானிய மதகுரு, 1706இல் டென்மார்க் மன்னனின் அழைப்பின் பேரில் தரங்கம்பாடி வந்து சீர்திருத்தக் கிறித்தவ சபையைத் தொடங்கி, தமிழகத்தில் சீர்திருத்தக் கிறித்தவத்தைப் பரப்பும் பணியில் தீவிரமாக ஈடுபடலானார். தேவாலயம், பள்ளிக்கூடம், அச்சகம், காகிதத் தொழிற்சாலை, கிறித்தவ சமய நூல்கள், பள்ளிப் பாடநூல்கள், வெளியீடுகள் என அவரது பணிகள் பரந்துபட்டனவாய் அமைந்தன. இங்கு வேரூன்றிய சீர்திருத்தக் கிறித்தவம் தரங்கம்பாடி என்ற கடற்கரைச் சிற்றூரைக் கடந்து தமிழகத்தின் உள்நாட்டுப் பகுதிகளில் பரவத் தொடங்கியது. இம் முயற்சியில் ஈடுபட்ட முன்னோடிகள் வரிசையில் சூல்ட்சேயும் ஒருவராக இணைந்துகொண்டார்.

பெஞ்சமின் சூல்ட்சே தரங்கம்பாடி வந்ததும் தமிழைக் கற்றுக்கொண்டதுடன் கிறித்தவ சமய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். இவருக்கு முன்னோடியாக இங்கு செயல்பட்டு வந்த சீகன்பால்க் தரங்கம்பாடி திருச்சபையின் தலைவராக இருந்து காலமானார். இவருடன் பணிபுரிந்து வந்த க்ருண்டலர் தலைமைப் பொறுப்பை ஏற்றார். பின்னர் அவரும் காலமான நிலையில் சூல்ட்சே தரங்கம்பாடி திருச்சபையின் தலைவர் பொறுப்பை ஏற்று ஆறு ஆண்டுகள் பணிபுரிந்தார். சீகன்பால்க் மேற்கொண்ட விவிலியத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு முழுமை பெறாதிருந்த நிலையில் எஞ்சிய பகுதிகளை மொழிபெயர்த்து முடித்தார். பின்னர் சென்னை நகரில் எஸ்.பி.சி.கே (*Society For Promoting Christian knowledge*) அமைப்பின் போதகராக நியமிக்கப்பட்டார்.

சென்னையில் சமயப்பணி மேற்கொள்ளத் தரங்கம்பாடியிலிருந்து 1726 பிப்ரவரி 18இல் கடலூருக்குப் படகில் புறப்பட்டுச் சென்றார். அங்கிருந்து நடைபயணமாகப் புறப்பட்டு அதே ஆண்டு மே எட்டாம் நாளன்று சென்னை வந்தடைந்தார். இடையில் ஆங்காங்கே தங்கிப் பலரைச் சந்தித்தமையாலேயே சென்னை வந்தடைய இவ்வளவு காலம் பிடித்தது. இப்பயண அனுபவங்களை அவர் தமது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். தரங்கம்பாடி தொடங்கி சென்னை வரையிலான அவரது பயணக்காலத்தில் அவர் எழுதிய நாட்குறிப்புப் பகுதிகளை ஜெர்மனிலிருந்து இந்நூலாசிரியர் க. சுபாஷிணி தமிழாக்கம் செய்து தந்துள்ளார்.

சென்னையில் 1726 தொடங்கி 1742 வரை சூல்ட்சே வாழ்ந்துள்ளார். சென்னை வாழ்க்கையில் தெலுங்கு மொழியைக் கற்றுக்கொண்டதுடன் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தம் சென்னை வாழ்க்கை அனுபவத்தின் அடிப்படையிலேயே தனது நாட்குறிப்புகளையும் 'மெட்ராஸ் ஸ்டாட்' என்ற நூலையும் ஜெர்மானிய மொழியில் இவர் எழுதியுள்ளார். இந்நூல் ஜெர்மன் மொழியில் 'மெட்ராஸ் ஸ்டாட்'. (மெட்ராஸ் நகரம்) என்று பெயர் பெற்றிருந்ததாக சுபாஷிணி குறிப்பிட்டுள்ளார். 1750இல் ஜெர்மன் மொழியில் வெளியான இந்நூல் 1740க்கும் 1745க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்ற செய்தியை இந்நூலின் ஜெர்மனியப் பதிப்பு குறிப்பிட்டுள்ளதாக சுபாஷிணி தமது அறிமுக உரையில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்நூலுக்கு 'மெட்ராஸ் 1726' என்ற பெயரிட்டமைக்கான காரணத்தையும் தனது 'நூல்பற்றி', என்ற பகுதியில் விளக்கியுள்ளார்.

பின்னர் பெஞ்சமின் சூல்ட்சே இந்நூலை ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். தற்போது தமிழில் இதன் மொழிபெயர்ப்பு வந்துள்ளது. இந்நூலை மொழிபெயர்த்து, சூல்ட்சேயின் நாட்குறிப்புக்களையும் இணைத்து வழங்கியுள்ள க. சுபாஷிணி, தமது 'பன்னாட்டு தமிழ் மரபு அறக்கட்டளை' என்ற அமைப்பின் வழி தமிழர்களுக்கு நன்கு அறிமுகமானவர். ஜெர்மன் மொழிப் புலமை கொண்டுள்ளதன் காரணமாக மட்டுமே இந்நூலை அவர் மொழிபெயர்க்கவில்லை என்று கருதுகிறேன். இவ்வாறு கருதுவதற்கு 'நூல்பற்றி' 'அறிமுகம் . . .' என்ற தலைப்புகளில் அவர் எழுதியுள்ள பின்வரும் செய்திகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தூண்டுதலாக உள்ளன:

தமிழக வரலாற்றுத் தகவல்கள் பல ஐரோப்பியர்களது ஆவணக் குறிப்புக்களில் கிடைக்கின்றன. அவற்றைத் தவிர்த்துவிட்டுத் தமிழக வரலாற்றைப் பேசுவது என்பது முழுமையற்ற ஆய்வாகவே அமையும். தமிழக ஆய்வாளர்களின் பார்வையும் கவனமும் தமிழகம் மட்டுமன்றிக் கிழக்காசிய, ஐரோப்பிய, அமெரிக்க ஆவணப் பாதுகாப்பகங்களில் உள்ள நூல்களையும் ஆவணங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டியது தமிழக வரலாற்று ஆய்விற்கு மறுக்கமுடியாத தேவையாகின்றது!

ஒரு இனத்தின் வரலாறு என்பது ஆட்சியாளர்களது வெற்றியைக் கொண்டாடுவது மட்டுமல்ல; அந்த நாட்டில் வாழ்ந்த மக்களின் இயல்பான வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் கிடைக்கின்ற சிறுசிறு தகவல்களும் சேகரிக்கப்பட்டு அந்த ஒவ்வொரு தகவல் புள்ளிகளையும் இணைக்கும் கோடாக வரலாற்றைக் காண மேற்கொள்ளப்படும் முயற்சியாக அமையும்போதுதான் உண்மையான வரலாற்றினை அடையாளம் காணவும் கட்டமைக்கவும் முடியும்.

எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ள இத் தொடர்கள் வரலாறு என்பது குறித்த அவரது பார்வையை வெளிப்படுத்தி நிற்கின்றன. வரலாறு குறித்த அவரது இக்கண்ணோட்டமே இந்நூலை அவர் மொழிபெயர்க்கக் காரணமாய் இருந்துள்ளது. வரலாறு குறித்து இந்நூலின் ஆசிரியர் கொண்டுள்ள இக் கருத்துக்களுக்கு அரண் செய்வது போன்று மூல நூலில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் அமைந்துள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள முப்பது உரையாடல்களில் பெரும்பாலானவை அடித்தள மக்களின் வாழ்வை வெளிப்படுத்துபவை. முதல் இரண்டு உரையாடல்களும் இரண்டு அய்ரோப்பியர்களுக்கு இடையில் நிகழ்வதாக அமைந்துள்ளன. இவ்விருவரில் ஒருவர் நீண்டகாலச் சென்னைவாசி. மற்றொருவர் சென்னைக்குப் புதிதானவர். இவ்வுரையாடலின் வழி பதினெட்டாவது நூற்றாண்டு மெட்ராஸ் குறித்த சில செய்திகளை அறியமுடிகிறது.

அப்போதைய மெட்ராஸ் நகரமானது கருப்பர் நகரம், வெள்ளையர் நகரம் என இரண்டு பகுதிகளாக இருந்துள்ளது. நம்மவர்கள் வாழ்ந்த கருப்பர் நகரத்தில் 8700 வீடுகளும் வெள்ளையர் நகரத்தில் 85 வீடுகளும் இருந்துள்ளன. கிளிகள் மிகுதியாக இருந்துள்ளன. மலைப் பாம்புகளும் புலிகளும் காணப்பட்டன. (உரையாடல் 1&2)

பயணம் செய்ய பல்லக்கும் மாடு, எருது, குதிரை, கழுதை ஆகிய விலங்குகளும் பயன்பட்டுள்ளன. (உரையாடல் 3). நான்காவது உரையாடல் உணவுக்குப் பயன்படுத்திய இறைச்சி வகைகளைக் குறிப்பிடுகிறது. மெட்ராஸ்வாழ் அய்ரோப்பியர்களின் அய்ரோப்பிய உணவு, மேசையில் உணவருந்தல், மது அருந்தல் எனத் தம்நாட்டு உணவுப் பழக்கத்தைத் தொடர்ந்துள்ளனர் (உரையாடல் 5) குடி தண்ணீரை விலைக்கு வாங்கும் வழக்கம் இருந்துள்ளது. கிணற்று நீர் விற்பனைப் பொருளாக இருந்துள்ளது (உரையாடல் 6). சமையல் செய்ய எரிபொருளாக வறட்டி, விறகு, சுள்ளி ஆகியன பயன்பட்டுள்ளன (உரையாடல் 7) பல்வேறு எண்ணெய் வகைகள் பயன்பாட்டில் இருந்துள்ளன (உரையாடல் 8) மசாலாப் பொருள்கள் குறித்த உரையாடலும் உண்டு (உரையாடல் 16).

ஓர் உரையாடலில் புழக்கத்திலிருந்த நாணயங்கள் குறித்த செய்தி பதிவாகியுள்ளது. வெவ்வேறு ஆட்சியாளர்கள் வெளியிட்ட நாணயங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. (உரையாடல் 18) நாகப்பட்டினம், பழவேற்காடு, செஞ்சி, ஆற்காடு, ஆரணி, ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், தரங்கம்பாடி, செயின்ட் ஜோர்ஜ் கோட்டை ஆகிய இடங்களில் நாணயங்கள் அச்சிட்டுள்ளனர் என்பது தெரியவருகிறது. இவற்றுள் நாகப்பட்டினத்திலும் பழவேற்காட்டிலும் உருவாக்கப்படும் பகோடா நாணயங்கள் சிறந்தவையாகக் குறிப்பிடப்படுகின்றன. (அநேகமாக டச்சு நாட்டினர் அச்சடித்த நாணயமாக இருக்கலாம்.)

தையற்காரர் (உரையாடல் 9), துணிக்கடைக்காரர் (உரையாடல் 10), வண்ணார் (உரையாடல் 11) நகைக் கடைக்காரர் (உரையாடல் 17), தோட்டவேலை செய்வோர் (உரையாடல் 13), சமையற்காரர் (15), வீட்டு வேலை செய்வோர் (உரையாடல் 14) ஆகியோருடனான உரையாடல்களும் இடம் பெற்றுள்ளன. முப்பதாவது உரையாடலில் குடிசை வீடு கட்டும் முறை குறித்தும் தமிழ்ப் பெண்களின் உயரிய பண்புகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. பன்னிரண்டாவது உரையாடல் தானியங்களை வாங்குதல், சேமித்தல், அவற்றின் விலை என்பன குறித்த உரையாடலாகும். வங்காளத்திலிருந்தும் மியான்மரிலிருந்தும் தானிய இறக்குமதி நிகழ்ந்துள்ளதையும் இவ்வுரையாடல் வழி அறிய முடிகிறது.

ஒவ்வொரு உரையாடலின் இறுதியிலும் உரையாடல் வழி அறியலாகும் செய்திகளை நூலாசிரியர் சுருக்கமாக எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் ஒரு மொழிபெயர்ப்புப்பணி என்றில்லாமல் ஓர் ஆய்வு நூலுக்கான உழைப்பை க. சுபாஷிணி மேற்கொண்டிருக்கிறார். இதற்குச் சான்றாக 'நூல்பற்றி' 'அறிமுகம்' என்ற தலைப்புகளில் அவர் எழுதியுள்ள செய்திகள், சூல்ட்சேயின் நாட்குறிப்புகளில் இருந்து சில பகுதிகளை மொழிபெயர்த்துத் தந்துள்ளமை, நூலுடன் தொடர்புடைய வரைபடங்களையும் ஒளிப்படங்களையும் இணைத்துள்ளமை என்பனவற்றைக் கூறலாம். அவரது பணி தொடர வாழ்த்துகள்.

**நூலின் பெயர் : மெட்ராஸ் 1726**

**வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம்**

**விலை : ரூ. 250, தொடர்புக்கு: 91-4652278525**

**கட்டுரையாளர் : நாட்டாரியலில் மூத்த ஆய்வாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர் மருத்துவர் அருள் அமுதன்

# புற்று நோயைக் குணப்படுத்த கூட்டு மருத்துவச் சிகிச்சை

## தமிழ்நாட்டில் சாத்தியமாக்குவது எப்படி?

இன்றைய காலகட்டத்தில், யாருக்கு எப்போதுவரும் என்று சொல்ல முடியாதவாறு, எந்த வயதினரையும், எந்த உறுப்பையும் பாதிக்கும் ஒரு கொடிய நோயாக புற்று நோய் மாறி இருக்கிறது. எவ்வளவு தான் ஆராய்ச்சிகளை முன்னெடுத்து மருத்துவம் செய்தாலும், அதற்கும் தண்ணீர் காட்டுவதுபோல புற்றுசெல்கள் புதிய பரிமாணம் அடைந்து மாறிக்கொண்டே வருகின்றன. பலநேரம் நடுத்தர மற்றும் ஏழை மக்களால் மருத்துவச் செலவுகளை சுமக்க முடியாமல், விதியின் விளையாட்டு என்று ஒற்றை வரியில் தனது துன்பங்களுக்கு ஆறுதல் சொல்வர். ஆண்டவனை நம்பி இருந்தவர்கள், அவரை மறுதலிப்பவர்களாகவும், ஆண்டவனை நம்பாதவர்கள், இந்த நோய் வந்தபிறகு அதீத நம்பிக்கையாளர்களாகவும் ஆகிவிடுவதைப் பார்க்கிறோம். எந்தப் பாவமும் செய்யாமல் நல்லவனாக வாழ்ந்த எனக்கு ஏன் இந்த தண்டனை, அடுத்து என்ன நடக்குமோ என்ற சிந்தனை, மரணம் விரைவில் நடக்குமே - அதை எப்படி எதிர்கொள்வேன், மரணத்துக்கு பின்னர் என்ன ஆவேன், என் பிள்ளைகள் என்ன ஆவார்கள், என்னுடைய கடமைகள் முடியவில்லையே என எத்தனையோ ஏக்கங்களுடன் காலம் கடத்தும் புற்று நோயாளிகளுக்கு மருந்து மாத்திரைகள் மட்டும் தீர்வாக அமைவதில்லை.

கீமோதெரபி (மருந்துகள் மூலம் சிகிச்சை), ரேடியோதெரபி (கதிரியக்கம் மூலம் சிகிச்சை), அறுவைச் சிகிச்சை, உளவியல் சிகிச்சை என பலவகையான கூட்டுச் சிகிச்சைகள் மூலம் நவீன மருத்துவ உலகம் புற்று நோயை எதிர்கொள்கிறது. ஜீன் தெரபி எனப்படும் மரபணு மாற்றுதல் சிகிச்சை, இம்மியுனோ தெரபி எனப்படும் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கும் சிகிச்சை என்பவை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புற்றுநோய் சிகிச்சைகள். ஆனால், இவை செலவு அதிகமாக உள்ளதால், ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு கிடைப்பது பெரும் சவாலாகவே இருக்கிறது. இதுபோக, இசை மூலம் சிகிச்சை, ஆன்மீகச் சிகிச்சை, உணவுச் சிகிச்சை, யோகா, மூலிகை, என எதெல்லாம் புற்றுநோயாளிக்கு பயன்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளனவோ, அத்தனையையும் வெளிநாடுகளில் உள்ள புற்றுநோய் மருத்துவமனைகளில் பயன்படுத்தி, ஆராய்ச்சிகள் நடக்கின்றன, அவற்றில் நிருபணமானவற்றை அடிப்படையாக வைத்து, புற்றுநோய் சிகிச்சைக்கான வழிகாட்டுதல் தயார்செய்யப்படுகிறது.

இத்தனை முறைகளையும் பயன்படுத்தித்தான் பெரும்பாலான நோயாளிகளுக்குத் தீர்வு தரமுடிகிறது. ஆனால், குறிப்பிடத்தகுந்த சதவிகிதத்தினருக்கு, புற்று செல்கள் மருந்தால் அழிக்கப்படமுடியாதவாறு தன்னை மாற்றியமைத்துக் கொள்கிறது. *(Drug resistance)* மேலும், பல நோயாளிகளில், என்னதான் புற்று செல்களை போராடி அழித்தாலும், சில செல்கள் புற்று ஸ்டெம் செல்லாக *(cancer stem cells)* உருமாறி உடலுக்குள் ஒளிந்து கொண்டு, உடலின் எதிர்ப்புத்திறன் குறைகின்ற காலத்தில், மீண்டும் தன் கோரதாண்டவத்தை வெளிப்படுத்துகிறது. இன்னும் பல நோயாளிகளுக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட புற்று நோய்கள் வந்து விடுவதால், பல சிக்கல்கள் ஏற்படுகிறது, குறிப்பாக, வேறு ஏதேனும் இணை நோய்கள் (அதாவது, நீரிழிவு, இதயநோய், சிறுநீரகப் பாதிப்பு, வயது மூப்பு) இருந்தால், பல மருந்துகள் ஒத்துக்கொள்வதில்லை. சில நோயாளிகளுக்கு, புற்று நோய் சிகிச்சைகளின் பக்க விளைவு, புற்று நோயைவிடவும் கொடியதாக உருவெடுத்து அதிகத் துன்பமும் தரும். ஆக, புற்றுநோயாளிகள், ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு தனித்துவமான சிகிச்சையே *(Personalized treatment)* அளிக்க வேண்டும். ஆனால், அதற்கான விலை உயர்ந்த பரிசோதனைகளை செய்வதற்கும், லட்சக் கணக்கில் செலவு செய்து ஊசி மருந்து வாங்குவதற்கும், எல்லாராலும் முடிவதில்லை

இப்படி வெளிநாடுகளில் நடக்கும் ஆராய்ச்சிகளை அடிப்படையாக வைத்தே, இந்தியாவின் புற்று நோய் மருத்துவமனைகளும் சிகிச்சைகளைத் தொடர்கின்றன. அந்த ஆராய்ச்சியில் இதுவரை சித்த மருத்துவம் இடம்பெறாததால், நம்மூர் புற்றுநோய் சிறப்பு மருத்துவர்களுக்கு இது தெரிவதில்லை. ஆனால், தமிழகத்தில் உள்ள அனைத்து புற்று நோயாளிகளும், நவீன மருத்துவம் எடுக்கும் அதே வேளையில், சித்த மருந்துகளையும், நவீன மருத்துவருக்குத் தெரியாமலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்கின்றனர் என்பது கவனிக்க வேண்டிய விடயமாகும். புற்று நோயை முற்றிலும் குணப்படுத்த முடியுமென்ற நிலையில் அதற்கான *definite cure* மருத்துவம் அளிக்கப்படும். முற்றிலும் குணப்படுத்தும் நிலையைத் தாண்டிய பிறகு *palliative care* மருத்துவம் அளிக்கப்படும். இந்த நிலையில், வெளிநாடுகளில், நமது சித்த மருந்துகள் அங்கீகாரம் பெறாத காரணத்தால், தமிழகத்தில் ஆராய்ச்சிக்கான முன்னெடுப்பை நாமே செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்தச் சூழலில், இதை எப்படி தமிழ்நாட்டில் முன்னெடுப்பது என்பது பற்றியே இக்கட்டுரையில் விரிவாகப் பேசப்படுகிறது.

## சித்த மருத்துவத்துக்குப் புற்றுநோயைத் தெரியுமா?

தமிழர்களின் சித்த மருத்துவத்தில் 4448 நோய்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதில் கட்டி, கழலை, கிரந்தி, முளை, ஆணி என்ற நோய்கள் *benign* என்று சொல்லப்படும், இது கொடூரமற்ற செல்வளர்ச்சியைக் குறிக்கும். பிளவை, பறங்கி, சிலந்தி, சிங்கி, விப்புருதி, புரையோடிய புண் போன்ற நோய்கள், புண்களை உண்டுபண்ணும். இது புற்றுநோய் வகையைக் குறிக்கும். அரையாப்பு, கண்டமாலை என்பவை, *lymphoma* எனப்படும் நிணநீர் கோளங்களைப் பாதிக்கும் அதீத செல்வளர்ச்சியைக் குறிக்கும். தொடைவாழை என்பது எலும்பில் வரும் *Osteosarcoma* எனும் புற்றுநோயைக் குறிக்கும். விஷப்பாண்டு என்பது ரத்தப் புற்றுநோயைக் குறிக்கும். இன்னமும், புற்று என்றும் ஒரு நோய் கூறப்பட்டுள்ளது.

புற்று என்பது கரையான் புற்று, இது நிலத்தின் மேல் அதிகமாக வளர்ந்து நிற்கும், உடைத்தாலும் மீண்டும் வளரும், வெளிப்பகுதியில் வெயிலோ மழையோ எதுவானாலும் அதன் உட்பக்கம் சீரான வெப்பநிலையைக் கொண்டிருக்கும், ஏனென்றால் அதன் பிரமிட் போன்ற கட்டுமான அறிவியல் அப்படி. கரையானின் இளம் பிள்ளைகளுக்கு உணவு கொடுப்பதற்காக பிரத்யேக பூஞ்சைத் தோட்டம் உள்ளே வளர்க்கப்படுகிறது, மண்ணுக்குகீழே சிறிய சுரங்கங்கள் துளைத்து, தூரத்திலும் இதே கரையான் புற்றை எழுப்பும். இந்த செய்கைகள் அத்தனையும், கேன்சர் நோயின் குறிகுணங்களாகிய, அதீத வளர்ச்சி, முற்றிலும் அழிக்க முடியாமை, இயல்பான செல்களிலிருந்து பிறழ்பட்ட உயிரியக்க விதிகள், உடலில் பரவும் தன்மை (*metastasis*) என அப்படியே ஒத்துப்போன காரணத்தால், தமிழில் இந்த நோயைப் புற்றுநோய் அதாவது புற்றைப் போல வளரும் நோய் என்று அந்தக் காலத்திலேயே அறிவுப்பூர்வமாகப் பெயரிட்டுள்ளனர். உலகின் வேறு எந்த பாரம்பரிய மருத்துவத்திலும் இத்தனை ஆழமான புரிதலுடன் புற்றுநோயை அணுகியதில்லை. கன்னத்தில் வந்தால் கன்னப்புற்று, நாக்கில் வந்தால் நாக்குப் புற்று என எந்த உறுப்பில் வருகிறதோ அதற்கேற்ப பெயர் பெறும். மேலும், மூலநோய் வகைகளைச் சொல்லும்போது, ஆழ்வள்ளி மூலம் என்றும் சீழ் மூலம்என்றும் *rectal cancer* பற்றி பெயரிடப்பட்டுள்ளது.

"வாறான குடல்ப்புற்று வளமை கேளு
வளமாகவே குடலில் நோவுண்டாகும்
கூறாக பேதியிலே சளியுண்டாகும்
கொடும் ஏப்பம் ஓங்காளம் வயிற்றில் குத்து
பாரான பொருமலோடு குடலிரைக்கும்
பெருத்த மலம்தான் கருகும் விலாவு நோகும்
ஊரான நெஞ்சுளையும் தலைகனக்கும்
உறவாக உடல் வறளும் குணங்கண்டாய்"
கும்பமுனி உதரநோய் நிதானம் 768/793

இவ்வாறு குடல் புற்றின் (*colon cancer*) குறிகுணங்களைப் பற்றிச் சொல்லி, அதற்கு கொடுப்பதற்கான மருந்துகளாகிய, வில்வாதி குடிநீர், புளியாரல் நெய், இந்துப்பு சூரணம் இவைகளும் கூறப்பட்டுள்ளது. இதே நூலில் கல்பெருவயிறு, சதை பெருவயிறு என்று வயிற்றுக்குள் வரும் புற்றுநோயை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

"கூண்டந்த வீக்கமது குடியிருந்தே
குவலயத்தில் பன்னிரண்டு ஆண்டு மட்டும்
தாண்டியந்த வீக்கமது கனத்துப் புண்ணாய்
தானிக்குஞ் சுற்றளவும் சதைகள் தன்னை
மூண்டந்த புண்ணதிலே அவுடதங்கள்
முறையாகச் செய்தாலும் மரணம்தானே
மரணமது ஆவதற்குள்ளாண்டின் மேலே
மங்கையவள் நெஞ்சுளையும் இடுப்பும் நோகும்"
மார்பக மருத்துவம் 73/91

மார்பகப் புற்று நோயை ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்யாமல் விட்டால், ஒரு கட்டத்தில் புற்று செல்கள் நுரையீரலிலும், முதுகெலும்பிலும் பரவி (*metastasis*) வலியைக் கொடுக்கும், அதைத்தான், நெஞ்சுளையும் இடுப்பும் நோகும் என்று இங்கு கூறப்பட்டுள்ளது. இந்த நிலை வந்த பிறகு ஒருவருடத்தில், அதாவது நோய் ஆரம்பித்ததிலிருந்து 12 ஆண்டில் மரணமடைவர் என்றும் சொல்லப்படுகிறது.


இதேபோல பல மருந்துகளைப் பற்றிச் சித்தர் நூல்கள் சொல்லும்போது, இது இந்த வகைப் புற்றுக்குக் கொடுக்கலாம் என்றும் கூறி இருப்பதால், அந்த மருந்துகளை சித்த மருத்துவர்கள் புற்று நோயாளிகளுக்கு கொடுக்கின்றனர்.

"ஓமேநீ குறிப்புற்று யோனிப்புற்று
ஒளிவான இடிப்புற்று கன்னப்புற்று
தாமேநீ பலசிலந்தி கன்னத் தோசி
சதைவளருங் கண்ணோய் போகும் பாரே"
"கன்னத்தின் புற்றும் கனத்த தந்த சூலைகளும்
பின்னப் படுத்துந் திரட்சிகளும் வன்னமிடு
யோனிலிங்கப் புற்றினையு மோட்டும்"

இவ்வாறாக ஆதிகாலத்தில் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வந்த புற்றுநோய்களுக்கான சித்தமருந்துகள் ஏராளாமாக ஏடுகளில் எழுதப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளன. ஆனால், இதுபோன்ற பல பாரம்பரிய சித்த மருந்துகள் சித்த மருத்துவக் கல்லூரிக்குள் BSMS பாடத்திட்டத்தில் சேர்க்கப்படாததாலும், சித்த மருத்துவத்துக்கென முறையான ஆராய்ச்சிகள் இல்லாததாலும், சித்த மருத்துவர்களுக்கே நம்பிக்கையில்லாததாலும், இன்று சித்த மருத்துவமுறை, தமிழ் மக்களின் புற்றுநோயை ஒழிப்பதிலிருந்து தன்னை விலக்கிகொண்டு வெளியில் நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கூட்டுச் சிகிச்சையை ஆவணப்படுத்த வேண்டும்:

தமிழகத்திலுள்ள ஒருவருக்குப் புற்றுநோய் என்று கண்டுபிடிக்கப்பட்டால் உடனே, அந்த நோயாளியின் குடும்பத்தினர், அதை ஏற்றுக்கொள்வதற்கு சில நாட்கள் எடுத்துக்கொள்வர். வீட்டிலிருந்தவாறே, எந்த மருத்துவமனைக்குச் செல்லலாம், எந்த டாக்டர் இதற்குப் பிரபலமானவர், எவ்வளவு பணம் செலவாகும், நம்மால் பணம் திரட்ட முடியுமா, அரசு காப்பீடு கிடைக்குமா, பாரம்பரிய மருத்துவம் கைகொடுக்குமா, என்றெல்லாம் ஆராயும் போது, செவிவழிச் செய்தியாக பலவற்றைக் கேட்டறிவர். நவீன மருந்துகள் உட்கொள்ளும்போதே, கோவில்களுக்குச் செல்வதுபோல, கண்டிப்பாக பாரம்பரிய மருத்துவத்தையும் நாடிச்செல்வர். பல புற்று நோயாளிகள் என்னிடமே அலைபேசியில், இதைப்பற்றி விவாதிப்பர். கேரளாவில் காட்டுக்குள்ளே ஒரு வைத்தியர் கஷாயம் கொடுக்கிறாராம், கர்நாடகாவில் ஷிமோகா மலையில் ஒரு வைத்தியர் ஏதோ கொடுக்கிறாராமே, என்றெல்லாம் கேட்பர். பின்னர் யூடியூப்பைப் பார்த்துவிட்டு கண்டிப்பாக ஒரு நாள் அந்த வைத்தியர்களைப் பார்த்து மூலிகைகளை வாங்கிச்செல்வர். இப்போது, நவீன மருந்து மற்றும் மூலிகை மருந்துகளை சேர்த்தே உண்டாலும், புற்றுநோய் மருத்துவரிடம் மூலிகை மருந்துகளை உட்கொள்வதை மறைத்து விடுவர். இந்த நிலையில் தமிழ்நாட்டின் புற்றுநோய் ஆராய்ச்சி இங்கிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். அமெரிக்காவில் ஒரு மருத்துவமனையில் செய்த ஆராய்ச்சியில், 41% மார்பகப்புற்று நோயாளிகள், பாரம்பரிய மருந்துகளை உட்கொள்வதை வெளிப்படையாகச் சொல்லியுள்ளனர்.

இங்கு அந்த நிலைமை இல்லை. நவீன மருத்துவர் கோபப்பட்டு விடுவாராம். மதம் மாற்றத் தடைச்சட்டத்தை விடவும் கொடூரமான விடயம் இது. நோயாளி தான் விரும்பும் மருத்துவ முறைகளை பயன்படுத்த அடிப்படை உரிமை உண்டு. எனினும், இந்தத் தகவல்களையெல்லாம் நவீன மருத்துவரே சேகரித்து வைத்திருந்தால், மூலிகை மருந்துகளையும் சேர்த்து உண்பதால் பலன் இருக்கிறதா இல்லையா என்பது நமக்குத் தெரிந்திருக்கும், இந்த *documentation* முதலில் செய்யப்பட வேண்டும். நல்ல பலன் இருக்குமானால், அனைவருக்கும் சொல்வோம், பலன் இல்லையென்றால் ஒரு முடிவுக்கு வரலாம். மேலும், சித்த மருத்துவர்கள், சித்த மருத்துவக் கல்லூரிகள் எனப் பலரும் புற்று நோயாளிகளுக்கு சித்த மருந்துகளை கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவற்றை உரிய முறையில் ஆவணப்படுத்தி, அரசுக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதை புள்ளிவிவர ஆராய்ச்சிக்கு உட்படுத்தும் போது, அதன் நன்மை தீமைகளை நாம் அறியலாம். பயன் தரும் மருந்துகளை, சித்த மருத்துவக் கல்லூரியிலேயே கொடுக்க ஏற்பாடு செய்யலாம்: புற்றுநோய்க்கான பாரம்பரிய சிகிச்சை, பல வைத்தியர்களோடு முடிந்துவிடாமல் இருக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

## புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்துகள் எவை?

என்னுடைய 13 ஆண்டுகால சித்தமருத்துவ ஆராய்ச்சி அறிவைக் கொண்டு, நான் புற்றுநோய்க்கான சித்த மருந்துகளை 5 வகையாகப் பிரித்துள்ளேன்.

முதல்வகை, Siddha chemotherapy என்று சொல்லப்படும் புற்று செல்களை நேரடியாக அழிக்கும் மருந்துகள். பொதுவாக இந்த மருந்துகள், தங்கம், செம்பு, ஆர்செனிக், வெள்ளி போன்ற உலோகப் பாடாணங்களால் செய்யப்பட்டவையாகும். உதாரணமாக ரசசெந்தூரம், நவபாஷான செந்தூரம் போன்றவற்றை கீமோதெரபி கொடுக்க முடியாத கட்டத்தில் அதற்கு மாற்றாகக் கொடுக்கலாம். அல்லது, இதையும் சேர்த்தே கொடுப்பதன் மூலம், கீமோதெரபியின் அளவைக் குறைக்க முடியும், பக்க விளைவுகளை வெகுவாகக் குறைக்க முடியும்.

இரண்டாம் வகை, மூலிகைகள் மற்றும் உலோகக் கலவையால் செய்யப்பட்டவையாகும். உதாரணமாக இரசகந்தி மெழுகு, நந்தி மெழுகு போன்றவை. இவை, பெருமருந்துகள் என்றும் அழைக்கப்படும். ஏனெனில், இவை புற்றுநோய் செல்கள் உடலில் மற்ற இடங்களில் பரவுவதைத் தடுக்கும், நோய் எதிர்ப்புத்திறனை அதிகப்படுத்தும் (எதிர்ப்புத்திறன் பெற்று புற்று செல்களை அழிக்கும்), மற்றும் சிறிய அளவில் புற்று செல்களை கொல்லும் திறனும் படைத்தது. நவீன கீமோதெரபி, அல்லது கதிரியக்க சிகிச்சை அல்லது அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட பின்னர், இந்த மருந்துகளைக் கொடுக்கலாம்.

மூன்றாவது வகை, உடலின் எதிர்ப்புத் திறனைக் கூட்டவும், பொதுவான உடல் ஆரோக்கியத்தைப் பேணவும், பசி உண்டாக்கவும், உடல் எடையைக் கூட்டவும் கொடுக்கப்படுவதாகும், அமுக்கரா லேகியம், மஞ்சள் போன்றவற்றை நோயாளி நவீன மருந்துகள் உட்கொள்ளும் போதே இதையும் சாப்பிடலாம். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட உடல் உறுப்புகளை பலப்படுத்தும் விதமாக காயகற்பம் என்ற சித்த மருத்துவ மூலிகைமருந்துகள் இந்த இடத்தில் சிறப்பாக வேலைசெய்யும்.

நான்காவது வகை, நவீன மருத்துவத்தின் பக்க விளைவுகளைப் போக்குவதற்காகக் கொடுக்கப்படும் மூலிகை மருந்துகளாகும். உதாரணமாக *cisplatin, 5-Flurouracil, radiation* இவற்றால் ஏற்படும் வாய்ப்புண்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த-நவீன கூட்டு மருத்துவப் புற்றுநோய்ச் சிகிச்சையின் முன்னோடி

## டாக்டர் சி.பி. மேத்யூவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

பேராசிரியர். டாக்டர். சி.பி. மாத்யூ MBBS, MS, DMR (Senior Oncologist),அவர்கள் கேரளாவில் உள்ள கோட்டயம் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்த காலத்தில், நவீன மருந்துகள் மற்றும் கதிரியக்க சிகிச்சையால் தீர்க்க முடியாமல், இவரால் கைவிடப்பட்ட ஒரு நோயாளியை சிறிது காலத்திற்குப் பிறகு, சந்திக்கிறார். ஒரு சித்த வைத்தியர் கொடுத்த மருந்தை உண்ட பிறகு, தான் குணமடைந்ததாக அந்த நோயாளி கூறியுள்ளார். அதன் தேடுதலாக, தமிழ்நாட்டிலுள்ள பல சித்த மருத்துவர்களை நேரில் பார்த்து, விவரங்களை அறிந்து கொண்டு, அதன்பின் புற்றுநோயாளிகளுக்கு சித்தா மருந்துகளையும் சேர்த்தே கொடுத்துள்ளார். 60 ஆண்டு கால புற்றுநோய் சிகிச்சையின் பாதியில் இந்தத் திருப்பம் ஏற்பட்டதன் விளைவாக, கடந்த 34 ஆண்டுகளாக ஒருங்கிணைந்த சித்த-நவீன புற்று நோய் சிகிச்சையை இவர் மேற்கொண்டு வந்திருக்கிறார். புற்று நோய்களுக்கான நூற்றுக்கும் மேற்பட்ட சித்த மருந்துகளில், இவருக்குத் தெரிந்த பத்து மருந்துகளை மட்டும் இணைத்துப் பயன்படுத்துவதால், நவீன மருந்துகள் மற்றும் கதிரியக்க சிகிச்சையின் தேவையை/அளவை குறைக்க முடிகிறது, பக்க விளைவுகள் இல்லாமல் வாழ்நாள் நீட்டிக்கப்படுகிறது, பலர் பூரண குணமும் அடைகின்றனர், மருத்துவச் செலவுகள் மிகவும் குறைகிறது, குணப்படுத்த முடியாத நிலையை அடைந்த நோயாளிகளின் கடைசிக் காலங்கள் சிரமங்கள் இன்றி இனிமையாகக் கழிக்க முடிகிறது. தென் இந்தியாவின் அனைத்து பாகங்களிலும் இருந்து பலநோயாளிகள் குறைந்த செலவில் பலன்பெறுகின்றனர். இதற்காகத் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் இயக்குனர், பேராசிரியர் மருத்துவர். மீனாகுமாரி அவர்கள், டாக்டர் சிபி.மேத்யூவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை அறிவித்தார். அதை, அவரது 92ஆவது பிறந்த நாளன்று (7-9-2021) அவரது இல்லத்துக்கே சென்று வழங்கினார். இது நாள் வரையிலும் சித்த மருத்துவத்துக்காக கேரளாவில் ஒலித்துகொண்டிருந்த அந்தக் குரலுக்கு இது ஒரு அங்கீகாரம்.

டாக்டர் சி.பி.மேத்யூ அவர்கள் இந்தியாவில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட அத்தனை வகையான புற்றுநோய் சிகிச்சைகளையும் பயன்படுத்தும் கைதேர்ந்த நிபுணர் ஆவார். முதன்முதலாக, இந்தியாவில் சில புற்றுநோய்க்கான மருந்து ஆராய்ச்சிகளையும் செய்து, அறிவியல் இதழ்களில் பிரசுரித்தும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட, ஆராய்ச்சி மனப்பான்மை அவருக்கு இருந்ததால், இந்த சித்த மருந்துகளைப் பயன்படுத்திப் பார்ப்பதில், ஆராய்ச்சி செய்வதில் அவர் தயக்கம் காட்டவில்லை. நவீன மருத்துவர் ஒருவர், சித்த மருந்துகளையும் சேர்த்து புற்றுநோய்க்கு கொடுப்பது, வரலாற்றில் இதுவே முதல்முறையாகும். படிப்படியாக, அவர் 60வகையான புற்று நோயளிகள், எய்ட்ஸ் நோயாளிகள், என பலவகையான நோயாளிகளுக்கும் சித்த மருந்துகளை வழங்கி வெற்றி பெற்றுள்ளார்.

---

குடல்புண், சிறுநீரக பாதிப்புகளை சரிசெய்ய சகதேவி என்ற சித்த மூலிகையைப் பயன்படுத்த வேண்டும். இதை என்னுடைய 6 ஆண்டுகால ஆராய்ச்சியில் சோதனை எலிகளில் நிரூபித்து இருக்கிறேன். முடி உதிர்தலுக்கு கரிசலாங்கண்ணி சேர்ந்த தைலங்கள் பயன்படுத்த வேண்டும். புற்றுநோயைக் குணப்படுத்தும் நிலையைக் கடந்துவிட்டால், இப்போது நோயாளிக்கு மரணம் என்பது தவிர்க்க முடியாததாகிவிடும், மரணத் தறுவாயை நெருங்கும் மீதமுள்ள வாழ்நாளின் மரணவேதனை விவரிக்கமுடியாதது. தினமும் வளர்ந்துகொண்டிருக்கும் புற்றுநோயின் தாக்கத்தால், உடலில் பலபுதிய குறிகுணங்கள் ஏற்படும். புற்று பாதித்த உறுப்புகளில் அதீதவலி, மன உளைச்சல், தூக்கமின்மை, நுரையீரலில் நீர் கோர்ப்பதால் மூச்சுவிட சிரமம், வயிற்றில் நீர் கோர்ப்பதால் பெருவயிறு, சிறுநீர் கழிப்பதில் சிரமம், வயிறு ஊதல், மலச்சிக்கல், மனச்சிக்கல், வாந்தி, படுக்கைப் புண், என ஒவ்வொரு நோயாளிகளும் ஒவ்வொரு வகையான துன்பங்களுக்கு ஆளாவர். கடந்த காலத்தில் செய்த பாவங்களை நினைத்து மிகவும் துன்பப்படுவர். அந்தத் தவறுகளுக்கு பிராயச்சித்தமாக எதைச் செய்வது, எப்படி வெளியே சொல்வது, மரணத்தை நான் எப்படி எதிர்கொள்வேன், என் கடைசி பிள்ளை இன்னமும் செட்டில் ஆகவில்லையே, இரண்டாவது மகளின் கணவருக்கு குடிப்பழக்கம் இருக்கிறதே, பேரப்பிள்ளைகள் இன்னமும் பிறக்கவில்லையே, என் சந்ததி இந்த உலகில் இருக்குமா? என்றெல்லாம் பலவகையான மனம் சார்ந்த பிரச்சனைகளுக்கு ஆளாவர். மரணவலி தணிப்புச் சிகிச்சை (*palliative care*) என்னும் மருத்துவப் பிரிவு, இப்படி தீரா நோய்களால் மரணத்தருவாயை நெருங்கிய நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிறப்பு மருத்துவப் பராமரிப்பு மற்றும் செவிலியர் கவனிப்பு ஆகியவைகொண்ட பல்நோக்கு மருத்துவ அணுகுமுறை ஆகும்.

இந்த இடத்தில் தான் ஐந்தாவது வகையான மருத்துவமுறை மிகவும் பயனுள்ளதாக அமையும். அபின் மற்றும் கஞ்சா போன்ற வலிநிவாரணிகள், வர்மம், தொக்கணம் மற்றும் புற மருத்துவச் சிகிச்சை முறைகள், தைலம் தடவுதல், யோகா, சித்தர்களின் பாடல்கள், சித்தர் ஆன்மீகம், இறைவன்-இயற்கை-வாழ்க்கையை சித்தர்களின் பார்வையில் பார்த்தல், என ஏகப்பட்ட வகையில் சித்த மருத்துவம் இந்த



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




"கேரளாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையில் இருப்பது ஒரு மலை (மேற்கு தொடர்ச்சி மலை) தான். ஏன் இந்த சித்த மருத்துவம் தமிழகத்தைத் தாண்ட மறுக்கிறது?" என்ற கேள்வியை அவர் அவ்வப்போது எழுப்புவார்.

2017 ஆம் ஆண்டு, மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் அன்றைய இயக்குனர் பேராசிரியர். டாக்டர். ராமசாமி அவர்களின் சீரிய முயற்சியால், மணிப்பால் பல்கலைகழகத்தில், "புற்று நோய் மற்றும் தோல் நோய்களுக்கான ஒருங்கிணைந்த சித்த-நவீன மருத்துவ முறை" குறித்த தேசியக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அங்குதான், முதன் முதலாக டாக்டரின் ஒருங்கிணைந்த சிகிச்சைமுறை குறித்து டாக்டர். அபில் மோகன் வெளிக்கொண்டு வந்தார், அது அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. மணிப்பால் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வந்த எனக்கு அன்றிலிருந்தே, எப்படியாவது இந்த முறையை மேலும் பல சித்த மற்றும் நவீன மருத்துவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும், இதை எப்படியாவது வெளிக்கொண்டு வரவேண்டும், இதை ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டும் என்று ஆழ்மனதில் எண்ணம் பதிந்தது. அதன் விளைவாக, டாக்டர்.அபில் மோகனுடன் இணைந்து, அதற்கான முயற்சியை செய்ய ஆரம்பித்தோம். அந்தச் சமயத்தில்தான் கோயம்புத்தூரைச் சேர்ந்த சித்த மருத்துவ ஆர்வலரும், கல்பாக்கம் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவருமான நடராஜன் அவர்கள் இதற்குத் தேவையான பண உதவியைச் செய்ய முன்வந்தார். அதன்படி, வாரா வாரம், டாக்டர்.சிபி. மேத்யூவை நேரில் சந்தித்து, பல கேள்விகளைக் கேட்டு, அவரின் அனுபவங்களைத் தொகுத்து புத்தகமாக்கும் முயற்சியை ஆரம்பித்தோம். இன்றுவரை, திரு.நடராஜன் அவர்களை நாங்கள் இருவரும் நேரில் பார்த்ததில்லை. அலைபேசியில் பேசுவதோடு சரி. அவரின் அதீத ஆர்வம் சித்த மருத்துவராகிய எங்களுக்கு மிகவும் உந்துகோலாக அமைந்தது. அந்தப் புத்தகத்தை முடிக்க வேண்டி, நானும் கோட்டயம் பயணித்தேன். டாக்டர் அவர்கள் என்னை அவரின் அருகிலேயே ஒரு வாரம் அமர வைத்து, எப்படி நோயாளிகளை அவர் அணுகுகிறார், என்று புரிய வைத்தார். மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் நான், பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவரிடம் மாணவனாக இருந்து ஒரு வாரம் கற்ற அனுபவத்தை, சித்தர்களின் பாக்கியமாகவே கருதுகிறேன். அவரைப்பற்றி பிப்ரவரி 2021இல், ஒரு சிறிய காணொளி ஒன்றைத் தயாரித்து வெளியிட்டேன். அதில், அவரின் ஒருங்கிணைந்த மருத்துவ முறையைப் பற்றியும், அவரைப் பாராட்ட வேண்டிய அவசியத்தையும், இதை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த வேண்டிய தேவையையும் அதில் குறிப்பிட்டிருந்தேன். அந்தக் காணொளி பல தமிழ் ஆர்வலர்களையும் சித்த மருத்துவ சமூகத்தையும் சென்றடைந்து இருந்தது.

- அருள்அமுதன்

---

வகை நோயாளிகளுக்கு உதவமுடியும். உண்மையைச் சொல்லப்போனால், மரணத்தருவாயில் இருக்கும் புற்றுநோயாளியின் உடலில் எல்லா துளைகளிலும் டியூப்களை செருகி, அதிக பக்கவிளைவுள்ள மருந்துகளை இந்த நேரத்தில் கொடுத்து, மரணத்துன்பத்தை அதிகப்படுத்துவதும், குடும்பத்துக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதும் இப்போது நடக்கிறது. இந்த நேரத்தில் சித்த மருந்துகளையும் - நவீன மருந்துகளையும் இணைத்து கொடுக்கும்போது, நோயாளிகளுக்கும் அவர் குடும்பத்துக்கும் மிகவும் பேருதவியாக இருக்கும் என்பது என் அனுபவம். இது, மீதம் இருக்கும் நாட்களிலாவது, இயற்கையாக, நிம்மதியாக வாழ உதவும்.

தற்போது, பெரும்பாலான சித்த மருத்துவர்களின் கைகளில் நோயாளி இந்த நிலையை அடைந்தபிறகுதான் வந்து சேருகிறார். நோயாளியை மருத்துவமனையில் அனுமதித்து அதிகப் பணம் செலவுசெய்ய முடியாதபோது, வீட்டிலிருந்தவாறே கடைசிக்காலத்தைக் கழிக்க இந்த சித்த-நவீன மருத்துவக் கூட்டுச் சிகிச்சையால் முடியும். நான் பரிகரித்த நோயாளிகளில் பலர், இந்த கூட்டு சிகிச்சையால் மரணிக்கும் நாள்வரையிலும் காலைஉணவு உண்டும், உறங்கியும் நிம்மதியாக இருந்தனர். சிலருக்கு கடைசி ஓரிரு நாள் மட்டும் மருத்துவமனை வாசலை மிதிக்க வேண்டிய் தேவை வந்தது, அதுவே அவர்களுக்கு கடைசி நாளாகவும் அமைந்தது, ஆக, சித்த மற்றும் நவீன மருந்துகளை தேவைப்படும் இடத்தில் இணைத்துப் பயன்படுத்தும்போது, மிகுந்த நன்மை பயக்கும். இரண்டு மருந்துகளையும் இணைக்கும் போது, ஏதாவது விபரீதம் ஆகிவிடாதா என்ற கேள்வி எழும். ஏற்கனவே நோயாளிகள் இரண்டையும் சேர்த்து சாப்பிட்டுக்கொண்டுதானே இருக்கிறார்கள். எனவே, இந்த உண்மையைப் புரிந்துகொண்டு நம் மருத்துவத்துறை இதை வெளிப்படையாக ஆவணப்படுத்தினால், உண்மையைக் கண்டுபிடிக்கலாம்.

கடந்த காலங்களில் பல சித்த மருந்துகளை, புற்றுநோய் செல்களிலும் (*In-vitro studies*), சோதனை எலிகளிலும் ஆராய்ச்சி செய்து சில கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. மணிப்பால் பல்கலைகழகத்திலும் இப்படியான ஆராய்ச்சிகளை நாங்கள் செய்துள்ளோம். ஆனால், புற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளிகளிடம் எந்த ஆராய்ச்சியும் இதுவரை நடக்கவில்லை. நவீன புற்று நோய் நிபுணர்கள் விருப்பம் தெரிவித்த பிறகும் கூட, எங்களுக்கு போதிய நிதியுதவி இன்மையால் ஆரம்பித்த ஒவ்வொரு ஆராய்ச்சியும் கிடப்பில் போடப்பட்டது. ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, சித்த மருத்துவம் உலக மருத்துவமாக பரிணமிக்கும்.

## சித்த-நவீன புற்றுநோய் கூட்டு மருத்துவத்தின் முன்னோடி:

கேரளாவின் கோட்டயத்தைச் சேர்ந்த புற்றுநோய் நிபுணர் டாக்டர். சி.பி.மாத்யூ *MBBS, MS, DMR (Senior Oncologist)*, அவர்கள் கோட்டயம் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தபோது, அவரால் கைவிடப்பட்ட ஒருவர், சித்த மருந்துகளை உண்டு புற்று நோய் குணமானதால், அவர் சித்த மருந்துகளைப் பற்றித் தெரிந்து கொண்டு, ஒருங்கிணைந்த சித்த-நவீன புற்றுநோய் சிகிச்சையை உலகில் முதன்முறையாக கடந்த 34 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகிறார். 92 வயதான அவரிடம் நான் சென்று பயிற்சிபெறும் வாய்ப்பும் கிடைத்தது. *"Siddha system is the divine system, created by semi-Gods and Saints like Agasthayr and Bogar. These saints are perfect, hence their medical system is also perfect, which does not need any correction. It is a perfect health system that can cure cancers. When Siddha drugs are given in combination with allopathic drugs in cancer patients, we get wonderful results"* அதாவது அகத்தியர் போகர் போன்ற சித்தர்கள் உருவாக்கிய இந்த தெய்வீக மருத்துவ முறையில் எந்தப் பிழையும் இல்லை, இதை நவீன மருந்துகளோடு இணைத்துக் கொடுத்தால், பல அற்புதங்கள் செய்ய முடியும். இந்த வரிகளை அவர் என்னிடம் சொல்ல, அதை என் காதுகள் கேட்ட கணம், என் உள்ளம் பூரித்துப் போய்விட்டது. "நீங்கள் சித்த மருத்துவர்களிடையே இதைபற்றிச் சொல்லி, தைரியமாகப் பயிற்சி செய்யச் சொல்லுங்கள். இதே மருத்துவ முறை, மலையாளத்திலோ சமஸ்கிருதத்திலோ இருக்குமானால், இன்று இதை உலகறியச் செய்திருப்பர். இந்தக் கடமையை தமிழ் மக்களிடமும், சித்த மருத்துவ அரசு அதிகாரிகளிடமும் சொல்லுங்கள். எனக்கு வயதாகி விட்டது. இனிமேல் என்னால் இளைய மாணவர்களை உருவாக்க முடியாது. எப்படியாவது, இந்த ஒருங்கிணைந்த முறைக்கு உயிர் கொடுங்கள், உலகறியச் செய்யுங்கள். உங்களைப் போன்ற இளையவர்களை நம்பித்தான், நான் இருக்கிறேன்" என்று அவர் சொன்னது, எனக்குள் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கியது. தமிழ்நாட்டில் எந்த நவீன மருத்துவர் இப்படிச் சொல்வார்?

நூற்றுக்கும் மேற்பட்ட புற்று நோய்களுக்கான சித்த மருந்துகளில், இவருக்குத் தெரிந்த பத்து சித்த மருந்துகளை மட்டும் இணைத்துப் பயன்படுத்துவதால், நவீன மருந்துகள் மற்றும் கதிரியக்க சிகிச்சையின் தேவையை/அளவை குறைக்க முடிகிறது, பக்க விளைவுகள் இல்லாமல் வாழ்நாள் நீட்டிக்கப்படுகிறது, பலர் பூரண குணமும் அடைகின்றனர், மருத்துவச் செலவுகள் மிகவும் குறைகிறது. குணப்படுத்த முடியாத நிலையை அடைந்த நோயாளிகளின் கடைசி காலங்கள் சிரமங்கள் இன்றி இனிமையாக கழிக்க முடிகிறது. சித்த மருந்துகளால் எந்தப் பக்க விளைவுகளையும் அவர் பார்க்கவில்லை என்பது கூடுதல் தகவல். அவரின் இந்த உத்தியை தமிழ்நாட்டிலும் நாம் எளிதாக நடைமுறைப்படுத்தலாம்.

## என்ன செய்ய வேண்டும்?

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நவீன புற்றுநோய் மருத்துவமனைகளிலும், உடனடியாக ஒரு சித்த மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும். அதை, அருகில் உள்ள சித்த மருத்துவக் கல்லூரி அல்லது மாவட்டத் தலைமை சித்த மருத்துவமனையின் கண்காணிப்பில் கொண்டுவர வேண்டும். நோயாளி நமக்குத் தெரியாமல், எங்கெங்கோ மூலிகை மருந்தைத் தேடி பண விரயம் செய்வதை விட, அவருக்கு என்ன தேவையோ, என்ன விரும்புகிறாரோ, நாமே கொடுத்து விடலாமே. இங்கு இரண்டு மருத்துவமுறை மருத்துவர்களும் ஒருவருக்கொருவர் தீர ஆலோசித்து, எந்தவகையான மருந்துகளை இணைத்துக் கொடுப்பது என்று முடிவெடுக்க வேண்டும். இதற்கு சட்டத்திலும் எந்தப் பிரச்சனையும் இல்லை, நோயாளியிடமும் எந்தப் பிரச்சனையும் இல்லை, ஆனால், மருத்துவக் கட்டமைப்பில்தான் பிரச்சனை உள்ளது. ஒரே இடத்தில் இரண்டையும் கிடைக்கச் செய்வது, ஆராய்ச்சி அடிப்படையில் சில வருடங்கள் இதை நடைமுறைப்படுத்தி, பின்னர் புள்ளியியல் தரவின் அடிப்படையில் உலகறியச் செய்வது, மருத்துவர்களுக்கிடையே சரியான புரிதல்களை ஏற்படுத்த வேண்டியது, ஒருங்கிணைந்த புற்று நோய் பயிற்சிக்கு அரசு ஊக்கம் தருவது, சித்த மருந்துகளை மருத்துவக் காப்பீட்டில் சேர்ப்பது என அரசின் தலையீடு இருக்குமானால் இது சாத்தியமே. இதை நாம் செய்யத் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் புற்று நோயாளிகளுக்கு நாம் துரோகம் இழைக்கிறோம்.

## இது சரியா?

அறிவியல் தரவுகள் இல்லாமல், நினைத்த மாத்திரத்தில் இரு மருத்துவ முறைகளை ஒருசேரப் பயன்படுத்த முடியாதுதான். *MBBS* படித்த சித்த மருத்துவர்களையும், *Medical Pharmacology* போன்ற நவீன மருந்தியலைப் படித்த சித்த மருத்துவர்களையும், புற்று நோய் நிபுணர்களையும் இணைத்து ஓரிடத்தில் அமர்த்தி ஆக்கப்பூர்வமான விவாதம் செய்ய வழிவகை செய்தால் எல்லாம் தானாக நடக்கும். தமிழக அரசு அல்லது தனியார் புற்றுநோய் மருத்துவமனைகள் இந்த ஒருங்கிணைந்த சிகிச்சையை மேற்கொள்ளும் முயற்சியை எடுக்குமாயின், நான் அதற்கு உதவத் தயாராக இருக்கிறேன். இந்த ஒருங்கிணைந்த முறையை, முதலில் தமிழ்நாட்டில் தொடங்குவோம், பிறகு வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்குச் சொல்லலாம்.

**கட்டுரையாளர் : மருத்துவப் பேராசிரியர், மணிப்பால் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

து. ரவிக்குமார்

# மொழியைப் பற்றி ஆழமாகச் சிந்தித்தவர் கி.ரா.

**18.09.2021 அன்று மாலை புதுச்சேரியில் நடைபெற்ற கி.ரா.வின் 99ஆவது பிறந்தநாள் நிகழ்ச்சியில் பேராசிரியர் க. பஞ்சாங்கம் எழுதிய 'கி.ரா. நூறு' எனும் நூலை வெளியிட்டுப் பேசியதன் சுருக்கம்**

இந்த நிகழ்ச்சியில் பார்வையாளராகக் கலந்து கொள்ளவே நான் வந்தேன். ஒரு நிகழ்ச்சியில் பேச்சாளராக மட்டுமின்றி பார்வையாளராகக் கலந்து கொள்ள வேண்டும் என்ற நல்ல பண்பை கி.ரா.விடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நான் நடத்திய பல நிகழ்ச்சிகளில் அவரும் கணவதி அம்மாவும் பார்வையாளர்களாக வந்து பங்கேற்றிருக்கிறார்கள். இறுதிவரை இருந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். பஞ்சு (பேராசிரியர் க.பஞ்சாங்கம்) எழுதிய கிரா நூறு என்ற இந்த நூலை வெளியிட வேண்டும் என்று திரு. சிலம்பு செல்வராஜ் கேட்டுக்கொண்டார். இப்படியான ஒரு நூலுக்குத் தனியே நிகழ்ச்சி நடத்தி அதை அறிமுகப்படுத்துவதுதான் அதற்குச் செய்யும் மரியாதையாக இருக்கும் என்று நான் கூறினேன். ஆனால் பஞ்சு இந்த நிகழ்ச்சியிலேயே நூலை வெளியிட வேண்டும் என்று விரும்புகிறார் என அவர் தெரிவித்தார். அதனால் நானும் ஒப்புக்கொண்டேன்.

ஒரு நூலைப் படிக்காமல் அதை வெளியிடுவது அந்த நூலுக்குச் செய்யும் மரியாதை அல்ல. நல்லவேளை பஞ்சு பேசிக்கொண்டிருந்த நேரத்திலேயே இந்த நூலின் பாதி அளவுக்குப் படித்து விட்டேன். கிரா எழுதிய கடிதங்கள்,அவரது படைப்புகள், கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் முதலானவற்றிலிருந்து 100 குறிப்புகளைத் தேர்வுசெய்து பஞ்சு இந்த நூலில் தொகுத்திருக்கிறார். அதையும் பல்வேறு பொருண்மைகளின் கீழ் பிரித்திருக்கிறார்.

கிராவின் ஒட்டுமொத்த படைப்புகளையும் பல்வேறு தொகுதிகளாகப் பதிப்பித்து வெளியிட்டால் அதை பல பேர் வாங்குவார்கள், அதை வெளியிடும் பதிப்பகத்துக்கும் நல்ல லாபம் கிடைக்கும். ஆனால் அவ்வாறு வெளியிடப்படும் தொகை நூல்கள் வாசிக்கப் படுகின்றனவா என்பது கேள்விக்குரியது. பெரும்பாலும் அப்படி வெளியிடப்படும் தொகை நூல்கள் 90 விழுக்காடு வாசிக்கப்படுவதில்லை .

இப்போது ஒரு போக்கு அதிகரித்து வருகிறது. இந்த புத்தகம் என்னிடம் இருக்கிறது என்று சொல்லிக் கொள்வதில் பலர் பெருமைப்படுகிறார்கள். ஒரு புத்தகம் என்னிடம் இருக்கிறது என்பதற்கும் அதை நான் வாசித்திருக்கிறேன் என்பதற்கும் ஏராளமான வேறுபாடு இருக்கிறது. ஒரு நூலைப் படித்து அதை உள்வாங்கிக் கொள்வது என்பது வேறு, அதை விலைக்கு வாங்கி அலமாரியில் வைத்திருப்பது என்பது வேறு. அப்படி அலமாரியில் காட்சிப் பொருளாகி விடாமல் கிராவின் படைப்புகளில் இருந்து சுவாரசியமான பல விஷயங்களை மிகுந்த கவனத்தோடு படிப்பதற்கு இலகுவான முறையில் பஞ்சு இதில் தேர்ந்தெடுத்துத் தொகுத்திருக்கிறார். இப்படி தொகுக்கும்போது தொகுப்பாளரின் ருசி அவருடைய முன்னுரிமை ஆகியவை அதில் ஆதிக்கம் செலுத்துவது இயல்புதான். இப்படி தொகுக்கப்படும் படைப்பு அதுவே ஒரு தனி நூலாக ஆகிவிடுகிறது. இப்படி தொகுக்கும்போது அது சமகால வாசகர்களின் தேவையை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும். நிச்சயம் அந்த நோக்கத்தை இந்த நூல் நிறைவு செய்யும். கிராவை புதிதாக வாசிக்க வேண்டும் என்று விரும்புகிற ஒருவர் இந்த நூலைப் படித்தால் அவர் கிராவின் படைப்புகளைத் தேடிச் செல்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் சந்தேகமே இல்லை. அதுதான் இந்தப் புத்தகத்தின் சிறப்பு என்று நான் கருதுகிறேன்.




இசை முதல் இலக்கியம்வரை இதில் பல விஷயங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. கிரா பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர் அல்ல. ஆனால், அவரை புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக அன்றைய துணைவேந்தர் வேங்கட சுப்பிரமணியன் நியமித்தார். அது ஒரு தனித்துவமான செயலாகும். அப்படி நியமிக்கப்பட்ட கிரா, தான் எந்தவொரு பேராசிரியருக்கும் குறைந்தவர் அல்ல என்பதைத் தனது செயல்பாடுகளின் மூலமாக நிரூபித்தார். இந்த நூலில் தொகுக்கப் பட்டிருக்கும் கருத்துகளில் மொழியைப் பற்றி கிரா சொன்ன கருத்துக்கள் ஆங்கங்கே இடம்பெற்றுள்ளன. ஒரு மொழியியலாளரின் தீவிரத்தோடும் நுட்பத்தோடும் பல கருத்துகளை அவர் தெரிவித்திருக்கிறார். உரைநடைக்கும் கவிதைக்கும் இடையே இருக்கும் வேறுபாட்டை பலமுறை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். உரைநடைக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை என்பது அவரது ஆதங்கம். உலகத் தமிழ் மாநாடுகளில் கூட உரைநடைக்கு உரிய மதிப்பு அளிக்கப்படுவதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபோது தமிழ்த்துறையை உரைநடைத் துறை கவிதைத் துறை என்று இரண்டாகப் பிரித்து அமைக்க வேண்டும் என துணைவேந்தரிடம் கூறினாராம். உரைநடை பற்றிய கிராவின் அவதானிப்பு முக்கியமானது. உரைநடை என்பது தோன்றி 100, 150 ஆண்டுகள் தான் ஆகின்றன. அது குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. எனவே, அதை வளர்த்தெடுப்பதற்குக் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதே அவருடைய வாதம். தமிழ் உரைநடைக்கு பாரதியார் செய்த பங்களிப்பை எல்லோரும் பாராட்டுவார்கள். ஆனால் அவருக்கு முன்பாகவே ராமலிங்க அடிகளார் தமிழ் உரைநடைக்கு மிகப்பெரிய அளவில் பங்களிப்பைச் செய்திருக்கிறார் என்று கிரா குறிப்பிடுகிறார்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாகப் பிரிந்தது பற்றி மிகவும் வருத்தத்தோடு அவர் பதிவு செய்திருக்கிறார். கம்யூனிச இயக்கத்தின் மீது அவர் வைத்திருந்த பற்று அதில் வெளிப்படுகிறது. கட்சி பிளவுபடுவதற்கு முன்பு கட்சியைத் தோற்றுவித்த ஒருவரைப் பற்றிய புகார்கள் நிறைய சொல்லப்பட்டதாகவும் அவர் விலகிக் கொண்டால் கட்சியை ஒரே கட்சியாக நடத்திச் செல்லலாம் என்று ஒரு சமரசத் தீர்வு சொல்லப்பட்டதாகவும், ஆனால் அப்படி புகாருக்கு ஆளான நபர் 'நான் விலகினால் என் மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் உண்மை என்றாகி விடும் எனவே நான் விலக மாட்டேன்' என்று கூறி விட்டதாகவும், அதனால்தான் கட்சி இரண்டாக உடைந்தது என்றும் தான் கேள்விப்பட்ட செய்தி ஒன்றை கிரா பதிவு செய்திருக்கிறார். அந்தக் கட்டுரையின் கடைசியில் ராமாயணத்திலிருந்து ஒரு கதையை கிரா கூறுகிறார்: ராமனை கொல்வதற்கு ராவணன் ஒரு மூலோபாயப் படையை அனுப்புகிறான். ராமனை எப்படி அடையாளம் காண்பது என்று கேட்டபோது அவன் நாமம் தரித்து இருப்பான் என்று அடையாளம் சொல்கிறான். இந்தச் செய்தியை ஜாம்பவான் போய் ராமனிடத்தில் சொல்ல ராமன் ஒரு தந்திரம் செய்கிறான். ஒரு பாணத்தை எடுத்து இராவணன் அனுப்பிய படை மீது எய்கிறான். அது போய் விழுந்ததுமே ராவணன் அனுப்பிய படை வீரர்கள் அனைவருடைய நெற்றிகளிலும் நாமம் தீட்டப் பட்டதாகக் காட்சியளிக்கிறது. அவர்கள் உடனே இவன்தான் ராமன் அவன்தான் ராமன் என்று ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு அழிந்து போகிறார்கள். ஏகாதிபத்தியம் எப்படி கம்யூனிச இயக்கங்களைச் சிதைக்கிறது என்பதைப் பூடகமாக அதில் கிரா குறிப்பிட்டிருக்கிறார்.

கிரா, தான் பார்க்க விரும்பிய இரண்டு எழுத்தாளர்களைப் பற்றி மிகுந்த வருத்தத்தோடு சொல்லியிருக்கிறார் - ஒருவர் புதுமைப்பித்தன், இன்னொருவர் தருமு சிவராமு. அவர்கள் இருவரையும் சந்திக்க விரும்பியதாகவும் ஆனால் அதற்குள் அவர்கள் மரணமடைந்து விட்டதாகவும் அவர் வெவ்வேறு கட்டுரைகளில் குறிப்பிட்டு இருக்கிறார். பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெறவில்லை என்றாலும் கிரா எதையும் படிக்காத பாமரர் அல்ல. ஏராளமாக அவர் வாசித்து இருக்கிறார். அது அவருடைய எழுத்துக்களில் வெளிப்படுகிறது.

கிரா தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர் என்பதை சிலர் விமர்சனத் தொனியில் சொல்வதுண்டு. ஒரு வாசகர் அவரிடத்தில் கேட்கிறார், 'நீங்கள் எந்த மொழியில் சிந்திப்பீர்கள்?' என்று. அதற்கு ரஷ்ய எழுத்தாளர் நபகோவ் கூறிய ஒரு பதிலை அவர் மேற்கோள் காட்டுகிறார். அதேபோல ஒரு கேள்வி நபகோவிடம் எழுப்பப்பட்ட போது 'நான் மொழியால் சிந்திப்பதில்லை. படிமங்களால் சிந்திக்கிறேன்' என்று அவர் பதில் அளித்தாராம். ஒரு படைப்பாளி மொழியால் சிந்திப்பது கிடையாது. படிமங்களால் தான் சிந்திக்கிறார் என்பதை மிக அழுத்தமாக கிரா பதிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்கிறார்.

பேச்சு மொழியை கொச்சை என்று சொல்பவர்களை அவர் கண்டிக்கிறார். பண்டித மொழிதான் கொச்சையானது, செயற்கையானது. மக்கள் பேசுகிற மொழி கொச்சையானது அல்ல' என்பது அவரது வாதம்.

சிறு பத்திரிகைகளுக்கு கிரா உதவி செய்ததைப் பற்றி இங்கே பஞ்சு தனது பேச்சில் குறிப்பிட்டார். கதைசொல்லி என்ற ஒரு பத்திரிகையையும் கிரா நடத்தினார் என்பது நமக்குத் தெரியும். ஆனால் அவர் நடத்த விரும்பி நடத்த முடியாமல் போன ஒரு பத்திரிகை இருக்கிறது. அந்த பத்திரிகைக்கான 'ஐடியாவே' ரொம்ப வினோதமாக இருக்கிறது. ஒருவர் ஒன்றை எழுதி இன்னொரு நபருக்கு அனுப்ப வேண்டும். அவர் அதில் ஒன்றை எழுதி அதை இன்னொரு நபருக்கு அனுப்ப வேண்டும். இப்படி குறிப்பிட்ட சில எழுத்தாள நண்பர்களுக்குச் சென்று ஒவ்வொருவரும் அதில் எழுதி அது இறுதியில் இடைச்செவலுக்கு வந்து சேர ஆறு மாதங்கள் பிடிக்கலாம் என்று அனுமானித்து அதை அவர் ஆரம்பிக்கிறார். அதைப்பற்றி அவநம்பிக்கையோடு சொன்னவர் அழகிரிசாமி .

ராஜநாராயணனுக்குத்தான் இப்படி வினோதமான கற்பனையெல்லாம் வரும் என்று அவர் கேலி செய்தாராம். அப்படி ஒவ்வொருவரிடமாகப் போன அந்தப் பத்திரிகை கிருஷ்ணன் நம்பியிடமிருந்து சுந்தர ராமசாமிக்குப் போய்ச் சேர்ந்தது வரை கிராவுக்குத் தெரியும். அதன் பிறகு என்ன ஆனது என்று தெரியவில்லை. ஒருமுறை சுந்தர ராமசாமியைப் பார்த்த போது அதைப்பற்றி அவரிடம் பேசியிருக்கிறார். "ஆமாம்! அது என்னிடம் வந்து இங்கேதான் இருக்கிறது. நீங்கள் புறப்படுவதற்கு முன்பு நான் அதை உங்களுக்குத் தந்து விடுகிறேன்" என்று உத்தரவாதம் சொல்லி அதைப் போலவே புறப்படுவதற்கு முன்பு அதைக் கொண்டுவந்து கையில் கொடுத்துவிட்டு ஊருக்குப் போய்ப் படித்துப் பாருங்கள் என்று சொல்லிவிட்டாராம். அவரும் ஆர்வத்தோடு ஊருக்கு வந்து பிரித்துப் பார்த்தால் அதில் சுந்தரராமசாமி ஒரு வார்த்தை கூட எழுதவே இல்லையாம். அந்தப் பத்திரிகைக்குப் பெயர் 'ஊஞ்சல்' அது ஒரு இதழ் கூட முற்று பெறாமலேயே நின்றுபோனது. இப்போது அதுபோல ஒரு இதழை மின்னஞ்சலில், வாட்ஸப்பில் நடத்திப் பார்க்கலாம் எனத் தோன்றுகிறது.

கிரா வோடு பழகுகிற ஒவ்வொருவரும் தன்மீதுதான் அவர் அதிக அளவு பாசம் வைத்திருந்தார் என்று எண்ணுமளவுக்கு அவர்களோடு அவர் பழகுவார் என்று பஞ்சு இங்கே குறிப்பிட்டார். அது உண்மைதான். என்னுடைய அனுபவம் ஒன்றைச் சொல்லி இந்த உரையை நிறைவு செய்யலாம் என்று நினைக்கிறேன். புதுச்சேரிக்கு கிரா வந்த புதிது. நான் அப்பொழுது லாஸ்பேட்டை, பாரதியார் சாலையில் ஒரு வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தேன். ஒரு நாள் காலை ஆறுமணி இருக்கும் யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டது. திறந்து பார்த்தால் அங்கே கிரா நின்று கொண்டிருந்தார். 'ஐயா வாங்க!' என்று கூப்பிட்டேன். அடடா இது உங்கள் வீடா? என்று கேட்டார். ஆமாம் என்றேன். தினமும் இந்த வழியாக நான் நடைப் பயிற்சிக்குப் போகும்போது ஒவ்வொருநாளும் வாசலில் மிகப் பெரிய கோலம் போட்டு இருப்பதைப் பார்த்தேன் ரொம்ப அழகா அந்த கோலம் இருக்கும். நகரத்துல அதுவும் இவ்வளவு பெரிய கோலத்தை போடறவங்க யாருன்னு பார்த்து அவங்களைப் பாராட்டணும்னு தோணினது. அதுக்காகத் தான் கதவைத் தட்டினேன் என்றார். என் மனைவியைக் கூப்பிட்டு அவரிடம் அறிமுகம் செய்தேன். அவர் பாராட்டியதைக் கேட்டதும் அவருக்கு அளவுகடந்த சந்தோஷம். நான் ஒருநாளும் அப்படி பாராட்டவில்லையே என்பது அப்போதுதான் எனக்கு உறைத்தது. சிறுவயதில் எங்கள் ஊரில் மார்கழி மாதத்தில் அக்கா போடும் கோலத்துக்கு நடுவில் வைப்பதற்காக விடிகாலை நாலு மணிக்கெல்லாம் போய் பரங்கிப் பூ பறித்திருக்கிறேன். அக்கா போடும் கோலத்தைப் பக்கத்திலேயே உட்கார்ந்து பார்த்துப் பாராட்டியிருக்கிறேன். அப்படி பாராட்டிய எனக்கு மனைவி போட்ட கோலத்தைப் பாராட்டத் தோன்றாமல்போனது சுருக்கென்று தைத்தது.

அம்பை வந்து சந்தித்ததைப் பற்றி இதில் ஒரு குறிப்பு இருக்கிறது. அம்பை இவரைப் பார்க்க வந்திருக்கிறார். பேச்சுக்கு இடையில் உ .வே. சா எழுதிய 'என் சரித்திரம்' பற்றி பேச்சு போயிருக்கிறது. அதில் எத்தனை பேரைப் பற்றி எவ்வளவு விவரங்களை எழுதி இருக்கிறார் என்று வியந்து கிரா அம்பையிடம் சொல்லியிருக்கிறார். அவ்வளவு பேரைப்பற்றி எழுதி என்ன பிரயோஜனம்? தன்னுடைய மனைவியைப் பற்றி ஒரு வார்த்தை கூட அதில் உவேசா எழுதலையே என்று அம்பை சுட்டிக்காட்டியிருக்கிறார். கூடவே வாழ்ந்த ஒரு பெண்ணைப் பற்றி ஒரு வார்த்தை கூட உவேசா எழுதாமல் போனது ஏன்? என்ற கேள்வி அப்போது தான் அவருக்குள்ளும் எழுந்திருக்கிறது. கூடவே இருக்கிறவர்களை நம்மில் பலர் மறந்து போய்விடுகிறோம். ஆனால் கிரா அப்படி மறக்கவில்லை. கணவதி அம்மாளைப் பற்றி எப்போதும் அவர் பேசிக்கொண்டே இருந்தார், எழுத்திலும் பதிவு செய்தார்.

இந்த நூலை மிகுந்த சிரத்தையோடு தொகுத்துத் தந்திருக்கிற பஞ்சு அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். பார்வையாளராக வந்த என்னை ஒரு நூலை வெளியிட்டுப் பேச வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி. வணக்கம்!

**கட்டுரையாளர்: எழுத்தாளர், பத்திரிகையாளர், நாடாளுமன்ற உறுப்பினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.இராமசுப்பிரமணியன்
srsthovalai@gmail.com

# சேதிசொல்லும் செய்தித்தாள்

## History of Newspaper

இன்றைய தொழில்நுட்பம் எதுவும், 'விரைவு-உணவு'(*fast-food*)போல திடீரென ஒரேநாளில் தோன்றி, வளர்ந்து, பரவிவந்ததில்லை. அப்படித்தான், செய்தித்தாளும் கருவாகி, உருப்பெற்று வளர்ந்துவந்து இன்றைய நிலையை அடைவதற்கு சிலநூற்றாண்டு காலம் தேவைப்பட்டிருக்கிறது.

செய்தித்தாள் என்னும் வடிவம், முதன்முதலாக ரோமப்பேரரசில்தான் உருவாகியதாக வரலாறு சொல்கிறது. இரண்டாயிரத்து எண்பது ஆண்டுகளுக்கு முன்பு (*59 BCE*) , அன்றாட செயல்கள்' ( *Acta Diurna or Daily doings*) என்னும் தலைப்பில், முதல் செய்தித்தாள் உருவாகி வெளிவந்திருக்கிறது. அந்த செய்தித்தாளின் நகல் நமக்குக் கிடைக்கவில்லை. என்றாலும், கைகளால் எழுதப்பட்ட செய்தித்தாளில், தொடர் நிகழ்வுகள்(*chronicles*), மக்கள்கூட்டங்கள்(-*assemblies*), பிறப்பு, இறப்பு , அன்றாட அரட்டை(-*daily gossip*) போன்றவை இடம்பெற்றிருக்கின்றன.

நவீன செய்தித்தாளின் (*Modern Newspaper*) முன்னோடி இதழ் ஒன்று இத்தாலியின் வெனிஸ் நகரிலிருந்து *1566*-இல் வெளிவந்திருக்கிறது. அவை, கைகளால் எழுதப்பட்டிருந்தன. அரசியல், போர்கள் பற்றிய செய்திகள் அவற்றில் இடம்பெற்றிருந்தன. அச்சுக்கூட வசதி வருவதற்கு முன்பாக, கைகளால் எழுதப்பட்டதால், அவை குறைந்த எண்ணிக்கையையே(*circulation*)கொண்டிருந்தன.

### முதல் அச்சுக்கூடம்:
### (The Birth of Printing Press)

ஜொகான்ஸ் குட்டன்பெர்க் (*Johannes Gutenberg*), ஜெர்மனியின் மெயின்ஸ் பகுதியைச்(*Mainz, Germany*) சேர்ந்தவர், நகைத்தொழில் செய்பவர்(*Goldsmith*). மெயின்சிலிருந்து நாடுகடத்தப்பட்ட குட்டன்பெர்க், *1440*-இல் ஃப்ரான்ஸ் நாட்டின் ஸ்ட்ராஸ்போக்கில் (*Strasbourg, France*) குடியேறுகிறார். அங்கு வசித்த காலத்தில், அச்சு (*printing*) பற்றிய ஆய்வில் ஈடுபடுகிறார். பத்தாண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் மெயின்சுக்குத் திரும்பும் குட்டன்பெர்க், *1450*-இல் முதல் தட்டச்சு இயந்திரத்தை முழுமையாக வடிவமைத்துவிடுகிறார். உலோகஅச்சைப் பயன்படுத்தி குட்டன்பெர்க் உருவாக்கிய நகரும்வகை அச்சு இயந்திரம் ஒரு நாளைக்கு *4,000* நகல்களை (*copies*) அச்சடிக்கக் கூடியதாக இருந்தது.

எழுத்துகளைப் பித்தளையில், சமதளஆடிப்பிம்பம்போல் இடவல மாற்றத்துடன் உருவாக்கி (*letters created in reverse in brass*) அவற்றின் காரீயநகலை (*lead replica*) எடுத்துப் பயன்படுத்தியிருக்கிறார். எழுத்துகள், சமதளப்பரப்பில் மேடுபள்ளம் இல்லாமல் , ஒன்றோடொன்று பொருந்தியிருக்குமாறு அடுக்கப்பட்டிருக்கின்றன. உலோகத்தோடு ஒட்டக்கூடிய மையை அவரே தயாரித்துப் பயன்படுத்தியிருக்கிறார். அதன்பிறகு அச்சுத்தொழில்நுட்பம், பல காலகட்டங்களில், பல மாற்றங்களை அடைந்து, இன்றைய 'இலக்க அச்சகம்' (*Digital Printing Press*) வரையிலும் முன்னேறிவந்துள்ளது.

### குட்டன்பெர்க் அச்சு இயந்திரமும் முதல் செய்தித்தாளும்:

குட்டன்பர்க் அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட முதல் வார இதழ், *1609*-இல் வெளிவந்திருக்கிறது. அதன்பிறகு, பல அச்சிதழ்கள் வெளிவந்துள்ளன. அரசுக்கு எதிராக விமர்சனங்கள் வைத்த அவை வெளியான நகரங்கள் தெரியவில்லை . என்றபோதும், அவை அனைத்துமே ஜெர்மனியில்தான் வெளிவந்துள்ளன என்று யூகிக்கமுடிகிறது.

இந்த செய்தித்தாள்கள், மிக விரைவில் மத்திய ஐரோப்பா முழுவதும் பரவிப் பிரபலமாகிவிட்டன. அடுத்த ஐந்து ஆண்டுகளில், பெசல் (*Basel*), ஃப்ராங்ஃப்பர்ட் (*Frankfurt*), வியன்னா(*Vienna*), ஹம்பர்க்(*Humburg*), பெர்லின்(*Berlin*), ஆம்ஸ்டர்டேம்(*Amsterdam*), ஆகிய நகரங்களில் வார இதழ்களாக எட்டிப்பார்த்தன.


பதிப்பு (*publication*) ஃப்ரான்ஸ், இத்தாலி, ஸ்பெயினுக்குப் பரவியபிறகு *1641*-இல், ஐரோப்பாவின் ஒவ்வொரு நாட்டிலும் செய்தித்தாள் அச்சாகி, வெளிவரலாயிற்று. *1650*-இல் ஒரு ஜெர்மன் பதிப்பாளர், இன்றும் காணக்கிடைக்கும் உலகின் மூத்த நாளிதழை (*Einkommende Zeitung*) வெளியிட்டார்.

அன்றைய செய்தித்தாள்கள், இரண்டு வடிவமைப்புகளில் (*formats*) வெளிவந்துள்ளன. ஒன்று, டச்சு வடிவம் (*Dutch-style*). அந்த செய்தித்தாளில், செய்திகள் மிகவும் நெருக்கமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜொகான்ஸ் குட்டன்பர்க்



ஜொகான்ஸ் குட்டன்பர்க்கின் அச்சகம்

அச்சிடப்பட்டிருக்கும். இரண்டு அல்லது நான்கு பக்கங்களைக் கொண்டிருக்கும். இரண்டாவது, ஜெர்மன் வடிவமைப்பு (German-style). 8 முதல் 24 வரையிலானப் பக்கங்களைக்கொண்டது. அளவில் பெரியது. பெரும்பாலான பதிப்பாளர்கள், டச்சு வடிவமைப்பில் துவங்கி, மக்களிடையே பரவலாகப் பிரபலமானபிறகு, ஜெர்மன் வடிவமைப்பிற்கு மாறியிருக்கின்றனர்.

## இங்கிலாந்தில் செய்தித்தாளும், அச்சுரிமையும்: Freedom of Press

*1621-இல், இங்கிலாந்தில், முதல் செய்தித்தாள் , Cornite என்னும் தலைப்பில் வெளிவந்தது. இத்தாலி, ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து, பொஹீமியா, ஃப்ரான்ஸ் மற்றும் சில கீழை நாடுகளின் வாராந்திர செய்தி என்னும் பொருளில் அந்த செய்தித்தாள் வெளிவந்திருக்கிறது*

இங்கிலாந்தில், பெரும்பாலான செய்தித்தாள்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தன. அதனால், உள்நாட்டு செய்திகள் (local news) இடம்பெறவில்லை. 1641-இல், இங்கிலாந்தில் உள்நாட்டுப்போர் உருவானது. மன்னர் சார்ல்ஸ்-1(Charles-1)இன் அரசு கவிழ்க்கப்பட்டது. அந்தத்தருணத்தில், அன்றாடம் நிகழும் உள்நாட்டு செய்திகளை அறிய மக்கள் அதிக ஆர்வம் காட்டினர். அதே ஆண்டில், உள்நாட்டு செய்திகளை (domestic news) உள்ளடக்கிய வார இதழ், 'The Heads of Several Proceedings in This Present Parliament' வெளிவந்தது. அந்த இதழ், உள்நாட்டுச் செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்த்ததில், அச்சுரிமை (Freedom of Press) பேசுபொருளானது.

1644-இல் ஜான் மில்டன் (John Milton) தனது Areopagitica என்னும் கட்டுரையில், செய்தித்தாள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த ஒழுங்குமுறைகளை மிகக்கடுமையாக விமர்சித்திருந்தார். அதுஏற்படுத்தியத் தாக்கத்தில், இங்கிலாந்தில் செய்தித்தாள்கள் அரசுக்கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டன. செய்தித்தாள்களின் வலிமையையும், அவற்றிற்கான உரிமைகள் எத்தனை அவசியம் என்பதையும் மக்கள் உணரத்துவங்கினர்.

இதனைப் பயன்படுத்திக்கொண்ட செய்தித்தாள்கள்; வாரம் இருமுறை வரத்துவங்கின. விளம்பரங்களும், சந்தை நிலவரமும் இடம்பெறலாயின. இதனால், வெறும் பார்வையாளர்களாக மட்டும் இருந்த செய்தியாளர்கள் (journalists), தீவிரப்பங்கேற்பாளர்களாக மாறினர். தங்களது உற்பத்திப்பொருளை, சிறந்த முறையில் மக்களிடம் கொண்டுசேர்க்க, முதலாளிகளும், வணிகநிறுவனங்களும் செய்தித்தாள்களைச் சார்ந்திருக்கும் நிலை உருவானது.

1702-இல், இங்கிலாந்தின் இலண்டன் நகரிலிருந்து, முதல் ஆங்கில நாளிதழ்(Daily Courant) வெளிவரலானது. வெளியிட்டவர், எலிசபெத் மேலட் (Elizabeth Mallet) இப்படி வெளிவந்த நாளிதழ்கள், புதியமுறையிலான தலைப்புகளுடன், புதிய வடிவில் செய்திகளை வெளியிட்டு, அன்றாடம் செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தை, மக்களிடம் ஏற்படுத்திவிட்டன.

## அமெரிக்காவில் செய்தித்தாள் அறிமுகம்:

காலனி நாடான அமெரிக்காவில் 1690, செப்டம்பர் 25-இல் பெஞ்சமின் ஹேரிஸ் (Benjamin Harris) , வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு செய்திகளை உள்ளடக்கமாகக்கொண்ட Public Occurrences என்னும் செய்தித்தாளை வெளியிட்டார். அதற்கு முன்பாக அமெரிக்காவில் செய்தித்தாள்கள் அறிமுகம் ஆகியிருக்கவில்லை. 14 ஆண்டுகளுக்குப் பிறகு, The Boston News -Letter செய்தித்தாள் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து மேலும் சில செய்தித்தாள்கள் வெளிவரலாயின.

1791-இல், விடுதலைபெற்ற அமெரிக்காவில் இயற்றப்பட்ட சட்டம், முறைப்படி ஊடக உரிமையை உறுதிசெய்தது. என்றாலும், தீவிர பிரிவினை செய்திகள் இடம்பெற்ற காரணத்தால், சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அரசுக்கு எதிராக உண்மைக்குப் புறம்பான செய்திகளை எழுதினால், அச்சிட்டால், அவர்களுக்கு அபராதமும், சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்று 1798-இல் தேசவிரோதச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

## பென்னி அச்சகம்: (The Penny Press)

1800-களின் பிற்பகுதி வரையிலும், அமெரிக்காவில் ஒரு நாளிதழின் விலை, 6 சென்ட். அப்படிப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதல் விலைகொடுத்து சாதாரண மக்கள் செய்தித்தாள்கள் வாங்குவது இயலாத காரியமாக இருந்தது. எனவே, செய்தித்தாள்கள் வாங்குவதும், வாசிப்பதும் உயர்குடியினருக்கானது என்னும் அளவில்தான் இருந்தது.

1833-இல் பெஞ்சமின் டே (*Benjamin Day*) என்னும் அமெரிக்கர், *The Sun* செய்தித்தாளை, ஒரு பென்னி (*one cent*) என்னும் மிகவும் மலிவான விலைக்கு விற்பனை செய்தார். அது, சாமானியர்களிடமும், செய்தித்தாள்களையும், செய்திகளையும் கொண்டுசேர்த்தது. பெஞ்சமின் டே இரண்டுவகையான அச்சு இயந்திரங்களைப் பயன்படுத்தினார். பழைய வகை, ஒரு மணி நேரத்தில் 125 பிரதிகளை அச்சடித்தன. புதிய வகை, ஒரு மணி நேரத்தில் 18,000 பிரதிகளை அச்சடித்தன.

'சாமானியர்களும் வாங்கும்வகையில், அன்றாட செய்திகளோடு, வணிக விளம்பரங்களையும் கொண்டுசேர்ப்பதே, பென்னி நாளிதழின் நோக்கம்' என்பதை செய்தித்தாளின் ஒவ்வொரு பக்கத்தின் மேற்பகுதியில் அச்சிடப்பட்டது. பென்னி அச்சகத்தில் அச்சிடப்பட்ட முதல் செய்தித்தாளான 'தி சன்' (*The Sun*) 1835-இல் நாளொன்றிற்கு 15,000 பிரதிகள் விற்றன.

1835-இல், *James Gordon Bennet* என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட *New York Morning Herald* மற்றொரு 'பென்னி' செய்தித்தாளாகும். பென்னட் தான் முதன்முதலாக, ஒரு செய்தியாளரை, குற்றம் நடந்த இடத்திற்கு நேரடியாக அனுப்பி, செய்தி சேகரிக்கும் முறையை உருவாக்கியவர். 1860-இல் பென்னட், அமெரிக்காவின் உள்நாட்டுப்போரின்போது, நேரடியாகப் போர்க்களத்திலிருந்து போர்ச்செய்திகளைக் கொண்டுவர 63 போர்ச்செய்தியாளர்களை நியமித்தார். *Herald* ஆரம்பத்தில் உணர்வுப்பூர்வமான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது உண்மை என்றபோதும், பின்னாளில், அது அனைவராலும் போற்றப்படும் வகையில் செய்திகளைத் துல்லியமாகவும், நடுநிலையோடும் வெளியிட்டது.


AREOPAGITICA; A SPEECH OF Mr. JOHN MILTON For the Liberty of UNLICENC'D PRINTING, To the PARLAMENT of ENGLAND.

LONDON, Printed in the Yeare, 1644.

1644-இல், அச்சுரிமைக்கான ஜான் மில்டனின் பேச்சு

## பதிப்புத்துறையில், 'தந்தி'யின் தாக்கம்:

சாமுவேல் மோர்ஸ் (*Samuel Morse*), தந்தியை (*Telegraph*) கண்டுபிடித்தபிறகு, தொலைதூரங்களிலிருந்து செய்திகள் விரைந்து வரலாயின. அனைத்து செய்தித்தாள் மையங்களும் தந்தி அலுவலகங்களாக மாறின. செய்தித்தாள் வரலாற்றில், இது மிகப்பெரிய பாய்ச்சலை ஏற்படுத்தியது. 1986-இல், அமெரிக்காவில் ஐந்து செய்தித்தாள் நிறுவனங்கள் இணைந்து, 'அசோசியேட் பிரஸ்' (*Associate Press*) உருவானது. அதன் வெற்றி காரணமாக, அனைத்து பெருநகரங்களிலும் 'கம்பி' வழியாக (*through wire*) செய்திகளைப்பெறும் வசதிக்கு, செய்தி நிறுவனங்கள் தள்ளப்பட்டன.

## மஞ்சள் இதழியல்: (Yellow Journalism)

1880-இல், *New York World* பதிப்பாளர் ஜோசப் புலிட்சர் (*Joseph Pulitzer*), புதுவகையான இதழியலை அறிமுகப்படுத்தினார். குற்றம் (*crime*), வன்முறை (*violence*), மிகையுணர்வு (*emotion*), பாலியல் (*sex*) ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட செய்திகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. தமிழ்ச்சூழலில், இப்படிப்பட்ட 'சதக் சதக்', 'படக் படக்' செய்திகள்தான், தமிழ்நாட்டில் தினத்தந்தி நாளிதழை சாதாரண மக்களிடமும் கொண்டு சேர்த்தது என்பது நாம் அறிந்த வரலாறு.

ஸ்பெயினுக்கும், அமெரிக்காவிற்கும் நடந்த போரில், புலிட்சர் செய்தித்தாள் முதல் பக்கத்தில், உண்மைக்குப் புறம்பான உணர்வுகளைத் தூண்டும் செய்திகளை வெளியிட்டது. அதிக எண்ணிக்கையில் பிரதிகள் விற்பதற்காக இப்படிப்பட்ட செய்திகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது

இதனை மனதிற்கொண்டே, இதழியல் துறையின் மிகவும் பெருமைக்குரிய விருது (*Journalism's most prestigious award*), புலிட்சர் பெயரில் வழங்கப்படுவது நகைமுரண் என்கின்றனர் வரலாற்று அறிஞர்கள்.

செய்தித்தாள் விற்பனைக்காக, இதழாசிரியர்கள் அதிர்ச்சியூட்டும் தலைப்புச்செய்திகளைப் பயன்படுத்தினர். நமக்கு சலிப்பையும், வெறுப்பையும் ஏற்படுத்தும் இன்றைய காட்சி ஊடகங்களின் 24 மணிநேர *Big Breaking News*-க்கான அடித்தளம் அன்றே போடப்பட்டுவிட்டது. வில்லியம் ரேண்டால்ஃப் ஹார்ஸ்ட் (*William Randolph Hearst*), புலிட்சருக்குப் போட்டியாக *New York Journal* என்னும் செய்தித்தாளை நடத்தினார். இந்த இரண்டு பேருக்கும் இடையில் கடும் போட்டி நிலவியது.

மிகை உணர்வு மற்றும் வன்முறைச் செய்திகளை வணிக நோக்குடன் பயன்படுத்தியதால், புலிஸ்டர் மற்றும் ஹார்ஸ்ட் நடத்திய செய்தித்தாள்களை, ரிச்சர்ட் கே.ஹைன்ஸ் (*Richard K Hines*) என்னும் வரலாற்றாளர், 'மஞ்சள் பத்திரிகை' (*Yellow press*) என்று பெயரிட்டு அழைத்தார்.. பிற்காலத்தில் 'மஞ்சள் பத்திரிகை' என்பது, பாலியல் செய்திகளை மட்டுமே குறிப்பதாக, நடைமுறையில் மாறிப்போனது.

## படக்கதைகளாலான இதழியல் Comic journalism)

செய்தித்தாள்களின் வாசகத்தளத்தை மேலும் அதிகரிக்கும் விதமாக, 1896-இல் ஹார்ஸ்ட்டின் ' நியு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்க் ஜேர்னல்' (*New York Journal by Hearst*) ஆங்கிலம் தெரியாத வாசகர்களை ஈர்க்கும் விதமாக, 'அவுட்கோ' - (*Outcault*)-வின் 'மஞ்சள் சிறுவன்' (*Yellow Kid*) என்னும் படத்தை வெளியிட்டது. அது, எதிர்பார்த்ததை விடவும் அதிக அளவில் வாசகர்களை ஈர்த்தது. படக்கதைகள், வாசகர்களிடம், ஒருவித மயக்கத்தையே (*hysteria*) ஏற்படுத்திவிட்டது. எந்த அளவிற்கு அது பிரபலமானது என்றால், மிகவிரைவில், அந்த 'மஞ்சள் சிறுவன்' படம், (இன்றைய ஸ்பைடர்மேன் போல) பொத்தான்கள், சிகரெட் டப்பாக்கள், பெண்களின் கைவிசிறிகள் போன்றவற்றில் எல்லாம் இடம்பிடித்துவிட்டது. அப்படிப்பட்ட செய்தித்தாள்கள், மஞ்சள்நிறம் காரணமாக, 'மஞ்சள் இதழியல்' (*Yellow Journalism*) என்று அழைக்கப்படலாயின. (பாலியல் என்னும் பொருளில் அல்ல)




மஞ்சள் இதழ்

## கவன ஈர்ப்பு இதழ்கள்: (Stunt journalism)

'நியு யார்க் ஜேர்னல்' செய்தித்தாள்களில் மஞ்சள் சிறுவன் ஏற்படுத்திய தாக்கத்தை உணர்ந்த புலிட்சர், தனது செய்தித்தாளில், 'கவன ஈர்ப்பு தந்திரங்களை' (*stunt*) பயன்படுத்தலானார். எலிசபெத் கொஹ்ரேன் (*Elizebeth Cochrane*) என்னும் பெண், நெல்லி ப்லை (*Nellie Bly*) என்னும் புனைபெயரில் எழுதிவந்தார். அதற்கு முன்பு மற்றவர்கள் எழுதாததை எழுதினார். அவரது எழுத்துகளை 'புலிட்சர்' செய்தித்தாள் பயன்படுத்திக்கொண்டது.

நெல்லி ப்லை (*Nellie Bly*) நியூயார்க்கில் இருந்த 'மனநிலை குறைந்தவர்களுக்கான மருத்துவமனை' பற்றி எழுதினார். அவரே அங்கு அனுமதிக்கப்பட்டிருந்ததால், அவரது அனுபவங்களை, 'பைத்தியக்காரக் குடிலில் பத்து தினங்கள்' (*Ten Days in a Madhouse*) என்னும் தலைப்பில் எழுதியது மிகவும் பிரபலமாகியது. அதன்தாக்கமாக,செய்தித்தாளின் உள்பக்கங்களில் 'பெண்கள் பகுதியில்' இடம்பெற்ற பெண்களுக்கான செய்திகள் செய்தித்தாளின் முதல் பக்கத்திற்கு நகர்ந்தன.

ஹார்ஸ்ட் மற்றும் புலிட்சர் தங்களது செய்தித்தாள்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் பயன்படுத்திய வழிமுறைகளுக்கு அப்பாற்பட்டு, இருவருமே இதழியல் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றினர் என்பதை மறுக்கமுடியாது என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்கின்றனர். 1917-இல் இதழிலியலில் சிறந்தவர்களுக்கான முதல் புலிட்சர் பரிசு (*Pulitzer Prize*) வழங்கப்பட்டது

## கருத்துரிமை:

1948-இல், ஐக்கிய நாடுகளின் பொதுமன்றம், "ஒவ்வொரு தனிநபருக்கும் கருத்துரிமை உண்டு. கருத்துரிமை என்பது, எந்தவிதமான கருத்தையும், தகவலையும், எந்த ஒரு ஊடகத்தின் வழியாகவும் பெறுவதற்கான உரிமையும் ஆகும்." என்று முடிவெடுத்து அறிவித்தது.

## பதிப்புரிமை (Freedom of Press)பற்றிய லெனின் கருத்து:

1917-இல், ரஷ்யப்புரட்சி முடிந்த சூழலிலும், செய்தித்தாள்களுக்கானக் கட்டுப்பாடுகள் நீட்டிக்கப்பட்டன. அவற்றை நீக்கவேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்து நடந்த கூட்டத்தில் விளாடிமிர் லெனின் (*Vladimir Lenin*) "செய்தித்தாள் வெளியீடு என்பது, மிகுந்த இலாபம்தரும் தொழில். பணக்காரர்கள், பலமில்லியன் பணத்தை முதலீடு செய்து, கொள்ளையடித்துக் கொழுக்கின்றனர். நடுத்தர, மேல் நடுத்தர வர்க்கத்தினர் பேசும், (*bourgeois press* ) 'பதிப்புரிமை' என்பது, பெரும்பணம் படைத்தவர்களின் உரிமையே ஆகும். இனியும் பல மில்லியன் செய்தித்தாள்களை அச்சிட்டு, ஏழை எளியவர்களை, பணம்படைத்தவர்கள் ஏமாற்றுவதற்கான உரிமையாகவே அது இருக்கும். புரட்சி முற்றாக முடிந்துவிடவில்லை. எதிரிகள் இன்னமும் நம்மிடையே உள்ளனர். இந்தச்சூழலில் செய்தித்தாள்களுக்கு எதிராக விதிக்கப்பட்டிருக்கும் தடைகளை நீககமுடியாது" என்று பேசுகிறார். அதன் பிறகு நடந்த வாக்கெடுப்பில், லெனின் தீர்மானம் வெற்றியடைந்தது. மற்றொரு கம்யூனிச நாடான சீனாவில், உலகில் வேறு எந்த நாட்டையும் விட, மக்களின் கருத்துரிமை மற்றும் பேச்சுரிமை வெகுவாக முடக்கப்பட்டுள்ளது.

## இரும்புத்திரை நாடுகள்:

ஐரோப்பிய நாடுகளான போலந்து, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி, யூகோஸ்லேவியா, ரொமேனியா, பல்கேரியா, சோவியத் ஒன்றியம் ஆகியவை 'இரும்புத்திரை நாடுகள்' என்று அழைக்கப்பட்டன. காரணம், அந்த நாடுகளில் என்ன நடக்கிறது என்பது உலகின் பிற பகுதியினருக்குத் தெரியாத அளவிற்கு ஊடக உரிமைகள் முடக்கப்பட்டிருந்தன. வட கொரியா, கியூபா ஆகிய கீழை நாடுகளும்கூட அதுபோன்றதொரு நிலையில் இருப்பதாகவே சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலக்க யுகம்: (Digital Era)

பொதுவாக அறிவியல், தொழில்நுட்பம், கலாச்சாரம் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்கள் மிக மெதுவாகவே நிகழும் என்பதைத்தான் வரலாறு நமக்கு உணர்த்துகிறது. அதிலிருந்து மாறுபட்டு, கடந்த 50 ஆண்டுகளில் எலக்ட்ரான் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்ட அதிவிரைவு மாற்றங்கள் ஒட்டுமொத்த மக்களின் அன்றாட வாழ்க்கையைப் புரட்டிப்போட்டிருக்கிறது. குறிப்பாகத் தகவல்பரிமாற்றம் அசுர வளர்ச்சியடைந்திருக்கிறது.

செய்திகள் பறவைகளாலும், நடந்துசெல்லும் ஆட்களாலும், குதிரைகளில் சவாரிசெய்பவர்களாலும் கொண்டுசேர்க்கப்பட்ட ஆரம்பக்காலம் , தந்தி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு வேகம் எடுக்கிறது. கம்பியில்லாத்தந்தி (*wireless*) கண்டுபிடிக்கப்பட்ட பிறகு முடுக்கம் பெறுகிறது. தொடுதிரை-கைபேசிகள் (*smart phones*) வந்துவிட்ட பிறகு, ஒரு செய்தி ஒரு நொடியில் உலகம் எங்கும் சென்றுவிடுகிறது. தகவல்தொடர்பு செயற்கைக்கோள்கள் (*communication satellites*) அதற்கு முதன்மையான காரணமாகும்.

## இணைய இதழியல்: (Internet Journalism)

இலக்க யுகத்தில், செய்தித்தாள்களும், தாளில் அச்சிடும் நீண்டகால நடைமுறையிலிருந்து மாறி, எலக்ட்ரானிக் செய்தித்தாள் என்னும் புதிய வடிவம் (*e-paper*) எடுத்திருக்கிறது. 2019-2021 கொரோனா ஊரடங்குக் காலகட்டத்தில், பல செய்தித்தாள்கள் காணாமல்போன சூழலிலும், சில செய்தித்தாள்கள் முடங்கிவிடாமல் உயிர்ப்புடன் இருந்ததற்கு அது வழிவகுத்தது. அச்சு செய்தித்தாள்போல் அல்லாமல், எலக்ட்ரானிக் செய்தித்தாளில், செய்தித்தாள் வெளியானபிறகும் தவறான செய்தியை சரிசெய்யமுடியும், நீக்கமுடியும், புதியசெய்தியை சேர்க்கமுடியும், வாசகர்கருத்துகளைப் பதிவிடவும் முடியும். இன்றைய சூழலில், யார் வேண்டுமானாலும், ஒரு இணைய இதழைக் கொண்டுவந்துவிட முடியும்.

## இந்தியாவின் முதல் செய்தித்தாள்

ஹிக்கிஸ் பெங்கால் கெசட் (*Hickey's Bengal Gazette*) நாளிதழ் 1780 ஜனவரி 29 அன்று கல்கத்தாவில் முதன்முதலாக வெளியானது. அயர்லாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (*James Augustus Hickey*) என்பவரால் துவங்கப்பட்டது. அன்றைய ஆங்கிலேய கவர்னர் வாரன் ஹேஸ்டிங்சின் (*Waren Hastings*) நிர்வாகத்தின்மீது மிகக்கடுமையான விமர்சனங்களை வைத்தது. முதல் செய்தித்தாள் என்பதோடு ஊடக உரிமைக்காகக் குரல்கொடுத்த முதல் இதழ் என்றும் அதனைச் சொல்லலாம்.

## தமிழில் முதல் செய்தித்தாள்:

1831-இல், 'கிறிஸ்தவ சமயம்' என்பது முதல் தமிழ்நாளிதழாக வெளிவந்திருக்கிறது. 1853-இல் 'தின வர்த்தமானி' முதல் தமிழ் வார இதழாக வெளிவந்தது. 1870-க்குப் பிறகு தமிழ்நாட்டில், தமிழிலும், ஆங்கிலத்திலும் பல செய்தித்தாள்கள் வரத்துவங்கின.

1882-இல் வ.உ.சி மற்றும் சுப்பிரமணிய சிவா இணைந்து நடத்திய 'பிரபஞ்சமித்திரன்', 'ஞானபானு', 1882-இல் வார இதழாகத் தொடங்கி, 1889-இல் நாளிதழாக மாறிய 'சுதேசமித்திரன்', 1906-இல் வேதமூர்த்தி முதலியாரின் 'சர்வஜனமித்திரன்', சென்னை இராயப்பேட்டையிலிருந்து 19 ஜூன் 1907 முதல் புதன்கிழமைதோறும் நான்கு பக்கங்களுடன் அன்றைய காலணா விலையில் வெளிவந்த அயோத்திதாசரின் 'ஒரு பைசாத்தமிழன்', 1907-இல் பாரதியாரின் 'இந்தியா', 1917-இல் திரு.வி.க-வின் திராவிடன், தேசபக்தன், நவசக்தி, 1917-இல் வ.வெ.சு. ஐயரின் பாலபாரதி, 1920-இல் வரதராஜுலுவின் 'தமிழ்நாடு', குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய சில முன்னோடி தமிழ் இதழ்களாகும்.

இலங்கையில், 1841-இல் அமெரிக்க-இலங்கை மிஷன் மூலம் முதல் தமிழ் செய்தித்தாள், 'உதய தாரகை' வெளியிடப்பட்டது. 'ஈழநாடு' என்னும் நாளிதழ், யாழ்ப்பாணத்திலிருந்து 1959-ஆம் ஆண்டு வெளிவந்தது. ஆரம்பத்தில், வாரம் இருமுறை என்று வெளிவந்த 'ஈழ நாடு' 1961 முதல் நாளிதழாக மாறியிருக்கிறது. 1981-இல் யாழ்ப்பாணம் பொதுநூலகம் எரிக்கப்பட்டபோது, அதே வன்முறைக்கும்பலால், 'ஈழநாடு' அலுவலகமும் எரிக்கப்பட்டது. 1987-இல் இந்திய அமைதி(?) ப்படையால் பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதப்படுத்தப்பட்டது. சிறுசிறு இடைவெளிகளில் விட்டுவிட்டு வெளிவந்த 'ஈழநாடு', 1990-இல் நிரந்தரமாக நிறுத்தப்பட்டது.

15-ஆம் நூற்றாண்டில் ஊற்றெடுத்த செய்தித்தாள், இலக்கியம், வணிகம், அரசியல், வேளாண்மை, மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், கல்வி, பாதுகாப்பு, சிறுவர், மகளிர், முதியவர், திரைப்படம் என்று பல்துறைசார்ந்தும், நாளிதழ், வார இதழ், மாத இதழ், ஆண்டுமலர் என்று பல்வேறு கால இடைவெளி சார்ந்தும், கையிதழ், அச்சு இதழ், மின்னிதழ் என்று பல்வேறு வடிவங்களிலும் ஆறுகளாகப்பாய்ந்து, 21-ஆம் நூற்றாண்டில் பெருங்கடலாகப் பரந்து விரிந்திருக்கிறது.

ஊற்றெடுக்கும் அத்தனை ஆறுகளும், கடல்சென்று சேர்வதில்லை. செய்தித்தாள்களுக்கும் அது பொருந்தும். பல இதழ்கள், பொருளாதாரம் உள்ளிட்ட சில காரணங்களால், தொடங்கிய வேகத்திலேயே நின்றும் போயிருக்கின்றன. சில செய்தித்தாள்கள் நேர்மையாக செய்திகளை வெளியிட்டதற்காக, அரசுகளால் முடக்கப்பட்டதும் உண்டு.

செய்தித்தாள் தொடங்கிய 15-ஆம் நூற்றாண்டிலேயே, ஊடக உரிமைக்காக, அரசுடன் மோதிய செய்தித்தாள்களும் இருந்திருக்கின்றன. 'நடுநிலைமை' பேணலும், மக்களுக்கு நேர்மையாக இருத்தலும், ஊடகத்தின் முதன்மையான பண்பாக இருத்தல் வேண்டும். ஆனால், இன்று பெரும்பாலான ஊடகங்கள், அரசுடன் சமரசம் செய்துகொள்வதைப் பார்க்கமுடிகிறது. பெரிதும் கார்பொரேட்டுகளால் நடத்தப்படும் அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிபுரியும் இதழாளர்கள், முதலாளிகளுடனும், அரசுடனும் சமரசம் செய்வதையும் பார்க்கமுடிகிறது.

ஜனநாயகத்தின் நான்காவது தூண், இதழியல்துறை என்று சொல்லப்படுகிறது. தமிழகத்தின் முன்னாள் முதல்வர் செல்வி ஜெ.ஜெயலலிதா மரணம் அடைந்து, எடப்பாடி பழனிசாமி தலைமையில் புதிய அரசு அமைந்த உடன், தமிழக ஊடகவியலாளர்கள் அனைவரும் டில்லிக்கு அழைக்கப்பட்டு, பாரதப்பிரதமர் மோதியுடன் ஒரு சந்திப்பு நிகழ்ந்தது. அந்த சந்திப்பில் என்ன பேசப்பட்டது என்பது இதுவரையிலும் வெளிவரவில்லை. இரகசியங்களை வெளிக்கொணரவேண்டிய ஊடகங்களே, ஒளிவுமறைவோடு செயல்பட்டால், நாட்டில் ஜனநாயகம் பேணப்படுவதற்கான வாய்ப்பு இல்லைதானே?

இப்படிப்பட்ட சூழலில், இலக்கியம் மீதான ஆர்வம் காரணமாக, 2012-ஜனவரி முதல் சட்டப்படியான 'காக்கைச்சிறகினிலே' மாத இதழ் வெளிவந்துகொண்டிருக்கிறது. என்றாலும், முதல் இதழ், அக்டோபர் 2011 -இல் வெளிவந்துவிட்டது. அந்தவகையில், காக்கைச்சிறகினிலே இதழ், அக்டோபர் 2021-இல் 10 ஆண்டுகளை நிறைவுசெய்திருக்கிறது என்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

"ஒடுக்கப்பட்டோரிலும், ஒடுக்கப்பட்டோர் பக்கம் நிற்பது காக்கை" என்று 'காக்கை' தொடக்க நாள் நிகழ்வில் மறைந்த மக்கட்கவிஞர் இன்குலாப் குறிப்பிட்டதாக, ஆசிரியர் முத்தையா அடிக்கடி கூறுவதுண்டு. அதுவே 'காக்கை' இதழின் எழுதப்படாத குறிக்கோள் (*motto*)" என்றும் சொல்லலாம். 'காக்கை' இதழை வாசித்து வருபவர்களுக்கு அந்த உண்மை புரியும் என்றும் நம்பலாம்.

பெரிய அளவில் பொருளாதாரப் பின்புலம் இல்லாத சூழலிலும், 10 ஆண்டுகளாக இடைநிறுத்தம் இல்லாமல் தொடர்ந்து 'காக்கை' இதழ் வந்து கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். பத்தாண்டுகள் நிறைவுசெய்திருக்கும் 'காக்கைக்கும்', அதன் ஆசிரியர் முத்தையா, பொறுப்பாசிரியர் சந்திரசேகரன், ஆசிரியர் குழுமம், அச்சுக்கூட உரிமையாளர் மற்றும் பணியாளர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், வாசகர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் உளம்நிறைந்த வாழ்த்துகள்.

கட்டுரையாளர்: இயற்பியல் பேராசிரியர் (பணிநிறைவு)

குறுஞ்செய்தி

## உறங்கும்போது, கொசு நம் காதில் வந்து இசைபாடுவது ஏன்?



இரவில் நம் காதருகே வந்து ஒலி எழுப்பி, நம் தூக்கம் தொலைக்கவேண்டும் என்பது கொசுவின் வேண்டுதல் எல்லாம் ஒன்றும் இல்லை. எந்த ஒரு அதிர்வுறும் பொருளும் ஒலியை உருவாக்கும் என்பது நமக்குத் தெரிந்த அறிவியல். அந்தவகையில், கொசு பறக்கும்போது, இறக்கைகளை அசைப்பதால் நாம் கேட்டு உணரும் அதிர்வெண்ணில் (450Hz -500Hz )ஒலி எழுப்பப்படுகிறது.

குருதி குடிக்கும் பெண்கொசுக்கள்: ஆண் மற்றும் பெண் கொசுக்கள், முற்றிலும் வேறுவேறான வாழ்க்கைமுறையைக் கொண்டுள்ளன. ஆண் கொசுக்கள், பூக்களிலுள்ள மகரந்தத்தேனை (nectar)உறிஞ்சி, உணவாகக்கொள்கின்றன. அவை, மனிதர்களைக் கடித்து இரத்தம் உறிஞ்சுவதில்லை.

மாறாக, பெண்கொசுக்களுக்கு, மனிதர்களின் குருதி உணவாகத் தேவைப்படுகின்றது. குறிப்பாக, உடலுறுவுக்குப் பின்பு, கருமுட்டைகளை உற்பத்தி செய்வதற்கு, பெண்கொசுக்களுக்கு மிகுந்த ஆற்றல் தேவைப்படுகிறது. அதனால், மனிதக்குருதியை உறிஞ்சுவதற்கான உயிரியல் கருவிகளையும், பெண்கொசுக்கள் கொண்டுள்ளன. ஆக, காதருகே, இசைப்பதும்,, நம்மைக் கடிப்பதும், பெண் கொசுக்களே.

நாம் வெளியிடும் மூச்சுக்காற்றில் இருக்கும் கார்பன் டை ஆக்சைடு வாயுவை, தொலைவிலிருந்தே பெண் கொசுக்கள் மோப்பம் பிடித்துவிடுகின்றன. நம் தலைப்பகுதியைச் சுற்றிச்சுற்றி வருவதற்கும், காதருகே இசைபாடுவதற்கும் காரணம்,அங்குதானே அதிக அளவிலான கார்பன் டை ஆக்சைடு வெளிப்படுகிறது.

பெண் கொசுவின் கால்களில், சுவையறியும் உணர்விகள் (sensors) இருக்கின்றன. அவற்றைப்பயன்படுத்தி, அடுத்த உணவிற்குப் போதுமான குருதி இருக்கின்றதா என்று உறுதிசெய்தபிறகே உறிஞ்சத்துவங்குகிறது.

மனிதக் குருதிவகைகளுக்கும், கொசுக்கடிக்குமான தெளிவான ஆய்வுகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. என்றாலும், ஓ(O) வகை குருதியைக் கொசுக்கள் விரும்புவதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாம் உண்ணும் உணவுகாரணமாக, நமது தோல் வெளிப்படுத்தும் மணங்களைச்சார்ந்தும், பெண்கொசுக்களின் விருப்பம் வேறுபடுகிறது. தோலில், பாக்டீரியாக்களின் வகைகள் (diversity of bacterias) குறைவாக இருக்கும் மனிதர்களையே, பெண்கொசுக்கள் பெரிதும் கடிக்கின்றன என்று ஒரு ஆய்வு சொல்கிறது. கருப்பு நிறத்தில் ஆடையணிபவர்களைப் பெண்கொசுக்கள் விட்டுவைப்பதில்லை.

பெண்கொசுக்கள், நம் தலையைச் சுற்றிவந்தாலும், அவை பெரிதும் விரும்பிக் கடித்து, ரத்தம் உறிஞ்சுவது, கணுக்காலுக்குக் கீழேதான். காரணம், பாதங்கள், கொசுக்கள் விரும்பும் மணத்தை அதிக அளவில் வெளிப்படுத்துகின்றன.

- சு.இராமசுப்பிரமணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பழனித்துரை

gpalanithurai@gmail.com

# ஒரு பெரிய மனிதருடன் ஒரு சிறிய அனுபவம்


நம் வரலாற்றில் பல மகத்தான மனிதர்களைக்கூட இந்த மானுட சமுதாயம் மிக எளிதாக மறந்து கடந்து விடும். காரணம் நினைவுகூரத்தக்க மனிதர்களைப் பற்றிய வரலாற்றுச் சித்தரிப்புக்கள் முறையாக செய்யப்படுவது இல்லை. அதே நேரத்தில் சில சாதாரண மனிதர்கள் பெரிய மனிதர்களாக மக்கள் சிந்தனையில் உலவுவார்கள், அதற்கான காரணம் அவர்கள் செய்த சாதனைகளைவிட, அவர்களை உருவகப்படுத்தும் செயல்பாடுகளுக்கு செலவு செய்து விளம்பரப்படுத்தி வைத்திருப்பார்கள், அந்தச் சிறிய மனிதர்கள் விளம்பரத்தாலேயே பெரிய மனிதராக்கப்பட்டு விடுவார்கள். இதன் விளைவு பெரிய மனிதர்களைப் பற்றி அடுத்த தலைமுறைக்குத் தெரிவதில்லை. நான் பார்த்த பல பெரிய மனிதர்கள் மிகப்பெரிய சாதனைகளுக்குச் சொந்தக்காரர்கள். ஆனால் அவர்களைப் பற்றி யாரும் கண்டு கொள்வதில்லை. அப்படி நான் சந்தித்த பல பெரிய மனிதர்களில் ஒருவர். மகாராஷ்டிரத்தின் முன்னாள் ஆளுநர் மறைந்த சி.சுப்பிரமணியன் அவர்கள். அவரை நான் சந்தித்தது என்பது நான்கு முறைதான். அந்த நான்கு முறையிலும் நான் அவரிடம் உரையாடியதிலிருந்து எவ்வளவு பெரிய ஆளுமைகளை நாம் சாதாரணமாகக் கடந்து போயிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர், அவரைவிடப் பெரிய மனிதருடன் உரையாடும்போது அவர் ஒரு சாதாரண மனிதராக இருந்து உரையாடலில் பங்கு பெற்றது என்னை மிகவும் வியக்க வைத்தது. இவர்களைப் போன்றவர்கள் மிக உயர்ந்த வாழ்க்கையை மிக எளியவர்களாக இருந்து வாழ்ந்துள்ளனர் என்பதுதான் இவர்களின் சிறப்பு மற்றும் தனித்துவம்.

முதல் முறை, நான் புதிய பஞ்சாயத்து அரசாங்கம் பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திக் கொண்டிருந்தபோது அவரிடமிருந்து எனக்கு ஒரு உதவி தேவைப்பட்டது. அது சமூகம் சார்ந்த செயல்பாடு என்பதால் அவரை அணுகினேன். உடனே அதற்கு ஆவன செய்தார். அந்த முதல் சந்திப்பில் புதிய பஞ்சாயத்து அரசாங்கத்தை எந்தப் பின்புலத்தில் பார்க்க வேண்டும் என்பது எனக்குப் புரிந்திருக்கிறதா என்பதைப் பரிசோதிக்க என்னிடம் உரையாடினார். அந்தச் சந்திப்பில் அவருடன் அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேரா. குழந்தைசாமியும் இருந்தார். அவர் என்னைப் பற்றி மிகவும் சிலாகித்து பல்கலைக் கழகங்களுக்கு இவர் போன்ற நபர் அதிக எண்ணிக்கையில் வேண்டியிருக்கிறது என்று சி.சுப்பிரமணியன் அவர்களிடம் கூறினார். அந்தச் சந்திப்பின்போதுதான், எப்படி கர்ம வீரர் காமராஜ் அவர்கள், அவரை எதிர்த்தவர்களையும் அரவணைத்துக்கொண்டு தன்னுடைய அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டு செயல்பட்டார் என்று கேட்டேன். உடனே, ஒருநொடிகூட தாமதிக்காமல், 'காமராஜ் அவர்களுக்கு தனிப்பட்ட எந்த விருப்பும் ஆசையும் கிடையாது. நாடும் மக்களும்தான் அவர்முன் இருந்தது. அதன் பின்னணியில் அவர் இயங்கியதால் எவரையும் அவரால் ஏற்றுக் கொண்டு செயல்பட முடிந்தது. அவருக்கு மக்களுக்காகச் செயல்பட ஆட்கள் தேவைப்பட்டனர். அடுத்து அவர்மேல் அவருக்கு நம்பிக்கை இருந்தது. எனவே அவர் யாரைக் கண்டும் அஞ்சவில்லை. ஆகையால்தான் யார் அவரை ஆதரித்தார்கள், எதிர்த்தார்கள் என்ற பார்வை அவருக்கு வரவில்லை. அத்துடன் அந்தக் காலம் என்பது 'சேவைக்கானதுதான் அரசியல்' என்ற சிந்தனைப் போக்கு அனைவரிடமும் இருந்தது. அத்துடன் அனைவருக்குப் பின்னும் ஒரு தியாக வாழ்வும் அர்ப்பணிப்பும் இருந்தன. அன்று அனைவரும் கருத்துக் கூறுவதில் எந்த உள்நோக்கமும் வைத்திருக்கவில்லை. எனவே அச்சமின்றி கருத்துக்களை கூறினர். அந்த எளிமையான வாழ்வில் தியாகமும், அர்ப்பணிப்பும் சேவை உணர்வும் இருந்தன. அதில் ஒரு நிறைவும் ஆத்ம திருப்தியும் இருந்தது. அதைத்தான் நாம் இன்று தொலைத்துவிட்டோமே' என்று அவர் கூறியதை இன்னும் மறக்கமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது முறை காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகத்தின் அன்றைய துணைவேந்தர் திரு.என்.மார்க்கண்டன் அவர்கள் அனுப்பி வைத்து சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. பல்கலைக்கழகம் நடத்தும் ஒரு நிகழ்வைத் துவக்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக சந்தித்தேன் 'என்ன கருத்தரங்கம் நீங்கள் நடத்தப்போகிறீர்கள்' என்று கேட்டார். உடனே அந்தக் கருத்தரங்கின் நோக்கம் பற்றி விளக்கினேன். அனைத்தையும் பொறுமையாகக் கேட்டுவிட்டு 'இன்று அரசியலில் கோலோச்சுகின்றவர்களை அழைத்தால்தான் நீங்கள் நடத்துகின்ற நிகழ்வுக்கு ஒரு விளைவு கிடைக்கும்' என்றார். 'இருந்தாலும் நீங்கள் தொடக்கிவைப்பது சிறப்பாக இருக்கும்' என்றேன். நிகழ்வுக்கு வருவதற்குச் சம்மதம் தெரிவித்த அவர் அப்போது ஒரு கருத்தை என்னிடம் கூறினார். 'பொதுவாக ஒரு அரசாங்கத்தை மதிப்பீடு செய்யும்போது அரசு அறிவிக்கின்ற திட்டங்கள் அனைத்தும் மக்களுக்குச் சென்று சேர்கிறதா என்று களத்தில் பார்க்க வேண்டிய வேலையைச் செய்யுங்கள். சமீப காலமாக அரசியலில் ஒரு புதுமையை நான் பார்த்து வருகிறேன் தமிழகத்தில். அரசின் அறிவிப்புக்களையே சாதனைகளாகப் பட்டியலிட்டு விடுகிறார்கள்; பலர் அந்த அறிவிப்புக்களையே சாதனைகள் என்று பாராட்டி அறிக்கைகள் வேறு வெளியிடுகின்றனர் என்றார். அப்பொழுது அதை என்னால் எளிதாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. பின்பு ஒரு முறை அரசு சட்டமன்றத்தில் விதி எண் 110ன் கீழ் அறிவித்ததை எடுத்துக்கொண்டு ஒரு கிராமத்தில் கள ஆய்வு செய்தபோதுதான் அவர் கூறிய கருத்து எவ்வளவு ஆழமானது என்பது எனக்கு விளங்கியது. அதாவது அடுத்த இரண்டு மாதத்தில் அந்த அறிவிப்புக்கள் அனைத்தும் தொகுக்கப்பட்ட சாதனைப் பட்டியலாக வெளியிடப்பட்டிருந்ததை பார்த்தபோதுதான் அன்று பெரியவர் சி. சுப்பிரமணியன் கூறியது எவ்வளவு உண்மையானது' என்பது புலப்பட்டது.



காமராஜர்

மூன்றாவதுமுறை அவரைச் சந்தித்தபோது எப்பொழுதும் போல் அவரிடம் ஓர் உரையாடலை ஆரம்பித்தேன். நான் சந்தித்த நேரங்கள் அனைத்தும் அவர் பதவியில் இல்லாத காலம். அதனால் அவர் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட்டுவந்த நேரமும் கூட. அப்பொழுது உரையாடலுக்கிடையே ஊழல் பற்றிக் கேட்டேன். சிரித்துவிட்டு, இன்று இந்தப் பொருள்தான் அனைவரின் சிந்தனையிலும் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது என்றார். முன்பெல்லாம் ஊழலே நடக்கவில்லையா? என்று நான் கேட்டேன். உடனே ஊழல் என்பது என்ன என்பதைவரையறைசெய்துவிட்டுப் பேசினால் மிக எளிதாகக் கூறி விடலாம் என்றார். எவையெல்லாம் சட்டத்திற்குப் புறம்பாக நடைபெறுகிறதோ அவை அனைத்தும் ஊழல் தானே என்றேன். அப்படியென்றால் ஊழல் எல்லாக் காலத்திலும் இருந்துதான் வந்துள்ளது. அதை மறுக்க இயலாது என்றார். அரசுத்துறைதான் பெருமளவில் ஊழலில் ஈடுபடுகின்றன என்றேன். ஆமாம் அரசுதான் அனைத்தையும் கட்டுப்படுத்துகின்றது, எனவே வாய்ப்புகள் அங்கேதான் அதிகம் என்றார். முன்பெல்லாம் இவ்வளவு மோசமாக ஊழல் நடைபெறவில்லை என்று தெரிகிறது என்றேன். அப்போது அரசுக்கு வந்த வருமானமே மிகக் குறைவானது, அதில் பெருமளவில் ஊழல் செய்வது என்பது மிகச் சிரமமான காரியம் என்றார். முன்பெல்லாம் தணிக்கை அறிக்கைகள் பற்றி இவ்வளவு விவாதங்கள் நடக்கவில்லை இப்பொழுது தான் இவ்வளவு கடுமையான விவாதங்கள் வைக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றேன். அதற்கு அவர் சொன்னார்: நிலை அதுவல்ல. அப்பொழுதும் அந்த அறிக்கைகள் விவாதிக்கப்பட்டன. அன்றைய சூழலில் அப்படியே தவறுகள் நடந்திருந்தாலும், அந்தப் பணம் என்பது தனி நபர் பயன்பாட்டுக்கு வருவதில்லை. அந்தப் பணம் எதாவது பொதுப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும். இன்று இவை அனைத்தும் மணி ட்ரயல் என்பதில் முடிந்து விடுகிறது. எனவே தான் இது பிரச்சினை ஆகிவிடுகிறது. தனி நபர் பணம் பார்க்க ஆரம்பித்த பின்தான் இந்த அளவுக்கு ஊழல் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அடுத்து ஊழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.சுப்பிரமணியன்

செய்து சேர்க்கும் பணம் அரசியல் கட்சித் தலைவர்களின் சொந்த நலனுக்காக உபயோகப்படுத்தும்போது தான் இன்று அது விஸ்வரூபம் எடுத்துள்ளது என்றார். இன்னும் ஒருபடி கீழ் இறங்கி விவரிக்க வேண்டுமென்றால் தொழில் செய்து பணம் சம்பாதிப்பதைவிட அரசியலில் மிக எளிதாக பணம் பார்க்கலாம் என்ற நிலைதான் அரசியலை மிகவும் தாழ்நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. இவற்றையும் தாண்டி அரசியல்வாதிகளை மக்கள் சேவகராக பார்க்கும் பார்வை மாறி மக்களுக்கு சேவை செய்வதற்கு தரகு வாங்கி மக்கள் பணத்தை கொள்ளையடிப்பவராக சித்தரிக்கும் சூழலுக்கு வந்துள்ளதுதான் நம்மை வருத்தத்திற்கு ஆளாக்குகின்றது என்றார். அரசியலுக்கு பெரும் பணம் தேவைப்படுவதால் தான் அரசியலில் ஊழல் இந்த அளவுக்கு மலிந்துள்ளது என்றேன். ஆமாம். அன்று அரசியலுக்கு தொண்டர் இருந்தார், கட்சிப் பணி செய்தார். இன்று கட்சிகளுக்கு வாடிக்கையாளர்கள்தான் இருக்கின்றார்கள். எனவே வாடிக்கையாளர்கள் லாப நஷ்ட கணக்குப் பார்ப்பார்கள். தொண்டர் கொள்கை கோட்பாடு பார்ப்பார் என்றார். அந்த உரையாடலை அத்துடன் முடித்துவிட்டு நன்றி கூறிவிட்டு விடைபெற்றுப் புறப்பட்டேன். என்னிடம் அப்போது ஒரு கேள்வி மட்டும் பாக்கி இருந்தது அவரை மீண்டும் சந்திக்கும்போது கேட்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அன்றைய சந்திப்பிலிருந்து விடைபெற்று வந்துவிட்டேன்.

**நா**ன்காவதுமுறை அவரைச் சந்திக்கச் சென்றபோது, அந்தக் கேள்வியைக் கேட்டேன். அந்தக் கேள்வியை பலமுறை யோசித்து விட்டுத்தான் கேட்டேன். ஒரு காலத்தில் நீங்களும் பேரா.எம்.எஸ் சுவாமிநாதன் அவர்களும் மிகப்பெரிய பாராட்டைப் பெற்றவர்கள் இந்தியாவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்ததற்காக. ஆனால் சமீபகாலமாக ஒரு சிலர் இந்திய விவசாயம் சீரழிந்து விட்டதாகக் கூறுகின்றனர். அதற்கு விவசாயத்தில் நவீன அறிவியல் முறையைப் புகுத்திய பிறகு குறிப்பாக இரசாயண உரங்களும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் பசுமைப் புரட்சி என்ற பெயரில் உபயோகப்படுத்தி விவசாயத்தை அழித்துவிட்டதாகப் பேசுகின்றனரே என்றேன். நிதானமாக இரண்டு நிமிடம் அமைதி காத்துவிட்டுக் கூறினார். பொதுவாக இப்படிப்பட்ட கருத்துக்களை வைப்பவர்கள் முழுமையாகப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு பேசுவதில்லை. நாம் எந்தச் சூழ்நிலையில் பசுமைப் புரட்சியைக் கொண்டு வந்தோம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நம் உணவுத் தேவைக்கு அன்று நாம் அமெரிக்காவிடம் கையேந்த வேண்டிய சூழ்நிலையில் இருந்தோம். நடுக்கடலில் எங்கோ சென்ற அமெரிக்க உணவு தானியக் கப்பலை வழிமறித்து நம் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய பரிதாப நிலையில் இருந்தோம். வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம். அன்றைய சூழலில் ஒன்று: மக்கள் தொகையை வளரவிடாமல் தடுக்க வேலை செய்ய வேண்டும். அடுத்து: உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்காகக் கொண்டுவந்த திட்டத்தைப் பயன்படுத்தி, விவசாயிகளிடம் ஆசையைத் தூண்டி சந்தை நோக்கில் செயல்பட்ட உரக் கம்பெனிகளும், விவசாயக் கருவி உற்பத்தி நிறுவனங்களும், விவசாயிகளுக்கு கடன் அளிக்கும் நிதி நிறுவனங்களும் சேர்ந்து விவசாயிகளை உணவுச் சந்தைக்குள் கொண்டு வந்ததன் விளைவுதான் இன்று நாம் சந்திக்கின்ற பிரச்சினைகள். அன்றைய உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய அதுதான் வழிமுறையாக இருந்தது. அது மட்டுமல்ல அந்த வழிமுறையை இந்தியா மட்டுமல்ல உலக நாடுகளே நம்மைப்பார்த்து ஆச்சரியப்பட்டது. எப்பொழுது உற்பத்திச் சந்தைக்குள் விவசாயம் செல்ல ஆரம்பித்ததோ அன்றிலிருந்து நீங்கள் கூறுகின்ற பிரச்சினைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து விவசாயிகளின் உயிரைப் பறித்தன. இந்தச் சந்தைச் செயல்பாட்டில் பேரா.எம்.எஸ். சுவாமிநாதனுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. அது மட்டுமல்ல அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது விவசாயிகளின் மேம்பாடு என்பது பலருக்குப் புரிவதில்லை. நாம் வாழும் காலம் தனிநபர் லாபம் பார்க்கும் காலம். இந்தக் காலத்தில் எவரையும் நாம் அசிங்கப்படுத்துவோம். எந்தப் பொதுத்தளத்தில் இருப்பவரையும் நாம் எப்படிப் பார்க்க வேண்டுமென்றால், அவர் வருமானம் எல்லையில்லா அளவுக்குக் கூடினால் நாம் யோசிக்கலாம், ஏதோ ஒருவகையில் தவறாக தன் பதவியை பயன்படுத்தியிருக்கிறார் என்று நாம் எண்ண முடியும். அப்படி எந்த நிலையிலும் பேரா.எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைப் பார்க்க முடியாது. அவருடைய கடின உழைப்பு, நாட்டுப்பற்று, விவசாயிகளின் நலன் பேணுதல் அனைத்தும் இந்த நாட்டு மக்களால் பாராட்டப்பட வேண்டியது. உலக அரங்கில் அவருக்குக் கிடைத்த மரியாதை கௌரவம் அளவிட முடியாதது. அந்த அளவுக்கு நமக்கு உழைத்த விஞ்ஞானிக்கு நாம் கௌரவம் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும் என்று கூறி முடித்தார்.

அந்த உரையாடலில் என்னிடம் ஒரு குற்ற உணர்வு உருவாகிவிட்டது. இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக்கூடாதோ என்ற வினாவும் என்னுள் எழுந்து அடங்கியது.

**கட்டுரையாளர்: கிராமியப் பொருளாதாரப் பேராசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா.மோகன்ராஜன்
mohanrajan.r@gmail.com

# பெரியார் ஏன் இன்னும் சாகவில்லை?!



பெரியார் பிறந்த நாளான செப்தம்பர்-17 ஆம் திகதியை சமூக நீதி நாளாகத் தமிழக அரசு அறிவித்துக் கொண்டுள்ளது. பெரியார் எவற்றை தமது வாழ்நாள் இலக்காகக் கொண்டிருந்தாரோ அவற்றை சட்ட வழியில் சென்று நிறைவேற்ற வேண்டிய கடமை, பொறுப்பு பெரியார் வழி வந்தவர்களுக்கு உண்டு. ஏனெனில் பெரியார் இலக்கு முழுமை பெறவில்லை. இன்னும் சமத்துவமான சமூகம் ஒரு கனவாகவே இருக்கிறது. இதை சொல்வதற்கு வெட்கப்படத்தான் வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் சமூக மதிப்பையும், சுயமரியாதையையும், சமநீதியையும், சமத்துவத்தையும் பெறும் வரையில் பெரியாரின் தேவை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அந்த வகையில் சக மனிதனை மதிக்கும் மனங்கள், மனிதர்கள் தமிழக அரசின் இந்த அறிவிப்பைப் புரிந்து கொள்ள முடியும்.

"சாதியால் அடக்கி ஒடுக்கப்பட்ட மனிதர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் மேன்மை அடைவதற்கான சமூக நீதிக் கதவைத் திறந்து வைத்தது அவரது கைத்தடியே. இன்று இந்தியா முழுமைக்கும் சமூக நீதிக் கருத்துக்கள் விதைக்கப்பட்டுள்ளன என்றால், அதற்கு அவர் போட்ட அடித்தளமே காரணம். 'சமூகநீதியை அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைய எனது பயணம் தொடர இந்நாளில் உறுதியேற்கிறேன்' என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துக் கொண்டுள்ளார்.

தமிழகம் இன்னும் ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பிலிருந்து முற்றிலும் விடுபடவில்லை என்பதை சமூக நீதியிலிருந்து பிறந்த திராவிடர் கழகம் செய்ய இயலாதவற்றை பாராளுமன்ற வழியில் நிறைவேற்றித் தர வேண்டிய பொறுப்பும், கடமையும் அதன் வழி வந்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. அதனால்தான் அறிஞர் அண்ணா, திமுக முதன்முறையாக வெற்றி பெற்று சட்டசபைக்குள் நுழைந்தபோது 'இது பெரியாருடைய ஆட்சி' என்றார். கலைஞர் கருணாநிதி முதல்வராக பொறுப்பெடுத்துக் கொண்டு பெரியாரைச் சந்தித்தார். பெரியாரைப் பிரித்துவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்ப்பது அரசியல் தவறாகவே முடியும். பெரியாரை பெயரளவில் உச்சரித்துக் கொண்டிருக்கும் அதிமுக கூட பெரியாரை வெளியேற்ற முடியாமல்தாம் இருக்கிறது. இருக்கும் ஏனெனில் பெரியார் ஓர் சமூகத் தேவை. சமூகம் முற்றிலும் நிறைவடையும் வரை பெரியாரின் தேவை இருக்கவே செய்யும்.

சமூகத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மக்கள் நல அரசும் பெரியார் வழியில்தாம் செயற்பட வேண்டியிருக்கும். செயல்படும் என்பதே சமூக மெய்மையாகும். அதிமுகவோ, திமுகவோ கடந்த காலங்களில் சமூகத் தேவைகளை நிறைவேற்றித்தர வேண்டிய சட்டவாக்கங்கள் எல்லாம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெரியாரின் கோரிக்கைகளாகவே இருந்து வந்திருக்கின்றன.

இன்றைக்கு அனைத்துச் சாதியினரும் பூசகர் ஆகலாம் என்ற சட்டவழியிலான நடவடிக்கைகள் சமூக நீதியின் ஆகப்பெரிய நடவடிக்கையாகும் என்பதை அதற்கு எழும் எதிர்ப்புகளினின்றும் புரிந்து கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே கோவிலுக்குள் நுழையலாம், வழிபடலாம், பூசகம் செய்யலாம் என்றிருந்த நீதியற்ற வழிபாட்டு, கடவுள் அரசியலை பெரியார் சமரசமற்ற வகையில் தமது வாழ்நாள் இறுதி வரை எதிர்த்து வந்திருந்தார். விடுதலைக்குப் பிந்தய 75 ஆண்டுகளின் பின்னரும் நிலமை மாறவில்லை என்பது சமூக ஏற்றத்தாழ்வுகள் இன்னுமிருக்கின்றன என்பதே பொருள்.

அனைத்துச் சாதியினரும் பூசகர் ஆதல் என்பது இந்து மதத்தைப் புண்படுத்துவதல்ல மாறாக மாற்றாக புண்பட்ட மனிதர்களுக்கு மருந்திடுவது என்பதை சமூக ஏற்றத்தாழ்வை, சாதியை ஏற்கும் மதத்திற்குள்ளிருக்கும் ஒருவரால் புரிந்துகொள்ள முடியாதுதான். இது இந்து மதத்திற்குள் தலையிடுவது என்று கூச்சல் போடுவது பொருளற்றதாகும். சமூகத்தைக் கட்டுப்படுத்தும் மதம் ஏற்றத்தாழ்வைக் கொண்டிருக்கும் போது சமூகத்தை வழிநடத்தும் ஒரு சனநாயக அரசு அவற்றை களைய வேண்டிய இடத்தில் இருக்கிறது. மதம் கோவிலை மட்டும் கட்டுப்படுத்துமானால் அரசு இவற்றில் தலையிடுவது பற்றி பேசலாம். ஆனால் அது சமூகத்தையும் கட்டுப்படுத்துவதுடன் யார் வழிபடுவது, யாழ் பூசகம் செய்வது என்று முடிவு செய்யும் போது சமூக நீதியை முன்னெடுக்கும் எந்த ஓர் அரசும், செய்வதைத்தான் திமுக அரசும் செய்து கொண்டுள்ளது.

அனைத்துச் சாதியினரும் பூசகர் ஆதல் என்பது ஒரு மதச் சிக்கல் அல்ல. அது ஒரு சமூகச் சிக்கல், சனநாயக அரசியலில் அது ஒரு சட்டச் சிக்கல். பாராளுமன்ற சட்டவாக்கங்களின்படி அது ஒரு தேசவிரோத செயல். அதனை எதிர்ப்பது என்பது ஏற்றத்தாழ்வை ஏற்பதாகும். சாதிய ஏற்றத்தாழ்வை நீட்டிக்க விரும்புவதாகும். தேசவிரோத செயலுக்கு மதச்சாயம் பூசும் அரசியல் பயங்கரவாதமாகும்.

இன்னும் சொல்லப்போனால் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆதல் என்பதற்கு எதிர்ப்பு அனைத்துச் சாதியினரிடமிருந்து வரவில்லை. ஒருகுறிப்பிட்ட சாதியிடமிருந்து மட்டுமே வருகிறது. சாதியிலுள்ளோரிடமிருந்து மட்டுமே வருகிறது. மதத்தையும், கோவிலையும், சமூகத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பும் ஒரு குறிப்பிட்டச் சக்திகளிடமிருந்து மட்டுமேவருகிறது.

அரசியல் சாசனம் வகுத்தளித்துள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிராக செயற்படும்போது அவை தேசவிரோத செயற்பாடுகள் ஆகின்றன. யாதொருவரும் சமமில்லை என்பதை மதம் அல்லது பிற எதன் பெயரில் சொல்பவர்கள், செயற்படுவர்கள் தேசவிரோதி ஆகிவிடுகிறார்கள்.

கடவுள் பொதுவானவர் இல்லை என்று சொல்லும் போது அது ஒரு குறிப்பிட்ட சாதிக்கு மட்டுமே சொந்தம் என்றாகிறது. குறிப்பிட்ட சாதிக்கு மட்டுமே கடவுள் சொந்தமாக இருந்தால் அது கடவுளாக இருக்க முடியாது. அது சாத்தானாக மட்டுமே இருக்க முடியும். ஏற்றதாழ்வுக்கு கடவுள்தாம் காரணம் என்றால் அதனை உடைத்தெறிவேன் என்றார் பெரியார்.

பெரியார் கடவுளை உடைக்க முயன்றதன் வழி கடவுளை வைத்து ஏற்றத்தாழ்வு அரசியல் செய்து கொண்டிருந்தவர்களை உடைக்க முயன்றார். அதன் வழி மத இறுக்கத்தை உடைக்க முயன்றார். அதற்கு அப்பால் ஏற்றத்தாழ்வான சமூகம், ஏற்றதாழ்வான மனிதனை உடைக்க முயன்றார். பெரியாரை வெறும் கடவுள் மறுப்பாளராக, உடைப்பாளராக நிறுவ முயல்வது கடவுளை வைத்துக் கொண்டு சமூகப் பிளவை விரும்புபவர்களின் தேசவிரோத அரசியலன்றி வேறில்லை.

பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து வழமையான எதிர்ப்பு அரசியல் தொடங்கியிருக்கிறது. இது இன்று நேற்றல்ல பெரியார் காலத்திலிருந்து தொடர்வதுதான். அதனால்தாம் பெரியார், தன் எதிரில் இருக்கும் வேலை சீர்திருத்த வேலை அல்ல உறுதியும், துணிவும் கொண்ட அழிவு வேலை என்றார். அதன் பொருள் ஆழமானதாகும்.

பெரியார் சொன்னார், தீண்டாமையை மேல்சாதிக்காரர்கள் என்னும் பார்ப்பனர்கள் மதத்துடன் சேர்த்துக் கட்டிப் பிணைத்து இருப்பதாலேயே நாங்கள் தீண்டாமை ஒழிய வேண்டுமென்றால் அந்த மதம் ஒழிந்துதான் ஆக வேண்டுமென்கிறோம். தீண்டாமையை அசைக்கும்போது அதோடு பிணைத்த மதமும் ஆடுகிறது. அப்போது, மதம், நரகம், மோட்சம் முதலிய கற்பனைகளை வெகுநாட்களாக ஊட்டிவந்த பார்ப்பனர்கள் மதம் போச்சுது மதம் போச்சுது என்று விசமப் பிரசாரஞ் செய்து எங்களை மதத் துரோகி என தூற்றிட அவர்களால் சுலபமாக முடிகிறது என்றார், அதிகாரம், அதனுடன் இணைந்த உயர்சாதி ஆதிக்கம், என சகலமும் பெரியார் என்ற பெயர் கேட்டவுடன் இன்றைக்கும் ஆட்டம் காணத்தான் செய்கிறது. அதனால்தான் பாசகவின் அண்ணாமலை வ.உ.சி., பாரதியார் பெயர்களை இருட்டடிப்புச் செய்துவிட்டு பெரியாரை திமுக தூக்கிப்பிடிப்பதாகப் புலம்பியிருக்கிறார்.

பெரியார் பிறந்த நாளை சமூகநீதிக்கான உறுதியேற்பு நாளாக அறிவித்ததை புதிய தலைமுறை தொலைக்காட்சியின் விவாத அரங்கில் கலந்து கொண்ட மாலனாலும், பி.ஏ.கிருஷ்ணனாலும் ஏற்க முடியாமல் இருக்கிறது. இருக்கும். அந்த விவாத அரங்கில் ஒன்றுமட்டும் புரிந்து கொள்ள முடிந்தது. சாதியை, மதத்தை, அதிகாரத்தை விரும்புபவர்களால் ஒருபோதும் பெரியாரை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே. அதுபோலவே அவர்கள் தமது சமூக நீதி, சமத்துவ எதிர்ப்பை பெரியார் மீது திருப்புவதன் வழி நிறைவடைந்து கொள்வதையும் பார்க்க முடிகிறது.

சமத்துவமே பெரியாரின் இறுதி இலக்கு அதற்கான தடைகளைக் கண்டடைந்து அதன் மீது பெரும் உடைப்பை நிகழ்த்துவதே அவரது நிலைப்பாடாக இருந்தது. அதற்காக அவர் எந்த சமரசத்தையும், விட்டுக் கொடுப்பையும் செய்து கொள்ளவில்லை. குறிப்பிட்ட மதம், சாதி, மனிதர்கள் தடையாக இருப்பதால் அவர் அவற்றின் மீது தனது பெரும் தாக்குதலை நிகழ்த்துகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனநாயக வழியில் அரசியல் சட்டம் தந்த வழியில் அவர் அவற்றை செய்கிறார். வன்முறையை ஒருபோதும் அவர் கையில் எடுக்கவில்லை.

தன்மீது செருப்பு வீசப்பட்டபோது வீசிய நபர் எஞ்சிய ஒற்றை செருப்பை வைத்துக் கொண்டு எவ்வளவு துன்பப்படுவாரோ என்று வருந்திய மாமனிதன். கூடவே இரண்டையும் சேர்த்து வீசியிருந்தால் பயன்படுத்த எளிதாக இருக்கும் என்று சுயமரியாதையை சுட்டிக்காட்டிய அந்த பெரியார், அந்த ஈனச் செயலை மெய்யான வருத்தமுடனும் ஏற்றுக் கொண்டார். தன் முகத்தில் எச்சில் துப்பிய மனிதனை புத்தன் ஓர் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டது போலவே எளிய நகைச்சுவையுடன் கடந்து செல்கிறார். அவரைத்தான் பி.ஏ.கிருஷ்ணன் போன்றவர்கள் நாஜி என்கிறார்கள். அரங்கில் அந்த வார்த்தையை அவர் குறிப்பிட்டபோது ஆழி செந்தில்நாதன் தமது கண்டனத்தை மிகக் கடுமையாகப் பதிவு செய்தார். எனினும் நிகழ்வின் இறுதிவரை அவர் அவ்வாறே குறிப்பிட்டபடி இருந்தார். மாலன் அதையே வேறு வேறு வார்த்தைகளில் சுற்றிச் சுற்றி வந்து குறிப்பிட்டுக் கொண்டிருந்தார்.

பி.ஏ.கிருஷ்ணன் திரும்பத் திரும்ப ஒரு குறிப்பிட்ட சமூகத்தை(சாதி) மட்டுமே பெரியார் தாக்கிப் பேசி வந்தார் எனவும் நாஜிகளைப் போல பொதுமக்கள் நடுவில் அவர்களை அச்சுறுத்தி, தனிமைப்படுத்தினார் என்றும் கூறிக் கொண்டிருந்தார். உயர்சாதி ஒருபோதும் தனது அதிகாரத்தை விட்டுத் தராது என்பதை தனது பெரியார் எதிர்ப்பின் வழி நிறுவுபவர்களாகவே மாலனும், பி.ஏ.கிருஷ்ணனும் நேரடியாகச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

சமத்துவமான சமூகம், சாதிப் பிரிவினையற்ற சமூகம் என்பதை ஏற்க இயலாததனால்தாம் அவர்களால் பெரியாரை ஏற்க முடியவில்லை என்பதை விளக்குவதற்கு அவர்கள் வலதுசாரிகள் என்று அறிமுகமாவதில் உள்ள தயக்கத்தினூடே தம்மை விமர்சகர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள்.

பெரியார் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவரில்லைதாம். ஆனால் நீதியான விமர்சனத்தை, மனச்சான்றின் படியான விமர்சனத்தை முன்வையுங்கள் என்றுதான் கோருகிறோம். பெரியாரை ஏற்பதில் உங்களுக்கு எங்கே சிக்கல் வருகிறது. சகலசாதியினரும் பூசகர் ஆவதில் சிக்கல் வருகிறது. யாதொருவரும் கடவுளை வழிபடலாம் என்றால் சிக்கல் வருகிறது. கடவுள் பெயரில் அதிகாரம் செலுத்தக்கூடாது என்று சொல்லும்போது சிக்கல் வருகிறது. அனைத்துச் சாதியினரும் சமம், சாதிப் பிரிவினை, சாதி பெயரிலான வேலைப் பிரிவினைகள் கூடாது என்று போராடும்போது சிக்கல் வருகிறது. சாதியின் பெயரால் அடிமைப்படுத்துவதோ, அதிகாரம் செலுத்துவதோ கூடாது என்று சொல்லும்போது சிக்கல் வருகிறது. சிக்கல் பெரியாரிடமா? அல்லது உங்களிடமா என்பதே ஆகப்பெரிய கேள்வியாக உங்களைப் போன்றவர்களிடம் முன்வைக்க வேண்டியிருக்கிறது.

ஒரு சமூகத்தை மட்டுமே பெரியார் தாக்கினார்(பேச்சில், எழுத்தில், கொள்கை வழியில்) என்று மட்டும் சொல்ல முடிந்த அவர்களால் அது ஏன் என்று ஒருபோதும் சொல்வதுமில்லை, சொல்லப்போவதுமில்லை. ஆனால் பெரியார் சொல்லியிருக்கிறார். சமூகம் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறது.

எளிய மனிதர்களின் கல்வி, வேலை, சமூக இருப்பு, வாழ்வு, பொருளாதாரம் என இவற்றின் மீதான சாதி, மத வழியிலான தடை என்பன பல நூற்றாண்டு வரலாறு சொல்லிக் கொண்டிருக்கிறது. அதற்கு நேர்மாறாக ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வளமான வாழ்வும், இருப்பும், அதிகாரமும் அவற்றைச் சொல்லாமல் சொல்லத்தான் செய்கின்றன. பி.ஏ.கிருஷ்ணன் போன்றவர்கள் தம் இருப்பின் வழி அதை உறுதிப்படுத்தத்தான் செய்கின்றனர்.

நூற்றாண்டு சமூக அநீதியை, நூற்றாண்டு அடிமைத்தனத்தை, நூற்றாண்டு ஏற்றத்தாழ்வை கேள்வி கேட்பவராக பெரியார் இருந்தார். ஒடுக்கப்படுவோரிடத்திலிருந்து வரும் கேள்விக்கு ஒடுக்குபவர்களின் பதில் காலந்தோறும் மாலன், பி.ஏ.கிருஷ்ணன் போன்றவர்களின் பதிலைப் போன்றே இருந்துவருகிறது. இருக்கிறது. இருக்கும்.

தன்னையும், மக்களையும் நேசிக்கும் ஒருவராலேயே சமூக அநீதியை ஏற்க முடியாமல் இருக்கும். பெரியார் மானுட சமூகத்தின் மீது மிகுந்த அன்புடையவராக இருந்தார். அதனால்தாம் அவரால் மனிதனைக் கீழாக நடத்தும் எந்த அரசியலையும், எதன் பொருட்டும் ஏற்பவராக இருக்கவில்லை. பெரியாரை ஏற்க முடியாதவர்களின் துயரம் மனிதர்களைச் சமமாக நடத்துவதில் இருந்தது. இருக்கிறது.

"உண்மையில் யாரும் அறிய முடியாத ஒரு கடவுள் இருந்தால் அவரை அறிந்து அவருக்கே தொண்டூழியம் செய்து வணங்கி வந்தவனைவிட கடவுளைப் பற்றி கவலைப்படாமல் கடவுளுக்கு பக்தி செய்யாமல் அன்பு, அறிவு, உண்மை ஆகியவைகளுடன் நடத்தி வந்தவனுக்கே கருணை காட்டுவார் என்று உறுதிகூறுவேன்!" என்கிறார் பெரியார். கடவுளை மறுத்துப் பெரியாரளவுக்கு கடவுளை ஏற்பவர்கள் புரிந்து கொள்ளும் அரசியல்தாம் ஆபாசமானதாகும். பெரியாரைத் தூற்றும் அரசியல்தாம் அசிங்கமானதாகும்.

பெரியாரை எதிர்ப்பது என்பது காலம் காலமாக இருந்து வரும் திட்டவட்டமான ஓர் சமூக, ஆதிக்க, சாதி மத அரசியலாகும். பெரியாரின் மானுட நேயம் மிகுந்த பாமரத்தனமான பேச்சில் வெளிப்படும் அறிவு, மெய்மை, அன்பு வழியிலான சமரசமற்ற கேள்விகளை எதிர்கொள்ள முடியாதவர்கள்தாம் பெரியாரின் தனிப்பட்ட வாழ்வுக்குள் புகுந்து கொண்டு சிறுமைபடுத்திவருகிறார்கள்.

பெரியார் குளிப்பதில்லை, பெரியார் சோப் போடுவதில்லை என்று சிறுபிள்ளைகள் கூட பேச யோசிக்கும் சுத்தம், அசுத்தம் வருண அரசியலை பெரியாரிடத்தும் செய்துபார்த்து ஓய்ந்தார்கள் இன்றுவரை பெரியாரின் கேள்விகளுக்கு நேர்மையான, மெய்மையான பதில்களை அவரது எதிர்-எதிரி தரப்பு என்று சொல்பவர்களால் சொல்ல இயலவில்லை.

பெரியார் எப்படி அறியப்படுகிறார் என்பதை அவர்கள் பார்க்க மறுக்கிறார்கள். பெரியார் ஏன் இன்னும் தேவைப்படுகிறார் என்பதை புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். பெரியார் இன்னும் ஏன் சாகவில்லை என்பதைக் கூட அவர்கள் யோசிக்க மறுத்துக் கொண்டுள்ளார்கள். பெரியாரை சாகடிப்பது மிக எளிது அதை எதிர்த்தரப்பார் மிக கடினமாக்கிக் கொண்டுள்ளார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சமமற்ற சமூகம், சாதி, மத ஆதிக்கம், அதன் அரசியல், நீடிக்கும் வரை பெரியார் சாகப்போவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அவரை எதிரியாகக் கருதுவோருக்குச் சொல்லி வைக்க முடியும்.

கடவுளை மனிதரிடமிருந்தும், மனிதனைக் கடவுளிடமிருந்தும், மனிதனை மனிதனிடமிருந்தும் பிரிக்க முயன்றார் பெரியார். ஆக கடவுளையும், மனிதனையும் விடுவிக்க முயன்றார் பெரியார். கடவுளை விடுவிப்பதன் வழி மனிதனை விடுவிக்க முயன்றார். முதலாளியின் விலங்கை உடைப்பதன் வழி அடிமையின் விலங்கை ஒடிக்க முடியும் என்ற மார்க்சின் வழிமுறைதான் அது. கடவுளை அடிமைப் படுத்திய மனிதன் அதன் வழி மனிதனையும் அடிமைப்படுத்தியிருப்பதை அறிந்தே பெரியார், கடவுளின் பெயரிலான அடிமைத்தனத்தை உடைக்க முயன்றார். கடவுளையும், மனிதனையும் ஒருசேர விடுவிக்க முயன்றார்.

மானுட விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி, வ.உ.சி யை இருட்டடிப்பு செய்துதான் பெரியாரை முன்நிறுத்த வேண்டும் என்பதில்லை. ஏனெனில் சமூகத்தில் அவரவருக்கானத் தேவை நீடிக்கும் வரையில் அவரவருக்கானத் தேவை இருந்தே தீரும். இன்னும் தீராத சிக்கல்களிலேயே பெரியார் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

1979 திசம்பர் 19 ஆம் திகதி பெரியார் தனது கடைசிப் பேருரையில், "நான் என்னுடைய மக்களை சூத்திரனாக விட்டுவிட்டுச் சாகமாட்டேன்!" என்கிறார். பெரியார் தனது உடலை விட்டு நீங்கிவிட்டார். சூத்திரப் பட்டம் இன்னும் இருக்கிறது. எனவே பெரியாரின் கொள்கைகளும் தேவைகளுமாக அவர் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார். இருப்பார். பெரியாருக்கு தமிழர் எதிர்காலம் குறித்தத் திட்டமிட்ட இலக்குகள் இருந்தது. அவைத் தீருமளவிற்காகன தீர்வுகளையும், திட்டங்களையும் விட்டுவிட்டே சென்றிருக்கிறார். எந்த சிக்கல்கள் குறித்து அவர் பேசினாரோ அவை இன்னும் தீர்ந்தபாடில்லை. தீரா சிக்கல்களே பெரியாரை வாழச் செய்து கொண்டிருக்கின்றன.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அதாவது அனைத்து சாதியினரும் சமம் என்பதை அன்றைக்கு தான் சார்ந்திருந்த காங்கிரசு கட்சியினரிடமும், அன்றைய நீதிக் கட்சியினரிடமுமே பெரியார் பல்வேறு காலகட்டங்களில் மாநாடுகள் நடத்தி தீர்மானம் போட்டுக் கேட்டார். காங்கிரசு கட்சி அதை ஏற்கக்கூட இல்லை. நீதிமன்றமும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பதை ஏற்கவில்லை. இடைவிடாத பெரியாரின் போராட்டமே விடுதலைக்குப் பிறகான இந்திய அரசியல் சட்டத் திருத்தத்தில் முதலாவதாக அமைந்தது. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை சட்டம் ஏற்றது. அதிகாரவர்க்கம் ஏற்றது. சும்மா கிடைத்துவிடவில்லை சுதந்திரம் என்றவர்கள் கைப்பற்றிக் கொண்ட அதிகாரம் சும்மா தந்துவிடவில்லை வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை. பெரியாரின் சமரசமற்ற போராட்டமே திருத்திக் காட்டியது.

இன்றைய நீட் தேர்வு நேற்று சமஸ்கிருதம் தெரிந்தால்தான் மருத்துவக் கல்லூரியில் இடம் என்றிருந்தது. கல்வி மற்றும் பொருளாதார, வேலை வாய்ப்புகளில் ஒரு மிகச் சிறுபான்மையினர் கையில் இருந்ததையே பெரியார் கேள்வி கேட்டார். இன்றைக்கு ஓரளவேனும் சமூகத்தில், பொருளாதாரத்தில், கல்வியில் மேல்நிலைக்கு வந்திருக்கும் விளிம்பு மற்றும் இடைநிலைச் சாதியினர் பெரியாரால்தாம் என்பதை வசதியாக மறந்திருப்பினும் பெரியார் வரலாறு அதை



நினைவுப்படுத்தவே செய்யும். சமூக நீதி நாள் அதை செய்யும். செய்ய வேண்டும்.

பெரியார் எழுத்துக்கள், பேச்சுக்கள் நாட்டுடைமையாக்கப்படுதம்போதே பெரியார் பொது சொத்தாக மாற்றப்படும் போதே அவர் பொது சமூகத்தில் மேலும் நெருக்கமாகக்கூடும். அவரது எழுத்துக்கள் பேச்சுக்கள் இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படும்போதே மதவாத, பிளவு சக்திகள் நிரந்தரத் தோல்வியை அடையும். பெரியார் மண் என்று சொல்வதற்கான நியாயமான வேலைத்திட்டங்கள் அரசு மட்டத்திலும், இயக்கங்கள் மட்டத்திலும் வேண்டும்.

பெருந்தொற்றுக் காராணமாக நீண்ட காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் பல ஆலயங்கள் திறக்கப்படுகின்றன. பக்தர்கள் வழமைபோல கும்பலாகக் கூடி தள்ளுமுள்ளுடன் கடவுள் தரிசனத்துக்கு முயல்கின்றனர். வடக்கே கும்பமேளாவில் கூடிய மக்கள் திரளாலேயே பெருந்தொற்று அலையெனப்பரவி பெருந்தொகை மக்களைப் பலி வாங்கியது. ஆனால் இது பற்றியெல்லாம் மதவாத அரசியலும், அரசுகளும் அங்கு கண்டுகொள்ளவில்லை. மக்களைப் பலிகொடுத்து மதத்தை வாழ வைக்கும் அரசியல் அங்கு நிறுவப்பட்ட ஒன்று.

ஆனால் இங்கு அப்படியான பக்தர்கள் இப்போது உருவாகத் தொடங்கியிருக்கிறார்கள். பெருந்தொற்றை பற்றி கவலைப்படாத கடவுள் அரசியல் இங்கும் ஓர் பெருந்தொற்றைப் போன்று பரவிக் கொண்டுள்ளது. ஓராயிரம் அரசும், காவல்துறையும் செய்ய முடியாததை அன்றைக்கு பெரியாரின் சொற்கள் செய்தன. கண்மூடித்தனமான பக்தர்களுக்கு கடிவாளமிட்டன.

"இருக்கும் ஸ்தலங்கள் போதாதென்று ஒரு புதிய ஸ்தலத்தை புண்ணிய ஸ்தான கரையை பார்ப்பனரும் ரயில்வேக்காரரும், ஒப்பந்தம் செய்து கொண்டு பிரமாதமாக விளம்பரப்படுத்துகிறார்கள். அதாவது கோடியக்கரை என்ற இடத்து உப்புத் தண்ணீரில் ஒரு முழுக்குப் போட்டுவிட்டால் எப்படிப்பட்டப் பாபமும் போய்விடுமெனவும் முன்னோர் செய்த பாபமும், இனி மேல் செய்யும் பாபமும் போய்விடுமெனவும் அவ்வளவு மகிமை உடையதெனவும் 'மித்ரன்' விளம்பரப்படுத்துகிறது. இதற்கு மஹோதய புண்ணிய கால ஸ்நானம் எனப் பெயராம். ரயில்வேக்காரரும் பார்ப்பனரும் சேர்ந்து செய்யும் இச்சூழ்ச்சியில் எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் சிக்கி அங்கு சென்று தங்கள் பணம், மானம், சுகாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றைப் பாழக்கிக் கொண்டு திரும்பிவரும்போது கூடவே காலராவையும் அழைத்துக் கொண்டுதான் வீடு திரும்பப் போகிறார்கள். இது என்ன நியாயம் என்று கேட்கிறேன்!".

"கோடியக்கரையில் சென்று குளிக்க வேண்டிய அவ்வளவு பாபம் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறேன். காலை முதல் மாலை வரை பாடுபட்டு உழைத்து, பணத்தை முதலாளிக்கும் பார்ப்பானுக்கும் கொடுத்துவிட்டு கையைத் தலையின் கீழ் வைத்துப் படுக்கிற நீங்கள் கோடியக்கரை செல்ல வேண்டிய அவ்வளவு பாபம் நீங்கள் எப்படி செய்தீர்கள்? தொழிலாளியின் வாழ்வே இதனால் பாழாகிறது. முதலாளியுடன் போட்டியிட்டு தன் நிலைமையை உயர்த்திக் கொள்ள வேண்டிய சக்தியை இழந்து இதனால் பணம், நேரம், புத்தி ஆகியவை இழந்து அவன் தவிக்கிறான். இதற்குத்தானே இந்தக் கடவுள், திருவிழாவும் புண்ணிய ஸ்நானங்களும் உதவுகின்றன!".

இன்றைக்குப் போல அன்றைக்கு கொள்ளை நோயாக இருந்த காலரா குறித்த பெரும் அச்சம் நிலவிய நேரத்தில் மக்கள் பற்றிக் கவலை பட்ட மாந்தநேயனாக பெரியார் இருந்திருக்கிறார். இன்றையப் பெருந் தொற்று சூழலுடன் பொருத்திப் பார்க்கும்போது இன்றைக்கு அப்படியான தலைவனின், மானுடநேயனின் தேவை காலந்தோறும் உணரப்படுவதை மறுக்கவியலாது.

சமூக நீதி நாளில், அனைத்து சாதியினருக்கும் ஒரே இடுகாடு உள்ள கிராமங்களுக்கு ஊக்கத் தொகை பத்து லட்சம் அறிவிக்கப்பட்டுள்ளது. சமத்துவ இடுகாடுகள் அமைக்க கிராமங்களே முன்வரவேண்டும் என்பதை அரசு ஊக்குவிக்க வேண்டும். இறந்த பிறகான சமத்துவ இடுகாடுகளை விட இருக்கும்போதே சாதியை மறுக்கும், விலக்கும் கிராமங்களை அரசே தத்தெடுத்து அரசு வேலை தொடங்கி சாலைகள் வரை அமைத்து அதை முன்மாதிரி கிராமமாக தரம் உயர்த்தலாம். சாதி பார்த்து தொகுதி வேட்பாளர்கள் நிறுத்தப்படுவதை தவிர்க்கும் உறுதி ஏற்பை அரசியல் கட்சிகள் பெரியார் சமூக நீதி நாளில் கொண்டுவரலாம்.

சாதி மறுப்புத் திருமணங்களுக்கு அரசு பெரும் ஆதரவளிப்பதுடன் அத்திருமணங்களுக்கான உதவிகளைச் சலுகைகளாக கருதப்படாமல் அவை மனித அடிப்படை உரிமை என்ற அளவில் அரசு அவற்றிற்கான உறுதியான ஆதரவையும், ஊக்கத்தையும் அளிக்க வேண்டும். அவர்களது குழந்தைகளுக்கு அரசு வேலை தொடங்கி பல்வேறு மட்டத்திலான உதவிகளைச் செய்துதர வேண்டும் சாதிமறுப்புத் திருமணங்கள் சமூகத்தின் ஆகப்பெரிய மரியாதைக்கு அரசு அதன் வழி உருவாக்க வகை செய்தல் வேண்டும்.

சாதியால் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட மனிதர்கள் கல்வி, வேலை வாய்ப்பில் மேன்மை அடைவதற்கான சமூகநீதிக் கதவைத் திறந்து வைத்தது அவரது கைத்தடியே. இன்று இந்தியா முழுமைக்கும் சமூக நீதி கருத்துக்கள் விதைக்கப்பட்டுள்ளன என்றால் அதற்கு அவர் போட்ட அடித்தளமே காரணம் என்றும் பெரியாருக்குப் புகழாரம் சூட்டுகிறார் தமிழக முதல்வர்.

தற்போதய சூழலில், திருவள்ளுவனுக்கு காவிபூசும் வேலை, பூணூல் போடும் அரசியல் நடந்து கொண்டிருக்கும் நிலையில் பெரியாரை வசப்படுத்தும் வலது சாரி அரசியல் மட்டும் தோற்றுக் கொண்டே இருக்கிறது. பெரியாரை மதத்துக்குள்ளாகவோ, சாதிக்குள்ளாகவோ அடக்க முடியவில்லை. நெருப்பு கலப்படமில்லாதது. கலப்படம் செய்ய இயலாதது. பெரியார் கொள்கையில் கலப்படம் செய்ய இயலாது என்பதே பெரியாரின் இன்றுவரையிலான சீவிதமாக, உயிர்ப்பாக இருக்கிறது.

சமத்துவ சமூகம், சமனற்ற சமூகம் என்பது வடக்குத் தெற்காக பிரிந்து கிடக்கிறது. வடக்கில் படேல் சிலை வழி அவர்கள் வல்லடியாக ஒருங்கிணைக்கப்பட்ட இந்திய மத தேசிய வல்லாதிக்கத்தை படேல் சிலை கொண்டு நிறுவிக் கொண்டுள்ளார்கள். தமிழகத்தில் தென்முகத்து அய்யன் திருவள்ளுவர் சிலை தமிழர் இலக்கிய, வாழ்வியல் பண்பாட்டு அடையாளமாக நிற்கிறது. வடபுலத்தில் நுழையவோ, காசிமாநகரில் அவரது சிலையை நிறுவவோ இருந்த எதிர்ப்பின் அரசியல் வெளிப்படையானது.

தென்தமிழகம் சமநீதியையும், வட புலம் சமனற்ற சமூகத்தையும் அரசியல், பொருளாதார, கல்வி, வேலை வாய்ப்பு, மதம், சாதி வழியில் நிறுவ முயல்கிறது. இரண்டுக்குமான இலக்கும், திட்டமும் நேர் எதிரானதாகும். பெரியார் வடபுலத்துக்கு மத, தேச விரோதி. தென்புலத்துக்கு அவர் பெரியார். சாதியை கோரும் சிலைக்கும், இன அடையாளத்தை மறுக்கும் தேசியத்துக்கும், மத அடையாளத்தை ஏற்கும் அகண்ட பாரதத்துக்கும் தனித் தமிழ்நாடு, சாதி, மதமற்ற சமூகம் என்பது நேரிடையான சவாலாகவே இருக்கிறது. அதனால்தாம் பெரியார் பிளவு அரசியலுக்கு சவாலாக இருக்கிறார்.

சமூகத்தைப் பிளக்கும் அரசியலுக்கும், சமூகத்தில் பிளவு அரசியலை ஒழித்தலுக்குமான சிலை அரசியலில் பெரியாரின் சிலை முக்கியமான இடத்தைப் பெறுகிறது. பெறும். ஆங்காங்கு பெரியார் சிலைகள் உடைக்கப்படத்தான் செய்கின்றன. பெரியார் கொள்கைகளை உடைக்க இயலாத சமூக சமத்துவத்தை விரும்பாதவர்களின் சிலை உடைப்பு பரிதாபகரமானதாகும். ஏனெனில் பெரியார் அவர்களுக்கும் சேர்த்துதான் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். பெரியார் சிலைகளில் இல்லை. கொள்கைகளில் இருக்கிறார்.

அதனால்தாம் பெரியாரின் சிலையை சமநீதி சிலையாக நிறுவுதல் சமூக நீதியின்படி மிகச் சரியானதாகும். பிளவு அரசியல் செய்பவர்கள் எதுவித வெட்கமுமின்றி பிளவு சக்திகளின் சிலையை நிறுவுவது சரியென்றால், காந்தியைக் கொன்றவர்கள் சிலையை, ஆங்கிலேயரிடம் மன்னிப்புக் கடிதம் கொடுத்தவர்கள் சிலைகளை நிறுவுவது சரியென்றால், பெரியார் சிலையை பெருமிதத்துடன் நிறுவுவது இன்னும் சரியானதாகும் முக்கியமானதாகும். வட முகத்துப் பெரியார் சிலை எழும்பி நின்று வடபுலத்து பிளவு சக்திகளை அது எச்சரிப்பதாக அமைதல் நலம்.

பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்திருக்கும் அதே நேரத்தில் அதே நாளை சமூக கறுப்புத் தினமாக அறிவிக்க சிலர் முயல்கின்றனர். அன்றைக்குத்தான் பிரதமர் மோடியின் பிறந்த நாளும் கூட. கூடவே அதை நினைவில் கொண்டு அவர்கள் கொண்டாடுதல் பொருத்தமாக இருக்கக்கூடும்.

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லை சு.முத்து

# சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே!

"நமக்குத் தொழில்கவிதை; நாட்டிற்கு உழைத்தல்;
இமைப்பொழுதும் சோராதிருத்தல்"

- என்ற தாரகம் ஓதிய பாரதி, "பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப் பாலித்திட வேணும்" (காணி நிலம்) என்ற வாஞ்சையுடன் தொடக்கத்தில் பள்ளி ஆசிரியர்; பின்னர் பத்திரிகை ஆசிரியர்; தொடர்ந்து மொழிபெயர்ப்பாசிரியர்; நூலாசிரியர் - என நான்முகம் கொண்ட நற்கவியாகத் திகழ்ந்தார். அதுவும் வரலாற்றில் அவரது வாழ்க்கைப் பயணத்தோடு பழகிய இடங்களுக்கும் ஆசிரியப் புலமைக்கும், மொழி ஆளுமைக்கும் ஒரு உறவு உள்ளது என்று எண்ணுகிறேன்.

"உரிமைகளைப் பற்றிப் பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், அவ்வுரிமைகளுக்காகத் தேவையானால் போரிடும் அளவுக்கு அவர்களுக்கு உறுதியும் உணர்ச்சியும் ஊட்டவும், பழம் பெருமைச் சமுதாய ஆற்றலாக மாற்றிப் புதிய இலட்சியத்தை நோக்கி அவர்களைச் செலுத்தவும், அதே நேரத்தில் அழகுணர்ச்சி, மெய்ப்பொருள் நாட்டம் போன்ற உன்னதமான நிலைகளையும் பாமரன் எட்டக் கூடியசொல்லில்வடித்துத்தரவும்,பொதுமக்களுடைய குறைகளை- சூழ்நிலையில் திரண்டிருந்த குறைகளை மட்டுமன்று- அவர்கள் நெஞ்சில் ஊன்றியிருந்த குறைகளை எடுத்துக் காட்டிக் களையவும், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையைப் பொருளாகக் கருதி, அதைப் பரிவோடு நோக்கி அதன் குரலாக இயங்கவும், பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை பரந்த அளவில் நேரடியாக முயலவில்லை. இந்தப் பெரு முயற்சியில் தமிழ்ச் சொல்லைப் பூட்டி அதைக் கவிதையாக்க முடியும் என்று காட்டியப் பெருமை, இந்த (இருபதாம்) நூற்றாண்டின் முதற்பகுதியில் விளங்கிய சுப்ரமணிய பாரதியாரைச் சாரும்" என்றார் பேராசிரியர் அ.சீனிவாச இராகவன்.

எட்டயபுரத்தில் தொடக்கக்கல்வி பயின்று, "திருநெல்வேலி இந்து கலாசாலையில் நமது பாலா பாரதி மூன்றாண்டுகள் (1895-1898) படித்தான்" என்கிறார் சுத்தானந்த பாரதியார். ('பாரதி விளக்கம்', பக்.15).

"எட்டயபுரம் மிடில் ஸ்கூல் படிப்பு முடிந்தவுடன், திருநெல்வேலியில் ஹிந்து காலேஜ் ஹை ஸ்கூலில் சேர்ந்து படித்தார். வழக்கம் போலப் பள்ளிப்பாடங்களில் கவனம் செலுத்தாமல், தமிழ் நூல்களிலும், தமிழ்ப்புலவர் கூட்டத்திலும் காலம் கழித்ததன் பலனாக, மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஊர் திரும்பினார். பல தினங்கள் தகப்பனாரின் கண்களில் தென்படாமல் தாத்தா வீட்டிலே அடைக்கலமானார்" என்கிறார் பாரதியின் தம்பி விசுவநாத பாரதி ('கவி பிறந்த கதை', பாலாஜி புத்தக நிலையம், சென்னை, 1986 ஆகஸ்ட், பக்.79).

பாரதியாரைப் பொருத்தமட்டில் அந்நாளைய ஐந்தாம் ஃபாரம்' (பழைய பத்தாம் வகுப்பு) வரை அவர் பயின்ற ஆங்கிலம் வழிக் கல்வி அருவருப்பாக இருந்ததாம். சிங்கக் குட்டிக்குத் தின்னப் புல் தந்ததைப் போலவும், பார்ப்பனனை இறைச்சி வியாபாரம் செய்யச் சொன்னது போலவும் அத்தனைக்கு அவலமாக இருந்ததாம்.

"நெல்லையூர் சென்றவ் வூனர் கலைத்திறன்
நேரு மாறெனை எந்தை பணித்தனன்;
புல்லை உண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும், ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை
நாடு விப்பது போலவும், எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
ஆரி யாக்கிங்(கு) அருவருப் பாவதை..."
('சுய சரிதை', பாடல் 21)

- எண்ணி வருந்துகிறார் பாரதியார்.

ஏதாயினும் பள்ளிப் படிப்பின்போதே 1897 ஜூன் 27 அன்று கடையத்தில் அப்பாச்சாமி சிவனின் தம்பியான செல்லப்பா ஐயரின் மக்கள் ஒன்பது பேரில் நடுவுள்ள மகள் செல்லம்மாளுடன் திருமணம் நடந்தேறியது. மறுவாண்டில் தகப்பனாரும் காலமானதால், திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் மெட்ரிக்குலேஷன் தேர்வு பெறாததினாலும், ஆதரவற்ற நிலையில் தம் அத்தையார் குப்பம்மாளின் அழைப்பினை ஏற்றுக் காசிக்குச் சென்றார். மகாகவி பாரதியார் 9 மற்றும் 10 ஆம் வகுப்பாகிய 'இன்டெர்மீடியட்' படித்த வாரணாசி, ஜெயநாராயண் இன்டெர் கல்லூரிப் பள்ளியில் 16-12-2018 அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் துணைவியாருடன் சென்று பார்வையிட்டேன். “பல வருஷங்களுக்கு முன்பு நான் ஸ்ரீ காசியில் ஜயநாராயண கலாசாலை இங்கிலிஷ் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசிக்கப் போனேன்” என்று ‘தமிழ்நாட்டு மாந்தருக்கு’ என்ற கட்டுரையில் பாரதி குறிப்பிடுகிறார்.

காசிவாசத்தின்போது, இந்தி மொழி கற்றதால் பிற்காலத்தில் ஒரு சிறுகதையில் அந்தப் பின்னணியைச் சுட்டிக் காட்டுகிறார் பாரதியார்.

‘ரெயில்வே ஸ்தானம்’ என்ற ஒரு கதையில், புகைவண்டி ஒரு மணிநேரம் தாமஸம் ஆவதனால் - “தண்டவாளத்தின் ஓரமாகச் சிறிது தூரம் உலாவி விட்டு வரலாமென்று கருதித் தென்புறமாகக் கூப்பிடு தூரம் போனேன். அங்கு ஒரு மரத்தடியிலே மிகவும் அழகுள்ள ஒரு மகம்மதிய கனவான் உட்கார்ந்திருக்கக் கண்டேன்” என்றபடி பாரதி தென்காசி ஸ்டேஷனில் சந்தித்த, ஏறத்தாழ 25 வயது மதிக்கத் தகுந்த ஒரு முஸல்மானுடன் நடத்தும் உரையாடலின் ஒரு பகுதி இது:

“எனக்கு ஹிந்துஸ்தானி அல்லது உருது பாஷை நன்றாகத் தெரியும். ஆதலால் நான் அவனிடம் உருது பாஷையிலே ஆரம்ப முதல் பேசினேன்.

“உங்களுக்கு உருது எப்படித் தெரியும்? உங்களைப் பார்த்தால் ஹிந்துகள் போலத் தோன்றுகிறதே?” என்று கேட்டான்.

அதற்கு நான்:- “சிறு பிராயத்திலேயே நான் காசிப் பட்டணத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தேன். அங்கு எனக்கு ஹிந்துஸ்தானி பாஷை பழக்கமாயிற்று” என்றேன்.

“காசியில் ஹிந்தி பாஷை அன்றோ பேசுகிறார்கள்?” என்று அந்த முஸல்மான் கேட்டான்.

அதற்கு நான் :- “ஹிந்தி, உருது, ஹிந்துஸ்தானி எல்லாம் ஒரே பாஷைதான். முகலாய ராஜாக்கள் பாரசீக பாஷையிலேதான் பெரும்பாலும் ஆரம்பத்தில் விவகாரம் நடத்திவந்தார்கள். பின்னிட்டு அவர்கள் தமக்கும் தம்முடைய பரிவாரங்களுக்கும் இந்த தேசத்துப் பாஷையாகிய ஹிந்தியைப் பொது பாஷையாகக் கைக்கொண்டார்கள். ஹிந்தி பாஷை ஸம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்தது. அது ஸம்ஸ்கிருத பாஷை சிதைவு. அதை ஹிந்துக்கள் தேவ நாகரியில் எழுதி, ஸ்வயம்புவாகப் பேசுகிறார்கள். அதையே பார்ஸி லிபியில் எழுதிக்கொண்டு பல பார்ஸி அரபி மொழிகளைக் கலந்து முஸல்மான்கள் பேசியபோது அதற்கு ஹிந்துஸ்தானி அல்லது உருது என்று பெயர் வழங்கினார்கள். உருது என்றால் கூடார பாஷை என்று அர்த்தம். அதாவது, மொகலாய ராஜ்யத்தின் சேனைகள் கூடாரம் அடித்துக்கொண்டு பல தேசத்துப் போர்வீரர்கள் கலந்திருக்கையில் அங்கு தோன்றிய கலப்பு பாஷை என்று பொருள். எனக்கு ஹிந்திதான் மிகவும் நன்றாகத் தெரியும். எனினும் பார்ஸி அரபிச் சொற்கள் சேர்ந்ததேயாகுமாதலால் தான் இதிலும் நல்ல பழக்கமுடையவனானேன்” என்றாராம். (சுதேசமித்திரன், 22-05-1920).

1900இல் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் நுழைவுத்தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று



‘ஹிந்து கலாசாலை’யில் சேர்ந்து சமஸ்கிருதமும் இந்தியும் கற்றார். அந்த இந்துக் கல்லூரியே பின்னாளில் பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம் ஆனது.

காசி இந்துக் கல்லூரியில் படித்தபோது, தம் மாமா கிருஷ்ண சிவனின் இல்லமும் ஆன சிவமடத்தில் தங்கியிருந்தபோது ஒருமுறை தம் மாமாவுக்குப் பதிலாகத் திருவெம்பாவை பாடியவர் பாரதியார். ‘சரஸ்வதி தேவியின் புகழ்’ என்கிற பாடலையும் பாரதி காசி சிவமடத்தில் பாடியதுதான் என்பதை பாரதியின் ஒன்று விட்ட சகோதரியின் புதல்வரான கேதாரம் வேங்கட கிருஷ்ணன் நெல்லை சு. முத்துவிடம் நேரில் (16-12-2018) தெரிவித்தார்.

சரஸ்வதிப்பாடலில் ‘லட்சுமி’- அதாவது பொருள் குறித்து “நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!” என்று பாடுவானேன்? உள்ளபடியே அந்நாளில் மதன் மோகன் மாளவியா எனும் அலகாபாத் வழக்குரைஞர் தம் சொந்த முயற்சியில் காசி மகாராஜா வழங்கிய 1300 ஏக்கர் நிலத்தில் கட்டடம் எழுப்புவதற்குப் பணம் திரட்டிக் கொண்டிருந்தார் என்பது உண்மை. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்குப் பொதுமக்களின் உறுதுணை நாடிய பின்னணியில் உதித்ததுதான் இந்தப் பாடல்.

ஆனால், திருநெல்வேலி இந்துக் கல்லூரிக்கு நிதி திரட்டுவதாகவே, இது இயற்றப்பட்டதாக எழுத்தாளர் அ.மாதவையாவின் தம்பியான பெருங்களத்தூர் நாராயண ஐயங்காரின் புதல்வர் பெ.நா.அப்புசாமி ‘விசுவநாதபுரம் நவராத்திரி மலர்-2’இல் ‘ஒரு நவராத்திரி’ என்ற கட்டுரையில் தவறுதலாகப் பதிவிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில், எட்டயபுரம் ஜமீன் ஆதரவில் வாழ்ந்துவந்த மகாகவி, 'சர்வஜன மித்ரன்' என்னும் பத்திரிகையில் பணக்காரர்களின் அட்டூழியங்களைக் கண்டித்து எழுதி வெளிவந்த கட்டுரையினால், ஜாமீன் ஆதரவும் நிறுத்தப்பட்டது. "அதனால் மனக் கலக்கம் அடைந்த பாரதி சில நாட்களில் சேத்தூர் முதலிய இடங்களுக்கு வேலை தேடிச் சென்றார். திருநெல்வேலி நெல்லையப்பக் கவிராயரிடமிருந்தும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்தும் அழைப்புகள் வந்தும் அவற்றை ஏனோ பாரதி ஏற்றுக் கொள்ளவில்லை. கடைசியில் மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் மூன்று மாத காலம் தமிழாசிரியராகப் பணியாற்றினார்" என்று பாரதியின் தம்பி சாத்தூர் விசுவநாத பாரதி ('கவி பிறந்த கதை', பாலாஜி புத்தக நிலையம், 1986, பக்கம் 46) நூலில் குறிப்பிடுகிறார்.

திருநெல்வேலி நெல்லையப்பக் கவிராயர், ஈசுவரமூர்த்திக் கவிராயர் ஆகிய சகோதரர்களின் இல்லத்தில்தான் 'தமிழ்த் தாத்தா' உ.வே.சாமிநாதையர் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஓலைச்சுவடிகள் பெற்றார் என்பது வரலாறு. அந்த இல்லம், நெல்லை சு.முத்து பிறந்து வளர்ந்த சுந்தரத் தோழர் தெருவின் எதிரே மூன்றாவது வீடு என்பதும் ஒரு துணுக்குச் செய்தி.

## மதுரையில் பள்ளி ஆசிரியர்!

1904ஆம் ஆண்டு ஜூன் மாதம் மதுரையிலிருந்து வெளிவந்த 'விவேக பானு' என்னும் இதழில் 'தனிமை இரக்கம்' என்ற தலைப்பில் பாரதியின் முதல் கவிதை அச்சேறியது. இந்தப்பத்திரிகையினை, 1903ஆம் ஆண்டு திருநெல்வேலியிலிருந்து சுவாமி வள்ளிநாயகம் என்பவர் நடத்திவந்ததாகவும் பின்னர், மதுரையிலிருந்து சேற்றூர் மு.ரா.கந்தசாமிக் கவிராயரும் எஸ்.சாமிநாதையரும் இணைந்து நடத்தியதாகவும் முனைவர் இறையரசன் ('இதழாளர் பாரதி', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஜனவரி, 1995) குறிப்பிடுகிறார்.

ஏதாயினும் தம் 22ஆம் வயதில் மாதம் 17 ரூ. 8 அணா (பதினேழரை ரூபாய்) சம்பளத்திற்கு 'ஜூனியர் பண்டிட்'டாக தினம் 5 மணிநேர வகுப்புகள் எடுக்கும் தமிழ்ப்பண்டிதராக, மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் 1904 ஆகஸ்ட் முதல் நவம்பர் 10ஆம் தேதி வரை தமிழாசிரியராகவும் பணியாற்றினார் பாரதியார்.

அதே பள்ளியில் சக ஆசிரியரான அய்யாசாமி ஐயரது தகப்பனார் ராஜாராமையர், 'ஹிந்து' பத்திரிகையில் நிருபராகப் பணியாற்றிவந்தார். அந்நாளில் மதுரைக்கு வந்த 'ஹிந்து' ஆசிரியர் ஜி.சுப்ரமணிய ஐயர் அறிமுகத்தால், சென்னை சென்று, அவரது இன்னொரு ஏடான 'சுதேசமித்திர'னில் உதவியாசிரியராகப் பணியில் சேர்ந்தார் பாரதியார்.

## சென்னையில் பத்திரிகை ஆசிரியர்!

முதலில் நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906 வரை சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியதோடு தம் வாழ்நாளின் இறுதியிலும் ஆகஸ்ட் 1920 முதல் செப்டம்பர் 1920 வரை அவ்விதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றி மறைந்தார். அதே காலகட்டத்தில் 'சக்கரவர்த்தினி' என்ற மகளிர் மாத இதழிலும் (ஆகஸ்ட் 1905 - ஆகஸ்ட் 1906), 'இந்தியா' என்ற வார இதழிலும் (மே 1905 - மார்ச் 1906) ஆசிரியர் பொறுப்பேற்றார்.

பிரிட்டிஷ் அரசின் ஆத்திரத்திற்கு உள்ளான 'இந்தியா' பத்திரிகையின் பிராட்வே அலுவலகம் 1906 ஆகஸ்ட் 21, 22 ஆகிய நாட்களில் காவல் துறையின் பரிசோதனைக்குள்ளானது. பத்திரிகையின் சட்டப்பூர்வ ஆசிரியரான 'மண்டயம்' ஸ்ரீநிவாஸாச்சாரியார் கைது செய்யப்பட்டார்.

அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 அன்று, காவலர்களுக்குத் தெரியாமல் பாரதி புதுச்சேரிக்குச் சென்றார். ஆனால் அவர் செப்டம்பரில் சென்றார் என்றும், எழும்பூர் நிலையத்தில் ரயில் வண்டி ஏறினால் தெரிந்துவிடுமென்று கருதி சைதாப்பேட்டையிலிருந்து ரயில் வண்டியில் போனார் என்றும் செல்லம்மாள் பாரதி உட்பட, ரா.அ.பத்மனாபன், வ.ராமசாமி ஐயங்கார் போன்றோரும் பதிவிடுகின்றனர்.

1907 நவம்பர் மாதம் முதல் பால பாரத ( அல்லது 'யங் இந்தியா' ) என்ற ஆங்கில மாத இதழின் ஆசிரியரும், மயிலாப்பூரில் குட்வின் அண்டு கம்பெனி என்ற பெயரில் மருந்துக்கடை நடத்தி வந்தவருமான டாக்டர் நஞ்சுண்டராவ் என்னும் மகாராட்டிரர் பாதுகாப்பில் ஒரு வார காலம் தங்கியிருந்த பாரதியார், பக்கிம்ஹாம் கால்வாய் வழியே சரக்குப் படகின் கீழ்த்தளத்தில் படுத்துக்கொண்டு பாரதி புதுவைக்குச் சென்றார் என்று, இரா.நல்லையாராஜ் (நெல்லைத் தமிழ்ச்சான்றோர்கள்', காவ்யா பதிப்பகம், 2011, பக்கங்கள் 171-172) என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

ஆனாலும் சர்ச்சைக்குள்ளான இந்தச் செய்தி சரியானது என்றே தோன்றுகிறது. காரணம், 1845இல் தோற்றுவிக்கப்பட்ட 'தென்னிந்திய ரயில்வே கம்பெனி'யினால், 1856இல் இராயபுரம்-வாலாஜாபேட்டை தடம் தான் தென்னிந்தியாவிலேயே முதலாவது ரயில் சேவையும், 1879இல் விழுப்புரம்-பாண்டிச்சேரி ரயில் சேவையும் ஆரம்பம் ஆயின

ஆனால், சைதாப்பேட்டை ரயில் நிலையம் 1931 மே 11 அன்றுதான் கட்டப்பட்டதாம். ஆனால், எழும்பூர் நிலையம் 1908 ஜூன் 11 அன்று கட்டப்பட்டது. அங்கிருந்து அந்நாளில் பாண்டிச்சேரிக்கோ, விழுப்புரத்திற்கோ நேரடி ரயில் சேவை இல்லை .

## புதுவையில் மொழிபெயர்ப்பாசிரியர்!

பாரதியார் புதுவையில் வாழ்ந்து வந்த காலகட்டத்தில் (1918 நவம்பர் 1920 அன்று கடலூரில் கைது செய்யப்படும் வரை) அவருடன் 'இந்தியா' பத்திரிகை உரிமையாளர் 'மண்டயம்' ஸ்ரீனிவாசாச்சாரியார், வ.வே.சு ஐயர், பாபு அரவிந்த கோஷ் ஆகியோர் 'சுதேசிகள் நால்வர்' என்றே அழைக்கப்பட்டனர். ஆங்கில அரசால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை செய்யப்பட்ட பாரதியின் "இந்தியா" பத்திரிகை பிரெஞ்சு ஆதிக்கத்திற்கு உட்பட்ட புதுவையில் இருந்து 10-10-1908 அன்று மீண்டும் வெளியானது. ஆயின் பாரதியின், பல்வேறு இலக்கியப் பணிகளில் முக்கியமாக மொழிபெயர்ப்புத் தளத்தில் அவரது பங்களிப்பு கணிசமானது.

பாரதியார் புதுவையில் பாபு அரவிந்த கோஷின் நட்பினால், கீதாபதேசங்களைத் தமிழாக்கினார். பதஞ்சலி யோகம் கற்றார். அதனால் தான், "எழுதுகோல் தெய்வம்; இந்த எழுத்தும் தெய்வம்" என்ற பரமோன நிலையில், "கூளத்தை மலத்தினையும் வணங்கல் வேண்டும்" என்று ஆன்மீகத்தின் உச்சம் தொடுகிறார்.

"பதஞ்சலி யோக சூத்திரம் சமஸ்கிருதத்தில் இருந்ததை சுவாமி விவேகானந்தர் இங்கிலீஷில் மொழிபெயர்த்தார். மூலத்துக்கும் விவேகானந்தருடைய மொழிபெயர்ப்புக்கும் சில இடங்களில் முரண் என்பது பாரதியாரின் எண்ணம். மூலத்திலிருந்தே அவர் யோக சூத்திரத்தைத் தமிழில் தர்ஜமா செய்து, பகுதி பகுதியாக 'கர்மயோகி' பத்திரிகையில் வெளியிட்டார்....மொழிபெயர்ப்பு வேலையே எப்போதும் சிரமம். எழுதிய ஆசிரியரின் மனோபாவத்தை உணராமல், மொட்டைத்தனமாய் வார்த்தைக்கு வார்த்தை தர்ஜமா செய்வது பள்ளிக்கூட பையன்களுக்கு வழக்கம்... மொழிபெயர்ப்பைப் பற்றிய இவ்வளவு விஸ்தாரமாக, படிப்பவர்களுக்கு அலுப்பு வரக்கூடிய அளவில் ஏன் பேச வேண்டுமமென்றால், ஒரு காரியத்தின் வெளியுருவத்தைக் காட்டிலும் அந்தக் காரியத்தைத் தூண்டும் மூல சக்தியும் மனோபாவமுந்தான் உயர்ந்தவை என்று சொல்வதற்காகவே. மேதாவிகள், விஷயத்தின் மர்மத்தை விரைவில் உணர்கிறார்கள். மற்றவர்கள் வெளியுருவத்தைக் கண்டு மயங்கி விடுகிறார்கள்" என்கிறார் வ.ரா. "மகாகவி பாரதியார்' (பழனியப்பா பிரதர்ஸ், பத்தாம் பாதிப்பு, 1981, பக். 56-57).

ஆதிக் காவியம் ஆகிய வால்மீகி இராமாயணத்தில் வரும் ஒரு சம்பவம். இலங்கையை வென்ற ராமபிரானிடம், விபீஷணன், இராமனே இலங்கையை ஆளவேண்டும் என்ற வேண்டுகோள் வைத்தபோது, தம்பி இலக்குமணனுக்கு அதை ஆள வேண்டும் என்ற ஒரு எண்ணம் எழுந்ததாம். அப்போது தம்பியிடம் ராமன் சொன்ன து:

**"ஜன னீ ஜென்ம பூமிஸ்ச**
**ஸ்வர்காத் அபி கரீயசி"**
**- என்பதை பாரதி,**
**"பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானினும் நனிசிறந் தனவே"**

- என்றவாறு மூலப் படைப்பின் யாப்பமைதியுடன் மொழிபெயர்க்கிறார். அவ்வாறே, பகவத் கீதையின்-

**"யத்ர யோகேஸ்வர: க்ருஷ்ண:**
**யத்ர பார்த்தோ தனுர் தர:**
**தத்ர ஸ்ரீவிஜஸ்யோ பூதி:**
**த்ருவா நீதிர் மதிர் மம:"**
**- என்னும் இறுதி சுலோகத்தை,**
**"கண்ணன் யோகக் கடவுள் எங்குளன்**
**வில்லினை ஏந்திய விஜயன் தன்னோடும்**
**அங்கு திருவும் ஆக்கமும் வெற்றியும்**
**நிலைதவ றாத நீதியும் நிற்கும் இஃதென் மதம்"**

- என்று இசைக்கிறார்.

பண்டைய சென்னை மாகாணத்தில் தெலுங்கு பேசுபவர்களும் இயல்பாகவே நிறைய பேர் பாரதியின் நண்பர்களாக இருந்தனர். அதனால், சென்னையில் பாரதியின் 'தராசு' என்னும் சங்கப்பலகையில் வந்து அமர்ந்து கலந்துரையாடும் சிலரிடம் அவர் சுந்தரத் தெலுங்கிலும் உரையாடுவார்.

ஆயினும், 'சங்கீத விஷயம்' என்ற கட்டுரையில் கர்நாடகக் கச்சேரிகளில் தமிழிலும் கீர்த்தனைகள் இயற்றப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

"நான் பிறந்தது முதல் இன்று வரை பார்த்துக் கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான், 'வாதாபி கணபதேம்' என்று ஆரம்பம் செய்கிறார். 'ராமநீ சமானமெவரு", 'மரியாத காதுர', 'வரமுலோஸகி'... ஐயையோ, ஐயையோ ஒரே கதை" என்று ஆதங்கத்தில் அலறும் கவிக்குயில் பாரதியார், "பத்து முப்பது கீர்த்தனைகளையே ஓயாமற் பாடி சங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக் கூடாது. புதிய புதிய கீர்த்தனைகளை வெளியே கொண்டு வர வேண்டும். இப்போது ஸங்கீத வித்வான்களிலே தலைமைப்பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனைகள் செய்ய முயல வேண்டும்" என்றும் ஆலோசனையும் வழங்குகிறார்.

இருந்தாலும், "புராணங்கள் முழுவதும் சாத்திரம் அல்ல. ஞான நூல்கள். யோக சாத்திரத்தின் தத்துவங்களைக் கவிதை வழியிலே திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக் கூறுவன. இவையன்றி, நீதி சாஸ்திரத்தை விளக்குபடியான கதைகளும் அந்நூல்களில் மிகுதியாகச் சேர்ந்திருக்கின்றன. சரித்திரப் பகுதிகளும் பலவுண்டு. இவ்வாறு பல அம்சங்கள் சேர்ந்து ஆத்மஞானத்திற்கு வழிகாட்டி, தர்மநீதிகளை மிகவும் நன்றாகத் தெரிவிப்பதால், அந்த நூல்களை நாம் மதிப்புடன் போற்றி வருதல் தகும்" என்கிறது பாரதியின் 'தராசு'.

வங்காள மொழியிலிருந்து தாகூரின் சிறுகதைகளையும், பக்கிம் சந்திரச் சட்டோபாத்தியாயரின் கவிதைகளையும் மொழிபெயர்த்துச் சந்த நயத்தோடு தமிழில் இயற்றியவர் பாரதி.

உண்மையில் 1882ஆம் ஆண்டு வங்க தேசத்தின் பக்கிம் சந்திர சாட்டர்ஜி இயற்றிய ஒரு நாவலில் இடம்பெற்ற 'வந்தே மாதரம்' தான் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் எழுச்சிப் பாடல் என்பதாக மகாகவி பாரதியும் ஏற்றுக் கொண்டதால்தான் அதனை 'ஜாதீய கீதம்-1, 2' என இரண்டு முறை மொழிபெயர்த்திருக்கிறார் பாரதியார்.

**"சுஜலாம் சுபலாம்**
**மலையஜ சீதளம்**
**ஸஸ்ய ஸ்யாமளம்**
**மாதரம் (வந்தே மாதரம்)"**

- என்று தொடங்கும் பாடலில் இடம்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சமாசங்கள்' ஆகிய தொடர்மொழிகளைத் தமிழில் மொழிபெயர்ப்பது அத்தனை எளிதன்று. பாரதியின் கவித்திறனில்-

**"இனியநீர்ப் பெருக்கினை இன்கனி வளத்தினை**
**தனிநறு மலையத் தண்காற் சிறப்பினை**
**பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை"**

- என்று சுவை குன்றாது, பொருள் குன்றாது தமிழாக்கம் செய்கிறார். "முன்னொரு முறை முழுதும் அகவலாக ஒரு மொழிபெயர்ப்பு எழுதியிருந்தேன். ஆனால், அது பாடுவதற்கு நயப்படாதாகையால் இப்போது பல சந்தங்கள் தழுவி மொழிபெயர்த் தெழுதப்பட்டிருக்கின்றது" என்கிற குறிப்புடன் பாரதியாரின் 'புதிய மொழிபெயர்ப்பு' இவ்விதம் தமிழாகிறது.

**"நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்**
**குளிர்பூந் தென்றலும், கொழும்பொழிற் பசுமையும்**
**வாய்ந்துநன் கிலகுவை, வாழிய அன்னை!**

இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் மட்டுமன்றி, மலையாளம், தெலுங்கு, வங்காளம் போன்ற வேறு பல இந்திய மொழிகளிலும் புலமை பெற்றவர்.

ஆங்கில மகாகவி பைரன் பாடிய சுதந்திர வேட்கையைத் தமிழில் பாரதி பாடுவதைக் கேளுங்கள்:

**'தாதையர் குருதியில் சாய்ந்துதாம் மடியினும்**
**பின்வழி மக்கள் பேணுமா றளிக்கும்**
**சுதந்திரப் பெரும்போர் ஒருகால் தொடங்குமேல்**
**பன்முறை தோற்கும் பான்மைத் தாயினும்**
**இறுதியில் வெற்றியொ(டு) இலகுதல் திண்ணம்."**
(இந்தியா, 21-11-1908)

தமது பல பாடல்களைத் தாமே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். "பாயுமொளி நீஎனக்கு; பார்க்கும் விழி நானுனக்கு" என்ற பாடல் இது:

*Thou to me the flowing Light;*

*And I to thee discerning Sight.*

ஆங்கிலம் அன்றியும் பிரெஞ்சு, சீனம், ஜெர்மன் போன்ற அனைத்துலக மொழிகளும் கற்றுப் புரிந்து கொள்ளவும், கவிதை, இசைப்பாடல், சிறுகதை போன்ற பல்வேறு இலக்கிய வடிவங்களில் தமிழாக்கவும் தேர்ந்த புலமையும், பன்முக மொழி ஆளுமையும் உடையவராக விளங்கினார் பாரதியார். பிற நாட்டு நல்லறிஞர் இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்கவும் செய்தார்.

பிரெஞ்சு மொழியில் நெப்போலியனின் படைவீர்கள் இசைக்கின்ற சங்க நாதம்- "அலோன் சான் பான் தாலோ பட்ரீயோ." இதனை அதே சாந்த யாப்பில், "அன்னை நாட்டு மக்காள் ஏகுவீர்ப்போய்" - என்று போர்ப்பரணி பாடுகிறார். (ஆ.ஜி.ரங்க நாயகி, 'பாரதியார் இல்லற நாடகம்').

'போல் ரிஷார்' (Paul Richard) என்னும் பிரெஞ்சு மேதை நூலின் தமிழ் வடிவாக பாரதி தொகுத்த 'தத்துவ ரத்னா மாலை' அந்த வகையில் சிறப்புப்பெறுகிறது.

புதுவை இல்லத்தில், 'இந்தியா' பத்திரிகை உரிமையாளரான 'மண்டயம்' ஸ்ரீனிவாசாச்சாரியாரின் புதல்வி யதுகிரியம்மாள் போன்ற பெண் குழந்தைகளுக்கான 'மஞ்சள் குங்குமம்' என்னும் குடும்ப நிகழ்வில் சீன நாட்டுப் புரட்சி வீராங்கனை சியுசின் என்பவரின் கவிதையையும் மொழிபெயர்த்து அங்கு வாசித்தவர் மகாகவி.

**"விடுத லைக்கு மகளிரெல் லாரும்**
**வேட்கை கொண்டனம்; வெல்லுவ மென்றே**
**திட மனத்தின் மதுக்கிண்ண மீது**
**சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்;**
**உடைய வள்சக்தி ஆண்,பெண் இரண்டும்**
**ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்;**
**இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்**
**இதற்கது நாமொருப் பட்டிருப் போமோ?"**

மகாகவி 1910ஆம் ஆண்டு புதுச்சேரியில் வாழ்ந்து வந்தபோது ஹேலி வால்விண்மீன் வருகையினை அங்குள்ள வானாய்வகத்தில் குடும்பத்துடன் சென்று கண்டு, "சாதாரண வருஷத்துத் தூமஹேது' என்ற அகவலும் பாடிய அறிவியல் கவிஞர் பாரதி.

அறிவியல் மொழிபெயர்ப்பு குறித்தும் தீர்க்கமான முடிவுகள் கொண்டிருந்தவர் பாரதியார்.

சேலத்தில் வக்கீல் ஸ்ரீசக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரும், ஸ்ரீவெங்கட சுப்பையரும் சேர்ந்து 1916ஆம் ஆண்டு தொடங்கியது தமிழ் சாஸ்த்ர பரிபாஷை சங்கத்தாரின் பத்திரிகை'. இதுவே தமிழகத்தில் வெளியான முதலாவது ஆங்கில அறிவியல் இதழ். "அந்தச் சங்கத்தின் காரியஸ்தர், அந்த ஊர்க்காலேஜில் ப்ரகிருதி சாஸ்த்ர பண்டிதராகிய ஸ்ரீராமநாதய்யர்".

"தமிழில் சாஸ்த்ர பரிபாஷை மாஸப் பத்திரிகை" என்ற சேலத்துப் பத்திரிகையின் முதலாவது சஞ்சிகை இங்கிலீஷில் வெளியிட்டிருக்கிறது. ஆரம்பத்திலே தமிழில் எழுதாமல் தமிழருக்கு வேண்டிய இக்காரியத்தை இங்கிலீஷ் பாஷையிலே தொடங்கும்படி நேரிட்டதற்கு ஸ்ரீராஜகோபாலாச்சாரியார் சொல்லும் முகாந்தரங்கள் எனக்கு முழு நியாயமாகத் தோன்றவில்லை. ஆனால் கூடிய சீக்கிரத்தில் தமிழ்ப் பகுதியொன்று அந்தப் பத்திரிகையில் சேருமென்று தெரிகிறது. அநேகமாக இரண்டாம் ஸஞ்சிகையிலே தமிழ்ப்பகுதி சேருமென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அங்ஙனம் சேர்ந்து நடக்கும் சாஸ்திரப் பத்திரிகையினால் தமிழ் நாட்டாருக்கு மிகப் பெரிய பயன்விளையுமென்பதில் சந்தேகமில்லை" - ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்னம் மகாகவி பாரதி 'அஸ்திவாரக் காரியம்' என்ற கட்டுரையில் தெரிவித்த கருத்து இது.

### மீண்டும் சென்னையில் நூலாசிரியர்:

கடலூரில் 24 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின்னர் 1918 டிசம்பர் 15 அன்று மீண்டும் தமிழ்நாட்டிற்குத் திரும்பிய மகாகவி, கடையம், எட்டயபுரம், கோவில்பட்டி, சாத்தூர், கானாடுகாத்தான், காரைக்குடி, திருநெல்வேலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேரளத்தின் திருவனந்தபுரம் என்று நாடெங்கும் சுதந்திரப் பறவையாகப் பாடித் திரிந்தார். 1920 ஆகஸ்ட் மாதம் 'அமிர்தம்' எனும் இதழ் தொடங்கவும் நிதி ஆதாரம் தேடி நண்பர்களுக்கு மடல் எழுதினார். எனினும் மீண்டும், சென்னையில் அதே மாதம் முதலில் தம்புச்செட்டித்தெருவிலும்,பின்னர் துளசிங்கப்பெருமாள் கோவில் வீதியிலும் குடியேறினார்.

சென்னை வாழ்வில்தான் பாரதியின் பல நூல்கள் தொகுப்புகளாக வெளிவந்தன. ஏற்கெனவே, புதுவையில் வாழ்ந்து வந்தபோது, 1909 பிப்ரவரி மாதம் இவரது 'சுதேச கீதங்கள்' இரண்டாம் பாகமாக 'ஜென்ம பூமி' என்னும் தொகுப்பு வெளிவந்தது.

பாரதி சென்னைவாசியான பின்னர், 'தேசிய கீதங்கள்' தொகுப்பினை அச்சேற்ற முயன்றார் பரலி சு.நெல்லையப்பர். ஆனால் தலைப்பே பிரிட்டிஷாரின் அடக்கு முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போல் அமைந்ததால், அதனை, 'நாட்டுப்பாட்டு' என்ற தலைப்பில் வெளியிட்டார். 'பாப்பா பாட்டு', 'முரசு' ஆகிய நூல்களையும் அவரே பிரசுரித்து உதவினார்.

பாரதி 1912இல் எழுதி அச்சேற்ற இயலாமல் பாதுகாத்து வந்த 'கண்ணன் பாட்டு என்ற நூலின் முதற்பதிப்பினை சென்னை அரண்மனைக்காரத் தெருவில் பழைய 'சுதேசமித்திரன்' அலுவலகம் செயல்பட்டு வந்த அந்நாளின் 'இந்தியா' அச்சுக்கூடத்தில் அச்சிட்டு உதவினார் ஸ்ரீநிவாஸாசாரியார். 'கண்ணன் பாட்'டிற்குப் பரலி சு.நெல்லையப்பர் தம் முகவுரையில், "இதன் ஆசிரியர் ஸ்ரீமான் சி.சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ்நாட்டார் அறிவார்கள். ஆனால் அவர் பெருமையை உள்ளபடி அறிந்தவர்கள் மிகமிகச் சிலரேயாவார். ஸ்ரீமான் பாரதியார் தமிழ்நாட்டு 'ரவீந்திர நாதர்'; இவர் எனது தமிழ்நாட்டின் தவப்பயன். பாரதியருக்குக் கண்ணபிரான் மீதுள்ள அதிதீவிர பக்தி காரணமாக இந்நூலிலுள்ள பாடலாக வெளியாயின. இவை தமிழர்களுக்கு நல்ல விருந்தாகும்" ('கண்ணன் பாட்டு', சிந்தாதிரிப்பேட்டை சென்னை, பிங்களவ ஆவணி, க.: 1917 ஆகஸ்ட்.)


தொடர்ந்து பாஞ்சாலி சபதம், பகவத் கீதை மொழிபெயர்ப்பு ஆகிய நூல்கள் பதிப்பிக்கப்பட்டன.

"தமிழர்களைத் தமிழ்மொழி மூலமாகத்தான் உயர்த்த முடியும் என்ற உண்மையை ஓர்ந்தார் (பாரதியார்). தமிழுக்குத் தம்மை அர்ப்பணம் செய்துகொண்டார். "மெல்லத் தமிழினிச் சாகும் என்று யாரோ பேதை அவதூறு பேசியது அவரது உள்ளத்தில் 'சுருக்'கென்று தைத்தது. வந்த அவதூறைப் பொய்யாக்க வேண்டும் என்று மனதில் உறுதி பூண்டார். இந்தக் கைங்கர்யத்திலே தான் அவர் மறையும் வரையிலும் ஈடுபட்டிருந்தார்" என்று அறிஞர் வ.ரா. ('மகாகவி பாரதியார்', பழனியப்பா பிரதர்ஸ், பத்தாம் பாதிப்பு, 1981, பக். 182) குறிப்பிடுகிறார்.

"வேறுவேறு பாஷைகள் கற்பாய் நீ

வீட்டு பாஷை கற்கிலாய் போ போ போ" ('போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்')

- என்றவாறு, தாய்மொழி பயிலாத பாரதத்தைப் போகச்சொல்கிறார் பாரதியார். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" எனக் கவிபுனைந்தார் என்றால் அது நூற்றுக்கு நூறு மகாகவியின் அனுபவ உண்மை அல்லவா!



கவிதை

**கலீல் கிப்ரான்**

**தமிழில்: நவஜீவன்**

## அச்சம்

கடலுடன் சங்கமிக்கும் வேளை
அச்சத்தில் நடுங்குகிறது ஆறு
உச்சிமலை விட்டிறங்கி,
காடுகள் ஊர்கள் சுற்றிக்
கடந்துவந்தநெடுந்தொலைவுப்
பாதையை திரும்பிப்
பார்க்கிறது ஆறு.
அதன் எதிரே,
விரிந்து கிடக்கிறது
எல்லையற்ற பெருங்கடல்

கடலுடன் சங்கமம்
காலா காலத்துக்கும்
காணாமற் போவதன்றி
வேறில்லை;
ஆனாலும்
வேறுவழியில்லை.
வந்தவழி செல்ல இந்த
ஜீவிதத்தில் மார்க்கமில்லை
எவருக்கும் இயல்வதில்லை

கடலிலே சேர்வதென்று
ஆறு
கடினமுடிவெடுக்கிறது
அப்போதுதான் மனதின்
அச்சம் தொலைகிறது
கடலோடு கலத்தல் எனில்
காணாமற் போவதல்ல;
பெருங்கடலாய் ஆவதென்று
ஆறு
புரிந்துகொள்ளும் தருணமது.

குறிப்பு : மனிதர்களின் மரணபயம் பற்றிய உருவகக் கவிதை இது. இயற்கையெனும் மாபெரும் சக்தியிலிருந்து உருவாகிவந்த மனிதன் தன் வாழ்க்கைப் பயணத்தின் இறுதியில் அந்த இயற்கையின் அம்சமாக ஆவதுதான் மரணம் என்கிறார் கிப்ரான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அ. செல்வராசு
selvaakhil75@gmail.com

# தளுகை:
# களஆய்வு செய்யப்படவேண்டிய களம்

'தளுகை' என்ற பகுதி திருச்சி மாவட்டம் துறையூருக்கு அருகில் உள்ள பகுதியாகும். தம்மம்பட்டி ஆத்தூர் செல்லும் வழியில் துறையூரிலிருந்து 27 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. திருச்சி மாவட்டத்தின் வடக்கு எல்லை இதுவாகும். தளுகா அல்லது தாளுகா என்ற ஆற்றின் பெயரால் இப்பெயர் பெற்றுள்ளது. இது மங்கப்பட்டி, மங்கப்பட்டிபுதூர், பாதர்பேட்டை, முருங்கப்பட்டி, வெள்ளாளப்பட்டி என்ற ஐந்து சிற்றூர்களை உள்ளடக்கிய பகுதியாகும். தளுகை என்ற பொதுப்பெயரின் காரணமாக மேற்சுட்டிய ஊர்களும் 'த' என்ற தலைப்பெழுத்தோடு குறிக்கப்பெறுகின்றன. கிழக்கில் பச்சைமலையும் மேற்கில் கொல்லிமலையும் உள்ளன. இடையில் இருக்கும் 15 கி.மீ. சுற்றளவு கொண்ட பகுதி இதுவாகும். இவ்விரண்டு மலைப்பகுதிகளில் இருந்து ஓடிவரும் சிறு ஆறுகளின் சேர்க்கையால் உருவான ஆறு தளுகை எனப் பெற்றுள்ளது. 30 ஆண்டுகளுக்கு முன்பு ஊற்றெடுத்து ஓடிய ஆறு இன்று காட்டாற்று வெள்ளத்தைக் கொண்டுவருவதாக மட்டுமே வறண்டு போய்விட்டது. இப்பகுதியில் கல்வெட்டுகள், பானை ஓடுகள், அணிகலன்கள், மணிகள் உள்ளிட்டவைகள் காணப்படுகின்றன. என்றாலும் பெரிய அளவில் தொல்லியல் ஆய்வு எதுவும் செய்யப்படவில்லை.

தளுகைக்கு உட்பட்ட பாதர்பேட்டையின் தெற்குப் பகுதியில் நந்தவனம் எனப்படும் பகுதி ஒன்று உள்ளது. இப்பகுதியில் பழுதடைந்த நிலையில் பெருமாள் கோயில் ஒன்று உள்ளது. கோயிலுக்குப் பின்புறத்தில் நடப்பட்ட நிலையில் கல்வெட்டு ஒன்று எள்ளது. இக்கல்வெட்டில் இருப்பதைப் படித்துவிட்டால் புதையல் கிடைக்கும் என்ற மூடநம்பிக்கை ஊர் மக்களிடம் உண்டு. இதுவரை இக்கல்வெட்டு அரசால் படி எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கட்டுரையாளர் படியெடுத்துக் கல்வெட்டை ஆய்வுக்கு உட்படுத்தியபோது அது முழுமையற்றதாக இருப்பதையும் கி.பி. 9-10ஆம் நூற்றாண்டுகளுக்கு உரிய எழுத்து வடிவத்தைக் கொண்டிருப்பதையும் அறிய முடிந்தது. முழுமையற்றுக் காணப்பெறும் கல்வெட்டில் இரு வரிகள் மட்டுமே உள்ளன. அதிலிருக்கும் தொடர் 'யாண்டு 12ஆவது திநாட்டு இவ்' என்பதாகும். கோயிலைச் சுற்றிக் கற்களாலான சுற்றுச்சுவர் உள்ளது. கல்வெட்டின் பிற பகுதி அவற்றுள்ளும் மறைந்திருக்க வாய்ப்புண்டு. (தற்போது இக்கோயில் பச்சைமலைமேல் வாழும் மலையாளத்தாரால் பூசை செய்யப்படுகிறது) கல்வெட்டு முழுமையாகக் கிடைக்கப்பெறின் அது யாருடைய ஆட்சியில் எந்த ஆண்டில் எதற்காக எடுக்கப்பட்டது என்பன போன்ற விவரங்கள் தெரியவரும். இக்கோயில் இடம்பெற்றிருக்கும் பகுதி கொல்லிமலைக்கு நடந்து சென்று வரும் ஒரு பெருவழியாகும்.

### சமணர் பாறை:

பாதர்பேட்டையின் வடக்குப் பகுதியில் கொல்லிமலையை ஒட்டி 'மானத்தான்பாறை' என்னும் பாறைப்பகுதி உள்ளது. ஊரார் மானத்தான் பாறை என அழைத்தாலும் அது அமணத்தான் பாறையாக இருந்து மருவி இருக்கவேண்டும் எனலாம். ஏனெனில் சமணர்கள் பாறை இடுக்குகளில் தான் தங்கி இருந்தனர் என்பது வரலாறு. இதன்மேல் பகுதியில் நீர் தேங்கியிருக்கும் பாலி ஒன்றும் உள்ளது. ஊர்மக்கள் அப்பாறைக்கடியில் கன்னிமார் வழிபாட்டிற்காக 7 கற்களை நட்டுவைத்து வழிபடுகின்றனர். இரவு நேரத்தில் அக் கன்னிப் பெண்கள் பாலியில் வந்து குளித்துச் செல்வதாகவும் அதன் அடையாளமாக அமர்ந்து குளிப்பதற்கான வழுவழுப்பான இடம் இருப்பதாகவும் நம்பிக்கைத் தெரிவிக்கின்றார். நம்பிக்கையை விலக்கிவிட்டுப் பார்த்தால் இது ஆடை உடுத்தா அமணர்களான சமணர்கள் தங்கியிருந்த பாறை என்பது தெரியவரும்.

இதற்குச் சான்றாக மேலே குறிப்பிட்ட பெருமாள் கோயிலுக்கு அருகில் இருக்கும் சிற்றாற்றில் சமணர் சிலை ஒன்று கிடந்தது. அது தற்போது அருகில் இருக்கும் உழவர் ஒருவரால் அரச மரத்தடியில் எடுத்துவைக்கப் பெற்றுள்ளது (அவரையே வழிபாட்டுக்குரிய கடவுளாகவும் மாற்றியுள்ளனர்). இவற்றைக் கவனத்தில் கொள்ளும்பொழுது இப்பகுதி சமணர்கள் இருந்த பகுதி என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள முடிகிறது. துறையூரிலிருந்து தளுகைக்குச் செல்லும் வழியில் நாகநல்லூர் என்ற ஊர் உள்ளது. இவ்வூரின் குளத்துக்கு அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வெட்டு ஒன்று உள்ளது. இதனை தமிழக அரசு படியெடுத்துள்ளது. அதில் வணிகக் குழுக்களின் பெயர்கள் கூறப்பெற்றுள்ளன. முற்றுபெறாக் கல்வெட்டான அதில் 'கொற்றவன் கோ. முன்னூற்றுவர், அவர்களுக்கு மூத்த நிலையில் உள்ள மக்களின் அமைப்பான ஐம்பெரும் குழு ஆகியவை கூறப்பெற்றுள்ளன'. எனவே இச்சாலைவழி பழங்காலத்தில் ஒரு வணிக வழித்தடமாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் என்பதை அறிய முடிகிறது. மங்கப்பட்டி என்ற சிற்றூரின் வடக்குப் பகுதியில் திருச்சி மாவட்டத்தின் எல்லை முடிவடைகிறது. என்றாலும் இரண்டு மலைகளும் இணையும் மேடான இப்பகுதியில் ஆச்சாமரம் என்ற ஒரு பேருந்து நிறுத்தம் உண்டு. ஆச்சாமரம் என்பது சங்ககாலத்தில் யா மரம் என அழைக்கப்பட்ட மரம் ஆகும் என்பதும் பாலைத் திணைப் பாடல்களில் இம்மரம் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன என்பதும் இப்பகுதி' மழை பெய்யாத காலங்களில் பாலை நிலமாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஓரிரு ஆண்டுக்கு முன்புதான் அம்மரம் வீழ்ந்துபோனது. எனவே இவ்வழி வணிகப் பெருவழியாகத்தான் இருந்திருக்க வாய்ப்பு உள்ளது எனலாம்.

### பானை ஓடுகள்:

பாதர்பேட்டையின் மேற்குப் பகுதியில் கொல்லிமலைச் சாரல் பகுதியில் 'கல்லாங்குத்து' என அழைக்கப்படும் சிறு கற்களால் ஆன மேடுகள் பல காணப்படுகின்றன. ஒருசிலர் மேட்டுப் பகுதியை அழித்து வயலாக மாற்ற முற்பட்டபோது நிறைய பானைகளும் பானை ஓடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. சில தனியார் நிறுவனங்கள் அப்பகுதிகளில் சலவைக்கல் எடுப்பதற்குத் தோண்டியபோதும் பானைகளும் எலும்புகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால் இவற்றின் ஆளுமை தெரியாததன் காரணமாக அவை எல்லாம் கண்டுகொள்ளப்படாமல் போய்விட்டன/ போகின்றன. இக்கல்லாங்குத்துகள் இறந்தவர்களைத் தாழியிலிட்டுப் புதைத்த இடங்கள் ஆகும். இவ்விடுகாடுகளில் கிடைக்கப்பெறும் ஓடுகளை ஆய்வுக்கு உட்படுத்தினால் இப்பகுதியின் பழமையும் மக்கள் பண்பாடும் தெரியவரும். தற்போது ஒருசில கல்லாங்குத்துக்கள் மட்டுமே உள்ளன. விரைவில் அவையும் அழிக்கப்படும் வாய்ப்புகளும் உண்டு.

### மணிகளும் அணிகலன்களும்:

முருங்கப்பட்டிக்கும் வெள்ளாளப்பட்டிக்கும் இடைப்பட்ட பகுதியில்கிணறு தோண்டும்பொழுதும், ஏரோட்டும்பொழுதும் சிவப்பு, நீலநிற மணிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் மண்ணால் செய்து சுடப்பட்ட அணிகலன்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. வழக்கம்போல் அவை கண்டுகொள்ளப்படாமல் போய்விடுகின்றன. தளுகை என்ற பெயரில் உள்ள ஐந்து ஊர்களும்கூட ஒரு காலத்தில் ஒரே இடத்தில் அதாவது இன்று இருக்கும் வெள்ளாளப்பட்டி அருகில்தான் இருந்துள்ளது. ஒரு பெண் இட்ட சாபத்தின் காரணமாக அழிந்ததாகவும் பிறகு மக்கள் பிரிந்து சென்று தற்போது இருக்கும் இடங்களில் ஊரை உண்டாக்கி வாழ்ந்து வருவதாகவும் செவிவழிக் கதைகள் வழங்கி வருகின்றன. கொல்லிமலையை வல்வில் ஓரி ஆண்டவர் என்பதும் பச்சை மலை சங்க காலத்தில் விச்சு மலை என அழைக்கப்பெற்று விச்சியர்பெருமான் அப்பகுதியை ஆண்டவர் என்பதும் வரலாறு. வெள்ளாளப்பட்டியின் மலைச்சாரலில் தேரோடும் வழித்தடங்கள் காணப்படுவதாகவும் இன்றும் மக்கள் நம்புகின்றனர். அண்மைக்காலத்தில் மங்கப்பட்டி புதூரில் மனிதனைப் பலியிடும் பாறை ஓவியம் ஒன்றைப் பேராசிரியர் கவின் கண்டறிந்து தமிழ் நாளிதழ் ஒன்றில் வெளியிட்டு இருந்தார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

தொன்மைச் சான்றுகளையும் வரலாற்றுப் பழமையையும் பெற்றுள்ள தளுகைப்பகுதி தொல்லியல் ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டிய பகுதியாக உள்ளது. ஏறக்குறைய 15 கிலோமீட்டர் சுற்றளவில் விரிந்திருக்கும் இப்பகுதியில் இன்னும் பல கல்வெட்டுகளும் தொன்மையான சான்றுகளும் கிடைக்கக்கூடும். தொல்லியல் துறை கவனம் செலுத்த வேண்டும்.

**கட்டுரையாளர் : உதவிப்பேராசிரியர்,**
**மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. எட்வின்
eraaedwin@gmail.com

# மொழிப் புழங்கல் சிக்கல்கள், ஆதிக்கம், தீர்வுகள்

நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி இந்தியில் மட்டுமே உரையாற்றுவதை எதிர்த்து கண்டனங்கள் எழுந்தபோது அவற்றை எதிர்கொண்ட அமித்ஷா ஐநா சபையில்கூட பிரதமர் இந்தியில்தான் பேசுகிறார். ஏனெனில் அது அவரது தாய்மொழி என்கிறார். இந்தி அவரது தாய்மொழியாக இருக்கும் பட்சத்தில் அது நியாயமே. ஆனால், இதை மிகச் சரியாக எதிர்கொண்டிருக்கிறார் நமது முதல்வர்

சென்ற மாதத்தில் ஒரு நாள் முதல்வர்களோடான இணையவழி உரையாடலின் போது நமது முதல்வரோடு பிரதமர் மோடி அவர்கள் இந்தியில் உரையாட ஆரம்பித்தாகவும் முதல்வர் தமிழில் உரையாடலைத் தொடரவே பிரதமர் ஆங்கிலத்திற்குத் தாவியதாகவும் உடனே முதல்வரும் ஆங்கிலத்திற்கு நகர்ந்தாகவும் பரபரப்பாகச் செய்திகள் ஓடின.

இந்தச் செய்தியை வாசித்ததும் நமது முதல்வரின்மீதான மரியாதை இன்னும் கொஞ்சம் கூடியது. இந்தச் செய்தி உண்மையாயின் மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்கான ஒரு சன்னமான ஏற்பாட்டினை இந்த உரையாடல் எடுத்து வைக்கிறது. இதுதான் சரியான மொழிக்கொள்கை. இந்த விஷயத்தில் நமது முதல்வர் கலைஞரைவிட சரியாகச் செயல்படுவதாகவே என்னால். உணர முடிகிறது.

உரையாடல் என்பது கேட்பவருக்கு சரியாகப் போய்ச் சேர வேண்டும். பெரிய கூட்டங்களில், மாநாடுகளில், பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் அவரவரும் அவரவர் தாய் மொழியிலேயே உரையாடலாம். கேட்பவர்களின் தாய் மொழியில் அதை மொழி பெயர்த்தால் போதுமானது. அதற்கான மொழிபெயர்ப்புக் கருவிகள் நாடாளுமன்றத்தில் உள்ளன

ஒருவர் எந்த மொழியில் பேசினாலும் நமக்குத் தேவையான மொழியை அந்தக் கருவியிலே தெரிவு செய்துவிட்டு அந்தக் கருவியைக் காதிலே மாட்டிக்கொண்டால் போதும். அதுமாதிரி இடங்களிலே அவரவரும் அவரவர் தாய்மொழியில் உரையாடலாம்.

மொழிபெயர்ப்புக் கருவிகள் இல்லாத இடங்களில் மொழிபெயர்ப்பாளர்களை ஏற்பாடு செய்துகொள்ளலாம். இது மொழி குறித்த சிக்கலைத் தீர்ப்பதற்கான எளிமையான ஏற்பாடு. இந்த இடத்தில்தான் கலைஞரைவிடவும் ஸ்டாலின் சரியாக செயல்படுவதாகக் கூறினேன்.

ஒருமுறை க்ளிண்டன் நமது பாராளுமன்றத்தில் உரையாற்றினார். அப்போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இந்தியில் உரையாற்றினார். அதைத் தவறென்று கூறிய கலைஞர் வாஜ்பாய் அவர்கள் ஆங்கிலத்தில்தான் அங்கு உரையாற்றியிருக்க வேண்டும் என்றார். க்ளிண்டன் தனது தாய்மொழியில் உரையாற்றுகிறார். வாஜ்பாய் அவரது தாய்மொழியில் உரையாற்றுகிறார். க்ளிண்டன் மொழிபெயர்ப்புக் கருவியை காதிலே மாட்டிக் கொண்டால் போதும் வாஜ்பாய் இந்தியிலே பேசுவது அவருக்கு ஆங்கிலத்திலே சென்று சேர்ந்துவிடும்.

வாஜ்பாய் அவரது தாய்மொழியில் பேசுகிறார். க்ளிண்டன் அவரது தாய்மொழியில் பேசுகிறார். எனவே இனி தமிழ்நாட்டில் இருந்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழில்தான் பேசுவார்கள்: குறைந்தபட்சம் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனி எங்களது தாய்மொழியான தமிழில்தான் பேசுவார்கள் என்று சொல்லி இருக்க வேண்டும் கலைஞர்.

நாடாளுமன்றத்தில் ஆங்கிலம் மற்றும் இந்தி தவிர பிற மொழிகளில் உரையாட வேண்டும் என்றால் முன்னதாக அவைத் தலைவரிடம் அனுமதி பெறவேண்டும் என்ற நடைமுறையை ஏற்க இயலாது என்று போராடி வென்றிருக்க வேண்டும். ஆனால் நிச்சயமாக ஸ்டாலின் இதைச் செய்வார் என்ற நம்பிக்கை ஏற்படவே செய்கிறது

நமது மொழியை அறியாதவர்களுக்கும் நம் கருத்துகள் போய் சேரவேண்டும் எனில் அவர்களது மொழியில் அவற்றைப் பெயர்த்துத் தரவேண்டும். நமது கருத்தை அவர்கள் அறிந்துகொள்வதற்கு அவர்கள் நம் மொழியை கற்றுத் தேரவேண்டும் என்று அடம் பிடிப்பது அபத்தமானது. அதே நேரத்தில் அடுத்தவர்களது கருத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டியநிலை ஏற்படும்போது ஒன்று நாம் அவர்களது மொழியை நாம்கற்றுக்கொள்ள வேண்டும். அல்லது, இரு மொழிகளிலும் தேர்ந்தவர்களைக் கொண்டு நமது மொழிக்கு அதை பெயர்க்க வேண்டும்.

உலகம் முழுக்க நமது கருத்தினைக் கொண்டுபோக வேண்டும் என்றால் அதை ஆங்கிலத்தில் பெயர்த்துத் தருவது அவசியம். அல்லது நமது கருத்து போகவேண்டிய தூரத்திற்கு போய்ச் சேராது குறுகிப் போகும். இதற்கு வள்ளலார் நல்ல உதாரணம். என்னோடு உரையாட நீ என் மொழியைக் கற்றுத் தேற வேண்டும் என்பது எவ்வளவுதான் நல்லவனாக இருந்தாலும் அவனை அழித்துப் போடும். இதற்கு திப்பு நல்ல உதாரணம். எமக்கான நியாயத்தை உன்னிடம் கேட்க வேண்டிய எம் மக்களுக்கு உன் மொழியை முதலில் சொல்லித் தருவேன் என்று.இந்த விஷயத்தில் காந்தி மிகச் சரியாக செயல்பட்டிருக்கிறார்.

அதுவரைக்கும் காந்தி ஒரு உரையாளராக தன்னைக் கண்டுகொண்டதே இல்லை. இன்னும் சொல்லப் போனால் அவர் பேசவே கூச்சப்படுபவாக இருந்தவர். அன்றைய பம்பாய் நீதிமன்றத்தில் இந்தக் கூச்சத்தின் காரணமாக கோர்வையாக உரையாட முடியாமல் அவர் அவமானப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறும் நாம் அறிந்ததுதான். ஆப்பிரிக்காவில் மாரிட்ஸ்பர்க் ரயில்நிலையத்தில் கொட்டும் பனியில் நிறத்தின் காரணமாக இறக்கிவிடப்பட்டு, குளிரில் விறைத்துக் கிடந்த அந்த இரவில் இருந்து சரியாக ஒரு வாரம் கழித்து பிரிட்டோரியா என்ற இடத்தில் இந்தியர்களிடையே அவர் அவர் உரையாற்றுகிறார்.

கோர்வையாக உரையாட உரையாட முடியாமல் பம்பாய் நீதிமன்றத்தில் அவமானப்பட்ட காந்தியை மாரிட்ஸ்பர்க் ரயில்நிலையத்தில் ஏற்பட்ட அவமானம் தேர்ந்த உரையாளானாக மாற்றி இருந்தது. இந்தியர்கள் ஒன்றுபட வேண்டும் என்றும், நம்மை ஒடுக்குகிறவனோடு போராடுவதற்கு நாம் அவனது மொழியைக் கற்றுத் தேறவேண்டும் என்பது முதல் நிபந்தனை என்றும் மிகத் தெளிவாக எந்தவிதத் தயக்கமும் இன்றி உரையாடினார்.

சொன்னதோடு நிற்காமல் அங்கு வசித்துவந்த சவரத் தொழிலாளிகள், குமாஸ்தாக்கள், வியாபாரிகள் ஆகியோருக்கு ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுக்கும் ஏற்பாட்டினை செய்ய ஆரம்பித்தார் என்ற தகவல் டொமினிக் லேப்பியரும் லேரி காலின்சும் இணைந்து எழுதி மயிலை பாலுவும் வி.என்.ராகவனும் மொழிபெயர்த்து அலைகள் பதிப்பகம் வெளியிட்டுள்ள "நள்ளிரவில் சுதந்திரம்" என்ற நூலின் 80ஆவது பக்கத்தில் இருக்கிறது.

இது மிகச் சரியான அணுகுமுறை. அங்கு காந்தி பெற்ற வெற்றிக்கு மொழி சார்ந்த அவரது இந்த அணுகுமுறைக்கும் ஒரு பங்கு இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் இருபதாம் நூறாண்டின் முதல் கால்பகுதியிலும் "பிரம்மஞானசபை" இந்திய ஆன்மிகம் தத்துவம் இவற்றோடு அரசியலிலும் ஆளுமை செலுத்தியது. கர்மா குறித்தும் மறுபிறப்பு குறித்தும் அந்த அமைப்பின் கருத்துகளோடு நமக்கு முரண்கள் இருக்கலாம். ஆனால் மதம், இனம், நிறம், மொழி கடந்த "உலக சகோதரத்துவம்" குறித்த அந்த அமைப்பின் தேடல் கொண்டாடத் தக்கது.

பிரம்மஞான சபையைத் தாம் தோற்றுவிப்பதற்கு வள்ளலார்தான் காரணம் என்றும் "நிச்சயமாக வள்ளலார் மகாத்மாதான்" என்றும் ப்ளாவெட்ஸ்கி கூறுவதாக "விடுதலைத் தழும்புகள்" என்ற தமது நூலில் சு.பொ. அகத்தியலிங்கம் கூறுகிறார். ஆனால் உலக அளவில் ப்ளாவெட்ஸ்கி அறியப்படும் அளவிற்கு வள்ளலார் அறியப்படவில்லை..விவேகானந்தர் அறியப்பட்ட அளவிற்கு, ராமகிருஷ்ணர் அறியப்பட்ட அளவிற்கு இந்தியாவிற்குள் வள்ளலார் அறியப்படவில்லை. இதற்கு மொழி ஒரு காரணம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ப்ளாட்ஸ்கியின் கருத்து ஆங்கிலத்திலும் மற்ற இருவரது கருத்துகளும் இந்தியிலும் ஆங்கிலத்திலும் கொண்டுபோகப்பட்ட அளவிற்கு வள்ளலாரின் கருத்துகள் கொண்டுபோகப்படவில்லை.

ஈழவப் பெண்களுக்கு மேலாடை தடை செய்யப்பட்டிருந்தது. இது திப்புவை கலங்க வைத்தது. அவர்கள் மேலாடை அணியாதிருப்பதற்கு என்ன காரணம் என்று யோசித்தார். ஒன்று வறுமையாக இருக்க வேண்டும் அல்லது ஏதோ ஒரு காரணத்தின் பொருட்டு ஏதோ ஒரு மன்னன் விதித்த தண்டனையாக இருக்க வேண்டும் அல்லது அவர்களது மூட நம்பிக்கையாக இருக்க வேண்டும் என்று எண்ணினான். காரணம் எதுவாயினும் அதை சரி செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தான். அவன் எடுத்த இந்த முடிவல்ல, அதை எப்படி செயல்படுத்துவது என்று அவன் முடிவெடுத்த விதம்தான். சிறப்பானது.

அவர்கள் மேலாடை அணியாமல் இருப்பதற்கு வறுமை காரணம் என்றால் அவர்களது வறுமையைப் போக்க வேண்டும் என்றும் ஏதோ ஒரு மன்னனின் உத்தரவின் விளைவு அது என்றால் அந்த நிமிடமே அதை ரத்து செய்வதாகவும் அவன் கூறியதைக்கூட நாம் போகிற போக்கில் உட்கொண்டு கடந்து சென்றுவிடலாம். அடுத்து அவன் சொன்னதுதான் சராசரிகள் ஒருபோதும் சிந்தித்தும் பார்க்க முடியாதவை. அவர்கள் மேலாடை அணியாமல் இருப்பதற்கு மூடநம்பிக்கைதான் காரணம் என்றால் அவர்களது மதநம்பிக்கை காயப்படாமல் அதை சரிசெய்ய வேண்டும் என்கிறான்.

அந்தக் காலத்திலும் மதுவினால் அரசிற்கு குறிப்பிட்ட அளவிற்கு வருமானம் வரவே செய்திருக்கிறது. வருமானத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மதுவிலக்கை அமல்படுத்தி இருக்கிறான். மதப்பாகுபாடின்றி அரசைக் கொண்டு சென்றிருக்கிறான். இந்து ஆலயங்களுக்கு நிறைய செய்திருக்கிறான். எந்தவித சிக்கலுமின்றி பூசைகள் நடக்க வேண்டும் என்று கட்டளை இட்டதோடு அதற்கான நிதியை விடுவித்திருக்கிறான். திருமணச் செலவிற்கு உச்சவரம்பு கொண்டுவந்து மக்களைக் கடன்படாமல் காத்திருக்கிறான். இவ்வளவு செய்தவனை அவன் நம்பியவனே காட்டிக் கொடுத்திருக்கிறான். அதற்கான காரணங்கள் உண்டு. அரசு இலாக்காகளுடைய பெயர்களையும், பதவிகளுடைய பெயர்களையும், மாதங்கள் மற்றும் நாட்களையும் கண்டிப்பாக பாரசீக மொழியில்தான் புழங்க வேண்டும் என்று அவன் கட்டளை இடுகிறான்.

எதையும் சகித்து இயல்பாக நடந்த திப்பு தனது மொழியை அடுத்தவர்களிடம் திணிக்க எத்தனித்தது அவனது அழிவிற்கான காரணங்களுள் முக்கியமான ஒன்று "விடுதலைத் தழும்புகள்" என்ற நூலில் சு.பொ. அகத்தியலிங்கம் வைக்கிறார்.

மொழியைச் சிக்கலின்றிப் புழங்குவதற்கு

1) நமது கருத்துகளை சித்தாந்தத்தை யார் புரிந்துகொள்ள வேண்டும் என்று நாம் கருதுகிறோமோ அவன் மொழியில் தர வேண்டும்

2) உலகம் முழுவதும் நாம் போய்ச்சேர வேண்டும் என்றால் ஆங்கிலத்தில் தர வேண்டும்

3) விஞ்ஞானத்தை, தத்துவத்தை, கலை இலக்கியத்தை, வரலாறுகளை நாம் கொள்வதற்கு குறைந்தபட்சம் அவற்றை நம் மொழியில் பெயர்க்க வேண்டும்

இவற்றை சகிப்புத் தன்மையின் கூறுகளாகக்கூட கொள்ளத் தேவை இல்லை. மொழிப் புழங்கல் சார்ந்த நடைமுறை எதார்த்தங்கள் இவை. ஆனால் இந்தியாவில் ஒன்றிய அரசு மொழிப் புழங்கல் நடைமுறையில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சி செய்கிறது. நூற்றுக் கணக்கான மொழிபேசும் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கும் ஒன்றிய அரசு அந்த மக்கள்மீது ஒற்றை மொழியைத் திணிக்க முயற்சி செய்கிறது. மக்களிடம் பெற்ற வரிப் பணத்தை சமஸ்கிருதம் மற்றும் இந்தியை வளர்ப்பதற்காக மட்டுமே செலவு செய்ய எத்தனிக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதினால் இந்தியில்தான் பதில் வருகிறது. இதை சகித்துக்கொள்ளக் கூடாது நல்ல வேளையாக இதுகுறித்து மதுரை பாராளுமன்ற உறுப்பினர் தொடுத்த வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்த மொழியில் கடிதம் எழுதுகிறார்களோ அதே மொழியில்தான் அமைச்சர்கள் பதில் தர வேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறது சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை

இந்தத் தீர்ப்பில் எடுத்துக் கொள்வதற்கு நமக்கு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கராசா இராஜ ராயேஸ்வரி



(கிபி அரவிந்தன் ஆறாவது ஆண்டு நினைவு
இலக்கியப் பரிசுப் போட்டியில் (2021 இல்)
**2வது பரிசுபெற்ற புனைவுச் சிறுகதை**

# இரண்டாவது வாழ்க்கை

ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணியளவில் என் வீட்டு வாசலில் ஒரு பிச்சைக்காரன் நின்றிருந்தான். அறுபது வயதிருக்கும். தலைமுடி தாடி எல்லாம் 'மங்காத்தா' அஜித்குமார் போல நரைத்திருந்தது. உடை என்றால் உடுத்த நாள் முதல் தோய்க்காத சாறமும், கிழிந்துபோன சேட்டும்தான். வாசல் கேற்றருகே நின்றபடி எரிச்சலூட்டும் வகையில் தட்டிக்கொண்டிருந்தான். நான் வேகமாகச் சென்று தலையை மட்டும் வெளியே நீட்டி, "என்ன வேணும்?" என்று கேட்டேன்.

"சாப்பிட என்ன இருக்கு?"

"உழுந்துவடை, கடலைவடை, பணிஸ், வாய்ப்பன், தோசை இருக்கு. ஐயாவுக்கு என்ன வேணும்?"

என்னுடைய நக்கலை அவன் பொருட்படுத்தவேயில்லை.

"தம்பி மூண்டு நாளாய்ச் சாப்பிடயில்லை, என்ன இருந்தாலும் போடுங்கோ"

"வீட்டிலை ஆக்களில்லை"

"அப்ப நீங்கள் ஆர்?"

நான் கோபத்துடன் கேற்றைச் சாத்த முற்பட்டபோது அவன் அவசரமாக, "தம்பி! நீங்கள் 1997ஆம் ஆண்டு சித்திரை மாதம் பின்னேரம் ஐஞ்சு பத்துக்கு ஒரு பொம்பிளையிட்டை அடிவாங்கினிங்கள். சரியா?"

நான் திகைத்துப் பின்னகர்ந்துவிட்டேன். அடி வாங்கியது உண்மை. ஆனால் மாதம் தேதி எல்லாம் தெரியாது.

என் உடம்பை குளிர் அலை ஒன்று ஊடுருவிச் சென்றது. நான் அவனைவிட்டு விலக முடிவு செய்தேன்.

"சரி, பொம்பிளையிட்டை அடிவாங்கினேன். இப்ப அதுக்கு என்ன? போட்டு வாங்கோ."

"தம்பி. தம்பி. பொறுங்கோ. இன்னும் இருக்கு. அதே வருசம் ஐப்பசி மாசம் ஏழாம் திகதி பின்னேரம் ஆறு மணியளவில் ஒரு பெண்ணோடு வவுனியாவுக்கு ஓடிப்போனீங்கள். அடுத்த நாளே அந்தப் பொம்பிளையளோடை ஆக்கள் உங்களைச் சாத்தோ சாத்தெண்டு சாத்தினவங்கள்; சரியா?"

எனக்கு வியர்த்து வழியத் தொடங்கியது.

"உங்களுக்கு என்ன வேணும்?"

கிழவனின் கண்கள் குறும்பாக மின்னின. "சாப்பாடு, சாப்பாடு" என்றான். என் அனுமதிக்குக் காத்திராமல் உள்ளே வந்தான். என்னால் அவனை எதிர்க்க முடியவில்லை. சாப்பாடு போட்டு அனுப்பிவிட வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தேன்.

நான் தட்டின் மேல் வாழையிலையை வைத்து சோற்றை அள்ளிப்போட்டேன். முருங்கக்காய் உருளைக்கிழங்கு சேர்த்த கறி, பருப்பும் இருந்தது. இற்றுப்போய் கைக்குட்டை போலிருந்த அப்பளம்.

கிழவன் சாப்பிட்டுக்கொண்டே, "தம்பி எனக்கு எத்தினை வயசிருக்கும்?" என்று கேட்டான்.

தேவையற்ற கேள்விகள் எனக்கு எரிச்சலைக் கிளப்பின.

"என்ன ஒரு அறுபது, அறுபத்தைஞ்சு இருக்கும்"

"நாப்பது.. பத்து வருசமாய் நாயாய்ப் பேயாய் அலைஞ்சு இப்பிடி ஆயிட்டேன்."

"அதுக்கு முதல் என்ன செஞ்சுகொண்டிருந்தனிங்கள்?" என்று கேட்க நினைத்து பேசாமல் விட்டுவிட்டேன்.

கிழவனிடம் அதிகம் கதை வைக்கக்கூடாது.

பிறகு சாப்பிட்டு முடிக்குமட்டும் கிழவன் எதுவும் பேசவில்லை. முடித்த பின்னர் கிழவன், "வெத்திலை இருக்கா?" என்று கேட்டான். நான் கோபத்தை அடக்கிக்கொண்டு அப்பாவின் வெற்றிலை பாக்குச் சரையை எடுத்துக் கொடுத்தேன். கிழவன் நிதானமாக அரைத்துக்கொண்டு இருந்த இடத்தில் இருந்தவாறே துப்பினான். பிறகு கேட்டான்:

"நான் எத்தினையாம் ஆண்டு பிறந்தனான் சொல்லுங்கோ பாப்போம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சோர்வாக, "தெரியவில்லை" என்றேன்.

"2052ஆம் ஆண்டு ஆடி மாசம் இருபத்திரண்டாம் தேதி காலமை பத்து மணி இருபத்தொன்பது நிமிசத்திற்குப் பிறந்தேன்."

"கிறிஸ்துக்கு முன்னோ பின்னோ?"

"நக்கல் வேண்டாம். கிறிஸ்துக்குப் பின்"

"ஐயா எனக்கு வேலை இருக்கு. நீங்கள் வெளிக்கிடுங்கோ."

"தம்பி. நீங்கள் நம்ப மாட்டிங்களெண்டு தெரியும். ஆனா அதுதான் உண்மை."

"................................................"

"2082ஆம் வருசம் தை மாசம் எனக்கு அனைத்துலக ஜனநாயக சுதந்திரக் குடியரசின் உளவுப் பிரிவுத் தலைமையகத்திலையிருந்து அழைப்பு வந்தது."

"அனைத்துலக ஜனநாயக சுதந்திரக் குடியரசு எங்கை இருக்கு? யப்பானிலையா?"

"அனைத்துலக ஜனநாயக சுதந்திரக் குடியரசு 2040ஆம் ஆண்டு உருவானது. சீனா தலைமையிலான 18 நாடுகள் இணைந்த மாபெரும் கூட்டமைப்பு."

கிழவன் தீவிரமான பாவத்துடன் சொல்லிக்கொண்டே போனான். நான் ஏதோ ஒரு விசையினால் அவனை நோக்கி ஈர்க்கப்பட்டேன் என்றுதான் சொல்லவேண்டும். கிழவன் சொன்ன கதையில் ஏதோ ஒருவகை தர்க்கம் இருந்தது.

"அப்ப இந்தியா?"



"இந்தியாவும் அதிலை அடக்கம்."

"சீனாவின் தலைமையில் இந்தியா?"

"தம்பி. வரலாறைப் பற்றி உங்களுக்கென்ன தெரியும்? நேற்று ஆண்டவன்; இன்று அடிமை. இன்று பகைவன்; நாளை நண்பன். வரலாறு எப்போதும் நேர்கோட்டில் பயணிப்பதில்லை. உலகமே இரண்டு மிகப்பெரிய அணிகளாக உருவாகியிருந்தன. அனைத்துலக ஜனநாயக சுதந்திரக் குடியரசுக்கு எதிராய் நிண்டது அமெரிக்கா தலைமையிலான 58 நாடுகளைக் கொண்ட மாபெரும் கூட்டமைப்பு. அதிலை ரசியாவும் அடக்கம்."

"அப்ப நாடுகளுக்கிடையிலான அதிகாரம்?"

"இப்ப இந்தியாவின்ரை மாநிலங்களுக்கு என்ன அதிகாரம் இருக்குதோ அதைவிட ஒருபடி மேலான அதிகாரம் இருந்தது."

"இருந்தது எண்டு சொன்னா அது இறந்தகாலமா?"

"நான் சொல்லிற கதையை ஒழுங்காய்க் கேளுங்கோ. கடைசிலை தெரியவரும்."

"சரி. உங்களுக்கு என்ன அழைப்பு வந்தது?"

"அதுக்குச் சில மாதங்கள் முந்தித்தான் கால இயந்திரத்தைக் கண்டுபிடிச்சிருந்தாங்கள். அதிலை பயணம் செய்யிறதுக்குத்தான் என்னைக் கூப்பிட்டவங்கள்."

"ஏன் வேறை ஒருத்தரும் கிடைக்கையில்லையா?"

"நான் உடல் ஆரோக்கியத்தோடு இருந்தேன்."

"நீங்கள் மட்டுமா?"

"இல்லை. பலர் இருந்தார்கள். அவர்களுக்கு வெவ்வேறு பணிகள் கொடுக்கப்பட்டிருந்தன."

"அப்படியானால் நீங்கள்தான் கால இயந்திரத்தில் பயணம் செய்த முதல் ஆள்?"

"வேறை ஆக்களும் அதிலை பயணம் செய்திருக்கிறாங்கள். ஆனா அவங்கள் வரலாற்றை மாத்தையில்லை. வெறுமனே வேடிக்கை பார்த்தவர்கள். நீங்கள் ஒரு சரித்திர நாவலைப் படிக்கையில் வரலாற்றில் பின்னோக்கிப் போவீர்களல்லவா? அதுபோலத்தான் காலப்பயணமும். ஆனா முதல் தடவையாய் நான்தான் வரலாற்றை மாற்றப் புறப்பட்டவன். கணினிதான் என்னைத் தேர்ந்தெடுத்தது. பிறக்கிற ஒவ்வொருவருக்கும் ஒரு சின்னஞ்சிறிய சிப் ஒன்றை நெற்றியில் கீறித் தைத்துவிடுவார்கள். அதிலே அவருடைய எல்லா விபரமும் இருக்கும். அதனாலே அடையாள அட்டை போன்ற தொல்லைகள் இல்லை. என்னுடைய நெற்றியைப் பார்த்தீர்களா?"

சின்னஞ்சிறிய தழும்பு ஒன்று நெற்றியில் இருந்தது. பேசப்பேச கிழவன் திருத்தமான தமிழுக்கு மாறுவதை அவதானித்தேன். சொல்லவந்த விடயத்தை முழுவதுமாகக் கொட்டித் தீர்த்துவிட முயற்சித்தான். அவன் சொன்னவிடயம் இதுதான்.

கிழவனுக்கு 29 வயதாய் இருக்கும்போது உளவுப்பிரிவிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது. அவன் இருந்தது யாழ்ப்பாணத்தில், உளவுப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையம் இருந்தது சீனாவில். கிழவன் புறப்பட்டது எந்த விமானத்தில் தெரியுமா? புட்பக விமானத்தில், இராமாயணத்தில் வருகிற விமானம் அல்ல. இது அதி வேகத்தில் செல்லும் நவீனரக விமானம். அதற்கு இந்தியர்கள் இட்ட பெயர் அது.

அனைத்துலக ஜனநாயக சுதந்திரக் குடியரசுக்கு சவாலாக விளங்கியவன் ஒரு தமிழன். பெயர் வேல் மாறன். தற்போதைய தீவிரவாதிபோல. ஆனால் ஆயத்தங்கள் அற்றவன். அவனுடைய ஒரே ஆயுதம் அறிவு. கணினி வலையமைப்பைப் பலமுறை தாக்கியிருக்கிறான். அ.ஜ.சு.கு இற்கு அதனாலே பயங்கரமான பொருளிழப்பு. அவமானம். அவனையும் கண்டுபிடிக்கமுடியவில்லை. எனவேதான் கால இயந்திரப் பயணம். கால இயந்திரத்தில் பயணம் செய்து அவனுடைய முன்னோர்களில் ஒருவனை அழிப்பது. அதன்மூலம் வேல்மாறன் என்ற ஒருவனையே வரலாற்றில் இல்லாமல் செய்வது. 2006ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12ஆம் தேதியைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

ஏன் அந்தக் காலகட்டத்தைத் தேர்ந்தெடுத்தார்கள் என்று கேட்டேன்.

'வரலாற்றில் ஒரு மாற்றத்தை நிகழ்த்தும்போது வரலாற்றில் வாழ்பவர்களுக்கு அது தெரியக்கூடாது. 2006ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் போர் உக்கிரமாய் இருந்த காலகட்டம். எனவே படுகொலைகள் நிகழ்ந்த காலகட்டம். அந்தக் காலகட்டத்தில் ஒருவனை படுகொலை செய்வது எந்தச் சந்தேகத்தையும் கிளப்பாது. அந்தக் காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்துவதற்கு நிறையப் பயிற்சி கொடுத்தார்கள். ஒரே ஒரு நாள்தான் எனக்குக் கொடுத்திருந்தார்கள். அந்த நாளில் கொலை முடித்து மீண்டாக வேண்டும். முதலே நான் இறங்க வேண்டிய இடத்தை திரையில் பார்த்தேன். அந்த இடத்திலிருந்து சிவசுப்பிரமணியம் என்கிற வேல்மாறனின் முன்னோர்களில் ஒருவனின் வீட்டுக்குச் செல்வதற்கு மூன்று பாதைகள் இருந்தன. அதற்குரிய வரைபடமும் தந்திருந்தார்கள். தவிர எனக்கு விசேசமான உடை அணிவிக்கப்பட்டது. என் உடலிலிருந்து வெளிப்படும் ஒளியை அவ்வுடை உறிஞ்சிவிடுவதால் நான் எவர் கண்ணுக்கும் படமாட்டேன். நான் ஒரு நடமாடும் கருந்துளை போல. நான் இறங்கிய இடம் ஒரு பனங்காடு. அந்தப் பனங்காடு 2081இல் ஒரு கண்ணாடிக் கட்டிடமாக மாறியிருந்தது. அந்தக் கட்டிடத்தின் அடித்தளத்திலுள்ள ஒரு அறையிலிருந்து பயணம் செய்தேன். பனங்காட்டிற்குள் இறங்கும்போது மயங்கியிருந்தேன். மயக்கம் கலைந்து எழும்போது விடிந்து பலமணிநேரங்கள் ஆகிவிட்டது. அதிலிருந்து ஒருகிலோ மீற்றர் நடைப்பயணம். சிவசுப்பிரமணியம் வீட்டில் தனியாக இருந்தான். அவனுடைய மேசையில் புத்தகம் வாசித்துக்கொண்டிருந்தான். நான் அவன் பின்னே சென்று தலையில் குறி வைத்தேன். என் கைநடுக்கத்தைத் தடுக்கமுடியவில்லை. அவன் மேசையில் சரிந்தான். இரத்தம் ஒழுகி ஒழுகி அவன் புத்தகத்தை நனைத்தது.

விரைவாக மீண்டேன். கால இயந்திரத்தை இயக்கினேன். அது சிவப்பு விளக்கை அணைத்து எரித்தது. இயங்கவேயில்லை. அப்போதுதான் மெல்ல பயம் தொற்றிக்கொண்டது. ஓரமாக அமர்ந்து அழத் தொடங்கினேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை. திடீரென்று இயந்திரம் தீப்பற்றி எரியத் தொடங்கியது. மெல்ல எரிந்து எரிந்து உருகி ஓடியது. என் உடையில் வெப்பத்தை உணர்ந்தேன். என் உடையும் தீப்பற்றத் தொடங்கியது. உடைகளைக் கழற்றி வீசினேன். இப்போது முழு நிர்வாணமாக இருந்தேன். விசேச உடை இல்லாததால் இப்போது எல்லோர் கண்களுக்கும் நான் தெரிவேன். என் வாழ்க்கைக்கு இனி எவ்விதப் பாதுகாப்புமில்லை. என்னை மறைக்க ஓர் உடை வேண்டும். என் துப்பாக்கியை மறைக்கவேண்டும். பனைமரத்தில் ஏறி வட்டுக்குள் துப்பாக்கியைச் செருகி வைத்தேன். பின்னர் வெளியே வந்து என்னை மறைக்க துணியைத் தேடினேன். ஒரு வீட்டின் முன்புறத்தில் கொடியில் சில உடைகள் தொங்கின. நான் ஓடிப்போய் ஒரு சாரத்தை இழுத்தேன். அது சிக்கிக்கொண்டது. வரவேயில்லை. திடீரென்று நாய் ஒன்று பாய்ந்து வந்தது. நான் ஓடத் தொடங்கினேன். நிர்வாணமாக, ஒருவர் இருவராகி பலர் என்னைத் துரத்தத் தொடங்கினார்கள். மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடினேன். கற்கள் பறந்துவந்து என்னைத் தாக்கின. கடைசியில் என்னைப் பிடித்துவிட்டார்கள். ஊரே வேடிக்கைப் பார்த்தது. வாகனம் ஒன்றிலிருந்து இராணுவம் வந்து குதித்தது. பிறகு என்னை ஒரு முகாமுக்குக் கொண்டுசென்றார்கள். முகாம் அல்ல. வீடு போலத்தான் இருந்தது. பாடலை உரக்க ஒலிக்கவிட்டு என்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு ஆட்கள் மாறிமாறி அடித்தார்கள். நகத்தைப் பிடுங்கினார்கள். தோலை உரித்தார்கள். நான் எதுவுமே பேசவில்லை'

"உங்களுக்கு வலிக்கவேயில்லையா?"

"இல்லை. ஏனென்றால் வலி உணர்வு என் மூளைக்குப் போகாது. அப்படித்தான் என்னை உருவாக்கியிருந்தார்கள். எனவே கொஞ்ச நாட்களில் என்னை விட்டுவிட்டார்கள்."

"ஏன்?"

"பைத்தியம் என்று நினைத்திருக்கலாம். முதுகுக்குப் பின்னால் என் கைகளைக் கொண்டு சென்று கட்டி என் கால்களையும் கட்டி என்னை நிர்வாணமாகவே ஒரு வாழைத் தோட்டத்திற்குள் தூக்கி எறிந்துவிட்டுப் போனார்கள். ஒருவன் என்மீது ஒரு சாறத்தை எறிந்துவிட்டுப் போனான். ஒரு முழுநாள் எவராலும் கவனிக்கப்படாமல் கிடந்தேன். மறுநாள் தோட்டக்காரன் வந்து என் தளைகளை அறுத்துவிட்டு எங்காவது ஓடிவிடும்படி சொன்னான். அன்றிலிருந்து ஒரு பிச்சைக்காரனாய் அலைகிறேன். எவரோடும் எனக்கு உறவில்லை. அநாதை என்ற சொல்லுக்கு உண்மையான அர்த்தம் நான்தான். என் உலகில் எனக்கொரு காதலி இருந்தாள். இனி அவளை நான் பார்க்கவே முடியாது. இது என் வாழ்நாள் துயரம். எப்போது என் மரணம் என்றுகூட எனக்குத் தெரியாது. ஆனால் மற்றவர்களின் பூரண வாழ்க்கையும் அறிவேன்."

"எப்படி?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் மூளைக்குள் நுண்ணிய சிப் ஒன்று செலுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் வரலாற்றின் எல்லாப் பக்கங்களையும் நான் அறிவேன்."

"அதுசரி. ஏன் அந்தகால இயந்திரம் வேலை செய்யவில்லை?

"என் மூளைக்குள் பல நாட்களாகவே ஓடிக்கொண்டிருந்த கேள்வி அதுதான். பின்னர்தான் அதற்கான காரணத்தைக் கண்டறிந்தேன். ஒன்றுமில்லை. சின்ன தர்க்கம்தான். வரலாற்றில் ஒவ்வொரு கண்டுபிடிப்புகளுக்கும் பின்னாலே பல்வேறு நிகழ்வுகள் உருவாகி வந்திருக்கவேண்டும். நீங்கள் உருவாகும் நிகழ்ச்சி உங்களுடைய ஆதி மூதாதையரின் ஏதோ ஒரு புள்ளியிலிருந்துதான் தொடங்கவேண்டும். அந்த வரலாற்றுத் தொடர்ச்சியில் ஒரு நிகழ்வு நடக்காவிடின் உங்களுடைய தோற்றமே இல்லை. கால இயந்திரம் உருவாவதற்கும் அதே விதிதான். சிவசுப்பிரமணியத்தைக் கொலை செய்ததன் மூலம் வரலாற்றில் ஒரு நிகழ்வை இல்லாமல் செய்திருக்கிறேன். எனவே காலஇயந்திரம் உருவாவதற்கான சாத்தியக்கூறை நான் அழித்துவிட்டேன். வரலாறு பெரிய மரம்போல. அதில் ஒரு கிளையை வெட்டிவிட்டேன். அக்கிளையில் எதிர்காலத்தில் உருவாகவிருந்தது ஒரு கனி. அந்தக் கனியும் இல்லாது போயிற்று."

"அப்படியானால் இதை அவர்கள் யோசிக்கவில்லையா?"

"எவ்வளவு அறிந்தாலும் நாம் மூடர்கள் என்பதற்கு இதுதான் சாட்சி. உலகில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எல்லாம் வரலாற்றில் தவறி வீழ்ந்தவர்கள்தான். என்னைப்போல."

கிழவன் எழுந்து போனான். கிழவன் சொன்னதை என்னால் நம்பவும் முடியவில்லை; நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அப்படியானால் நான் வாழ்வது என்னுடைய இரண்டாவது வாழ்க்கையயா? என் முழு வாழ்க்கையும் கிழவன் அறிந்திருப்பானில்லையா? தவறவிட்டுவிட்டேனே! கிழவன் சொன்னது உண்மையானால் வரலாறு மாற்றி எழுதப்படுகிறது. அப்படியானால் கிழவன் அறியாத வரலாற்று நிகழ்ச்சிகளும் நிகழலாம். பனைவட்டுக்குள் வைத்த துவக்கின் கதை என்னவாயிற்று? ஒளியை உறிஞ்சும் உடையென்றால் அபாரமான ஈர்ப்பாற்றல் அந்த உடைக்கு இருக்கவேண்டும். அப்படியானால் துவக்கிலிருந்து குண்டு எப்படி வெளியேறியது? அந்த விசேச உடையின் ஈர்ப்பாற்றல் அவனது உடலைப் பாதிக்கவில்லையா? கால இயந்திரம் ஏன் நெருப்பில் எரியவேண்டும்? பல கேள்விகள்.

மறுநாள் சிவகரனிடம் நடந்த விசயத்தைச் சொன்னேன்.

"டேய், நீ ஒரு முட்டாள் எண்டுறதை திரும்பத் திரும்ப நிரூபிச்சுக்கொண்டிருக்கிறாய். கால இயந்திரமும் கத்தரிக்காயும்."

"அப்படியெண்டா நான் மட்டும் அறிஞ்ச என்ரை வாழ்க்கைச் சம்பவங்களை அவன் எப்பிடி அறிஞ்சான்?"

"நீ தண்ணியடிச்சிட்டு என்னிட்டையே இதைப் பற்றி எத்தினை தரம் சொல்லியிருக்கிறாய் தெரியுமா?

"நாள், நேரம் எல்லாம் சொன்னானேடா?"

"அவன் சொன்ன நாள் நேரம் சரியெண்டு உனக்குத் தெரியுமா? உனக்குத் துல்லியமாய் எப்ப நடந்ததெண்டு தெரியாதெண்டு அவனுக்குத் தெரியும். உன்னர தலையிலை நல்லா மிளகாய் அரைச்சிருக்கிறான்."

"அவன்ரை நெத்தியிலை தழும்பொண்டு இருந்ததே?"

"உன்ரை நெத்தியிலை கூட தழும்பிருக்கு சின்ன வயசிலை மண்டை உடைஞ்சு. அப்ப அதுக்கை என்ன கொம்பியூட்டர் சிப் இருக்கா? சரி. இவ்வளவையும் சொல்கிறாய். அவனுக்கு அடிச்சா வலிக்காதெண்டு சொன்னவனல்லோ? பூவரசங் கட்டை எடுத்து ரண்டு சாத்துச் சாத்தியிருக்கலாமல்லோ?"

"வயசு போன மனிசனை என்னெண்டடா அடிக்கிறது?

"சரி, விடு. சாப்பாடு போட்டது புண்ணியமண்டு நினைச்சுக்கொண்டிரு."

"இல்லையடா. சாப்பிட்டு முடிச்சிட்டு வெளிக்கிடையுக்கை செலவுக்கு காசில்லையெண்டு ஐந்நூறு ரூபா கேட்டான்."

"எட, குறுக்காலைபோவானே! குடுத்தனியா?"

"இல்லையடா?"

"அதுதானே பாத்தேன்."

"அதில்லையடா. அப்ப ஆயிரம் ரூபா தாள்தான் கிடந்தது. கிழவனைப் பாக்கப் பாவமாய்க் கிடந்து."

சிவகரன் என்னை முறைத்தான். கொஞ்சம் என்னை அர்ச்சனை செய்தான். நான் இறுதியாகத் தெளிவான குரலில் சொன்னேன்.

"கிழவன் சொன்னது உண்மையென்றால் அவன் எவ்வளவு பரிதாபத்துக்குரியவன்? ஒதுங்க ஒரு வீடு இல்லை. நெருங்க ஒரு துணை இல்லை. ஒருவேளை கிழவன் சொன்னது உண்மையில்லை என்றால் அவன் ஒரு மாபெரும் கலைஞன். இப்படி ஒரு கற்பனைத்திறன் உள்ள ஒருவன் பிச்சைக்காரனாக அலைகிறானென்றால் அது மகத்தான துயரமல்லவா. இதையே ஒருவன் சினிமாப் படமாக எடுத்தால் விருது கொடுத்துக் கொண்டாடுவீர்கள் இல்லையா? அவன் பிச்சைக்காரனாக அலைவதற்கான உண்மையான காரணத்தை யோசித்து என் மண்டையே வெடிக்கிறது. ஒரு கலைஞனுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பது ஒன்றும் இழிவல்ல." சிவகரன் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் போய்விட்டான்.

அந்தக் கிழவனை இன்னொருமுறை பார்த்தால் தெளிவாக விசாரிக்கவேண்டும் என்று முடிவெடுத்தேன்.

ஆனால் அதன் பிறகு கிழவன் வரவேயில்லை.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டம்பர் 2021 காக்கை இதழின் கட்டுரைகள்மீது

# அறிவுறுவோனின் குட்டுரைகளும் சுட்டுரைகளும்

**தோ**ழர் அறிவுறுவோன் அவர்கள், சமரசமில்லாத களப்போராளி; தஞ்சை மண்ணில் மண்ணுக்கேற்ற மார்க்சியத்தை விதைக்க அரும்பாடுபட்ட இடதுசாரித் தலைவர்களில் ஒருவர்; தனது இளமை வாழ்க்கை முழுவதையும் போராட்டக் களத்திலேயே செலவழித்த தீரர்; ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தும் எளிமையையே தனது வாழ்வின் அடையாளமாக்கிக் கொண்டவர்; எதையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவதில் உறுதியானவர்; நெஞ்சுக்கு நேராய் நீண்ட ஆயுதங்களைக்கூட இடதுகையால் புறந்தள்ளிவிட்டு களத்திலேயே கருத்தூன்றி நின்று போராடிய நெஞ்சுறுதிக்காரர்; நண்பர் குழாமில் மட்டுமல்லாது காக்கை குழுமத்தின் பெருமதிப்பிற்குரிய மூத்த தோழர்களில் ஒருவர். காக்கைக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் தோழர் அறிவுறுவோன் எழுதியுள்ள கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் நம்மிடமும் கருத்துகளும் விமர்சனமும் இருக்கவே செய்கின்றன. ஆனால் அந்த வெளிப்பாடு சரியானதல்ல என்பதனால், ஒளிவுமறைவு இல்லாமல் தோழர் அறிவுறுவோன் வீசியுள்ள விமர்சனங்களை அப்படியே வாசகர்கள் பார்வைக்கு வைக்கிறோம். ஆனாலும் தோழர் அறிவுறுவோன் அவர்களிடம் கேட்க ஒரு கேள்வி உண்டு. 'இப்படியெல்லாம் எழுதுவதன் மூலம் நீங்கள் எந்தக் கருத்தியலுக்கு முட்டுக் கொடுக்கிறீர்கள்?'

*பொறுப்பாசிரியர்*

## மடல் திறப்பு

*03.09.2021*

***அ***ன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். நலம். நலமே விழைகிறேன். காக்கை வளர்க. வானப்பரப்பை ஆட்படுத்துக. நிற்க.

"கடவுள் யாருக்கானவர்?" ஆசிரியவுரை படித்தேன். கடவுளைப்பற்றிய வரலாறு அதில் துளிகூடஇல்லை. தொல்காப்பியக் கொற்றவை பிற்காலத்தில் வழிபாட்டிற்குரிய கடவுளாக்கப்பட்டாள்.

"மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே!"

கொற்றவை ரத்தமும் தசையும் பொருந்திய குழுத்தலைவி என்பதற்கு வேறென்ன சான்று வேண்டும்! உரையாசிரியர்கள் கொண்டுகூட்டி உரையெழுதியுள்ளனர். கொற்றவை ஏன் கடவுளாக்கப்பட்டாள்? பெண்ணாளுமைக் குழுகம் வீழ்ந்தபின் மக்களைத் திருப்திப்படுத்த ஆணாளுமைக் குழுகம் கண்டுபிடித்த வழியே கொற்றவை கடவுளானது.

"குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும்" என்பதைத் "துடிநிலை சிறந்த கொற்றவை நிலையும்" என உரையாசிரியர்கள்தங்கள் தோதுவிற்கேற்றவாறு மாற்றிக்கொண்ட தால்தான் கொற்றவையைக் கடவுளாக்கிக் காட்ட முடிந்தது. இதில் வரலாறு தொடர்புபட்டு உள்ளது. இது தனிமாந்த முயற்சி அன்று. இவ்வாறு கொற்றவை, வரலாற்றில் முதல் கடவுளானாள். பின்னர் காடுகிழாளாக்கப்பட்டுவிட்டாள். இதுதான் கடவுள் உருவான வரலாறு. மேலும் கொற்றவையை 'நுதல் கிழித்த விழியாள்' என்னும் சிலம்பு கொற்றவை பூண்டவையே சிவனுக்கும் பொருந்துவதால் அவன் கொற்றவை மகன்" ஆனான்.

அடுத்து, சேயோன் முக்கண் கடவுள். முருகன் முக்கண் கடவுள்; பின்பு சிவன் முக்கண் கடவுள். அவனுக்கு மலைமகள் துணைவியாக்கப்பட்டாள். இவை இயங்கியலோடு தொடர்புடையவை. பரிபாடல் வரை இதைக் காணலாம். பரிபாட்டில்கூட சிவனைக் காணவில்லை. பின்னால் உருவாக்கப்பட்டவன் சிவன். நிலவுடைமையில் வந்த மாறுதல்களுக்கு ஏற்ப கடவுள் வரிசையும் வளர்ந்து அமைந்தது. இதுதான் கடவுள் இயங்கியல் வரலாற்றுப் பார்வையிலான கட்டங்கள்.

இயங்கியலைப் பெரியார் ஏற்றுக்கொண்டவர் இல்லை. அவர் இயக்க மறுப்பியலாளர். ஆகவே அவருக்குக் கடவுளைக் கற்பித்தவன் முட்டாளாகப் படுகிறான். பரப்பியவன் அயோக்கியனாகப்படுகிறான்; வணங்குகிறவன் காட்டுமிராண்டியாகப்படுகிறான். "கடவுள் இதயமற்றவனின் இதயம்; ஒடுக்கப்பட்டவனின் பெருமூச்சு" என்றார் தோழர் காரல்மார்க்சு. அதை மனங்கொண்டு சு.சமுத்திரம் எழுதிய 'வளத்தம்மா' சிறுகதை ஒடுக்கப்பட்டவளின் பெருமூச்சைக் கடவுளின் வாயிலில் வளத்தம்மா அமைதியாக முடித்துக்கொள்ளும் அழகைக் காணலாம். இதயமற்றவன் கடவுளுக்கு உண்டியலில் கையூட்டுக் கொடுத்து அமைதிபெறுகிறான். ஒடுக்கப்பட்டவன் தனது பெருமூச்சையே கடவுளுக்குப் படையலாக்கி அமைதி அடைகிறான். வணங்குபவன் காட்டுமிராண்டி பொருந்துமா? கருதிப்பாருங்கள்.

உடமைகள் பொதுவாக்கப்படும் வரை இதே நிலைமைதான் நீடிக்கும். பெரியார் உடமைகள் பொதுவானால் கீழ்மேல் எல்லாம் ஒரே தரமாகும் என்பதை ஒப்பாத உடைமைக் கருத்தாளர். அதனால் தான் பிராமணர் – பிராமணரல்லாதார் போராட்டத்தை முன்னெடுத்துத் தமிழ்நாட்டில் வர்க்கப் போராட்டத்தைச் சிதைத்தார்.

அனைவரும் அர்ச்சகராகும் திட்டம் கேரளத்தில் நடைமுறையாவானேன். தமிழகத்தில் தேக்கமுற்று நிற்பானேன்? இதுவெல்லாம் உண்மை. வரலாறு. வரலாற்றைத் திருத்தும் வக்கிரப் பார்வை பெரியாருடையது. அதைப் புரிந்துகொள்ள கொஞ்சம் முயற்சிசெய்வது நல்லது.

இலண்டனில் அமைய இருக்கும் தமிழ் அருங்காட்சியகம்! இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே!

*05-09-2021* இரவு

"பகத்சிங்குக்கு இழைக்கப்பட்ட சட்ட அநீதிகள்" முகமத் ஸுஹைப் அவர்களது கட்டுரையின் மொழிபெயர்ப்பு என்னை உலுக்கிவிட்டது. கண்ணீர்த் துளிகள் சில என்னை அறியாமல் வெளியேறின. உடல்நலமற்று இருக்கும் இந்நிலையிலும் ஆளும் வர்க்கம் சோரம்போன நிலையைப் புரிந்துகொள்ள முடிந்தது. வலிமையான இந்தியா இப்போதும் நொய்மையுற்று இருப்பதையே இக்கட்டுரையைப் படித்தபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரமுடிகிறது. காக்கை இக்கட்டுரையைக் கொண்டுவந்ததை நன்றியுடன் ஏற்கிறேன்.

பேரா. கி. நாச்சிமுத்து ஐயா அவர்களது 74ஆம் அகவைக்கான இணைய வழியிலான பிறந்தநாள் கூடுகை கட்டுரை மகிழ்வளித்தது. ஐயா அவர்கள் நீண்டகாலம் வாழ வாழ்த்துகிறேன். முன்புபோல் விரைவாகப் படிக்க முடியவில்லை, என்றாலும் காக்கையை முழுமையாகப் படித்துவிடுவேன்.

*06. 09. 2021*

இளங்குமரனாரைப் பற்றிய கட்டுரையில் 1908–லேயே திராவிடர் கழகம் இருந்தது எனும் உண்மையை இளங்குமரனார் வெளிப்படுத்தினார் என புலவர் செந்தலை கௌதமன் கூறியிருப்பது சரி. ஆனால் பெரியாரின் திராவிடம் தமிழுக்கு எதிரானது. அப்போது மாநிலப் பிரிவினை நடைபெற்றிராத காலம். பெரியார் நீதிக்கட்சியை 1938இல்தான் திராவிடர் கழகமாக மாற்றுகிறார். பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே! எத்துணை உண்மையானது! தி.க.வில் முன்னது தமிழுக்கு ஆதரவானது; பின்னது தமிழுக்கு எதிரானது.

பெரியாருக்குத் தமிழ்ப்பற்று இருந்ததில்லை. அடுப்படிவரை ஆங்கிலம் வேண்டும் என்றவர். பெரியாரையும் திராவிடர் கழகத்தையும் தேவையில்லாமல் திணிப்பது தமிழ் அழிப்பிற்கான முதற்பணியாகும். தமிழனுக்குத் தாய்மொழி தமிழ். திராவிடனுக்கு எது தாய்மொழி? ஆங்கிலம் தந்தைமொழி; தெலுங்கு தாய்மொழி போலும்! இளங்குமரனார் எப்போதும் தம்மை திராவிடராகக் கருதியதில்லை. 1968 முதல் இளங்குமரனாரை நான் அறிவேன். கதை கட்டுவதில் எல்லையாவது இருக்கவேண்டும். தமிழை அழிக்கும் புலவர் கூட்டத்தில் செந்தலை கௌதமனும் ஒருவர். அவ்வளவுதான்.

தில்லியில் பயிராளிகள் போராட்டம். மோடியை அசைத்தாலும் அசைக்காவிட்டாலும் பயிராளிகளது ஒற்றுமையை உயர்த்திப் பிடிக்கிறது. அடுத்த கட்டம் பா.ச.க. ஆட்சியைத் தூக்கியடிப்பதற்கான வலுவைப் பெறும்! உயிரிழந்த 600 பயிராளிகளுக்கும் எனது செவ்வணக்கம்!

நெடுவழி நினைவுகள்' பேரா.க்களின் மயிர்பிளக்கும் விவாதத்தில் கவனிக்கப்படாது விடப்பட்டது. 'ஒருத்தனுக்கு ஒருத்தி' என்பது குறிஞ்சிக்கே உரிய விழுமியம் என்பதாகும். இந்த விழுமியம் தமிழ்க்கு முகத்திற்கான பண்பாட்டின் சிறப்பு நிலை. அது மீண்டும் வரவேண்டும் என்பதுதான் தமிழிலக்கியங்கள் அதைப் பேசுபொருளாக்கும்போது உள்ள நோக்கமாகும். அதைப் பற்றிய புரிதல் பேரா.க்களுக்கு இல்லாமற்போனது. தமிழ்மக்களுக்குப் பேரிழப்பாகும். பேரா.க்கள் வயிறு வளர்ப்போராகிவிட்டனர் எனத் தோன்றுகிறது.

*08.09.2021*

பேரா. இராமசுப்பிரமணியனின் கட்டுரையை நான் படிக்கவில்லை என்றாலும் பா.செயப்பிரகாசம் அவர்களது மடல் வழியறிந்த 'வாயில் வேண்டலும் வாயில் மறுத்தலும்' என்ற புள்ளியில் தொடங்கும் தமிழர் வாழ்வியலில் பரத்தையர்" என்னும் வரி சரியில்லை. "அணங்கறை பயனும் ஊடல் உள்ளதுவே. அதனால் அகறல் அறியா அணியிழை நல்லார் இகல்தலைக் கொண்டு துணிக்கும் தவறிலா இத் தள்ளரப் பொருள் இயல்பின் தண்டமிழ் ஆய்வந்திலார் கொள்ளார் இக்குன்று பயன்" என்பது செவ்வேள் என்னும் பரிபாடலின் புள்ளி 'காதற்காமம் காமத்துச் சிறந்தது என்பதுவே.

*08.09.2021*

பிறப்பைச் சந்தேகித்து குட்டியைக் கொன்ற சிம்பன்சிகள்' அழகான சிறந்த சிறுகட்டுரை.

க. சீ. இராசகோபாலன் அவர்களது கடிதம் அருமையானது. தமிழ்வழிக்கான ஊற்று..

- இ. அதியுறுவேலன்

**கா**க்கைச் சிறகினிலே ஆக்ஸ்டு மாத இதழில் "எழுத்து, சொல், பொருள்" கட்டுரையில் ஆறாவயல் பெரியய்யா கவிதைக்கு குமுதம் இதழ், ஏர் இந்தியா இணைந்து வழங்கிய விருது பற்றியும் அதன் தேர்வு குறித்தும் வேணுமாதவன் எழுதி இருந்தார்.

ஆறாவயலின் 'தாராவிச்சித்திரம்" கவிதை நூலுக்கு அணிந்துரை வழங்கிய கவிஞர் இன்குலாப் இதைப் பற்றி விவரமாக எழுதி இருக்கிறார். இதெல்லாம் எல்லோரும் அறிந்த செய்திதான். அறியாத செய்தி கவிஞர் இன்குலாப் மும்பை வந்திருந்தார். மராட்டிய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் துவக்க விழாவுக்காக வந்திருந்தார், அப்போது அவர் பார்க்க விரும்பிய இடங்கள் இரண்டு, ஒன்று தாராவி, இன்னொன்று புரட்சியாளர் அம்பேத்கரின் நினைவிடம். குமுதம் இதழ் கவிதைப் போட்டியில் ஆறாவயலின் "தாராவிச்சித்திரம்" கவிதையைத் தேர்வு செய்தேன். எனக்கு தாராவியை நேரில் சென்று பார்க்க வேண்டும் என்றார் இன்குலாப். நானும் மறைந்த அண்ணன் சமீராமீரானும் அவரை இந்த இரு இடங்களுக்கும் அழைத்துச் சென்றோம்.

மும்பைக்குப் பலரை அழைத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் எல்லாம் புகழ்பெற்ற கட்டிடங்கள் கோவில்கள் கடைவீதிகளுக்கு அழைத்துச் செல்லும்படி சொல்வார்கள். கவிஞர் இன்குலாப் மட்டும் தான் "தாராவி"க்கு என்னை அழைத்துச் செல்லுங்கள் " என்று சொல்லி என்னை வியப்பில் ஆழ்த்தினார். தாராவியில் நான்கு தலைமுறையாக வாழ்ந்த நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்ட தருணமது. வேணுகோபாலுக்கு நன்றியும் வாழ்த்துகளும்.

-புதியமாதவி, மும்பை

**ச**மஸ்கிருதம் மொழியல்ல ஒலிதான் என்று சொல்பவர்கள் சொல்லிக்கொண்டிருக்கட்டும். நம் காதுகளுக்கு ஒவ்வாத ஒலிகளை ஒலிமாசு என்று ஒதுக்கி வைப்பபோம். ஒலி மாசு சுற்றுச்சூழலை கெடுப்பதோடு மனித உடல்நலத்தையும் கெடுக்குமென்பது எல்லோரும் அறிந்ததே.

'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்' எனும் தமிழக அரசின் ஆணை, ஈடு இணையற்ற மானுட மறுமலர்ச்சி என்று பாராட்டலாம். அவனவன் தன் மனதுக்குப் பிடித்த தெய்வத்தைத் தனக்குப் பிடித்த வழிமுறையில் வழிபட்டுப் போனால் என்ன? இறைவழிபாட்டில் இடைத்தரகர்கள் இல்லாத நிலைவேண்டும்.

'கடவுள் யாருக்கானவர்?' தலையங்கம் அருமை. சா'தீ' சிறுகதை இன்னும் நன்றாக எழுத முடிந்திருக்குமே என்று தோன்றுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த உண்மைச் சம்பவம்தான் இந்தச் சிறுகதை. ஆனால் உண்மையைத் தொட்டும் தொடாமலும் எழுதப்பட்டிருக்கிறது. பட்டும் படாமலும் கதைச் சொல்லப்பட்டிருக்கிறது. வெற்றி பெறுபவர் சின்னச் சாமியோ பெரிய சாமியோ வெற்றியின் பின்புல உழைப்பு பரதவ இளைஞர்களுடையது என்பது அந்தச் சாமிகளுக்கு நன்றாகவே தெரியும்.

-ஜே.ஜெ.ஃபர்னாண்டஸ்,
பாளையங்கோட்டை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.முருகேசபாண்டியன்
murugesapandian2011@gmail.com

# மறுவாசிப்பில் பாரதியாரின் கல்வியியல் சிந்தனைகள்



வயிற்றிற்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

இன்றைய உலகமயமாக்கல் காலகட்டத்தில் எல்லாம் சந்தைக்கானதாக மாற்றப்பட்டு, நுகர்பொருள் பண்பாடு மேலாதிக்கம் செலுத்துகிறது. மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வியும் மருத்துவமும் கார்ப்பரேட்டுகளின் வரம்பினுக்குள் கொண்டுவரும் முயற்சிகள் துரிதமாக நடைபெறுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் எண்பதுகளின் இறுதியில் கல்விப்புலத்திற்குள் நுழைந்த தனியார்மயம், இன்று பிரமாண்டமாக வளர்ச்சியடைந்துள்ளது. கல்வி நிலையங்கள் மூலம் கல்வியைப் போதித்தல், கல்வி கற்றல் போன்றவை சமூகத்தின் ஆன்ம வளர்ச்சியுடன் தொடர்புடையவை என்ற கருத்தியல், முழுக்கப் புறக்கணிக்கப்படுகிற நிலை ஏற்பட்டுள்ளது. கல்வி என்பது சேவை என்ற அம்சம் புறக்கணிக்கப்பட்டு, கல்வி மாபியாக்களின் பொருளாதார ஆதாயத்திற்குள் சிக்கியுள்ளன. கல்வியை முன்வைத்துக் கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கிற கும்பல்கள், நாடெங்கும் பெருகியுள்ள சூழலில், பாரதியாரின் கல்வி பற்றிய மதிப்பீடுகளையும் சிந்தனைப் போக்குகளையும் ஒப்பீட்டுநிலையில் மறுவாசிப்புக்குள்ளாக்கிட வேண்டியுள்ளது. தமிழகத்தில் நூறாண்டுகளுக்கு முன்னர் நிலவிய கல்விச் சூழலில் பாரதியாரின் கல்வி பற்றிய சிந்தனைகள், முற்போக்கானவை. அவை, அன்றைய தமிழரின் சமூக இருப்பையும் சமூகம் மாற்றமடைய வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தியுள்ளன. கல்வியின்மூலம் "ஏழைகளுக்கு உதவி புரிதல், கீழ் ஜாதியாரை உயர்த்தி விடுதல் முதலியனவே ஜன சமூகக் கடமைகளின் மேம்பட்டன என்பதைக் கற்பிக்க வேண்டும்" என்ற நோக்கம் பாரதியாருக்கு இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கல்வியின் அவசியம் குறித்துப் பாடல்களிலும் கட்டுரைகளிலும் விரிவாகப் படைத்த படைப்பாளிகளில், பாரதியாருடன் ஒப்பீட்டுச் சொல்ல யாருமில்லை.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க ஆட்சியில் சிக்கியிருந்த இந்தியாவை மீட்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை இயக்கத்தினர், சமூக சீர்திருத்தச் செயல்களிலும் ஈடுபட்டனர்; அன்றைய காலகட்டத்தில் பெரும்பான்மையான மக்கள் எழுதப் படிக்க அறியாதவர்களாக இருந்த சூழலை மாற்றியமைத்திட முயன்றனர். ஆங்கிலேயரின் காலனியாதிக்க ஆட்சியில், தமிழகத்தில் ஏற்கனவே நிலவிய கல்வி முறை, கிராமத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்களைச் சார்ந்திருந்தது. அந்தக் காலகட்டத்தில் ஆங்கிலேயரின் புதிய கல்விமுறை அறிமுகமானது. குறிப்பாக 1857 இல் தொடங்கப்பட்ட சென்னைப் பல்கலைக்கழகம், புதிய வகைப்பட்ட கல்வி கற்றலைப் பரவலாக்கியது. எனினும் வைதிக சநாதனத்தின் ஆதிக்கம் காரணமாக உயர்சாதியினராகக் கருதப்பட்ட பார்ப்பனர், பிள்ளைமார் போன்ற சாதியினர் மட்டும்தான் ஆங்கிலக் கல்வி கற்று ஆங்கிலேய அரசில் உயர் பதவிகள் வகித்தனர். விளிம்புநிலையினரின் குழந்தைகள், தந்தையாரின் குலத்தொழிலைக் கற்றிடும் சூழல் நிலவியது. பெண்களுக்கும் தலித்துகளுக்கும் கல்வி கற்றிடும் வாய்ப்பு மிகவும் குறைவு. இந்நிலையில் இந்தியர்களுக்கான கல்வி முறையை முன்வைத்துப் பேச்சுக்களை உருவாக்கிட முயன்றவர்களில் காந்தியடிகள், ரவீந்திரநாத் தாகூர், விவேகானந்தர், பாரதியார் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். பாரதியார், தன்னுடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் கல்வி பற்றிய கருத்துக்களை அழுத்தமாகப் பதிவாக்கியுள்ளார். குறிப்பாகப் பாரதியார், தேசியக் கல்வி- 1, தேசியக் கல்வி- 2 ஆகிய இரு கட்டுரைகளில் கல்வி பற்றிய விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் போன்றனவற்றை விவரித்துள்ளார். அந்தக் கட்டுரைகள் பாரதியாருடைய கல்வியியல் சிந்தனைக்கு அடித்தளமாக விளங்குகின்றன. "தேசத்தின் வாழ்வுக்கும் மேன்மைக்கும் தேசீயக் கல்வி இன்றியமையாதது. தேசீயக் கல்வி கற்றுக்கொடுக்காத தேசத்தை தேசமென்று சொல்லுதல் தகாது. அது மனிதப் பிசாசுகள் கூடி வாழும் விஸ்தாரமான சுடுகாடேயாம். இந்த விஷயத்தை ரவீந்திரநாத் தாகூர், ஆனி பெஸண்ட், நீதிபதி மணி அய்யர் முதலிய ஞானிகள் அங்கீகரித்து, நம்நாட்டில் தேசீயக் கல்வியைப் பரப்புவதற்குரிய தீவிரமான முயற்சிகள் செய்கின்றனர். ஆதலால் இதில் சிறிதேனும் அசிரத்தை பாராட்டாமல், நமது தேச முழுதும், ஒவ்வொரு கிராமத்திலும் மேற்கூறியபடி பாடசாலைகள் வைக்க முயலுதல் நம்முடைய ஜனங்களின் முதற்கடமையாகும்" என்ற பாரதியாரின் கல்வி ஆர்வம் முக்கியமானது.

பாரதியாரின் கல்வி, தாய்மொழிக் கல்வி, தமிழ் மொழி பற்றிய கருத்துகளை அறிந்துகொள்வதற்கு முன்னர் காலனியாதிக்கக் காலகட்டத்தில் வைதிக சநாதனத்தின் செயல்பாடுகளை அவதானிக்க வேண்டியது அவசியம். 1886 ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது காங்கிரஸ் மாநாட்டுத் தீர்மானங்கள் குறித்து அந்த மாநாட்டில் நேரடியாகப் பங்கேற்ற சே. ப. நரசிம்மலு நாயுடு எழுதியுள்ளவை 'ஆரியர் திவ்விய தேச யாத்திரையின் தேசம்' (1913) என்ற புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஏழாவது தீர்மானம் முக்கியமானது. அது பின்வருமாறு: "கவர்ன்மெண்டு பரிக்ஷையில் சம்ஸ்கிருதமும், அரபி பாஷையும் கலந்து இந்த இந்து தேசத்திலேயே, சீமையிலிருப்பது போலவே ஏரேகாலத்தில் பரிக்ஷை நடத்தித் தேறினவர்களுக்குப் பெரிய உத்தியோகங்களைக் கொடுக்க வேண்டுமென்றும், அந்தப் பரிக்ஷைக்கு 19 முதல் 23 வரைக்கும் வயதை உயர்த்த வேண்டுமென்றும் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் பாபு நரேந்தரநாத் பானர்ஜி அவர்கள் பிரேரேபிக்க ஆனரெபில் சுப்பிரமணியம் ஐயர் அவர்கள் ஆமோதிக்க சர்வசம்மதமாக அங்கீகரிக்கப்பட்டது". இந்தத் தீர்மானத்தை ஆமோதித்த சுப்பிரமனிய ஐயர், தமிழ்நாட்டில் இருந்து சென்று காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார்.

ஆயிரமாண்டுகளுக்கும் கூடுதலாகத் தமிழகத்தில் மன்னராட்சிக் காலத்தில் சம்ஸ்கிருத மொழியிலான வேதம் ஓதுதல் பார்ப்பனரின் குலத்தொழில் என விதி வகுத்த மநு தரும சாஸ்திரம்மூலம், சாதிய அடுக்கில் உச்சத்தில் இருந்த பார்ப்பனர்கள், இந்தியாவில் ஆங்கிலேயக் காலனிய அரசாங்கம் ஏற்பட்டவுடன், அரசு இயந்திரத்தில் உயர்பதவி வகித்திட மீண்டும் சம்ஸ்கிருதத்தை முன்னிறுத்திய செயல், ஆதிக்க அரசியலாகும்; பொருளாதாரீதியில் எப்பொழுதும் வளமுடன் இருந்திடச் செய்த தந்திரமாகும். சமூக அடுக்கின் உச்சியில் தங்களுடைய இடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளத் தீர்மானித்த பார்ப்பனர்களின் முயற்சிதான், சம்ஸ்கிருத மொழியில் அரசாங்க உயர் அலுவலர் தேர்வுகளை நடத்திட வேண்டுமெனத்தீர்மானத்தைக் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றி, இங்கிலாந்து மகாராணியாருக்கு அனுப்பியதன் அடிப்படையாகும். இந்தியாவில் மக்களிடையே வழக்கினில் இருக்கிற தமிழ், வங்காளம், தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம் போன்றமொழிகளைப் புறந்தள்ளிவிட்டு, வழக்கொழிந்த சம்ஸ்கிருத மொழியில் காலனிய அரசின் தேர்வுகள் நடத்திட 1886 ஆம் ஆண்டில் தீர்மானம் இயற்றியது நுண்ணரசியல். வழக்கொழிந்த சம்ஸ்கிருதம் என்ற மொழியை வைத்துக்கொண்டு இரண்டாயிரமாண்டுகளாக இந்தியாவெங்கும் செய்துவருகிற ஆதிக்க அரசியலின் தொடர்ச்சிதான், அண்மையில் வெளியான ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையில் வெளிப்பட்டுள்ளது.

பாரதியார், தேசமானது குடும்பங்களின் தொகுதி என்றும், குடும்ப உறவில் ஒத்துப்போகாத கணவனும் மனைவியும் பிரிந்து வாழும்போது குடும்ப அமைப்பு சிதலமடைவதால், தேசியக் கல்விக்கு இடமில்லை என்கிறார். ஐரோப்பியர்கள், இஸ்லாமியர்களின் சட்டங்களில் மணமுறிவுக்கு அனுமதி இருப்பதை அறிந்தபோதும், முன்னோரால் நிறுவப்பட்ட குடும்ப அமைப்பைப் போற்றுகிற நிலையில் தேசியக் கல்விக்கும் குடும்பத்திற்கும் இடையில் வலுவான தொடர்பை நிறுவிட பாரதியார் முயன்றுள்ளார்.

பாரதியாரின் தேசியக் கல்வி, தேச பாஷை, தமிழ் மொழி, வடமொழி எனப்படும் சமஸ்கிருதம், ஆங்கில மொழி பற்றிய விவரணைகள் முக்கியமானவை. ஆர்ய பாஷையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சம்ஸ்கிருதத்தைத் தேசிய மொழியாக அறிவிக்க வேண்டுமானால், தமிழ்நாட்டில் தமிழ் மொழியின்மூலம் கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, இந்தியா முழுவதும் சம்ஸ்கிருதம் பரவிட வேண்டுமெனப் பாரதியார் விரும்புகிறார். "தமிழ்நாட்டில் தேசீயக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையை ப்ரதானமாக நாட்டாமல், பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உப பாஷையாகவும் ஏற்படுத்தினால், அது 'தேசீயம்' என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசீயக் கல்வியின் ஆதாரக் கொள்கை; இதை மறந்துவிடக் கூடாது. தேசபாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ்நாட்டிலிருந்து பரிபூர்ண ஸஹாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டமடித்து அறைவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ் ப்ரதானம் என்று நான் சொல்லுவதால், டாக்டர் நாயரைத் தலைமையாகக்கொண்ட திராவிடக் கக்ஷியார் என்ற போலிப்பெயர் புனைந்த தேசவிரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்ய பாஷை விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது. தமிழ்நாட்டிலே தமிழ் சிறந்திடுக.பாரததேசமுழுதிலும்எப்போதும்போலவே வடமொழி வாழ்க. இன்னும் நாம் பாரததேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூர்ணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக. எனினும், தமிழ் நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக." 1886 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஏழாவது தீர்மானம், பாரதியாரால் தேசியக் கல்வி என்ற பெயரில் மீண்டும் முன்மொழியப்பட்டுள்ளது. பாரதியார், தமிழ்நாட்டில் தமிழ் மொழி முதன்மையானது என்று குறிப்பிடும்போது, டாக்டர் நாயரின் தலைமையிலான திராவிடக் கட்சி, தேச விரோதி போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். ஆங்கிலேய அரசு நடத்தும் பள்ளிகளில் ஆங்கிலம் மூலம் கல்வி கற்றுக்கொண்டிருந்த உயர் சாதியினரை நோக்கி, இந்திய அளவில் சமஸ்கிருதம் போலத் தமிழ்நாட்டில் தமிழ் மொழி முக்கியமானது என்ற பாரதியாரின் கெஞ்சிடும் கூற்று, அன்றைய காலகட்டத்தில் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் தமிழ், இந்தியா முழுவதும் ஆர்ய பாஷையாகிய சமஸ்கிருதம் என்ற பாரதியாரின் பார்வையில், வைதிக சநாதனத்தின் மேலாதிக்கம் பொதிந்துள்ளது. சமஸ்கிருதம் போலத் தமிழும் சிறந்த மொழி என்று வேதம் ஓதுகிற பார்ப்பனர்களிடம் பாரதியார் மன்றாடுவது புலப்படுகிறது.

கல்வியின் அருமையை அறிந்திட்ட பாரதியார் கிராமந்தோறும் பள்ளிக்கூடங்களை நிறுவுவதற்கான வழிமுறைகளை விவரித்துள்ளார். பள்ளிக்கூடத்திற்கு ஆசிரியர்கள் நியமித்தல், ஆசிரியர்களின் கல்வித் தகுதிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். "தமிழ்நாட்டில் ஏற்படும் தேசீயப் பாடசாலைகளில் உபாத்தியாயராக வருவோர் திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களிலாவது தகுந்த பழக்கம் உடையவர்களாக இருக்கவேண்டும். சிறந்த ஸ்வதேசாபிமானமும், ஸ்வதர்மாபிமானமும், எல்லா ஜீவர்களிடத்திலும் கருணையும் உடைய உபாத்தியாயர்களைத் தெரிந்தெடுத்தல் நன்று". தேசீயப் பாடசாலை என்ற சொற்கள்மூலம் பள்ளிக்கூடம் குறிப்பிடப்படுவது கவனத்திற்குரியது.

"பள்ளிக்கூடத்தில் போதிக்கப்பட வேண்டிய பாடங்கள் குறித்த பாடத்திட்டத்தைத் திட்டமிடுவதில் பாரதியாரின் நோக்கம் அழுத்தமானது. கல்வியின் மூலம் மாணவர்கள் கற்றுத் தேர்ந்து பொருளாதாரரீதியில் வளமுடன் வாழ்தல் என்ற கருதுகோள் பாரதியாருக்கு இல்லை. அதேவேளையில் தேச பாஷையான தமிழ் மொழியில் கற்பித்தல் வேண்டுமென்ற கருத்தின் மறுதலையாக ஆங்கிலேயரின் ஆங்கில மொழியின்மூலம் கற்பித்தலைப் புறக்கணித்தல் என்பது பாரதியாரின் விருப்பம். வரலாற்றுப் பாடத்தில் இடம் பெற வேண்டிய பாடங்கள்: "வேதகால சரித்திரம், புராணகால சரித்திரங்கள், பௌத்த காலத்துச் சரித்திரம், ராஜபுதனத்தின் சரித்திரம்... பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்போகிற கிராமம் அல்லது பட்டணம் எந்த மாகாணத்தில் அல்லது எந்த ராஷ்ட்ரத்தில் இருக்கிறதோ, அந்த மாகாணத்தின் சரித்திரம் விசேஷமாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.... பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆரம்ப வகுப்பிலேயே நம்முடைய புராதன சரித்திரத்தில் அற்புதமான பகுதிகளை யூட்டி, அசோகன், விக்ரமாதித்யன், ராமன், லக்ஷ்மணன், தர்மபுத்திரன், அர்ஜுனன் இவர்களிடமிருந்த சிறந்த குணங்களையும் அவற்றால் அவர்களுக்கும் அவர்களுடைய குடிகளுக்கும் ஏற்பட்ட மஹிமைகளையும் பிள்ளைகளின் மனதில் பதியும்படி செய்வது அந்தப் பிள்ளைகளின் இயல்பைச் சீர்திருத்தி மேன்மைப்படுத்துவதற்கு நல்ல சாதனமாகும்." புராண, இதிகாசக் கதைகளின் கதைமாந்தர்களைப் பற்றிச் சொல்லி, மாணவர்களின் மனதில் சிறந்த பண்புகளை ஏற்படுத்திட முடியுமென்ற மரபான நம்பிக்கை பாரதியாருக்கு இருந்தது. இந்திய வரலாற்றுக்கும் இதிகாச, புராணக் கதைமாந்தர்களுக்கும் என்ன தொடர்பு என்ற கேள்வி தோன்றுகிறது.

இந்தியக் கதைசொல்லல் மரபில் அதியற்புதப் புனைவென்றாலும் முன்னொரு காலத்தில் நடந்த கதை என்று சொல்கிற வழக்கு, இன்றளவும் நிலவுகிறது. இந்தப் போக்கினை இந்தியக் கதையாடலின் பொதுத்தன்மையானதாகக் கருத முடியும். எடுத்துக்காட்டாக மகாபாரதம் கற்பனைக் கதையல்ல என்றும், கி.மு. 1000 இல் நடைபெற்ற உண்மைச் சம்பவம் என்றும் சராசரி இந்தியர்கள் நம்புகின்றனர். வைதிக சநாதன மதத்தின் மேலாதிக்கத்தை இந்தியாவில் வாழ்கிற பாமரரிடம் பரவலாக்கிட அன்றும் இன்றும் இதிகாசங்கள் பயன்படுகின்றன. இடைக்காலத்தில் கடவுள்களை முன்வைத்துக் கட்டுக்கதைகள் நிரம்பிய புராணங்கள், அதிக எண்ணிக்கையில் எழுதப்பட்டன. புராணம் என்ற சொல்லுக்குக் 'கடந்த காலத்தின் கதை' என்று பொருள். இதிகாசங்களை உண்மையில் நடந்தவை என்று நம்புகிற மரபான சிந்தனையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளிப்பாடாகப் பாரதியாரின் வரலாறு பாடத்திட்டம் உள்ளது. வட இந்திய மன்னரான அசோகன் பற்றிக் குறிப்பிடப்படும் பாடத்திட்டத்தில் தமிழக மன்னர்கள் பற்றிய பேச்சுகள் எதுவுமில்லை. அவர் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாட்டு வரலாறு, தமிழ் மொழி வரலாறு தொல்லியல், கல்வெட்டு ஆய்வு பற்றிப் பெரிய அளவில் வரலாற்று நூல்கள் வெளியாகவில்லையா என்பது ஆய்விற்குரியது.

பாரதியார் விவரிக்கிற புவியியல் பாடத்திட்டம் பற்றிய விரிவான விவரணை முக்கியமானது. "ஆரம்ப பூகோளமும், அண்ட சாஸ்த்ரமும், ஜகத்தைப் பற்றியும், ஸூரிய மண்டலத்தைப் பற்றியும், அதைச் சூழ்ந்தோடும் கிரகங்களைப் பற்றியும், நக்ஷத்திரங்களைப் பற்றியும், இவற்றின் சலனங்களைப் பற்றியும் பிள்ளைகளுக்கு இயன்றவரை தக்க ஞானம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பூமிப் படங்கள், கோளங்கள், வர்ணப் படங்கள் முதலிய கருவிகளை ஏராளமாக உபயோகப்படுத்த வேண்டும். ஐந்து கண்டங்கள், அவற்றிலுள்ள முக்கிய தேசங்கள், அந்த தேசங்களின் ஜனத்தொகை, மதம், ராஜ்ய நிலை, வியாபாரப் பயிற்சி, முக்கியமான விளைபொருள்கள், முக்கியமான கைத்தொழில்கள் இவற்றைக் குறித்து பிள்ளைகளுக்குத் தெளிந்த ஞானம் ஏற்படுத்த வேண்டும்...பாரத பூமி சாஸ்த்ரம், இந்தியாவிலுள்ள மாகாணங்கள், அவற்றுள், அங்குள்ள தேச பாஷைகளின் வேற்றுமைக்குத் தகுந்தபடி இயற்கையைத் தழுவி ஏற்படுத்தக்கூடிய பகுதிகள்- இவை விசேஷ சிரத்தையுடன் கற்பிக்கப் படவேண்டும்... மாகாணங்களில் வசிக்கும் ஜனங்கள், அங்கு வழங்கும் முக்கிய பாஷைகள், முக்கியமான ஜாதிப் பிரிவுகள், தேச முழுமையும் வகுப்புகள் ஒன்றுபோலிருக்கும் தன்மை, மத ஒற்றுமை, பாஷைகளின் நெருக்கம், வேதபுராண இதிஹாஸங்கள் முதலிய நூல்கள் பொதுமைப்பட வழங்குதல், இவற்றிலுள்ள புராதன ஒழுக்க ஆசாரங்களின் பொதுமை, புண்ணிய க்ஷேத்திரங்கள், அவற்றின் தற்கால நிலை, இந்தியாவிலுள்ள பெரிய மலைகள், நதிகள், இந்தியாவின் விளைபொருள்கள், அளவற்ற செல்வம், ஆஹார பேதங்கள், தற்காலத்தில் இந்நாட்டில் வந்து குடியேறியிருக்கும் பஞ்சம், தொத்து நோய்கள், இவற்றின் காரணங்கள், ஜல வஸதிக் குறைவு, வெளிநாடுகளுக்கு ஜனங்கள் குடியேறிப் போதல் - இந்த அம்சங்களைக் குறித்து மாணாக்கருக்குத் தெளிவான ஞானம் ஏற்படுத்தப்பட வேண்டும்." புவியியல் பாடத்தில் மாணவர்கள் கற்க வேண்டிய பாடங்கள் என்று பாரதியார் பரிந்துரைப்பது இன்றைக்கும் பொருத்தமானது. இன்னொருவகையில் அவருடைய பிரபஞ்சம் குறித்த அறிவியல்பூர்வமான தேடல் என்று கருதிடலாம். ஆங்கிலேயரின் காலனியாதிக்க காலத்தில் ஏற்பட்ட கொடூரமான பஞ்சங்கள், தொற்று நோய்களினால் மக்கள் கொத்துக்கொத்தாக இறத்தல், ரயத்துவாரி, ஜமீந்தாரி போன்ற முறைகளினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் போன்றவற்றைப் புவியியல் பாடத்தில் சேர்க்க வேண்டுமென்ற பாரதியாரின் பாடத்திட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்புடன் தொடர்புடையது.

பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பயிலுகிற மாணவர்களுக்கு வைதிக சநாதன மதக் கல்வி தொடர்பான விஷயங்களைப் போதிக்க வேண்டுமென்ற எண்ணம் பாரதியாருக்கு இருந்தது. பள்ளிக் கல்வியில் மதம் எதற்கு என்ற இன்றைய அணுகுமுறையை, பாரதியார் வாழ்ந்த காலச்சூழலுடன் பொருத்திப் பார்க்க இயலாது. ஆங்கிலேயரின் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக ஹிந்து மதம் என்ற பெயரில் வைதிக சநாதன மதத்தை முன்னிறுத்த வேண்டிய நெருக்கடி அன்றைக்குப் பார்தியாருக்கு இருந்தது. ஹிந்து மதம் என்றால் வைதிக சநாதன மதம் என்ற பார்வையின் அடிப்படையில் "நான்கு வேதங்கள், ஆறு தர்சனங்கள். உபநிஷத்துக்கள், புராணங்கள், இதிஹாஸங்கள், பகவத்கீதை, பக்தர் பாடல்கள், சித்தர் நூல்கள் - இவற்றை ஆதாரமாகக்கொண்டது ஹிந்து மதம்" என்று வரையறை செய்கிறார். வேதம் ஓதுவதைக் கேட்கிற சூத்திரன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டுமென்ற மனு தருமம் ஏற்படுத்தியுள்ள கட்டுப்பாடுகளும் தண்டனைகளும் பாரதியாருக்கு நினைவில் இல்லை. வருணாசிரமம் ஏற்படுத்தியுள்ள பிறப்பின் அடிப்படையில் நிலவுகிற சாதிய ஏற்றத்தாழ்வுகளும் பால் அடிப்படையில் பெண்களை ஒதுக்குதலும் குறித்து அக்கறை இல்லாமல், இந்தியர்கள் எல்லோரையும் ஹிந்து என்ற பெயரில் வரையறுத்துள்ளார். "மத விஷயமான போராட்டங்கள் எல்லாம் சாஸ்தர விரோதம்; ஆதலால், பரம மூடத்தனத்துக்கு லக்ஷணம். ஆசாரங்களை எல்லாம் அறிவுடன் அனுஷ்டிக்க வேண்டும். ஆனால், ஸமயக் கொள்கைக்கும் ஆசார நடைக்கும் தீராத ஸம்பந்தம் கிடையாது. ஸமயக் கொள்கை எக்காலத்திலும் மாறாதது..." கடந்த ஆயிரமாண்டுகளுக்கும் கூடுதலாக மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் வைதிக சநாதனத்தின் விளைவான வருணாசிரமம், தமிழகத்தில் வலுவாக நிலவியது. சாதிய ஏற்றத்தாழ்வுகளும் தீண்டாமையும் செல்வாக்குடன் விளங்கிய சூழலில், வேதம் ஓதுவதை முதன்மையாகக்கொண்ட பார்ப்பனர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சௌகரியமாக வாழ்ந்து வந்தனர். ஆங்கிலேயரின் காலனியாதிக்க ஆட்சியில் வைதிக சநாதனத்தின் பேரில் இதுவரை நடைபெற்ற உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம், தீண்டாமை போன்ற சமூகக் கொடுமைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டதனால், ஆங்கிலேயரின் காலனியாதிக்கத்தை எதிர்த்துத் தொடக்கத்தில் போராடியவர்களில் பெரும்பான்மையினர் பார்ப்பனர் உள்ளிட்ட உயர்சாதியினர்தான். அன்றைய சமூகப் பிரச்சினைகளுக்குக் காரணம் பிரிட்டிஷாரின் அதிகாரம்தான் என்று திசை திருப்பும் வேலை நடைபெற்றது. சமூக மதிப்பீட்டில் உயர்சாதியினர் தங்களுடைய இருப்பினை மீண்டும் தக்க வைத்துக்கொள்ள எல்லோருக்கும் கல்வி என்ற போர்வையில் மீண்டும் ஹிந்து மதப் படிப்பு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி பற்றிய பாடல்களில் வெளிப்படும் போராளியான பாரதியாருக்கும், கட்டுரைகளில் வெளிப்படும் சநாதன கருத்துகளை முன்வைக்கும் பாரதியாருக்கும் இடையில் அழுத்தமான முரண்கள் உள்ளன.

**அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்னவாயினும் புண்ணியங்கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்**

பாமரருக்கும் ஏழை எளியோருக்கும் கல்வி என்ற உயரிய நோக்கத்துடன் செயல்பட்ட பாரதியாருக்கு வைதிக சநாதனக் கருத்தியல் தாக்கம், ஒருவகையில் பின்னடைவுதான்.

அரசியல் எப்படியெல்லாம் மக்களின் அன்றாட வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என்ற புரிதல் இல்லாத காலகட்டத்தில் அரசாங்கம் பற்றிய பாடத்தைக் கல்வியில் சேர்க்க வேண்டுமென்ற பாரதியாரின் கல்வியியல் சிந்தனை, காலத்தை மீறியது. "ஜனங்களுக்குள்ளே ஸமாதானத்தைப் பாதுகாப்பதும், வெளி நாடுகளிலிருந்து படை எடுத்துவருவோரைத் தடுப்பதும் மாத்திரமே ராஜாங்கத்தின் காரியங்கள் என்று நினைத்துவிடக்கூடாது...குடிகளின் நன்மைக்காகவே அரசு ஏற்பட்டிருப்பதால், அந்த அரசியலைச் சீர்திருத்தும் விஷயத்தில் குடிகளெல்லாரும் தத்தமக்கு இஷ்டமான அபிப்பிராயங்களை வெளியிடும் உரிமை இவர்களுக்கு உண்டு. இந்த விஷயங்களை யெல்லாம் உபாத்தியாயர்கள் மாணாக்கர்களுக்குக் கற்பிக்குமிடத்தே, இப்போது பூமண்டலத்தில் இயல்பெறும் முக்கியமான ராஜாங்கங்கள் எவ்வளவு தூரம் மேற்கண்ட கடமைகளைச் செலுத்தி வருகின்றன என்பதையும் எடுத்துரைக்க வேண்டும்." தேசியக் கல்வி என்ற வரையறையில் அரசியல், அரசாங்கம் பற்றிய பாடத்திட்டம் எப்படி இருக்க வேண்டுமென்று பாரதியார் வரையறுத்திருப்பது சமூக அக்கறையின் வெளிப்பாடு.

தமிழ்நாட்டில் அறிவியல் கருத்துகள் எதுவும் பரவிடாத காலகட்டத்தில் கல்வியில் அறிவியல் பாடத்தைச் சேர்க்க வேண்டுமென்ற பாரதியின் நோக்கத்தில் ஆங்கிலக் கல்விமுறையின் தாக்கம் இருக்கிறது. அவர், ஐரோப்பியரின் அறிவியலைக் கருவிகள் மூலமாகச் சோதனைகள் நடத்திக் கற்பித்தல் தேசியக் கல்வி போதனையில் அவசியம் என்று கருதினார். இயற்கை நூல்(பிஸிக்ஸ்), ரசாயனம்(கெமிஸ்ட்ரி), சரீர சாஸ்திரம், ஜந்து சாஸ்திரம், செடிநூல்( ஸ்தாவர சாஸ்திரம்) ஆகிய ஐந்து துறைப் பாடங்களையும் அறிவியலில் உள்ளடக்கியிருப்பது தேசியக் கல்வி கற்பித்தலில் முக்கிய இடம் வகிக்கிறது. அறிவியல் பாடம் நடத்தும்போது தமிழாக்கப்படும் கலைச்சொற்களில் என்னவகையான அணுகுமுறையைக் கையாள வேண்டுமென்று பாரதியார் விரிவாக எடுத்துரைத்துள்ளார். வேதியியல் கல்வியைப் பற்றிய போதனையில் நோய்க் கிருமிகள் குறித்து எதிர்மறையான கருத்துகளை முன்வைத்துள்ளார். "...ரஸாயன சாஸ்திரம் மிகவும் பிரதானமாகையால் ரஸாயன பயிற்சியிலே அதிக சிரத்தை காண்பிக்க வேண்டும். கண்ணுக்குத் தெரியாத நுட்பமான பூச்சிகள் தண்ணீர் மூலமாகவும், காற்று மூலமாகவும், மண் மூலமாகவும் பரவி நோய்களைப் பரப்புகின்றன என்ற விஷயம் ஐரோப்பிய 'ஸயன்ஸ்' மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதில் ஒரு சிறிது உண்மை இருப்பது மெய்யேயாயினும், மனம் சந்தோஷமாகவும் ரத்தம் சுத்தமாகவும் இருப்பவனை அந்தப் பூச்சிகள் ஒன்றும் செய்யமாட்டா என்பதை ஐரோப்பியப் பாடசாலைகளில் அழுத்திச் சொல்லவில்லை. அதனால், மேற்படி சாஸ்திரத்தை நம்புவோர் வாழ்நாள் முழுவதும் ஸந்தோஷமாய் இராமல் தீராத நரக வாழ்க்கை வாழ்கிறார்கள். ஆதலால், நமது தேசீய ஆரம்பப் பாடசாலையில் மேற்படி பூச்சிகளைப் பற்றின பயம் மாணாக்கருக்குச் சிறிதேனும் இல்லாமல் செய்துவிட வேண்டும். உலகமே காற்றாலும், மண்ணாலும், நீராலும் சமைந்திருக்கிறது. இந்த மூன்று பூதங்களைவிட்டு விலகி வாழ யாராலும் இயலாது. இந்த மூன்றின் வழியாகவும் எந்த நேரமும் ஒருவனுக்கு பயங்கரமான நோய்கள் வந்துவிடக்கூடும் என்ற மஹா நாஸ்திகக் கொள்கையை நவீன ஐரோப்பிய சாஸ்திரிகள்தாம் நம்பி ஓயாமல் பயந்து பயந்து மடிவது போதாதென்று அந்த மூடக்கொள்கையை நமது தேசத்தில் இளஞ் சிறுவர் மனதில் அழுத்தமாகப் பதியும்படி செய்து விட்டார்கள்." பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்தியர்களின் சராசரி வாழும் வயது 25. அன்றைய காலகட்டத்தில் பச்சிளம் சிசு மரணம் அதிகம். மகப்பேறின்போது மருத்துவ வசதியின்மையினால் சூலுற்ற இளம்பெண்கள் ஏராளமாக இறந்தனர். நோய் என்பது பாவத்தின் விளைவு. ஏவல், பில்லி, சூன்யம், செய்வினை போன்றவற்றால் நோய் ஏற்படுகிறது என்ற பொதுப்புத்தி நிலவியது. தூய நீரை அருந்தாமல் வயிற்றுப் போக்கினால் பலர் மாண்டனர். அம்மை நோய் மாரியம்மனின் கோபத்தினால் வருவது, காலரா நோய் காளியின் சாபம் என்று எங்கும் மூடநம்பிக்கைகள் நிலவிய சூழலில், போதிய மருத்துவ வசதி இல்லாமல் இறந்தவர்களின் எண்ணிக்கைக்குக் கணக்கேது? இத்தகு சூழலில் அறிவியல் கல்வியை வரவேற்கும் பாரதியார், நோயை உருவாக்கிடும் கிருமிகள் பற்றிய எச்சரிக்கை உணர்வு அல்லது பயத்தை 'மஹா நாஸ்திகக் கொள்கை' என்று எதிர்க்கிறார். மனித



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உடலில் ஏற்படும் நோய் பற்றிய அறிவியல் பார்வையை மறுப்பதில் பாரதியின் கல்வியியல் சிந்தனை தெளிவற்று உள்ளது; அறிவியலையும் வைதிக சநாதன மதத்தையும் ஒன்றிணைத்துக் குழம்பிடும் போக்குக் காணப்படுகிறது.

கைத்தொழில், வேளாண்மை, தோட்டப் பயிரிடுதல், சிறு வணிகம் போன்றவை குறித்து மாணவர்களுக்குப் பள்ளியில் போதிக்க வேண்டுமென்ற பாரதியாரின் அக்கறை கவனத்திற்குரியது. "மாணாக்கர்கள் எல்லாருக்கும் விசேஷமாகத் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கு, நெசவு முதலிய முக்கியமான கைத்தொழில்களிலும், நன்செய், புன்செய்ப் பயிர்த்தொழில்களிலும், பூ, கனி, காய், கிழங்குகள் விளைவிக்கும் தோட்டத் தொழில்களிலும், சிறு வியாபாரங்களிலும் தகுந்த ஞானமும் அனுபவமும் ஏற்படும்படிசெய்தல் நன்று." எல்லோருக்கும் ஒரே மாதிரியான கல்வியைப் போதிக்க வேண்டுமென்ற நடைமுறைக்கு மாறாகத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மட்டும் கைத்தொழில், பயிர்த்தொழில், தோட்டமிடுதல் போன்றவற்றில் தனிப்பட்ட பயிற்சிகள் தரவேண்டுமென்பது, ஒருவகையில் குலத்தொழிலைச் செய்யுமாறு ஊக்குவிப்பதாகும். வேதம் ஓதுகிற பார்ப்பனர்களின் பிள்ளைகள் எவ்விதமான உடலுழைப்பும் இல்லாமல் ஓய்வாக இருப்பதை உள்ளடக்கியது தேசியக் கல்வி என்ற வரையறை ஏற்புடையது அல்ல.

பள்ளி மாணவர்களுக்கு உடற் பயிற்சி அவசியம் என்ற கருத்துடைய பாரதியாரின் கருத்து, முக்கியமானது. "படிப்பைக் காட்டிலும் விளையாட்டுக்களில் பிள்ளைகள் அதிக சிரத்தை எடுக்கும்படி செய்யவேண்டும். 'சுவரில்லாமல் சித்திரமெழுத முடியாது. பிள்ளைகளுக்கு சரீரபலம் ஏற்படுத்தாமல் வெறுமே படிப்பு மாத்திரம் கொடுப்பதால், அவர்களுக்கு நாளுக்குநாள் ஆரோக்கியம் குறைந்து அவர்கள் படித்த படிப்பெல்லாம் விழலாகி, அவர்கள் தீராத துக்கத்துக்கும் அற்பாயுசுக்கும் இரையாகும்படி நேரிடும்." மாணவர்கள் ஓட்டம், கிளித்தட்டு, சடுகுடு போன்ற இந்திய விளையாட்டுக்களுடன் ஐரோப்பியரின் கால்பந்து விளையாட்டு மற்றும் கவாத்து எனப்படும் டிரில் பழகிட வேண்டுமென்று பாரதியார் பரிந்துரைப்பது இன்றைக்கும் மாணவர்களின் உடல்நலத்திற்கு அடிப்படையானதாகும். கல்வி என்றால் பாடப் புத்தகம் மட்டுமல்ல மாணவர்களின் உடல்நலத்துடன் தொடர்புடையது என்ற பார்வை அறிவியல்பூர்வமானது.

பள்ளி மாணவர்களுக்குச் சுற்றுச்சூழலை அறிமுகப்படுத்தும் நோக்கில் அவர்களைப் பயணமாக அழைத்துச் சென்று இயற்கையின் அழகை ரசிப்பதற்கு ஆசிரியர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற பாரதியாரின் திட்டம், அதியற்புதமானது.

தேசியப் பள்ளிக்கூடம் நடத்துவதற்கான செலவினங்களுக்கான நிதி திரட்டல் பற்றிய பாரதியாரின் பார்வை, புறநிலையில் பள்ளியைத் தொடங்கி நடத்திடுவதற்கான ஆலோசனையை வழங்குகிறது." தேசியப் பள்ளிக் கூடம் நடத்துவதற்கு அதிகப் பணம் செலவாகாது. மாசம் நூறு ரூபாய் இருந்தால் போதும். இந்தத் தொகையை ஒவ்வொரு கிராமத்திலுள்ள ஜனங்களும் தமக்குள்ளே சந்தா வசூலித்துச் சேர்க்க வேண்டும். செல்வர்கள் அதிகத் தொகையும் மற்றவர்கள் தத்தமக்கு இயன்றளவு சிறு தொகைகளும் கொடுக்கும்படி செய்யலாம். 100 ரூபாய்கூட வசூல் செய்யமுடியாத கிராமங்களில் 50 ரூபாய் வசூலித்து. உபாத்தியாயர் மூவருக்கும் தலைக்கு மாசச் சம்பளம் 12ரூபாய் கொடுத்து, மிச்சத் தொகையை பூகோளக் கருவிகள்,"ஸயன்ஸ்" கருவிகள், விவசாயக் கருவிகள் முதலியன வாங்குவதில் உபயோகப்படுத்தலாம்... எல்லாவிதமான தானங்களைக் காட்டிலும் வித்யாதானமே மிகவும் உயர்ந்தது என்று ஹிந்து சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. மற்ற மத நூல்களும் இதனையே வற்புறுத்துகின்றன. ஆதலால் ஈகையிலும் பரோபகாரத்திலும் கீர்த்தி பெற்றதாகிய நமது நாட்டில், இத்தகைய பள்ளிக்கூடமொன்றை மாச வசூல்களாலும், நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் அல்லது சிறு சிறு தொகைகளாகவும் சேகரிக்கப்படும் விசேஷ நன்கொடைகளாலும் போஷித்தல் சிரமமான காரியம் அன்று." ஆங்கிலேய அரசின் உதவியைப் பெற்றிடாமல், மக்களிடம் இருந்து பணம் வசூலித்துப் பள்ளிக்கூடங்களை நடத்திட வேண்டுமென்ற பாரதியாரின் எண்ணம், ஆங்கிலேய எகாதிபத்தியத்திய எதிர்ப்பின் வெளிப்பாடாகும்.

இந்தியா, ஹிந்து, சமஸ்கிருதம், வைதிக சநாதனம் ஆகிய பரிமாணங்களுடன் தமிழ் மொழியையும் உள்ளடக்கியதாகப் பாரதியாரின் கல்விக் கொள்கையின் தளம் அமைந்துள்ளது. தேசியக் கல்வியில் தமிழ்நாட்டுப் பெண்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுடைய ஆலோசனைகளையும் கருத்தில்கொண்டு செயல்படாவிடில், அந்தக் கல்வி சுதேசியம் ஆகாது என்று பாரதியார் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படும்போது தேசியக் கல்வி வெற்றிகரமாகச் செயல்படும் என்று மத வேறுபாடுகளைக் கடந்தநிலையில் கருதியுள்ளார். ஜாதி, மதம், பால் வேறுபாடுகளைக் கடந்த நிலையில் இந்தியாவெங்கும் தேசியக் கல்வி பரவிட விழைந்த பாரதியாரின் முயற்சிகள், அன்றைய காலகட்டத்தில் முற்போக்கானவை. பாரதியாரின் தேசியக் கல்வி பற்றிய விவரிப்புகள், திட்டங்கள் போன்றவை நடைமுறையில் சாத்தியப்படவில்லை என்றாலும், கவியின் கனவு என்ற நிலையில் பாரதியாரின் கல்வியியல் சிந்தனைகள் வரலாற்று ஆவணமாகியுள்ளன.


மூல நூல்

**சுப்பிரமணிய பாதியார், சி. பாரதியார் கட்டுரைகள். சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்,2000.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொ.குணசேகரன்
jsguna@gmail.com


# உணவும் சாதியும்
## சென்னை மாகாணத்தின் பங்களாப் பணியாளர்கள்

ஏறக்குறையப் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து காலனிகளில் வெவ்வேறு அலுவல்நிமித்தம்குடியமர்ந்தஅய்ரோப்பியர்களுக்குத் தமக்கான உணவைப் பெறுதல் என்பது ஒரு குறிப்பிடும்படியான சவாலாக இருந்தது. மேற்கத்தியப் பண்பாட்டைச் சார்ந்த உணவுகள் மற்றும் அவற்றை சமைப்பதற்கான உணவுப்பொருட்களின் தட்டுப்பாடு, உணவுப் பொருட்கள் சில கிடைப்பினும், அவற்றைத் தம்நாட்டு சுவைக்கேற்பச் சமைக்க தேர்ந்த சமையல்காரர்கள் இல்லாமை, அதுபோல் ஆளும் வர்க்கத்தினர் என்ற நிலையில் தமக்கான உணவின் தனித்துவத்தை, மேன்மையை குடியேறிய இடங்களில் தக்க வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் என பல்வேறு வாழ்வியல் சிக்கல்களைக் குடியேறிகள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இத்தகைய ஒரு சூழல், சில ஆய்வாளர்களின் கருத்துப்படி, காலனிகளில் குடியமர்ந்த அய்ரோப்பியர்கள் தம் தாய்நாட்டு மற்றும் காலனி நாட்டு உணவுப் பழக்கங்களை முற்றிலுமாகச் சார்ந்திராத, ஆனால் இவ்விரு உணவுப் பண்பாடுகளின் கூறுகளை உள்வாங்கிய ஒரு வேறுபட்ட உண்டல் முறையை வளர்த்தெடுத்துப் பேண வழிவகுத்தது(*Leong-Salobir:2011*).

இவை ஒருபுறம் இருக்க, தென்னிந்தியா போன்று சாதியச்சமூகத்தை முதன்மையாகக் கொண்டிருந்த காலனிகளில் அய்ரோப்பியக் குடியேறிகளுக்கு ஒரு புதுவிதமான பிரச்சினை எழுந்தது. மாமிசத்தை, குறிப்பாக , மாட்டு இறைச்சி மற்றும் பன்றி இறைச்சியை, முதன்மையாகக் கொண்டிருந்த அவர்களது உணவுப் பழக்கம் காலனிகளின் சாதிச் சமூகத்தில் மிகவும் ஒடுக்கப்பட்ட கீழமைச் சாதியனரின் உணவோடு சற்று ஒத்து இருந்தது. அது மட்டுமல்லாமல், அவர்களது உணவைச் சமைக்க கீழமைச்சாதியைச் சேர்ந்த சமையல்காரர்களை, இதர வேலைக்காரர்களை முற்றிலுமாகச் சார்ந்து இருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இது காலனியரின் பங்களாக்கள் கீழமைச் சாதி வேலைக்காரர்களின் புது அனுபவ வெளியாக உருவாகக் காரணமாக இருந்ததோடு மட்டுமல்லாமல் அவை அவர்களுக்கு ஆளும் வர்க்கத்தோடு ஒரு கட்டாயமான உறவையும் ஏற்படுத்திக் கொடுத்தது. மேலும், காலனிகளில் மேற்கத்தியர்களின் உணவுப் பண்பாட்டின் வளர்ச்சியில் இத்தகைய உள்ளூரார்களின் அதாவது கீழமைச் சாதியினரின் உணவுசார்ந்த அறிவு மிக முக்கியமான பங்களிப்பைப் பெற்றிருந்தது எனலாம்.

கீழமைச் சாதியனருடன் எந்தவித உணவுப் பரிமாற்றத்தையும் கொண்டிராத தென்னிந்தியச் சாதியச் சமூகம் அவர்களைத் தொடுதல் அவர்கள் சமைத்த உணவை உண்ணுதல் போன்றவற்றை தீட்டாகப் பார்த்தது. இந்நிலையில் புதிய ஆளும் வர்க்கத்தினர் கீழமைச் சாதியினரை தம் சமையலறைக்குள் வரவேற்றதோடு மட்டுமல்லாமல், அவர்கள் சமைத்த உணவையே முற்றிலுமாகச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருந்தது. ஒரு வகையில் சாதியச் சமூகத்தில் கீழமை மற்றம் மேலமை சாதிகளுக்கிடையே உணவு சார்ந்து இருந்த சமூக-பண்பாட்டு இடைவெளியானது கீழமைச் சாதியினருக்கும் காலனிய ஆளும் வர்க்கத்தினருக்கும் இடையே இல்லை எனலாம். பங்களாக்களில் சமைக்கப்பட்ட உணவானது ‘பறையர் உணவு’-ஆக பார்க்கப்பட்டது. அவற்றை மேலமைச் சாதியினர் தீண்ட மறுத்தனர். இக்கட்டுரை, இதுதொடர்பாக உணவும்-சாதியும் என்ற கண்ணோட்டத்தில் சென்னை மாகாணத்தின் பங்ளாக்களில் பணியமர்த்தப்பட்ட கீழமைச் சாதியினர், அவர்களை பணியமர்த்திய அய்ரோப்பியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்விரு தரப்பினருக்கும் இடையே இருந்த ஒரு சிக்கலான உறவை மீள் வாசிப்பிற்கு உட்படுத்த முற்படுகின்றது. இதன் ஊடாக இவ்வகையான ஒரு வரலாற்றுப்போக்குக்கு பின்னால் இருந்த அரசியலையும் சமூக மாற்றத்தைப் பற்றியும் மேலோட்டமாக பேசுகின்றது.

### தரவுகளும் தகவல்களும்

இதுபோன்ற உணவுப் பண்பாட்டின் வரலாற்றை எழுதுதலின் ஊடாகச் சமூக அரசியல் போக்குகளை விளக்குதல் என்பதில் சமூகவியல் ஆய்வாளர்களின் ஆர்வம் அண்மைக் காலங்களில்தான் சற்று மேம்பட்டு வருகின்றது. அதுபோல் வீட்டுவேலை *(domestic work)* மற்றும் வீட்டு வேலை செய்யும் பணியாளர்களின் *(domestic servants)* வரலாறும் பெரியளவில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படாத நிலையிலையே இன்றளவும் இருக்கின்றது. போதுமான எழுதப்பட்ட ஆவணங்கள் இல்லாமையும், கிடைக்கபெறும் ஆவணங்களின் வரலாற்றுத்தன்மை கேள்விக்கு உட்படுத்தப் படுதலும் இதற்கு முக்கியக் காரணங்கள். தென்னிந்தியாவில் காலனியர்களின் உணவு பற்றியும் அவர்களது வீட்டு வேலையாட்கள் பற்றியும் அறிந்துகொள்வதற்கு குடிபெயர்ந்த மேற்கத்திய வீட்டுத்தலைவிகளின் நாட்குறிப்புகளும் கடிதங்களும் மிக முக்கிய ஆவணங்கள். இவை வீட்டு வேலைகள், வேலை செய்யும் பணியாளர்கள், அன்றாட உணவிற்கான செலவினங்கள், உணவுப் பொருட்களின் விலை, பணியாளர்களின் சாதியச் சமூக நிலை எனப் பல்வேறு விடயங்களைப் பற்றிய குறிப்புகளைக் கொடுக்கின்றன. இதையடுத்து, தென்னிந்தியாவில் புதிதாகக் குடியேறும் காலனியக் குடும்பத் தலைவிகளுக்கென 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வெவ்வேறு வழிகாட்டி புத்தகங்கள் அய்ரோப்பாவில் வெளிவந்தன. இவை புது இடத்தில் குடும்ப வேலைகளைச் சமாளிப்பது எப்படி? வேலைக்காரர்களை தேர்ந்தெடுப்பது எப்படி, வேலைக்காரர்களின் நடத்தை, மனப்போக்கு, குணாதிசியங்கள் எனப் பல்வேறு வழிகாட்டும் செய்திகளைக் கொடுக்கின்றன. பங்களாப் பணியாளர்களின் பார்வையை முன்வைக்கும் தரவுகள் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், ஒரு சில பட்லர்கள் பற்றிய (தலைமை வேலைக்காரர் அல்லது மேஸ்திரி) குறிப்புகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டுக்கு அயோத்திதாசரின் தாத்தா முருகன்; திருநெல்வேலியிலிருந்து இலங்கைக்குக் குடிபெயர்ந்து காலனியரின் பங்களாக்களில் வேலை செய்து, பின் அரசியலில் ஈடுபட்ட எஸ்.எஸ். பெரியசாமி போன்றோரைக் கூறலாம். இவற்றைத் தவிர்த்துப் பணியாளர்களைக் குறித்து ஏராளமான குறிப்புகள் அப்போது வெளிவந்த செய்தித்தாள்களிலும் காணக் கிடைக்கின்றன.

### காலனியப் பங்களாக்களும் மேம்சாகிப்புகளும்

காலனிய வரலாற்றில் பங்களாக்கள் குறிப்பிடும்படியான இடத்தைப் பெறுகின்றன. வேறுபட்ட பண்பாட்டுப் பின்புலங்களை உடைய உள்ளூராரும் காலனியரும் நெருங்கி ஊடாடுவதற்கான வெளியை இவை ஏற்படுத்தித் தந்தன. கம்பெனியர் காலத்தில் மேற்கத்தியப் பொறியாளர்களின் துணைகொண்டு சில பங்களாக்கள் கட்டப்பட்டன. அவர்களது காலத்திற்குப் பின்பும் இது தொடரப்பட்டது. முதலில் உள்ளூர் வடிவமைப்பில் செங்கல் மற்றும் களிமண் கொண்டு கட்டப்பட்ட பங்களாக்கள் பின் மேற்கத்தியர் கட்டட வடிவில் மாற்றம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை, அகன்ற ஹால், சாப்பாட்டு அறை, படுக்கை அறைகள் முகப்பில் நீண்ட வறாண்டாக்களைக் கொண்ட தோட்டம், பணியாளர் வீடுகள், கால்நடைகளுக்கான கொட்டகைகள் இவற்றையும் உள்ளடக்கி ஒரு சுற்றுச் சுவரால் மூடப்பட்ட அமைப்பை பங்களாக்கள் கொண்டிருந்தன (Desai:2011) இப்பங்களாக்களை ஆங்கிலேய குடியேறிகள் வாடகைக்குப் பெற்று வசிக்கத் தொடங்கினர். ஒப்பீட்டளவில், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், 'இங்கிலாந்தின் புறநகர் பகுதிகளில் ஒரு சுமாரான உறுப்பினர் எண்ணிக்கையுடைய குடும்பம் வசிக்க ஏற்ற வீடு வருடத்திற்கு 40 பவுண்டிலிருந்து 60 பவுண்டு வரை வாடகைக்கு விடப்படும் அதே அளவிலான வீடு சென்னையில் 160 பவுண்டிலிருந்து 180 பவுண்டுவரை போகும்'(Hull:1871:70).

பங்களாக்கள் பிரிட்டிஷ் சாம்ராஜியத்தின் ஒரு குறு வடிவமாக திகழ்ந்தன என சில ஆய்வாளர்கள் வாதிடுகின்றனர்(Sen:2009). பங்களா சாம்ராஜியத்தின் அதிபதியாக மேம்சாகிப் இருந்தார். மேடமும் (ஆங்கிலம்) சாகிப்பும் (அரபு) என இரு வார்த்தைகள் இணைந்து உருவான இந்த 'மேம்சாகிப்' பங்களாவில் வசிக்கும் குடும்ப தலைவியைச் சுட்டும். இவர்கள் ஆங்கிலேய அதிகாரிகளின், வர்த்தகர், மதபோதகர்களின் மனைவிமார்கள் ஆவர். கம்பெனியர் காலத்தில் இந்தியாவில் குடிபெயர்ந்தவர்கள் பொதுவாக மாலுமிகளும் சிப்பாய்களும் ஆவர். இவர்களுக்கான பாலுணர்வுத் தேவையை எதிர்கொள்வது கம்பெனியருக்கு மிகவும் சிக்கலான பிரச்சினையாக இருந்தது. சில சமயம் இங்கிலாந்திருந்து இளம் பெண்களை இறக்குமதி செய்து அவர்களைத் தங்களுக்கான கணவன்மார்களைக் குடிபெயர்ந்த மேற்கத்தியரிடையே தேடிக்கொள்ள ஊக்குவித்தனர்(Kindcaid:1938, Geogrge:1993) பின் குடிபெயர்ந்தோரை உள்ளூர் பெண்களோடு இணைந்து வாழ அனுமதித்தனர். (இவர்களது சந்ததியனர்தான் தற்போது ஆங்கிலோ-இந்தியர் என அழைக்கப்படுவோர்). பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், 1869ல் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டபின் இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் இடையே ஆறுமாத காலமாக இருந்த கப்பல் பயணம் ஒருமாதமாகக் குறைந்தது. இதன்பின் பொதுவாக மேற்கத்திய குடியேறிகள் தம்வீட்டுப் பெண்களையும் குழந்தைகளையும் உடன் அழைத்துவந்தார்கள். இவ்வாறு 'குடிபெயர்ந்த பெண்களே, இங்குக் குறிப்பிடப்படும் மேம்சாகிப்புகள், பங்களாக்களின் அரசிகள்.


## பங்களாப் பணியாளர்கள்

மேம்சாகிப்புகளில் பெரும்பாலானோர் இளம் மனைவிகள். இங்கிலந்தில் மத்தியத் தர வர்க்க குடும்பத்தில் இருந்து வருபவர்கள் சிலர் ஏற்கனவே குழந்தைகளோடும், சிலர் இந்தியாவில் குடியேறிய பிறகும் குழந்தை பெற்றவர்கள். இந்தியாவிற்கு வருவதற்கு முன், குடியேறப்போகும் இடம், அதன் மக்கள், வீடு தேடுவது, பணியாளர்களை அமர்த்துவது, கப்பல் பயணம், எடுத்துச்செல்ல வேண்டிய பொருட்கள், தனியாக வீட்டை நிர்வகிக்க வேண்டிய சூழல், குழந்தை வளர்ப்பு எனப் பல்வேறு விடயங்கள் குறித்த மனப்பதற்றத்திற்கு இவர்கள் உள்ளாகி இருந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியல் ஏற்கனவே இந்தியாவில் வசித்த சில மேம்சாகிப்புகள் தம் அனுவபக் குறிப்புகளைப் புத்தகமாக வெளியிட்டு இருந்தனர். மேலும் இத்தகையோரைக் கருத்தில் கொண்டு பல்வேறு வீட்டுநிர்வாக, சமையல் குறிப்புப் புத்தகங்களும் வெளிவரத் தொடங்கின இவை, எதிர்கொள்ளவேண்டிய புதுச் சூழல் குறித்து முன்கூட்டியே சில தகவல்களை வருங்கால மேம்சாகிப்புகளுக்குக் கொடுத்திருந்தன.

வீடு தேடுதல் முடிந்து குடியமர்ந்தபின், மேம்சாகிப்புகளின் முக்கிய வேலை பணியாளர்களை தேர்ந்தெடுத்து வீட்டு நிர்வாகத்தைத் தொடங்குவது. குறிப்புகளின்படி, கப்பலில் இருந்து இறங்கியதும் வேலைக்காரர்களும் அவர்களது தரகர்களும் சுற்றி வளைக்கக்கூடும், மேம்சாகிப்புகள் இந்த விடயத்தில் சற்றுப் பொறுமையுடன் செயல்படவேண்டும்(James-:1879,Anglo-Indian:1882) என்னும் கருத்து அய்ரோப்பியர்களிடையே நிலவியதை அறிய முடிகிறது. தென்னிந்தியச் சாதிய அமைப்பில் சாதிவாரியாக வேலைப்பிரிவினை என்பது மேம்சாகிப்புகளின் வீட்டுச் செலவையும் நிர்வாகச் சுமையையும் அதிகரித்தது. ஒவ்வொரு சாதியினருக்கும் ஒரு தொழில், ஒருவர் வேலையை மற்றொருவர் செய்வது சாதிய மீறல், இழிவு எனக் கருதப்பட்டது. இத்தகைய சூழல், ஏராளமான பணியாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. ஒரு வீட்டில் இந்தியாவில் இத்தனை வேலைக்காரர்களின் மொத்த வேலையை இங்கிலாந்தில் இரண்டு பெண் பணியாளர்கள் (Valvanne:1959) செய்தனர். எட்மண்ட் ஹல் அவர்களின் கருத்தினபடி, சென்னை மாகாணத்தில் குழந்தைகளுடன் இல்லாத போதுமான வருமானம் உடைய ஒரு குடும்பத்திற்கு குறைந்தது 22 பணியாளர்கள் தேவைப்படும் (Hull:1871:115).இவர்களுள் பட்லர், சமையல்காரர், ஆயா, சலவைக்கரார், தையல்காரர், தோட்டக்காரர்கள், காவலர், நாய், குதிரை மற்றும் மாடு போன்ற காலநடைகளைப் பராமரிப்பவர்களும் அடக்கம். இவர்களுள் சிலருக்கு உதவியாட்களும் உண்டு. இளம் குழந்தைகளுக்குப் பாலூட்ட முடியாத மேம்சாகிப்புகள் சில மாதங்களுக்குத் தாய் அல்லது தாயம்மையை வேலைக்கு அமர்த்தினர். எனினும், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், சென்னையில் மிகவும் சிக்கனத்தோடு வாழ முற்படுவோர் பத்து அல்லது பதினொரு ஆட்களோடு சமாளிக்க முடியும் (Hull:1871:116). நவீனத் தொழில் நுட்பங்களின் வளர்ச்சியும் வேலையாள்களின் எண்ணிக்கையைக் குறைத்தது. சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை, மேல்தட்டு பணியாளர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் நன்றாக உரையாடக்கூடியவர்கள்(Hull:1871:117) ... என்பவரின் கருத்தின்படி, சென்னை வீடுகளைப் போன்று, வீட்டுவேலை செய்பவர்களும் இந்தியாவிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தலைசிறந்தவர்கள்(Hull:1871:119)

பட்லர் என்பவர் அனைத்து வேலையும் தெரிந்தவர். ஆனால் ஒரு வேலையும் செய்யாதவர் (Lady Resident: 1864) வரவு-செலவு கணக்கு எழுதுதலும் மற்ற வேலைக்காரர்களை மேலாண்மை செய்வதும் இவர்களின் முக்கியமான வேலை (Hull:1871). மற்றவர்களைவிட அதிக மாதச் சம்பளம் பெறுபவர். பொதுவாக ஒருசில வசதியான குடும்பங்களே பட்லர் வைத்துக்கொண்டன. ஏனைய குடும்பங்களில், பட்லருக்குப் பதிலாக அதே வேலையைச் செய்யக்கூடிய ஹெட்பாய் இருந்தார்கள்(Lady Resident: 1864). பையன் (பாய்) என்று அழைக்கப்பட்டாலும், நடுத்தர வயதுக்காரர்களே பையன்களாக வேலை செய்தனர். பொதுவாக ஆண்கள் சமையல் வேலை செய்தனர். அவர்களது உதவிக்கு மற்றொரு ஆளை வைத்துக் கொண்டனர். பெரிய குடும்பங்களில் சமையல்காரரின் வேலை சமையலறையோடு முடிந்துவிடும். மற்ற இடங்களில் அங்காடிகளுக்கும் செல்லவேண்டும். காலனியச் சமையல் மற்றும் வீட்டு மேலாண்மைக் குறிப்புகளில் சமையல்காரர் என்பதற்குப் பதிலாக ராமசாமி அல்லது முத்துசாமி என்றே குறிப்பிடப்பட்டுள்ளது (Wyvern:1891). சமையல்காரர்கள் வழக்கமாக இதுபோன்ற பெயர்களைக் கொண்டிருந்தது இதற்குக் காரணம்.

இந்த இரு ஆண் வேலைக்காரர்களைவிட ஆங்கிலேய குடும்பங்களில் அதிகம் முக்கியத்துவம் பெற்றவர் ஆயா. குழந்தைகளைப் பராமரிப்பதும் மேம்சாகிப்பின் தேவைகளை நிவர்த்தி செய்வதும் இவரது முக்கிய வேலை. அவசர காலங்களில் சமைக்கவும் செய்வார். பொதுவாக மெதராஸி ஆயாக்கள் அதிக மதிப்புடையவர்கள்( expensive) என கலோனியக் குறிப்புகள் கூறுகின்றன. ஆயாக்களுக்கும் ஆங்கிலேயக் குடும்பங்களுக்கும் இருந்த உறவு நீண்டது, மிகவும் நெருக்கமானது. இதுகுறித்து வெவ்வேறு வரலாற்று ஆய்வுகள் வெளிவந்துள்ளன (Sen:2009, Chaudhuri:2006, Grossman:2001). பாலுட்டும் குழந்தைகளுக்கென தாயம்மா நியமிக்கப்பட்டால், அவர்களது குழந்தைகளைக் கவனிக்க மற்றொரு ஆள் தேவைப்படும். தாயம்மவின் உணவை மேம்சாகிப்புகள் நேரடியாகக் கவனித்தனர். எட்மண்ட் ஹல்லின் கணிப்பின்படி, 22 நபர்கள் ஒரு பங்களாவில் வேலை செய்தால், அதில் ஐவர் பெண்கள் (Hull;1871;115).

## பணியாளர்களின் சாதிய நிலை

காலனியக் குறிப்புகள் பங்களாப் பணியாளர்கள் குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவர்கள் என நேரடியாக குறிப்பிடவில்லை. பொதுவாக இவர்கள் 'தீண்டத்தகாத சாதியைச் சார்ந்தவர்கள்', 'கீழமை சாதியினர்', 'கடினமாக உழைக்கக் கூடிய நிலமில்லாக் கூலிகள்', 'புல்வெட்டும் சாதியினர்', 'துப்புரவு செய்யும் சாதியினர்' என்றே குறிப்பிடபட்டுள்ளன. பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் உண்ணும் உணவு கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. பல்வேறு இறைச்சியை உண்ணும் ஆங்கிலேயர்களுக்கு இந்தியச் சமூகச் சூழல் சிக்கலை ஏற்படுத்தியது. பெரும்பான்மையான இந்து மேலமைச் சாதியினர் பன்றி இறைச்சியை, மாட்டு இறைச்சியை உண்ணாததோடு, இவர்களுள் சிலர் இவற்றை உண்ணும் ஆங்கிலேயர்களை தீண்டத்தகாதவர்களாகப் பார்த்தனர். அதுபோல் முஸ்லிம்கள் பன்றி இறைச்சியை தொடுவது தம் மத நம்பிக்கைக்கு எதிரான செயலாகக் கருதினர். அதோடு, ஒயின் பரிமாறுவதிலும் அவர்களுக்கு மதம் சார்ந்த பிரச்சினை இருந்தது (Chaudhuri:2006). 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் கணிசமான கிருத்துவர்கள் சென்னை மாகாணத்தில் வசித்தனர். அடித்தட்டு மக்கள் என்றாலும், இவர்களும் ஆங்கிலேயர்களும் ஒரே மதத்தைச் சார்ந்தவர்கள். எனவே, இவர்கள் 'முதலாளியின் சாதியை' சார்ந்தவர்களாக அமைந்தனர். இவர்களைப் பணியமர்த்தினால் இவர்களுடன் ஒரு சமூகப் பண்பாட்டு ஏற்றத்தாழ்வைப் பேணுவது ஆங்கிலேயர்களுக்கு ஒரு சிரமமான செயலாக இருந்தது(Chaudhuri:2006). எனவே, இந்து சாதிய அமைப்பில் ஒடுக்கப்பட்ட, பன்றி மற்றும் மாட்டு இறைச்சியைச் சமைக்கும், உண்ணும் வழக்கம் கொண்ட கீழமைச் சாதியினரே பங்களாப் பணிகளுக்கு பொருத்தமானவர்களாகக் கருதப்பட்டனர். சமைப்பவர் மட்டுமல்லாது, இறைச்சியை அங்காடியிலிருந்து பெறுபவர், சுத்தம் செய்பவர், சமைத்த இறைச்சியை பரிமாறுபவர், பாத்திரங்களைச் சுத்தம் செய்பவர்கள் என, ஒவ்வொரு பணியாளரும் இறைச்சியோடு புழங்கவேண்டிய நிலை. இவர்களுள் சிலர் பங்களாவிலேயே உணவு அருந்தினர்.

ஒருசில பணியாளர்கள் இடைச்சாதியினராக இருக்க வாய்ப்பு உள்ளது. தாயம்மாக்கள் பொதுவாக 'புல்வெட்டுவோர், கூலிகள், அல்லது ஏழ்மையான தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள்'. எனினும், சென்னை மாகாணத்தில் மாமிசம் உண்ணாத இடைச்சாதியினரும் தாயம்மாவாக இருந்திருக்க வாய்ப்பு உள்ளது. 1836 லிருந்து 1839 வரை சென்னை மாகாணத்தில் தங்கியிருந்த ஜூலியன் என்பவர் இங்கிலாந்தில் இருந்த தன் உறவினருக்கு எழுதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தில்(A Lady:1846:51) இவ்வாறு குறிப்பிடுகின்றார்

...வேலைக்காரர்கள் அவர்களது உணவை அவர்களே பார்த்துக்கொள்வார்கள். சாதி (மேலமை) வேலைக்காரர்கள் நமது எந்த உணவையும் தொடமாட்டார்கள். ஆனால் உதவியாளர்கள் பொதுவாகப் பறையர்கள் (கீழமைசாதியினர்). எது கொடுத்தாலும் மகிழ்ச்சியாக உண்பார்கள். அம்மா (தாயம்மா) ஒரு சாதி பெண்மணி. அவளுடைய தேவைகள் என் வாழ்கையின் பெருந்துயரம். அவளுக்கு என்று தனியாக ஒரு சமையல்காரரைப் பணியமர்த்த வேண்டியதாகிப் போனது. ஏனென்றால், அவளுக்கான உணவு அவள் சாதி நபரைக் கொண்டுதான் சமைக்கவேண்டும். இருந்தாலும், அவள் உணவுக்கு அருகில் யாரும் நெருங்கிவிட்டால், அந்த நாள் முழுவதும் பட்டினி கிடப்பாள். காம்பவுண்டுக்கு உள்ளேயே தென்னை ஓலையினால் கட்டப்பட்ட வீடு அவளுக்கு உண்டு. அங்கு அவளது உணவு சமைக்கப்படும். அவளுடைய சொந்தக் குழந்தைகளைக் கவனிக்க என ஒரு தாயம்மாவை பணி அமர்த்தவேண்டியிருந்தது. இவர்கள் மற்றவர் குழந்தையைக் கவனிக்கும்போது தம் குழந்தையைக் கவனிக்காது விட்டுவிடுவதால் நானே தொடர்ந்து கண்கானிக்க வேண்டியிருந்தது. இல்லையென்றால், அவளும் அவளது கணவனும் பிஞ்சு குழந்தைகளைக் கவனியாது இறக்கவிட்டுவிட்டு நம்மீது வீண்பழி சுமத்துவர்...

கடிதத்தில் அம்மா எவ்வாறு ஓப்பியம் பழக்கத்திற்கு ஆளாகி இருந்தாள் என்பது பற்றியும், ஒப்பியத்தின் ஆளுகையில் இருக்கும்போது அவளுக்குப் 'பிசாசு' பிடித்துவிட்டதாக மற்ற பணியாளர்கள் எவ்வாறு பயந்தார்கள் என்பது போன்ற விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சென்னை கறியும் மிளகுத்தண்ணியும்

மற்றொரு கடிதத்தில், ஜுலியன் வேடிக்கையாகப் பங்களாவில் அவர்கள் உண்ணும் உணவைப் 'பறையா உணவு' மேலமைச் சாதியினர் உண்ணமாட்டார்கள் என்கிறார் (A Lady:1846:116). இரவு விருந்துக்கு அழைக்கப்பட்டால், நடன நிகழ்வுவரை இருந்துவிட்டு விருந்தில் கலந்துகொள்ளாமல் சென்றுவிடுவர்(A Lady:1846:116). ஆங்கிலேயர்களின் தேவையும் இந்திய உள்ளூர் சமையல்காரரின் சமையல் அறிவும் சேர்ந்து உருவானதே காலனிய-உணவு. மேம்சாகிப்புகள் எவ்வகையான உணவுக் குறிப்பைக் கொடுத்தாலும், அவை இறுதியில் உள்ளூர்ச் சமையலின் வடிவத்தையும் சுவையையும் பெறும். சென்னை சமையல்காரர்கள் எந்த உணவிலும் மசாலாவைத் தூக்கலாகச் சேர்ப்பதில் கைதேர்ந்தவர்கள் என வேடிக்கையாக சில மேம்சாகிப்புகள் எழுதுகின்றனர்.

இத்தகைய ஊடாட்டத்தின் விளைவாக, தென்னிந்தியாவின் கறி, இந்தியாவிற்கு குடிபெயர்ந்த ஆங்கிலேயர்களின் முக்கிய உணவாக மாற்றம் பெற்றது. கறி வகைகள் இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும் பரவலாக இருந்தாலும், சென்னை கறி மிகவும் சிறப்பிடத்தைப் பெற்றது. ஆங்கிலேயர்களுக்கு என வெளிவந்த சமையல் குறிப்புப் புத்தகங்கள் சென்னை கறிக்கு எனத் தனிப்பிரிவைக் கொண்டிருந்தன (Lady Resident:1864,Collingham:2006). லேடி ரெசிடெண்ட் என்பவரின் குறிப்பின்படி சென்னை கறி மசாலாவானது கொத்தமல்லி, மஞ்சள், வரமிளகாய், மிளகு, கடுகு, சுக்கு, உப்பு, சர்க்கரை, சீரகம், பொட்டுக்கடலை போன்றவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டது (Lady Resident:1864:150). வைவெர்ன் (1891) கறியோடு தேங்காய்ப்பால் மற்றும் கறிவேப்பிலை சேர்ப்பதைப் பற்றிப் பேசுகின்றார். நாளடைவில், கறி இங்கிலாந்திலும் ஆங்கிலேயர்களிடையேயும் ஒரு பிரசித்தமான உணவாக மாறியது. நல்ல கறி (சென்னை கறி) தாம் இங்கிலாந்தில்தான் சாப்பிட்டதாகச் சிலர் எழுதுகின்றனர்.

குடியமர்ந்த ஆங்கிலேயரிடையே கறியைவிட மிகவும் புகழ்பெற்ற உணவாக இருந்தது அவர்களது வார்த்தையில் 'முள்ளிகத்துண்ணி' (Mulligatunny) எனப்படும் மிளகுத்தண்ணீர். ஏழைகளின் எளிமையான உணவாக இருந்த மிளகு மற்றும் தண்ணீர் சேர்ந்த ரசம், ஆங்கிலேயர்களுக்கு சுவையான சூப்பாக மாறியது (Collingham:2006). இந்திய ஆங்கிலேயருக்கென எழுதப்பட்ட சமையல்புத்தகங்கள் இந்த 'சூப்'புக்கு முக்கியமான இடத்தைக் கொடுக்கின்றன. வைரன்னின் (1891:321) குறிப்பின்படி, ஏழை சென்னை உள்ளூர்வாசிகள் சமைப்பதுபோல், முத்துசாமி ( சமையல்கார்களின் பொதுப்பெயர்), மிளகுத் தண்ணியை ( Pepper water) புளி, வறமிளகாய், பூண்டு, கடுகு வெந்தயம், மிளகு மற்றும் கறிவேப்பிலையுடன் வெங்காயம் கொண்டு தாளித்துச் சமைப்பார். பிற்காலங்களில், இந்தச் சூப்பை மாவு மற்றும் வெண்ணெய் சேர்த்து சற்றுக் குழம்பாக்கி அதில் கோழி இறைச்சி, ஆட்டு இறைச்சி எனச் சேர்த்துப் பல்வேறு புதுவகை உணவுகளை ஆங்கிலேயர்கள் உருவாக்கினர்.

## ஆயா மற்றும் மேம்சாகிப்பு உறவுகள்

பங்களா பணியாளர்களிடையே குறிப்பாக ஆயாக்கள் காலனிய வரலாற்றில் அதிகம் இடம் பிடிப்பவர்களாக இருக்கின்றார்கள். முழுநேரப் பணியில் மேம்சாகிப்போடும் குழந்தைகளோடும் மிகவும் நெருக்கமாகப் பங்களாவிலேயே வசித்தவர்கள. இவர்கள் பலமொழிகள் பேசுவர்களாகவும் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்த அனுபவம் உடையவர்களாகவும் இருந்ததைக் குறிப்புகள் காட்டுகின்றன. 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில், ஆயாக்கள் உலகளவில் அறியப்பட்டவர்களாக விளங்கினர். இங்கிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு நீண்ட கப்பல் பயணத்தை மேற்கொண்டனர். கப்பலில் பயணம் செய்தோரின் பட்டியல்களில் ஆங்கிலேயக் குடும்பத்தினரின் பெயர்களுடன் சேர்த்துச் சிலசமயம் ஆயாக்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர். 1912 தர்பாரில் தாம் கலந்துகொண்ட அனுபவத்தை விவரிக்கும் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்சாகிப், தன்னுடைய ஆயாவைப்பற்றி குறிப்பிடும்போது, '12 முறை இங்கிலாந்துக்குப் பயணம்செய்த மிகவும் உற்சாகமான சென்னை பெண்மணி' என்கின்றார் (Sydney Morning Herald:1912). உள்ளூர்வாசிகளின் சமூக-பண்பாட்டு நடைமுறைகள் பற்றிய அறிவு மேம்சாகிப்புகளுக்குப் பொதுவாக ஆயாக்கள் மூலமே வந்தடைந்தன. சிலசமயம் இதுவே அவர்களது ஒட்டுமொத்த இந்திய சமூகத்தைப் பற்றிய புரிதலாகவும் இருந்தது.

முன்பு குறிப்பிட்டதுபோல், மேம்சாகிப்புகளின் தேவைகளை கவனிப்பதும் அவர்களின் குழந்தைகளை வளர்ப்பதும் ஆயாக்களின் முக்கிய வேலையாக இருந்தது. பொதுவாக மேம்சாகிப்புகளின் குழந்தைகள் பிறந்ததிலிருந்து ஆயாக்களின் கண்காணிப்பிலேயே வளர்ந்தனர். குழந்தைகள் எளிதில் உள்ளூர் உணவுப் பழக்கத்தையும் மொழியையும் கற்றுக்கொண்டு பண்பாட்டளவிலும் ஆயாக்களோடு மிகவும் நெருங்கியவர்களாக வளர்ந்தது மேம்சாகிப்புகளுக்கிடையே நெருடல்களை ஏற்படுத்தின. மேம்சாகிப்புகளுக்கு புரியாத உள்ளூர் மொழிகளில் குழந்தைகள் உரையாடுவது பற்றியும் ஆயாக்களுக்கு பிடித்த கறியையும் நெல்லுச்சோற்றையும் விரும்பிச் சாப்பிடுவது குறித்தும் கவலை கொண்டனர். மற்றொரு நிலையில், ஆயாக்களால் வளர்க்கப்பட்ட குழந்தைகள் தம் பிரிட்டானியத் தன்மையிலிருந்து மாறி இந்தியத்தன்மையைப் பெறுவது வருங்காலங்களில் இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு ஆபத்தை விளைவிக்கும் போக்காகவும் பார்க்கப்பட்டது (Sen:2009). இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்க, சில மேம்சாகிப்புகள் தம் குழந்தைகளை இங்கிலாந்தில் உள்ள உறைவிடப்பள்ளிகளில் படிக்க அனுப்பி வைத்தனர். அங்கிருந்து சிறார்கள் அனுப்பிய கடிதங்கள் ஆயாக்களைப் பாசத்தோடு விசாரித்தன. பின்நாட்களில், தம் குழந்தைப் பருவத்தை நினைவுகூர்ந்தோரும், தம் ஆயக்களைப் பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை.

இவை ஒருபுறம் இருப்பினும், ஆயாக்களைப்பற்றி எதிர்மறையான பிம்பத்தை ஏற்படுத்தக்கூடிய காலனியக் குறிப்புகளும் காணப்படுகின்றன. தூய்மையற்றவர்கள், ஏமாற்றுக்காரர்கள், சோம்பேறிகள் எனப் பங்களாப் பணியாளர்களை வர்ணிக்கும் சில குறிப்புகள் ஆயாக்களையும் உள்ளடக்கும். 1870களில் இந்தியாவில் வசிக்கும் ஆங்கிலேயர்களுக்கென ஒரு மருத்துவக் கையேட்டை வெளியிட்ட சென்னையைச் சேர்ந்த மருத்துவர் ஆர்.எஸ்.மேயர் என்பவர் பெண்பணியாளர்கள் குழந்தைகளுக்கு ஒப்பியம் கொடுத்துத் தூங்கவைப்பதைக் குறிப்பிட்டு மேம்சாகிப்புகளை எச்சரித்தார்(Sen:2009). அதுபோல் மனநிலை அளவிலும், பெற்றோர்களுக்குப் பதிலாகப் பணியாளர்களிடம் குழந்தைகள் அன்புடையோராக மாறக்கூடும் நிலையைக் குறித்தும் வலியுறுத்தியுள்ளார். பிள்ளைகளின் நடத்தை, ஒழுக்கம், கிருத்துவ இறைநம்பிக்கை போன்றவையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய விடயங்களாக இருந்தன. 1933ல், சென்னையில் ஆங்கிலேயர்களுக்கிடையே உரையாற்றிய அருள்தந்தை எ.லே.தெல்லியர், பிள்ளைகள் பெற்றோர்களின் கவனிப்பில் வளர்பவர்களாக இருக்கவேண்டும் என்று கேட்டுகொண்டார். 'ஆயாக்களைத் தீவிரமாகக் கண்காணிக்காவிட்டால், அவர்கள் குழந்தைகளை உண்மையற்றவர்களாகவும், மூடநம்பிக்கை உடையவர்களாகவும், ஒழுக்கமற்றவர்களாகவும் உருவாக்கிவிடுவார்கள்' என அறிவுறுத்தினார் (Tellier:1933). பொதுவாக, ஆயாக்களுக்கும் மேம்சாகிப்புகளுக்கும் இருந்த உறவுகள் தவிர்க்க முடியாததாகவும், இவ்விரு தரப்பினர்களின் தேவையை நிவர்த்தி செய்வதாகவும் அமைந்தன.

## இலண்டன் ஆயாக்களின் விடுதி

சில ஆயாக்கள் - மேம்சாகிப்புகளின் உறவு சென்னையோடு நின்றுவிடவில்லை. இந்தியப் பணி நிறைவடைந்து திரும்பிச்சென்ற சில ஆங்கிலேயக் குடும்பங்கள், தங்களோடு ஆயாக்களையும் அழைத்துச் சென்றனர். கப்பல் பயணத்தின்போது குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள இவர்கள் தேவைப்பட்டது இதற்கான முக்கியக் காரணமாக அமைகிறது. இங்கிலாந்து சென்றபின், சில ஆயாக்கள் மேம்சாகிப்புகளுடன் தங்கி வேலை செய்தனர். சிலர் வேறு இடங்களில் வேலை தேடிக்கொண்டனர். எனினும், பெரும்பாலானோர், இந்தியா திரும்பி வருவதற்கான கப்பல் பயணச்சீட்டு கொடுத்து அனுப்பி வைக்கப்பட்டனர். சில குறிப்புகள், ஆயாக்கள் பெட்டிபடுக்கையுடன் வீதிகளில் தவிக்கவிடப்பட்டதாகக் கூறுகின்றன. எப்படியாயினும், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் லண்டன் போன்ற நகரங்களில் வேலைதேடியும் தாய்நாட்டிற்குத் திரும்புவதை எதிர்பார்த்தும் காத்திருந்த ஆயாக்களின் எண்ணிக்கை கனிசமாக அதிகரித்தது.

இதுபோன்று ஆதரவின்றி கைவிடப்பட்ட ஆயாக்குகளுக்கு என்று1899ல்( அல்லது 1813)ஆம் ஆண்டு சில கிருத்துவச் சமூக ஆர்வம் உடைய பெண்களால் ஆயாக்கள் விடுதி ( Ayah's Home)ஒன்று நிறுவப்பட்டது. 30 அறைகளைக் கொண்ட அவ்விடுதியில் வருடந்தோறும் ஏறக்குறைய 100 ஆயாக்கள் ( சிலர் சீனாவில் இருந்து வந்தவர்கள்) தங்கிச்சென்றனர். ஆயாக்கள் தாய்நாடு திரும்புதல் உறுதி பெறும்வரை விடுதியில் தங்கிச்செல்வர். பொதுவாக இங்கிலாந்தில் இருந்து இந்தியாவிற்குப் பயணம் செய்யும் குடும்பங்கள் அவர்களை மீண்டும் பயணத்தின்போது சேவைக்குப் பணி அமர்த்திக்கொண்டன. லண்டன் சிட்டி மிஷன் என்ற கிருத்துவ அமைப்பின் ஆதரவில் இயங்கிய விடுதியில் சில ஆயாக்கள் மத மாற்றத்தையும் ஏற்றுக்கொண்டனர். இங்கு சென்னையைச் சேர்ந்த ரூத் என்ற பெண்மனிக்குத் தமிழிலேயே ஞானஸ்நானம் செய்துவைக்கப்பட்டதாகக் குறிப்புகள் கூறுகின்றன. பணத்தேவை ஒருபுறம் இருப்பினும், மேம்சாகிப்புகளின் குடும்பத்தினர் மீது இருந்த பாசமும், புது இடங்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலும் ஆயாக்களின் இந்தத் துணிச்சலான

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கப்பல் பயணத்திற்குக் காரணங்களாகப் பார்க்கப்படுகின்றன.

## சாதி, இனம் மற்றும் பங்களா அரசியல்

காலனிய அரசின் ஒரு சிறு கூறாகப் பங்களாக்கள் இருப்பினும், இவை தனக்கான ஒரு அரசியலைக் கொண்டிருந்தன எனலாம். பொதுவாக வெவ்வேறு இனங்களும் சாதிகளும் ஊடாடும் இடமாக பங்களாக்கள் திகழ்ந்தன. இதன் வாசிகளுக்கிடையே ஒரு அன்யோன்யமான அன்பும் அதே சமயத்தில் ஒரு தவிர்க்கமுடியாத வேறுபாடும் நிலவியது. வெள்ளையர் மற்றும் கருப்பர் அதுபோல் ஏகாதிபத்தியத்தினர் மற்றும் காலனிவாசிகள் என்பதுபோன்ற பொதுவான முரண்களை ஏற்றுக்கொண்டே பங்களா உறவுகள் கட்டமைக்கப்பட்டன.

முக்கியமாகக் காலனிகளின் பங்களாக்களில் கீழமைச் சாதியினரையும் ஆங்கிலேயர்களையும் ஒரு கட்டாயமான பரஸ்பர உறவுக்கு உட்படுத்தும் உந்து சக்தியாக உணவு இருந்தது. பொதுவாக ஒவ்வொரு மேற்கத்தியக் குடும்பமும் மேலமைச் சாதியினரிடமிருந்தே தமது பணியாளர்களை பணியமர்த்த விரும்பின. ஆனால், மேலமைச் சாதியினர் மேற்கத்தியர்களை தீண்டத்தகாதவர்களாகப் பார்த்தனர். அவர்கள் சமைத்த உணவை, தொட்ட உணவை உண்ண மறுத்தனர். மேலும் அவர்களால் தீண்டப்பட்ட சமையல் பாத்திரங்கள், குவளைகளை மீண்டும் உபயோகிக்க மறுத்தனர். எனவே, இவ்விதத் 'தீண்டாமை' மேற்படி இரு தரப்பினருக்கும் பொதுப்பொருளாக இருந்து ஒன்றிணைத்தது எனலாம்.

உணவால் ஒன்றிணைந்தாலும், தமக்கிடையிலான வர்க்க, இன மேன்மையை, வேறுபாடுகளைத் தக்கவைத்துக்கொள்ள மேற்கத்தியர்கள் பல்வேறு உத்திகளைக் கையாள வேண்டியிருந்தது. முன்பு குறிப்பிட்டதுபோல், கீழமைச் சாதி கிருத்துவர்களை ஒரே மதத்தினர் என்பதற்காகப் பணியில் அமர்த்தத் தயங்கினர். அதுபோல் தனது பண்பாடு சார்ந்த உணவுகளைச் சமைக்க அவர்கள் எடுத்துக்கொண்ட வெவ்வேறான முயற்சிகள் பொதுவாக தோல்வியில் முடிந்தன. சில குறிப்புகளின்படி, இந்தப் போராட்டத்தின் இறுதியில் ராமசாமியின் உள்ளூர் சமையலே வெற்றி அடைந்தது(*Wyvern:1891:16*). இச்சூழலில், டின் மற்றும் குப்பிகளில் அடைக்கப்பட்ட இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சில உணவுப் பொருட்களை வாங்கினர். இவற்றின் சுவையும் தரமும் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தபோதிலும், அவை மேற்கத்தியரின் உணவு மேன்மையை அறிவிக்கும் குறியீடுகளாக உபயோகிக்கப்பட்டன(*Lusin:2013*).

எப்படியாயினும், இந்தியாவில் மேற்கத்தியர்களின் உடல்நலத்திற்கும் வசதியான உல்லாசமான வாழ்க்கைக்கும் கீழமைச் சாதியினர் அடிப்படையாக இருந்தனர். அதே சமயத்தில், இவர்கள் குழந்தைகளோடு நெருக்கமாக இருப்பதும், குழந்தைகள் இந்தியத்தன்மையை இவர்களிடமிருந்து ஏற்றுக்கொள்வதும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் இருத்தலுக்கும் கிருத்துவ மத வளர்ச்சிக்கும் சவாலான போக்குகளாகப் பார்கப்பட்டன.

முக்கியமாகப் பங்களா வேலை, கீழமைச்சாதியினரின் சமூக எழுச்சிக்கும் மாற்றத்திற்கும் ஒரு முக்கியாமான ஆதாரமாக இருந்தது எனலாம். குறிப்பாக அதிகாரத்தில் இருப்போருக்கு உணவு சமைத்தல், அவர்களோடு சேர்ந்து வசித்தல் போன்றவை சாதியச் சமூகத்தில் உணவால் உடலால் தீண்டப்படாமைக்கும் ஒடுக்கப்படுதலுக்கும் எதிரான ஒரு மாற்றுச் சூழலுக்கான சாத்தியத்தை முன்வைத்தது. மேலும் இது நிலையான வருமானம், பலமொழிகளைக் கற்றுக்கொள்ளுதல், வெளிநாட்டுப் பயணம், கல்வி, உடல்நலம் குறித்த அறிவைப் பெறுதல், குழந்தைகள் பராமரிப்பு பற்றிய தெளிவு எனப் பலவழிகளில் சமூக மேம்பாட்டுக்கான கருவியாகவும் இயங்கியது.

மேற்கோள் ஆவணங்கள் மற்றும் நூல்கள்:


*A Lady (1846), Letters from Madras, During the years 1836-1839, London.*

*Anglo-Indian (1882), Indian Outfits & Establishments: Practical Guide for Persons about to Reside in India, London.*

*Chaudhuri, Nupur (2006), 'Memsahibs and their Servants in Nineteenth Century India', Women's History Review.*

*George, Rosemarry Marangoly(1993), 'Homes in the Empire, Empires in the Home', Cultural Critiques, no.26.*

*Grossman, Joyce (2001), 'Ayays-Dhayes and Bearers: Mary Sherwood's Indian Experience and "Constructions of Subordinated others", South Atlantic Review, Vol.66.*

*Hull, Edmund C.P(1871), The European in India, London.*

*James, Eliot (1879), A Guide Indian Household Management, New York.*

*Kincaid, Dennis (1938), British Social Life in India 1608-1937, Broadway House, London.*

*Lady Resident (1864), The Englishwoman in India, London.*

*Leong-Salobir, Cecilia Y (2011), 'Food Culture in Colonial Asia: A Taste of Empire', Faculty of Law, Humanities and Arts Papers, University of Wollongong.*

*Lizzie, Collingham ( 2006), Curry: A Tale of Cooks and Conquerors, Oxford University Press, New York.*

*Lusien, Caroline (2013), 'Curry, Tins and Grotesque Bodies: Food, Cultural Boundaries and Identity in Anglo-Indian life writing', English Studies, vol.94, no.4.*



**Printed by H. Dhanasekaran and Owned, published by V. Muthaiah and Printed at Sekar Offset Printers, New No. 50 (Old No. 168/1) Big Street, Chepauk, Chennai - 600 005 and Published at 17/14, Diwan Rama Road, Purasaivakkam, Chennai - 600 084. Editor: V. Muthaiah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே இதழ் முன்னெடுக்கும்

கவிஞர் கி.பி.அரவிந்தன் ஏழாவது ஆண்டு நினைவு

# இலக்கியப் பரிசுப் போட்டி



'காக்கைச் சிறகினிலே' இதழின் தொடக்க கால நெறியாளர்
கவிஞர் கி.பி.அரவிந்தன் கனவின் மீதியில் எழும் புதிய தடமாக இப்போட்டி அமையும்.

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்கிற மாகவி பாரதியின் கனவை நனவாக்கும் முயற்சியில் இதுவும் ஒன்று.

மொழிபெயர்ப்பியல்

## சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான பரிசுப்போட்டி - 2022

(திருவள்ளுவராண்டு - 2053)

தெரிவுக்குரிய தகுதி

இந்த நூற்றாண்டில் 2000 ஜனவரி முதல் 2020 டிசம்பர் வரை
பிறமொழியிலிருந்து முதற் பதிப்பாக
தமிழில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

நூலகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 31.01.2022
போட்டி முடிவு: மார்ச் 2022
நூல்களை அனுப்ப வேண்டிய முகவரி:
காக்கைச் சிறகினிலே, 288, டாக்டர் நடேசன் சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 இந்தியா
மின்னஞ்சல் : kipian2022kaakkaicirakinile@gmail.com

நெறியாளர்:
- மதிப்பிற்குரிய இ. பத்மநாப ஐயர் (இங்கிலாந்து)

நடுவர் குழு:
- பேராசிரியர் க. பஞ்சாங்கம் (இந்தியா)
- முனைவர் கே.எம். வேணுகோபால் (இந்தியா)
- எழுத்தாளர் என் சரவணன் (நோர்வே)
- எழுத்தாளர் அமரந்தா (இந்தியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Postal Registration No. TN / CCN / 588 / 2019-2021 WPP No. TN/PMG (CCR) / WPP-354/2019-2021.
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel,Egmore. between 29th-4th of every month

## பரிசுகள்

தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு நூல்களுக்கு தலா

**சான்றிதழ் மற்றும் 10,000 இந்திய ரூபாய்கள்**

ஒரு ஊக்கப்பரிசு

**சான்றிதழ் மற்றும் 5000 இந்திய ரூபாய்கள்**

சிறப்புப் பரிசு

**வாசகர்களுக்கானது - ஓராண்டு காக்கை சந்தா**

## போட்டியின் விதிமுறைகள்

1. போட்டியாளர்கள் (நூலாசிரியர்கள்) தமது தன்விவரக் குறிப்புகளை இயற்பெயர், புனைபெயர், முகவரி, செல்பேசி உள்ளிட்ட விவரங்களுடன் kipian2022kaakkaicirakinile@gmail.com என்கிற மின்னஞ்சல் ஊடாக மட்டுமே அனுப்பவேண்டும்.

2. பிற மொழிகளிலிருந்து தமிழில் வெளிவந்த நூல்களின் இரண்டுபடிகளை அனுப்பவேண்டும். இந்நூல் பற்றி ஊடகங்களில் வெளிவந்த விமர்சனங்கள் மற்றும் கருத்துரைகள் பற்றிய விபரங்களை மின்னஞ்சல் வாயிலாக அனுப்ப வேண்டும்.

3. நூல்களை காக்கைச் சிறகினிலே செயலக முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டும்.

4. பதிவு அஞ்சல் உறை மற்றும் மின்னஞ்சலில் "கவிஞர் கி.பி.அரவிந்தன் ஏழாவது ஆண்டு நினைவு இலக்கியப் பரிசுப்போட்டி - 2022" என்று குறிப்பிடப்படவேண்டும்.

5. போட்டிக்கு அனுப்பப்படும் நூல்கள் மூலமொழியிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்டதாகவோ மூலமொழியுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டதாகவோ இருந்து, அது பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தேர்வு செய்யப்பட்ட நூலை வெளியிட்ட வெளியீட்டாளருக்கு சான்றிதழும் 5000 இந்திய ரூபாய்கள் பரிசுத் தொகையாகவும் வழங்கப்படும்.

6. மொழிபெயர்ப்பு இலக்கிய வளர்ச்சிக்கு தனித்துவப் பங்களிப்புச் செய்யும் தமிழ்ச் சிற்றிதழ் ஒன்றுக்கு சான்றிதழும் 5000 இந்திய ரூபாய்கள் ஊக்கப் பரிசாகவும் அளிக்கப்படும்.

7. போட்டிக்குரிய நூல்கள் மற்றும் சிற்றிதழ்கள் பற்றிய விபரங்களை அவை தொடர்பாக ஊடகங்களில் வெளிவந்த விமர்சனங்கள் மற்றும் கருத்துரைகளுடன் பட்டியலிட்டுக் காக்கைச் சிறகினிலே அலுவலகத்துக்கு அனுப்பலாம். வாசகர்கள் அனுப்பிவைத்த பட்டியலிலிருந்து நடுவர்களால் பரிசுக்குரிய நூல் / சிற்றிதழ் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் பரிந்துரை செய்த ஒவ்வொரு வாசகருக்கும் ஓராண்டு காக்கை சந்தா சிறப்புப் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.

8. பரிசுக்குரிய நூல்களை நடுவர்குழு பரிசீலித்து அளித்த தேர்வின் அடிப்படையில் நெறியாளர் வழங்கும் தீர்ப்பே இறுதியானது.

9. பங்கேற்கும் போட்டியாளர்களுடன் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை அஞ்சல், செல்பேசி, தொலைபேசி, மின்னஞ்சல் உள்ளிட்ட எந்தத் தொடர்பாடலும் நடத்தப்படமாட்டாது.

10. போட்டியின் முடிவு 2022 ஏப்பிரல் மாத காக்கை இதழில் காக்கை குழுமத்தினரால் முறைப்படி வெளியிடப்படும்.

11. பரிசுக்குத் தெரிவாகும் நூலுக்குரிய சான்றிதழும் பரிசுத் தொகையும் உரிய முறையில் அனுப்பி வைக்கப்படும்.

நன்றி :
இப்போட்டிக்கான பணப்பரிசினை வழங்கும் கவிஞர் கி.பி.அரவிந்தன் குடும்பம் சார்பாக
அவர்தம் துணைவியார் திருமதி சுமதி மற்றும் லண்டன் துளிர் நண்பர்கள்
வாழ்த்துக்களுடன் காக்கைச் சிறகினிலே இதழ்க் குழுமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org